விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 06 தந்தி 46 ஞாயிற்றுக்கிழமை 14.10.2018 Sunday 14th October 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

கைதிகள் தொடர்பில் கூட்டமைப்பின் திடீர் கரிசனை

மக்களை ஏமாற்றவே!

சாடுகிறார்...

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

- கூட்டமைப்பின் சாயம் வெளுக்கத் தொடங்கியுள்ளது
- அரசின் அடிவருடிகளாக மாறிவிட்ட அடைக்கலநாதனும் சம்பந்தனும்

இலங்கையின் கல்வி முறை நவீனமயப்படுத்தப்படும்!

இலங்கையின் கல்வி முறையை நவீனமயப்படுத்தப் போவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் 3 மாடிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாட விதானத்தில் மாற்றங்களை மேற்கொண்டு, பாட உள்ளடக்கங்களிலும் மாற்றங்களை அறிமுகப்படுத்தப் போவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை உளவியலாளர்கள், கல்வியியலாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் கருத்துக்கள், யோசனைகள், ஆலோசனைகளுக்கு அமைய இது தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் 3 மாடிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் இதற்காக 25 கோடி ரூபா செலவிடப்படும்.

அரசாங்கத்தின் ஏகபோக சலுகைகளை அனுபவிக்கும் கூட்டமைப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் அரசியல் கைதிகள் மேல் காட்டும் திடீர் கரிசனைம் மக்களை ஏமாற்றும் செயலே. மக்களிடம் சரிந்து செல்லும் தங்களின் செல்வாக்கை சரிசெய்வதற்கே அவர்கள் இப்படியான மலிவான பிரசாரங்களை மேற்கொள்கின்றார்கள். ஆனால் மக்கள் மத்தியில் இது எடுபடாது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன். தமிழ்த்தந்திக்கு சமகால விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

சொக்லேட் சாப்பிட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமத

க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட மட்டக்களப்பு நகரில் உள்ள புனித மிக்கல் கல்லூரியைச் சேர்ந்த தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களில் சொக்லேட் சாப்பிட்ட 8 பேர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் 27 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மாணவர் ஒருவர் தனது பிறந்த

02ஆம் பக்கம் பார்க்க

எல்லை நிர்ணய மறுசீரமைப்பு அறிக்கை தொடர்பில் உறுதியான திகதி இல்லை

மாகாண சபை எல்லை நிர்ணய மறுசீரமைப்பு குழு அறிக்கை வெளியிடப்படும் திகதி தொடர்பாக உறுதியாக தெரிவிக்க முடியாது என்று அந்தக் குழு கூறியுள்ளது.

இந்த அறிக்கையை தயாரிக்கும் செயல் தற்போது நடைபெற்று வருகின்றது என மாகாண சபை எல்லை நிர்ணய மறுசீரமைப்புக் குழு தெரிவித்துள்ளது.

வடமேல், மத்திய,

02ஆம் பக்கம் பார்க்க

சம்பள உயர்வு கோரி மலையகத்தில் தொடர் போராட்டங்கள்

மஸ்கெலியா நிருபர்

மலையக மக்களின் சம்பள உயர்வு கோரி தொடர் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் நேற்று 13ஆம் திகதி சாமிமலை டிசைட் தோட்ட மக்கள் கட்சிப்பாகுபாடின்றிஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

இப்போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அதிகளவு பணத்தை விரயம் செய்யும் அரசு ஏன் எங்கள் சம்பளத்தை உயர்த்த மறுக்கிறது. ஆனால் நாட்டின் அந்நிய செலாவணி வர்த்தக பெற்று கொடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் வேதனத்தை அதிகரித்துக் கொள்ள போராட்டம் நடாத்த வேண்டியுள்ளதுவ ஆகையால் தோட்டங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும் இல்லையேல் எமது அடிப்படை சம்பளத்தை

1000 ரூபாவுக்கு குறைந்து பணி புரிய முடியாது என்று தமது ஆதங்கத்தை கூறினர்.

மேலும் கருத்தை தெரிவிக்கையில் அரச ஊழியர்களுக்கு வரவு செலவு திட்டத்தில் 10000 ரூபா அதிகரித்து கொடுக்க முடிந்த அரசுக்கு ஏன் எமக்கு 1000 ரூபாய் பெற்று தரமுடியாது இது வரை காலமும் 75ரூபாய் அல்லது 100 ரூபாய் உயர்வு தான் எமக்கு கிடைத்தது. ஆனால் இம்முறை எமக்கு 1000 ரூபாய் கிடைக்கும் வரை போராட்டம் நடாத்துவோம் என கூறினர்.

முடிவிற்கு வந்தது அரசியல் கைதிகளின் போராட்டம்!

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட நடைபவனி அநுராதபுரம் சிறைச்சாலையில் நிறைவடைந்தது.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக

02ஆம் பக்கம் பார்க்க

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் விவகாரம்; தமிழர் வருவதை தடுத்தாரா ஸ்ரீநேசன்?

க.விஜயரெத்தினம்

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் மாகாணப் கல்விப்பணிப்பாளராக வருவதற்குரிய அத்தனை கல்வித்தகமைகளும், சேவை மூப்பும் இருந்தும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்,மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான ஞானமுத்து-ஸ்ரீநேசன் அவர்கள் அதனைத் தடுத்து பழிவாங்கும் கைங்கரியத்தை செய்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

சம்பந்தனின் கூற்றைப் பொய்ப்பித்த சிரால்

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஓரளவு பூர்த்தி செய்யும் என எதிர்ப்பார்ப்பு வழங்கிய புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் மீது காணப்பட்ட நம்பிக்கையை தமிழர் தரப்பு இழந்துவரும் நிலையில், புதிய அரசியலமைப்பு இந்த ஆட்சியில் நிறைவேற்றப்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகரான சிரால் லக்திலக்க திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து செயற்பட்டுவரும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஆசிரியர்களுக்கான சந்திப்பொன்று ஜனாதிபதி ர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகரான சட்டத்தரணி சிரால் லக்திலக்க தலைமையில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் வெள்ளவத்தையிலுள்ள பிரபல விடுதி ஒன்றில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது தமிழர் தரப்பில் காணப்படுகின்ற சந்தேகங்களுக்கான பதிலை சட்டத்தரணி சிரால் லக்திலக்க அளிக்கத் தொடங்கினார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி ஆட்சிக்குவந்த அரசாங்கம் தமிழ் மக்களின்

02ஆம் பக்கம் பார்க்க

இடியுடன் கூடிய மழை பெய்யும்

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் குறிப்பாக பி.ப 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையிலும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, ஊவா, மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

02ஆம் பக்கம் பார்க்க

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இரட்டைவேடம் போடும் கூட்டமைப்பு

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார்

வவுனியாவில் இடம் பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் நாளை 600 நாட்களை கடந்தும் தொடரவுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோரை தேடித்திரியும் நாம் எமது உறவுகளான சிறைகளிலிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அவர்களின் விடுதலையை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம். அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்புக்களின் போதும் கூட நாங்கள் அவர்களின் விடுதலை தொடர்பான எமது அழுத்தங்களையும்

02ஆம் பக்கம் பார்க்க

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கால எல்லை நிறைவடைந்தது

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கால எல்லை இன்றுடன் முடிவடைகிறது.

பொலிஸ் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை, பாராளுமன்ற அரசியல் அமைப்பு பேரவை பெயரிடவுள்ளது. புதிய பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை ஆணைக்குழு இயங்கவுள்ளது.

ஆணைக்குழு 2015ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்டளையிட்ட கருணா சுகபோகத்தில் கட்டுப்பட்டவர்கள் சிறைக்கம்பிகளுக்குள்

இது என்ன நியாயம்; திருக்கோவிலில் பொங்கி எழுந்த மக்கள்

திருக்கோவில் நிருபர்

இலங்கை அரசினால் எந்தவொரு விசாரணைகளும் இன்றி மிக நீண்ட காலமாக சிறைவாசம் அனுபவித்து உறவுகளை பிரிந்து கொடுமைகளை அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி திருக்கோவில் பிரதேசத்தில் பேரணியும், கையெழுத்து வேட்டையும் நேற்று சனிக்கிழமை (13) இடம்பெற்றது.

இவ் பேரணியானது அம்பாறை திருக்கோவில் வெட்டுக்குளத்துப் பிள்ளையார் ஆலயத்தில் கற்பூரம் ஏற்றி சிதர்தேங்காய் உடைத்து வழிபாடு செய்து பேரணியாக திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரம் வரை செய்று அங்கு கையெழுத்து வேட்டையும் கூட்டமும் இடம்பெற்றது.

இவ் பேரணியை அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் மற்றும் திருக்கோவில் பிரதேச பொது மக்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இப் பேரணியில் சர்வதேசமே எமது அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உதவி செய், அரசியல் கைதிகள் அனைவரும் தமது குடும்ப உறவுகளுடன் சேர்ந்து வாழ தமிழ் அரசியில்வாதிகள் ஒன்றினைந்து நல்லாட்சி அரசிடம் கோரிக்கை விடுங்கள், நல்லாட்சி அரசே உயிருக்கு போராடும் கைதிகளை விடுதலை செய் போன்ற சுலோக அட்டைகளை தாங்கியவாறு பேரணியில் சுமார் 150க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு தமது தமிழ் அரசியில் கைதிகள் மற்றும் யாழ்பல்கலைக்கழக மாணவர்களின் பேரணிக்கும் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டு இருந்தனர்.

இதன்போது புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி குட்டிமணி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க தலைவி த.செல்வராணி ஆகியோர் கருத்து தெரிவிக்கையில் விசாரணை இன்றி சிறைக்குள் வாடும் தமிழ் அரசியில் கைதிகள் உடனடியாக விடுதலை செய்ப்பட வேண்டும். போராட்டத்திற்கு ஆயுதங்கள் விநியோகித்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் படைகளுக்கு தளபதிகளாக இருந்து கட்டளைகளை இட்டவர்களான கருணா அம்மான், கே.பி போன்றோர் இன்று அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டு சுகபோக வாழ்கை வாழ்ந்து வரும் நிலையில் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றியவர்களை சிறைகளில் அடைத்து வைத்திருப்பது என்ன நியாயம்?

மீன் சந்தையை நவீனமயப்படுத்தி தருமாறு மீன் வியாபாரிகள் கோரிக்கை

கந்தளாய் நிருபர்

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட மீன் சந்தையை நவீனமயப்படுத்த தருமாறு மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள மீன் சந்தை கடந்த பல வருட காலமாக திருத்தப்படாமல் இருப்பதாகவும் இது குறித்து நகரசபைக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மீன் வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா மீன் வியாபாரிகள் நலன்புரிச் சங்கத்தினால் நகரசபைக்கு பல கடிதங்களும் பல கோரிக்கைகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வருடத்திற்கு 56 இலட்சம் அறவிடப்பட்டு வருவதாகவும் மீன் வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். நகரத்தின் பிரதான வீதியில் காணப்படுகின்ற மிக முக்கியமான மீன் சந்தை இதுவாகும். எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் கொட்டில்களில் இருப்பது போல எந்த ஒரு அடிப்படை வசதிகள் இல்லாமல் காணப்படுவதாகவும் இதனை நவீனமயப்படுத்தி தருமாறும் மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். இந்த சந்தையை நம்பி 20 மீன் வியாபாரிகள் தொழில் புரிந்து வருவதாகவும் பல தடவைகள் நகர சபையிடம் கோரிக்கை விடுத்தும் இந்த வருடம் மாத்திரம் நான்கு தூண்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டு உள்ளதாகவும் மீன் வியாபாரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஊடக ஆய்வு நிறுவனம் யாழில் அங்குரார்ப்பணம்

இலங்கை ஊடகவியல் கல்லூரியோடு இணைந்து இயங்குவதற்காக ஊடக ஆய்வு நிறுவனம் (எம்.ஆர்.ஐ.) நிறுவனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று யாழ்.கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் இயங்கும் ஊடக ஆய்வு நிறுவனத்தில் இடம்பெறும். இதில் ஊடகவியல் கல்லூரியின் பணிப்பாளர்களும், விரிவுரையாளர்களும் யாழ்ப்பாணத்தின் பேராசிரியர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் கலந்து சிறப்பிப்பார்கள் என செய்திகள் தெரிய வந்துள்ளது.

சம்பந்தனின்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்ததோடு புதிய அரசியலமைப்பு ஊடாக புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சினைக்கும் தீர்வை வழங்குவதாகவும் உறுதியளித்தது.

இதற்காக நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றியமைக்கப்பட்டதோடு வழிநடத்தல் குழு என்பனவும் அமைக்கப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கல் தொடர்பாக மக்களிடம் கருத்தறிவதற்காக சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையிலான குழுவும் அமைக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவருகின்ற நிலையிலும் புதிய அரசியலமைப்புக்கு எதிராக மஹிந்த அணியினரும் கடும்போக்குவாத அமைப்புக்களும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற நிலையிலும் புதிய அரசியலமைப்புக்கான தருணம் இதுவல்ல என்ற அறிவிப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு சாத்தியமாகுமா? என சட்டத்தரணி சிரால் லக்திலக்கவிடம் வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதியின் ஆலோசகர், நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பானது முடிவுறுத்தப்படாது என்று பதிலளித்தார்.

தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக குறிப்பிட்ட அவர், புதிய அரசியலமைப்பு இந்த ஆட்சியில் வராது என்றும் தெரிவித்தார்.

2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தீபாவளி பண்டிகையின் போது அலரிமாளிகையில் ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றியிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அடுத்த தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு வழங்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கைதரும் அறிவிப்பை விடுத்திருந்தார்.

இதுதவிர, இந்த வருடத்திற்குள் புதிய அரசியலமைப்பு உருவாக்கற் பணிகள் நிறைவுபெற்றுவிடும் என்ற அறிவிப்பை ஐக்கிய தேசியக் கட்சியும் அதேபோல ஸ்ரீலங்கா அரசின் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்னவும் விடுத்திருந்தனர்.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்த இரா. சம்பந்தன், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு தரும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது அதீத நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதியின் ஆலோசகர் சிரால் லக்திலக்க புதிய அரசியலமைப்பு மீதான நம்பிக்கையை இழக்கும் வகையிலான கருத்தை முன்வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

பதிவு செய்துள்ளோம். ஆனாலும் அவர்களின் விடுதலைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முட்டுக்கட்டையாக இருப்பது பரகசியம்.

அண்மையில் பாராளுமன்றத்தில் தனது ஜனநாயக உரிமையை எதிர்க் கட்சித் தலைவர் மறுக்கின்றார், எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் தருவதில்லை என்று கூறும் சிவசக்தி ஆனந்தன், நாங்கள் கடந்த வருடம் அமெரிக்க ஐரோப்பிய ஒன்றிய கொடிகளைப் பிடித்து சர்வதேச விசாரணையின் அவசியத்தை வலியுத்திய பொழுது அன்று வந்திருந்த அவர் எங்களுடன் ஊர்வலத்தில் கலந்து கொள்ளாமல் சென்றிருந்தார். ஏனென்றால் அவர்கள் இந்தியாவின் தீவிர விசுவாசிகள்.

நாங்கள் அவர்கள் முன்வைக்கும் கேள்வி என்னவென்றால், ஜனநாயகம் உங்களுக்கு மறுக்கப்படுகின்றதென்றால் அது எங்களுக்கும் மறுக்கப்படுகின்றது என்பதை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றீர்கள். மாறாக, இந்தியாவுடன் சேர்ந்து எங்கள் பிரச்சினையை ஏனைய சர்வதேச நாடுகளுக்கு எடுத்துச் சென்று தீர்த்து வைக்க உங்களுக்கு முடியவில்லையா?

அதேநேரம் பல்கலைக்கழக மாணவர்களின் நடைபயணத்திற்கு எங்களின் முழுமையான ஆதரவையும் வழங்கியிருந்தோம். அண்மைக்காலமாக வடக்கில் இடம்பெற்று வரும் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக எங்களின் தொடர் போராட்டம் இருந்துள்ளது என்பதை நாங்கள் இவ்விடத்தில் நினைவுகூரவிரும்புகின்றோம்.

கடந்த காலங்களில் தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக போராடியவர்கள் எல்லோரும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு ஒருசிலர் இன்று சிறைகளிலேயும் இருக்கின்றனர்.

அண்மைக்காலமாக சர்வதேசத்தின் பார்வை தமிழர்கள் மீது இருப்பதனால் ஜனநாயக வழியில் எங்களுக்கான மாற்றுத் தலைமையை நாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அமெரிக்க ஐரோப்பிய ஒன்றிய தலைமை மூலமே எங்களுக்கு நீதியான, நியாயமான தீர்வு வரும். உள்நாட்டு விசாரணையில் எங்களுக்கு துளி கூட நம்பிக்கையில்லை.

எங்களின் கடந்த காலத் தவறுகளால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைகளை நாங்கள் பிழையாக தெரிந்தெடுத்து விட்டோம். அதன் பயனை நாங்கள் இப்பொழுது நன்றாக அனுபவித்து வருகின்றோம். சிலதினங்களுக்கு முன்னர் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் கூறிய கூற்று எமது விடுதலைப் போராட்டத்தையே கொச்சைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியின் கூற்றுக்கிணங்க அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய குறிப்பாக போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தரப்பினரையும் சேர்த்து விடுதலை செய்வதற்கு கூட்டமைப்பும் உடந்தையாக இருக்கின்றது. இதன்மூலம் இருதரப்பையும் சமன் செய்ய ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இன்று சாவின் விளிம்பிலிருந்து நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தங்கள் சுகபோக வாழ்க்கைக்கும் சொகுசு வாகனங்களுக்கும் ஆசைப்பட்டு எங்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்தி அதற்குரிய தீர்வினைப் பெற்றுத் தராமல் சிங்களத் தலைமைகளிடம் அடிமைப்பட்டுக்கிடக்கின்றது எங்களின் அரசியல் தலைமைகள்.

நாங்கள் கேட்பதெல்லாம் கட்சி அரசியல் அடையாளங்களைத் துறந்து தமிழர்களுக்காக நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டுமென்பதே அனைத்துத் தமிழர்களின் ஏகோபித்த ஆசையாகும்.

கிழக்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இச் செயற்பாடானது ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும்,தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கும் பாரியதொரு அவமானப் பிரச்சனையாகும் என கிழக்கு மாகாண புத்திஜீவிகள், பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

குறித்த தமிழ் அதிகாரியை நியமிப்பதில் புறந்தள்ளிவிட்டு சகோதர முஸ்லிம் கல்வி அதிகாரியை மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிப்பதற்கு சோரம் போய், பூரண சம்மதம் தெரிவிக்கப்பட்டுத்தான் மன்சுர் அவர்களை மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ்மக்கள் மத்தியிலும், புத்திஜீவிகள் மத்தியிலும் தகவல்கள் கசிந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராகிய ஞானமுத்து -ஸ்ரீநேசன் அவர்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்,கட்சியின் பொதுச் செயலாளர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.தேர்தல் காலங்களில் படை,பட்டாளங்களுடன் பொதுமக்களின் வாக்குகளை ஏப்பம் விட்டும்,பொய்யான போலியான வாக்குறுதிகளை வழங்கியும்,பாராளுமன்ற உறுப்பினர்களாகிய சிலரால் தமிழர்களை பழிவாங்கும் படலம் தொடர்ச்சியாக வட-கிழக்கில் இடம்பெறுவதாக தமிழ் மக்கள்,புத்திஜீவிகள்,ஊடகவியலாளர்கள் குற்றம் சுமத்துகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் அவர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட புத்திஜீவிகள், பொதுமக்கள் நிராகரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

எதிர்வரும் காலங்களில் தேர்தல்கள் நடைபெற்றால் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் பொதுமக்களினால் நிராகரிக்கப்படுவார்கள்.

ஸ்ரீநேசன் அவர்களை தோற்கடிப்பதற்கு புத்திஜீவிகள், கல்வியாளர்கள்,பொதுமக்கள் களத்தில் இறங்கி செயற்படுவார்கள்.

இன்று கிழக்கு உட்பட இலங்கை பூராகவும் உள்ள சகோதர முஸ்லிம் அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள்,கட்சி பிரமுகர்கள்,பள்ளிவாசல் சம்மெளனம் ஒன்றிணைந்து தமது முஸ்லிம் மக்களுக்கும்,சமூகத்திற்கும் அரசாங்கத்திடம் குரல்கொடுத்து தங்களுக்கு தேவையான நிருவாக அதிகாரிகளையும்,கல்விச்சேவை அதிகாரிகளையும்,பௌதீகவளங்களையும் பாராளுமன்றத்தில் காட்டமாக தங்கள் சமூகத்தையும், மக்களையும்,கிராமங்களையும் சிறப்பாக வைக்கின்றார்கள்.

தமிழ்மக்களின் வாக்குகளை பெற்று எதிர்கட்சி தலைவரும்,தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன்,மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்கள்.இது ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் வேதனைப்படுத்தும் விடயமாகும். இது வெந்த புண்ணிலே வேலைப்பாய்ச்சும் செயற்பாடாகும்.

இடியுடன்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கொழும்பிலிருந்து காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

முடிவிற்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கைதிகளை பார்வையிட்டனர்.

மாணவர்களுடன் இணைந்து அரசியல்கைதிகளின் விடுதலைக்காக போராடிய அருட்தந்தை மாரிமுத்து சத்திவேலும் அரசியல் கைதிகளை பார்வையிட்டார்.

சொக்லேட்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

நாளுக்காக சக மாணவர்களுக்கு சொக்லேட் வழங்கிய போது அதனை சாப்பிட்ட மாணவர்கள் வாந்தி எடுத்துள்ளதாகவும் ,அதனை தொடர்ந்து மாணவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இம்மாணவன் மட்டக்களப்பு நகரில் உள்ள கடையொன்றில் பணத்தை கொடுத்து சொக்லேட்டை கொள்வனவு செய்துள்ளான்.கொள்வனவு செய்துள்ள சொக்லேட்டை தனது வகுப்பில் உள்ள 42 மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்கியுள்ளான்.சொக்லேட்டை சாப்பிட்ட 42மாணவர்களில் 8மாணவர்களே வாந்தி எடுத்தநிலையிலும்,மயமுற்ற நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சொக்லேட்டானது காலாவதி திகதியை பூர்த்தி செய்யவில்லை என்றும், 2019 ஆம் ஆண்டுவரையும் காலாவதி திகதி பொதி செய்யப்பட்டுள்ளதுடன், சொக்லேட் பொதியில் இருந்தே சொக்லேட் மாணவர்கள் சாப்பிட்டுள்ளார்கள்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் நிலைமை தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கு வைத்தியசாலை அதிகாரிகள் அனுமதி வழங்கிய போதிலும் ,மாணவர்களாலும் ,ஆசிரியராலும் அனுமதி வழங்கப்படவில்லை .

சுகவீனமுற்ற மாணவர்கள் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

எல்லை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

சப்ரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலப்பகுதி சமீபத்தில் முடிவடைந்தது.

அதன்படி மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவது சம்பந்தமாக அத தெரண மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சிடம் தொடர்பு கொண்டு வினவியது.

மாகாண சபை எல்லை நிர்ணய மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தபின், ஜனாதிபதி அது தொடர்பில் அறிவிப்பார் என்று அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.

அது சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு பொறுப்பல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கையின் மறுசீரமைப்புக்காக பிரதமர் தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அந்தக் குழு மாகாண சபை எல்லை நிர்ணய மறுசீரமைப்பு அறிக்கையை இரண்டு மாத காலத்தில் அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

கைதிகள்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது;

தமிழ் தேசிய கூட்டமைப்பானது காலம் காலமாக மக்களை ஏமாற்றியே வந்துள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் வருட இறுதிக்குள் தீர்வு வரும் என்று மக்களை முட்டாள்களாக்கி தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சொகுசு பங்களாக்களையும், செல்வம் அடைக்கலநாதனுக்கு பிரதிக் குழுக்களின் தலைவர் பதவியையும் சொகுசு வாகனங்கள் என்று அனைத்து உறுப்பினர்களும் தங்கள் தேவைகளை மாத்திரமே பூர்த்தி செய்து கொண்டார்கள். தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை. மாறாக அவர்களின் போராட்டங்களை சிதறடிப்பதிலேயே ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள்.

மக்கள் மத்தியில் தற்பொழுது கூட்டமைப்பின் மீது ஏற்பட்டிருக்கும் வெறுப்பலையை தணிப்பதற்கும் அதிலிருந்து மக்களை திசை திருப்பி, அவர்களை மீண்டும் ஏமாற்றி வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் வாக்குகளை கபளீகரம் செய்வதற்கான உத்தியே இப்படியான நிபந்தனை விதிப்பு நாடகம்.

இதுவரையில் ஏன் சுமந்திரன் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கோ அல்லது மனித உரிமைகள் சபைக்கோ கடிதம் ஒன்றை எழுதவில்லை, இலங்கையில் காணப்படும் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் கொடூரமானது, அந்தச் சட்டத்தின் கீழ்தான் தமிழ் இளைஞர்கள் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அந்த வாக்குறுதியை முன்வைத்துத்தான் நாங்கள் இந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்தோம். ஆனால் அந்தச் சட்டம் இன்று வரைக்கும் நீக்கப்படவில்லை. ஆகவே அது விடயம் தொடர்பில் உடனடியாக சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்ற விடயம் ஏன் இதுவரைக்கும் முன்வைக்கப்படவில்லை.

அதேநேரம் தமிழ் அரசியல் கைதிகளின் நலன்களை பாதுகாப்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை. மாறாக சர்வதேசத்தில் இலங்கையை காப்பாற்றும் கைங்கரியத்தில் ஈடுபடுவதே அவர்களின் தலையாய கடமையாக உள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் அமர்வில் இது தொடர்பில் குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்குதல் சம்பந்தமாக எந்தவிதமான கருத்தாடல்களும் கூட்டமைப்பால் நிகழ்த்தப்பட்டிருக்கவில்லை. இதுவே போதும் இவர்களின் உண்மையான முகங்களை தோலுரித்துக் காட்டுவதற்கு.

மாறாக சர்வதேசத்தில் இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டு உள்நாட்டில் தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு நிபந்தனை விதிப்பது என்று இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கின்றது தமிழ் தேசிய கூட்டமைப்பு. உண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இந்த அரசாங்கமும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றே.

இதேநேரம் நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் கோரிக்கை ஒன்றைக் கொண்டு மாவை சேனாதிராஜா சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளைப் பார்த்த விடயமானது மிகவும் பச்சைத் துரோகமான ஒருநடவடிக்கை. யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஐந்து நாட்களாக தங்களின் படிப்பையும் தியாகம் பண்ணி கால்நடையாக கடும் மழைக்கு மத்தியிலும் கால்கடுக்க யாழிலிருந்து நடந்து அனுராதபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

அப்படியான அந்த மாணவர்களின் போராட்டத்தை முழுமையாக தோல்வியடையச் செய்யும் நோக்கத்தில்தான் மாவை இன்று (நேற்று) சிறைச்சாலைக்கு வந்துள்ளார். ஆனாலும் மாவையின் இந்தக் கோரிக்கையை சிறைச்சாலைக் கைதிகள் ஏற்றுக் கொண்டு தங்களின் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பொதுமக்களின் தன்னெழுச்சியை முற்றாக முடக்கி நசுக்குவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் சதி முயற்சியான மாவையின் மூலம் மேற்கொள்ளப்பட்டாலும் அது கைகூடவில்லை. இதற்கு சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் அவரின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை என்பதே உண்மையாகும்.

44 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பிரகாசிக்கும் மலையக மற்றும் வட மாகாண வீரர்கள்

கந்தளாய் நிருபர்

44 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் ஆடவருக்கான 10000 மீட்டர் ஓட்டத்தில் மத்திய மாகாணத்தின் குமார் சண்முகேஸ்வரன் தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

மகளிருக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தின் ஹெரீனா ஜெயக்குமார் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

44 ஆவது தேசிய விளையாட்டு விழா பொலன்னறுவை மாவட்ட மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஆடவருக்கான 10000 மீட்டர் ஓட்டத்தை 30 நிமிடங்கள் 49 செக்கன்ட்களில் கடந்த ஹட்டன் - வெலிஓயா, புதுக்காடு பகுதியைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

கடந்த வருடம் முதலிடம் பெற்ற மத்திய மாகாண வீரரான லயனல் சமரஜீவ 8 செக்கன்ட்கள் தாமதித்து வெள்ளிப்பதக்கத்தை அடைய, மற்றொரு மத்திய மாகாண வீரரான ஏ.ஜே.கே. பண்டார வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

மகளிருக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.2 மீட்டர் உயரத்திற்கு தாவிய சச்சினி கௌசல்யா தங்கப்பதக்கத்தை தனதாக்கினார்.

3 மீட்டர் உயரத்திற்கு தாவிய வட மாகாணத்தின் ஹெரீனா ஜெயக்குமார், மத்திய மாகாணத்தின் சீ.கே. கொடித்துவக்கு ஆகியோர் இரண்டாமிடத்தைப் பகிர்ந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் தேசிய சாதனையாளரான அனிதா ஜெகதீஸ்வரன் உபாதை காரணமாக பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் கடன் சுமையில் இருக்கும் மக்களை விடுவிக்கும் திட்டம்

வவுனியா நிருபர்

வடமாகாணத்தில் நுண் நிதி நிறுவனங்களில் கூடுதலான வட்டிக்கு கடன்களைப் பெற்று மீள செலுத்த முடியாமல் கடன் சுமையில் இருக்கும் மக்களை விடுவிக்கும் செயற் திட்டம் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் கடன் சுமையை நீக்கும் பொருட்டு குறைந்த வட்டி வீதத்தில் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்கள், கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஊடாக கூட்டுறவு அரவணைப்பு கடன் திட்டம் வழங்கபட்டு வருகிறது.

குறித்த திட்டம் இலங்கை மத்திய வங்கி, மாவட்ட செயலகம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் மேற்பார்வையில் வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக் கடன் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் ஆரம்ப கட்டமாக சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்கள் மூலம் 400 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இச் சங்கங்களினூடாக கடன்களை வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சமாசத்தின் அலுவலக மண்டபத்தில் சமாசத்தின் தலைவர் அ.ச.பாரதி ஆனந்தம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி இந்திரா சுபசிங்க கலந்து கொண்டிருந்தார். அத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.பிரணவன் மற்றும் சமாசத்தின் இயக்குனர்சபை உறுப்பினர்களும், பயனாளிகளும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வின் போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமாசத்தின் தலைவர், இயக்குனர் சபை உறும்பினரகள் ஆகியோரினால் பயனரளிகளுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மொத்தமாக 8 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தற்போது மலையகமெங்கும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் தங்கக் கலை தோட்ட கிம்ரு பிரிவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்கக் கலை தேட்ட கொழுந்து மடுவத்தின் முன்பாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 150 தொழிலாளிகள் கலந்து கொண்டனர்

இன்னும் ஓரிரு தினங்களில் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ள நிலையில் தமது சம்பளத்தை ரூபா 1000 ஆக அதிகரிக்குமாறும் தீபாவளி முற்பணத்தையும் அதிகரித்து தருமாறும் கோரி சுலோகங்கள் ஏந்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு முறையும் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடும் போதும் சம்பள உயர்வுக்காக தாம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டதாக விசனம் தெரிவித்தனர். அத்தோடு முதலாளிமார் சம்மேளனமும் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் தொழிற்சங்கங்களும் தமது நிலை வாருளாதார நிலைமை தொடர்பில் ஏன் கவனம் செலுத்துவதில்லை என்றும் கேள்வி எழுப்பினர்.

அத்தோடு ஒப்பந்தம் கைச்சாத்திடும் காலப்பகுதியில் மாத்திரம் சர்வதேச சந்தையில் இலங்ரை தேவிலைக்கு விலை இல்லை என்று கூறி சம்பளத்தை உயர்த்துவதற்கு கம்பனிகள் முட்டுக்கட்டை போடுவது நியாயமில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். அவ்வாறு நட்டம் ஏற்பட்டால் அரசாங்கம் பெருந்தோட்ட ங்களை பொறுப்பெடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி பிரதமர் தமது சம்பள பிரச்சினையில் தலையிட்டு தமது கோரிக்கைகளை செவிமடுத்து தமக்கான நியாயமான சம்பள உயர்வை பெற்றுத் தருமாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

சாதிப்பதற்கு ஊனம் தடையல்ல!

பூண்டுலோயா நிருபர்

இன்றைய காலத்தை பொருத்தவரையில் எதற்கெடுத்தாலும் ஒவ்வொரு காணத்தை சுட்டிக்காட்டி கொண்டிருப்பனர் எமது சமூகத்தினர். காய்ச்சல், தலைவலி, சிறு காயம் என காரணத்தை காட்டி வேலைகளை தள்ளிப்போடுவர்.இதற்கான காரணம் அவர்களின் சோம்பல்.இவ்வாரானவர்களுக்கு முகத்தில் அடித்தால் போல் இமாலய சாதனையை புரிந்துள்ளார் இலங்கை மாணவி.

அண்மையில் வெளியான புலமை பரீட்சை புள்ளிகளில் வெட்டுப்புள்ளியை தாண்டி சித்தியெய்த மாணவர்களை பாராட்டி மகிழ்ந்தோம்.ஆனால் இலங்கையை மக்களை வியப்பில் ஆழ்த்தும் முகமாக மாவனல்ல கொட்டக்கல பகுதியை பிறப்பிடமாக கொண்ட துஷாரா எனும் மாணவியே இவ்வாறு சாதனைப்படுத்துள்ளார்.

145 புள்ளிகளை பெற்ற இம்மாணவி பரீட்சை வெட்டுப் புள்ளியை தவற விட்டாலும் இவரின் ஆற்றலைகண்டு மக்கள் வியக்கின்றனர்.காரணம் கைகளால் இம்மாணவியால் எழுத முடியாவிட்டாலும் தன் வாயை பயன்படுத்தி எழுதியே இப்புள்ளிகளை மாணவி பெற்றுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் கைகளால் இயலாவிட்டாலும் தன் வாயை துணையாக கொண்டு தூரிகையை பயன்படுத்தி சித்திரங்கள் வரைதல், வர்ணம் தீட்டுதல்,ஆக்கங்களை உருவாக்கல் என்பவற்றையும் வியக்கும் வண்ணம் செய்துக்கொண்டிருக்கிறார்.அதுமட்டுமல்லாது கலைவண்ணங்கள் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவரின் எதிர்கால நோக்கு தன்னை போல விசேட திறமைகளை கொண்ட பிள்ளைகளை இணங்கண்டு அவர்களை வழிப்படுத்தும் ஆசிரியராக உருவாக வேண்டும் என்பதே இவரின் அவா.

இவரின் எதிர்கால இலட்சியம் சிறக்கவும் இன்னும் பல சாதனைகள் படைக்கவும் வாழ்த்துக்கள்.

விளையாட்டு மைதானம் இன்றி அவதிபடும் சிறுவர்கள்

பூண்டுலோயா நிருபர்

இக்காலக்கட்டத்தில் அனைவரும் விரும்பும் பொழுதுபோக்கு விளையாட்டு. நகர்ப்பகுதிகளை விட தோட்டப்பகுதிகளில் விளையாட்டே இளைஞர்களினதும் சிறுவர்களினதும் பொழுதுபோக்கு அம்சமாக அமைந்துள்ளது.அவ்விளையாட்டுக்கு முட்டுக்கட்டை இடும் விதமாக அமைந்துள்ளது மாத்தென்ன டெவரியா தோட்டம்.

பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள இத்தோட்டம் பதுளை நகரிலிருந்து 16 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது பசறை பிரதேசம் அப் பசறை பிரதேசத்திலிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது மாத்தென்ன ஏபிரிவு டெவரியா தோட்டம். இத்தோட்டத்திலே சிறுவர்கள் இவ்வாறான பிரச்சனையை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் இத்தோட்டத்தை அண்டிய பகுதியிலேயே வடிவேல் சுரேஸ் மற்றும் அரவிந்தக்குமார் ஆகிய இருவரும் வசிக்கின்றனர். ஆனால் இருவரும் எவ்விதமான அக்கறையும் காட்டவில்லை என ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிறந்த விளையாட்டு மைதானத்தை புணரமைத்து கொடுத்தால் வரும் காலங்களில் சிறந்த கரப்பந்தாட்ட அணி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மக்களின் பாதுகாப்பு தொடர்பில் கருத்திற் கொள்ளாத தோட்ட நிர்வாகம்

சுஜீவன் தலவாக்கலை

கொட்டக்கலை பிரதேச சபைக்குட்பட்ட ஹொலி ரு ட் மற்றும் குமாரகம பிரதேசம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வரும் சில குடும்பங்கள் அச்சத்துடனேயே இருந்து வருவதாக தெரிவிக்கின்றனர். ஏனெனில் இப்பிரதேசங்களில் .ஆபத்தான நிலையில் 20 இற்கும் மேற்பட்ட ஓங்கி உயர்ந்து வளர்ந்திருப்பதேயாகும். கடந்த சில தினங்களுக்கு முன் இப்பகுதிகளில் கடுங்காற்று க்ன் கூடிய அடைமழை பெய்த போதும் இம் மக்கள் மிகுந்த அசத்துடனேயே ஒவ்வொரு நொடிப் பொழுதையும் கழித்ததாக கூறினர். இதன் காரணமாரஅம் மரங்களை வெட்டி அகற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல் துவைகள் அறிவித்துள்ள போதிலும் இன்று வரை இவர்கள் எதிர்நோக்கும் இப்பி3 ச்சினைக்குரிய தீர்வு கிடைக்கவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து இப்ரதேச மக்கள் 1919 அவசர அழைப்பின் மூலம் குறித்த பிரச்சினையினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். அதன் விளைவாக கொட்டக்கலை பிரதேச தலைவரின் பணிப்புரைக்கமைய அதிகாரிகள் இருவர் வருகை தந்ததோடு குமாரகம பிரதேச மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் எனக் கருதிய 20 மரங்களை வெட்ட வேண்டும் என அவ் அதிகாரிகள் தெரிவித்துச் சென்றனர். இந் நிலையில் குறித்த மரங்கள் இருக்கும் காணியானது ஹொலி ரூட் டேதோட்டத்திற்கு சொந்தமான பகுதி என்பதால் மரங்களை வெட்டுவதற்கான நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ள முடியாறு என கொட்டக்கலை பிரதேச சபை அறிவித்துள்ளது அதே சமயம் பிரதேச மக்களின் பாதுகாப்பு கருதி ஆபத்ள் ஏற்படுத்தக் கூடும் நிலையில் கானப்படும் மரங்களை வெட்டி அகற்ற நடவடிகை எடுக்குமாறு ஹெலிருட் தோட்ட நிர்வாகத்திற்கும் கொட்டக்கலை பிரதேச சபை கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இருப்பினும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளது போல் குமாரகம பிரதேசத்தில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாறான மரங்கள் எதுவுமில்லை என்று ஹொலி ரூட் நோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளதாக பிரதேச மக்கள் கூறினர். அணர்த்தம் ஒன்று ஏற்பட்ட பின் அதற்கான நிவாரணங்களை முன்னெடுப்பதே சகலரதும் கடமையாக செய்து வருகின்றனரே தவிர அனர்த்தம் ஏற்பட முன்னர் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ நிறுவனங்களோ அதிக அக்கறை காட்டுவதில்லை.

குன்றும் குழியுமாக லோகி தோட்ட பாதை

சுஜீவன் தலவாக்கலை

கொட்டக்கலை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட லோகி தோட்டத்திற்கான பாதை கடந்த பல வருடங்களாக செப்பனிடப்படாமையினால் குறித்த பாதையினை போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். அட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் தலவாக்கலை மல்லியப்பூ கதிரேசன் கோயிலின் அருகில் இருந்து லோகி தோட்டம் வரை செல்லும் சுமார் 3 கி.மீ. தூரமுடைய பாதை பே இவ்வாறு மோதுமான நிலையில் உள்ளது. இவ்விதியினுடாக லோகி மற்றும் கூம்வூட் ஆகிய தோட்டப் பகுதிகளுக்கு செல்லும் நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த பாதையினை செப்பனிட்டுத் தருமாறு பிரதேணூ மக்கள் நுவரெலியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு பல தடவைகள் அறிவித்துள்ள போதிலும் இன்று வரை குறித்த பாதை செப்பனிடப்படவில்லை என மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். இப்பாதை குன்றும் குழியுமாக காணப்படுவதால் இவ்வழியாக பயணிக்கும் முச்சக்கர வண்டிகள் உட்பட வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் அதற்காக அதிக பணத்தை செலவிட்டு வருவதாகவும் இப்பகுதியிலுள்ள சுயதொழிலாளர்கள் (வாகன உரிமையாளர்கள்) தெரிவித்தனர். இதே போன்றே இத்தோட்டப்பகுதிக்குச் செல்லும் மக்கள் வாடகைக்கு அமர்த்தும் வாகனங்களுக்கு அதிக தொகையை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்..

அதே வேளை இவ்வழியாக கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட நோயாளிகளை சிகிச்சைக்கார வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்வதிலும் பல சிரமங்களுக்கு இம் மக்கள் முகங் கொடுத்து வருகின்றனர்.. மேலும் மழைக் காலங்களில் இல் வழியூடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருவதாக எம் தெரிவிக்கின்றனர்.

லோகி தோட்டத்திற்கான பாதையினை செப்பளிட அடிக்கல் நாட்டப்பட்டு 2 வருடங்கள் கடந்தும் இப்பாதையானது இதுவரை செயனிடப்படவில்லை. இதற்க்கா ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நேர்ந்தது என பிரதேணூ மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாரணர்களுக்கான பயிற்சி முகாம் திறந்து வைப்பு

க.கிஷாந்தன்

நுவரெலியா ஹாவாஎலிய பீட்ரூ பகுதியில் புனரமைக்கப்பட்ட சாரணர்களுக்கான பயிற்சி முகாம் திறந்து வைக்கப்பட்டது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் புத்திக பத்திரண குறித்த பயிற்சி முகாமை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சாரணர்களுக்கான பயிற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் இந்த பயிற்சி முகாம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

இந்நிகழ்வின் போது இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், சாரணர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மழைக்காலத்தில் நரகமாக மாறும் பூண்டுலோயா நகரம்

பூண்டுலோயா நிருபர்

நுவரெலியா கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட பூண்டுலோயா நகரமானது மழைக்காலங்களில் மக்களுக்கு பல பெரும் பிரச்சனையை தோற்றுவித்து கொண்டிருக்கின்றன. காண்களை ஒழுங்காக துப்பரவு செய்யாமல் இருப்பதே காரணமாகும்.மழைக் காலங்களில் நீர் போக வழியில்லாமல் பாதைகளில் வழிந்தோடுகின்றது.பாடசாலை விட்டு வீடு திரும்பும் மாணவர்களுக்கும் இவ்விடயம் சவாலாக அமைந்து வருகின்றது. வாகனங்கள் வேகமாக செல்லும் சமயங்களில் பாடசாலை மாணவர்களின் சீரூடைகள் அழுக்காவது அடிக்கடி அவதானிக்க கூடிய விடயமாக காணப்படுகின்றது. காண்கள் ஒழுங்காக தூய்மை படுத்தாமையினால் வீதிகளில் காணப்படும் கழிவுகள் வீதியெங்கும் கழுவி சென்று நகரமே நரகமாக காட்சியளிக்கின்றது.

இதுதொடர்பாக பூண்டுலோயா வட்டாரத்தின் கொத்மலை பிரதேசபை உறுப்பினர் இராமையா பாரதிராஜா கடந்த கூட்டத்தொடரின் போது விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டது.சபையின் தலைவர் அதற்கான தீர்வை எடுப்பதாக கூறியபோதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதிருப்பது மக்களிடத்தில் முகஞ்சுழிக்கும் விடயமாக அமைந்துள்ளது. எனவே இது தொடர்பாக கொத்மலை பிரதேச சபையும் உரிய அதிகாரிகளும் சரியான நடவடிக்கை எடுக்காத விடத்து எதிர்வரும் காலங்களில் போராட்டத்தில் ஈடுபட போவதாக பூண்டுலோயா பிரதேச மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

‘மீ டு’ இயக்கத்தில் தெரிவிக்கப்படும் பாலியல் புகாரை விசாரிக்க குழு

‘மீ டு’ இயக்கத்தின் மூலம் பெண்கள் தெரிவிக்கும் பாலியல் புகார்கள் தொடர்பாக விசாரிக்க சட்ட நிபுணர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் மேனகா காந்தி தெரிவித்தார்.

டெல்லியில் நேற்று பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு பேட்டி யளித்த மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மேனகா காந்தி கூறியதாவது: ‘மீ டு’ இயக்கத்தின் மூலம் ட்விட்டரில் பல துறைகளைச் சேர்ந்த பெண்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாலியல் கொடுமைகள் பற்றி தெரிவித்து வருகின்றனர். அவற்றை நான் நம்புகிறேன். புகார் தெரிவிப்போரின் வலியையும் வேதனையையும் உணர்கிறேன்.

தங்களுக்கு ஏற்பட்ட பாலியல் தொந்தரவுகளையும், மோசமான அனுபவங்களையும் வெளியே சொல்வதற்கு அதிக அளவில் பெண்கள் முன்வரவேண்டும்.

‘மீ டு’ இயக்கத்தின் மூலம் பெண்கள் தெரிவிக்கும் பாலியல் புகார்கள் தொடர்பாக விசாரிக்க குழு அமைக்க மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. இந்தக் குழுவில் மூத்த நீதிபதி கள், சட்ட நிபுணர்கள் இடம் பெற வேண்டும் என்பது எனது யோசனை. இதுபோன்ற வழக்குகள் அறைக்குள் 25 ஆண்டுகளாக அடைபட்ட யானை களைப் போல உள்ளன. இத்தனை ஆண்டுகள் கழித்து அந்த குற்றச்சாட்டுகளை அவர்கள் எவ்விதம் நிரூபிக்கப் போகிறார்கள் என்பதே எனது கேள்வி. வார்த்தை களால் திட்டுவது, தொட்டு தொந்தரவு செய்தல், சீண்டல்கள், ஆடைகளை பிடித்து இழுப்பது போன்ற பல்வேறு இன்னல்களை பெண்கள் அனுபவித்து வருகின்றனர்.

பெண்களை பாலியல்ரீதியாக தொந்தரவு செய்யும் அரக்கன்களின் பெயர்களை முதலில் அம்பலப் படுத்தி அவர்களை அசிங்கப் படுத்தவேண்டும். பெயர்களை வெளியிட்டு அசிங்கப்படுத்தினாலே போதும், அந்த ஆண்களுக்கு மிகப்பெரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்த உணர்வு பெண்களுக்கு ஏற்படும்.

இதற்கு அடுத்தபடியாக சட்ட நிபுணர்கள் குழு அமைத்து, பெண்களின் பிரச்சினைகளை கேட்பது ஆகும். பாலியல்ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாகும் பெண்கள் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை துணிச்சலாக வெளியே தெரிவிக்கவேண்டும்.

எனது தலைமையிலான அமைச் சகம், பெண்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதில் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. அனுப்புவோரின் பெயர் குறிப் பிடாமல் தெரிவிக்கப்படும் பாலியல் புகார்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இங்கு தெரிவிக்கப்படும் புகார்கள் அனைத்தையும் அமைச் சகம் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வாறு மேனகா காந்தி கூறினார்.

அதே நேரத்தில் மத்திய அமைச்சர் எம்.ஜே.அக்பர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவிக்க மேனகா காந்தி மறுத்துவிட்டார்.

‘மீ டு’ இயக்கம் தொடங்கிய பின்னர் இந்தியாவில் நடிகைகள் உட்பட பலர் துணிச்சலாக தங் களுக்கு நேர்ந்த பாலியல் தொந்தரவு அனுபவங்களை தெரிவித்து வருகின்றனர். இந்தி நடிகர் நானா படேகர் மீது நடிகை தனுஸ்ரீ தத்தா வெளிப்படையாக புகார் தெரிவித்தார். அதைப் போலவே மத்திய அமைச்சர் எம்.ஜே.அக்பர் மீதும் பாலியல் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சுவர்களுக்கிடையில் எலும்புக்கூடு

புதுடெல்லி துவாரகா பகுதியில் வீட்டைப் புதுப்பிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது இரண்டு சுவர்களுக்கு இடையில் முளைத்திருந்த தாவரங்களை அகற்றும் பணியின் போது எலும்புக்கூடு புதைக்கப் பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியில் உறைந்தனர்.

எலும்புக் கூட்டைக் கண்டு பீதியில் உறைந்த 2 தொழிலாளர்கள் விஷயத்தை வீட்டு உரிமையாளரிடம் தெரிவிக்க அவர் உடனடியாக போலீஸுக்குத் தகவல் அனுப்பினார்.

நீலச்சட்டை அணிந்திருந்த ஒரு நபரின் எலும்புக்கூடு அது. பிப்ரவரி 2016 முதல் காணாமல் போனதாக தேடப்பட்டு வரும் 24 வயது ஜெயப்பிரகாஷ் என்பவரின் எலும்புகூடு அது என்று போலீஸார் தரப்பில் கூறப்படுகிறது. உடனடியாக போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர். ஜெயபிரகாஷின் மாமா தலைமறைவானதும் போலீஸ் தரப்பில் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

ஜெயப்பிரகாஷ் மாமா விஜய் குமார் மஹாரானா மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் விக்ரம் சிங். இவருக்கு வயது 87. தாப்ரியின் சாணக்கியா பிளேசில் தான் வாடகைக்கு விட்ட 3வது தளத்தின் பால்கனியை பழுது பார்க்க வேலைக்கு ஆட்களை அமர்த்தியிருந்தார். இவர் 2015-ல் வீட்டின் 3வது தளத்தை மேற்கு வங்கத்திலிருந்து வருவதாகத் தெரிவித்த விஜய் என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார்.

இவர் தன் உறவினர் ஜெய் உடன் இங்கு தங்கியிருந்துள்ளார், இருவரும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தனர். இவர்கள் இருவரும் வெளியில்தான் உணவு அருந்தி வந்துள்ளனர். இப்படியிருக்கையில் 2 மாதம் சென்ற பிறகு வீட்டு உரிமையாளரிடம் விஜய் தன்னுடன் தங்கியிருந்த மருமகன் ஜெய்யைக் காணவில்லை என்று தெரிவித்துள்ளார். வீட்டு உரிமையாளர் போலீசுக்கு தகவல் அளிக்குமாறு விஜய்யிடம் கூறியுள்ளார். இதனையடுத்து பிப்ரவரி 12, 2016-ல் காணவில்லை புகார் பதிவு செய்யப்பட்டது. ஜெய்யின் தாயாரும் மகனைக் காணாமல் பரிதவித்து வந்துள்ளார்.

மண், தாவரம் கேட்ட விஜய்:

இதே காலக்கட்டத்தில்தான் விஜய் வீட்டு உரிமையாளரிடம் கொஞ்சம் மண், தாவரங்கள் இருந்தால் அழகுபடுத்த உதவும் என்று கேட்டுள்ளார். அதைக் கொண்டு பால்கனியில் இருசுவர்களுக்கிடையில் உள்ள இடைவெளியில் அவர் தாவரங்களை வைத்துள்ளார். இதற்கு 2 மாதங்களுக்குப் பிறகு வீட்டை விஜய் காலி செய்துள்ளார்.

திங்களன்று தொழிலாளர்களை வைத்து சுவற்றை இடிக்கச் சொன்னேன். அங்கிருந்து தாவரத்தையும், மண்ணையும் அகற்றச் சொன்னேன். இதை செய்தபோது அங்கு எலும்புக்கூடு இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் உடனே தெரிவிக்க நான் போலீஸை வரவழைத்தேன் என்றார் வீட்டு உரிமையாளர்.

இதனையடுத்து தாப்ரி போலீஸ் நிலைய ஆபீசர், குற்றப்புலனாய்வுத் துறை ஆகியோர் இடத்துக்கு விரைந்து புகைப்படங்கள், வீடியோ எடுத்தனர்.

தீன் தயாள் மருத்துவமனையில் பரிசோதனைக்காக எலும்புக்கூடு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது, டி.என்.ஏ சோதனை நடத்தி அது ஜெய்யின் எலும்பு தானா என்று கண்டறியப்படும்.

ஜெய் பணியிலிருந்து திரும்பவில்லை என்று மாமா விஜய் அளித்த புகார் போலியானது என்று போலீஸார் இப்போதைக்கு முடிவெடுத்து கொலை வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் வழிபட அனுமதித்த உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக கேரளாவில் நடந்து வரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் வழிபடலாம் என உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பை அமல்படுத்த கேரளத்தை ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. ஆனால் இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள், பல்வேறு அமைப்புகள், நாயர் சர்வீஸ் சொசைட்டி, ஐயப்ப பக்தர்கள் அமைப்பினர் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட் டம், கண்டனப் பேரணி, சாலை மறியல் போன்ற போராட்டங்களை தீவிரமாக அவர்கள் நடத்தி வருகின்றனர். நேற்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஏராளமான பெண் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் திருவனந்தபுரத் திலுள்ள திருவாங்கூர் தேவசம் போர்டு அலுவலகம் முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தை கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டி பிரச் சாரக் குழுத் தலைவர் கே. முரளி தரன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்,

‘‘உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து கேரள அரசு சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, உச்ச நீதிமன்ற தீர்ப்பைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வரலாம். ஆனால் இதுவரை அதை பாஜக செய்யவில்லை’ என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் கன்னம் ராஜேந்தி ரன் கூறும் போது,‘பாரம்பரியத்தை நம்புபவர்களுக்கு எதிரானதல்ல இடதுசாரி ஜனநாயக முன்னணி. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல் படுத்துவதற்கான ஏற்பாடுகளை மட்டுமே மாநில அரசு செய்து வருகிறது’ என்றார்.

நேற்று கொல்லம் மாவட்டத்தில் பாஜக தலைமையில் சபரிமலை பாதுகாப்பு பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியானது கொல்லத்தில் தொடங்கி அக்டோபர் 15-ம் தேதி திருவனந்தபுரத்தில் நிறைவடையவுள்ளது.

பேரணி தொடக்க விழாவில் பாஜக மாநிலத் தலைவர் பி.எஸ். ஸ்ரீதரன் பிள்ளை பேசியதாவது:

நாங்கள் ஐயப்பனை நம்புபவர்கள் பக்கம் நிற்போம். இந்த விஷயத்தில் எந்தவித சமரசமும் செய்துகொள்ள மாட்டோம். தேவைப்பட்டால் இந்தப் போராட்டத்தை தென் மாநிலம் முழுவதும் நடத்துவோம். லட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்களின் துணையுடன் இந்தப் போராட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

நேற்று கேரள அரசு தலைமைச் செயலகம் முன்பு பந்தளம் அரச குடும்பத்தினர் சார்பில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. ஐயப்பன் கோயிலின் பாரம்பரியம், பூஜை முறைகள் பாதுகாக்கப் படவேண்டும் என்று கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்துக்கு ஐயப்ப தர்ம சம்ரக் ஷன சமிதி ஏற்பாடு செய்தி ருந்தது. இதில் கட்சி பேதமின்றி பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். காங்கிரஸ் எம்எல்ஏ வி.எஸ்.சிவக்குமார், பந்தளம் சுதாகரன், பாஜக எம்.பி. சுரேஷ் கோபி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது பந்தளம் அரசு குடும்ப உறுப்பினர் சசிகுமார வர்மா பேசியதாவது: சபரிமலை ஐயப்பன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற புண்ணியத்தலமாகும். இந்த கோயிலின் வழிபாடுகள், பாரம்பரியங்கள் கடைப்பிடிக் கப்பட வேண்டும். நீதிமன்றத்தின் உத்தரவால் அந்த பாரம்பரியம் அழிக்கப்படக்கூடாது. ஐயப்பன் கோயில் வழிபாட்டு முறைகளில் மட்டும் ஏன் தடை போட நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த கோயில் மிகவும் புகழ் பெற்று வருகிறதே.அதனால் தானோ? இவ்வாறு அவர் கூறினார்.

13 வயது வங்கி உரிமையாளர்!

பெரு நாட்டைச் சேர்ந்த 13 வயது ஜோஸ் டோல்ஃபோக்விஸோகலா ஒரு வங்கியை 6 ஆண்டுகளாக நடத்திவருகிறார்! இதில் 2000 பேர் வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள். 7 வயது ஜோஸுக்குத் தன்னுடைய பள்ளி நண்பர்கள், தின்பண்டங்களுக்கும் பொம்மைகளுக்கும் அதிகமாகச் செலவு செய்வது போல் தோன்றியது. இதற்குப் பதிலாகக் கிடைக்கும் பணத்தை சேமித்து வைத்தால், அர்த்தமுள்ள செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தார். உடனே பணம், சேமிப்பு, வங்கி குறித்து தன் பெற்றோரிடமும் வங்கி அதிகாரிகளிடமும் ஆலோசனை பெற்றார். அப்போது வேறு ஒரு யோசனை தோன்றியது.

பெற்றோரின் உதவியின்றி மாணவர்களே ஒரு குறிப்பிட்ட தொகையைச் சம்பாதித்து, மாணவர்களுக்கான வங்கியில் சேமிக்க வேண்டும் என்பதுதான்.

மாணவர்கள் தங்கள் வீட்டிலுள்ள தேவையற்ற தினசரிகள், பத்திரிகைகள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும்.

அந்தப் பொருட்களை விற்று, அதற்கு உரிய தொகையை அந்த மாணவரின் பெயரில் வங்கியில் வரவு வைக்கப்படும். இப்படிச் சேமிக்கும் பணத்தைத் தேவையானபோது மாணவர்கள் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தன்னுடைய திட்டத்தைப் பள்ளியில் சொன்னார் ஜோஸ்.

ஆனால் ஆசிரியர்கள், ஒரு 7 வயது மாணவரால் வங்கியை நிர்வாகம் செய்ய இயலாது என்றும் இது பயன் தராத திட்டம் என்றும் சொல்லிவிட்டனர். ஜோஸுக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட பள்ளியின் முதல்வரும் துணை முதல்வரும் உதவுவதற்கு முன்வந்தனர்.

முதல்வரின் உதவியோடு வங்கியை ஆரம்பித்துவிட்டேன். ஆசிரியர்களும் மாணவர்களும் மிக மோசமாகக் கிண்டல் செய்தனர். அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று முதல்வர் உற்சாகப்படுத்தினார். விரைவிலேயே என் வகுப்பு மாணவர்கள் அனைவரும் என்னைப் புரிந்துகொண்டு, ஆர்வத்துடன் வங்கியின் வாடிக்கையாளர்களாக மாறினார்கள். தேவையற்ற பொருட்களை மறுசுழற்சி செய்யும் நிறுவனத்துடன் பேசி, நாங்கள் கொடுக்கும் பொருட்களுக்குக் கூடுதல் பணம் தரும்படி ஒப்பந்தம் செய்துகொண்டேன். இந்த வங்கியில் கணக்கு ஆரம்பிக்க வேண்டும் என்றால் 5 கிலோ மறுசுழற்சி பொருட்களைக் கொடுத்து, வாடிக்கையாளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறகு மாதம் ஒரு கிலோ பொருட்களைக் கொடுத்தால் கூடப் போதுமானது.

மாணவர்கள் தங்களுக்கு என்று ஒரு வங்கி இருப்பதும் அதில் தங்களுக்கு ஒரு கணக்கு இருப்பதும் குறித்து பெருமிதம் கொள்கிறார்கள். சிலருடன் ஆரம்பித்த வங்கியில் விரைவிலேயே 200 வாடிக்கையாளர்கள் சேர்ந்தனர். தற்போது 2 ஆயிரம் வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள்.

2012 - 2013-ம் ஆண்டில் மட்டும் 1 டன் மறுசுழற்சி பொருட்களை 200 வாடிக்கையாளர்கள் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

இந்த வெற்றி பெரு நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்தது. ஏராளமான மாணவர்கள் வங்கியை நோக்கி வந்தனர். சுதந்திரமாக வங்கியின் சேவைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த 6 ஆண்டுகளில் நான் அனுபவத்தின் மூலம் அதிகம் கற்றுக்கொண்டேன். பெரியவர்களுடன் என்னால் தயக்கமின்றிப் பேச முடிகிறது. ஆலோசனை கேட்டு வருகிறவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளையும் வழங்குகிறேன் என்கிறார் பார்ட் செலனா மாணவர் வங்கியின் உரிமையாளர் ஜோஸ்.

ஸ்டாலின், தினகரனுடன் கருணாஸ் சந்திப்பு

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர், அமமுக துணைப் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் ஆகியோரை முக்குலத்தோர் புலிப்படை அமைப்பின் தலைவர் கருணாஸ் எம்எல்ஏ சந்தித்துப் பேசினார்.

சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் முதல்வர் பழனிசாமியையும் காவல் துறை அதிகாரியையும் கடுமையாக விமர்சித்ததாக கூறி, கருணாஸ் மீது நுங்கம்பாக்கம் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அவர், தற்போது ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

இந்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை நேற்று காலை கோபாலபுரம் இல்லத்தில் கருணாஸ் சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருணாஸ், ‘நான் கைது செய்யப்பட்டபோது எனக்காக குரல் கொடுத்ததற்காக திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்தேன். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு. வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை’ என்றார்.

பின்னர் சத்தியமூர்த்தி பவன் சென்ற அவர் தமிழக காங்கிரஸ் தலைவர் சு.திருநாவுக்கரசரை சந்தித்துப் பேசினார். அதனைத் தொடர்ந்து அடையாறில் உள்ள இல்லத்தில் அமமுக துணைப் பொதுச்செயலாளர் டிடிவி தினகரனையும் சந்தித்துப் பேசினார்.

அரேபிய தீபகற்பத்தில் கத்தார் தீவாகி விடுமா?

அரேபிய தீபகற்பத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது கத்தார். அதனுடைய நிலஎல்லையாக இருப்பது சவுதி அரேபியா. கடலைத் தாண்டினால் எதிர்ப்புறத்தில் ஈரான் இருக்கிறது. மூன்று புறமும் கடலால் சூழப்பட்டிருக்கும் தீபகற்ப நாடான கத்தார், பிரிட்டனின் ஆளுகையில் இருந்து கடந்த 1971-ல் சுதந்திரம் பெற்றது. சிறிய நாடு என்றாலும் மிகவும் பணக்கார நாடு. தனிநபர் வருமானம் உச்சத்தில் இருக்கிறது. காரணம், இங்கு வற்றாது சுரக்கும் பெட்ரோலியக் கிணறுகள்தான். இந்த நாட்டுக்கு இப்போது ஒரு பெரிய பிரச்சினை உருவாகியுள்ளது. தீபகற்பமாக இருக்கும் இது, தீவு நாடாக மாறும் நிலை தோன்றும் வாய்ப்பு உண்டாகி இருக்கிறது!

ஏதாவது இயற்கைப் பேரிடர் வரப்போகிறதா? இல்லை. இது செயற்கைப் பேரிடர். சவுதி அரேபிய அரசு ஒரு பெரிய கால்வாயைத் தோண்ட திட்டமிட்டிருக்கிறது. இது செயல்படுத்தப்படும்போது கத்தார் ஒரு தீவு ஆகிவிடும். இதற்கு ‘சல்வா கால்வாய்த் தீவு திட்டம்’ என்று பெயரிடப்பட்டிருக்கிறது. கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே சவுதி அரசுக்கும், கத்தாருக்கும் உள்ள தீவிர உரசல்கள்தான் இப்போது கால்வாய்த் திட்டமாக வெளிப்பட்டிருக்கிறது.

கத்தாருக்கும் சவுதிக்கும் இடையேயான 37 மைல் எல்லைக்கு இந்தக் கால்வாய் விரியும். இந்தக் கால்வாயின் அகலம் 650 அடி. இந்தக் கால்வாயின் மூலம் அதிக கப்பல்களால் பயணிக்க முடிந்து சவுதியின் சுற்றுலா வருமானம் அதிகரிக்கும் என்று சிலர் கூற, தனது அணு ஆயுதக் கழிவுகளை முடிந்தவரை கத்தாருக்கு அருகில் கொட்ட சவுதி திட்டமிடுகிறது என்கிறார்கள் சிலர்.

ஜூன் 2017-ல் கத்தாருடனான தனது தூதரக உறவை சவுதி அரேபியா துண்டித்துக்

கொண்டது. என்ன காரணம்? தீவிரவாதிகளுக்கு கத்தார் ஆதரவு அளிக்கிறது என்பதுதான் வெளிப்படையாகக் கூறப்பட்ட காரணம். அதில் உண்மை உண்டுதான். முக்கியமாக, தீவிரவாதத்துக்கு நிதியுதவி செய்யும் பலரையும் கத்தார் தனது எல்லைக்குள் சுதந்திரமாக அனுமதிக்கிறது. பாலஸ்தீன அணியை ஆதரிக்கும் ‘ஹமாஸ்’ என்ற தீவிரவாத இயக்கத்தை கத்தார் ஆதரிக்கிறது.

ஆனால், தீவிரவாதிகளைத் தங்க விடுவது, தீவிரவாதத்துக்கு நிதியுதவி செய்வது என்ற குற்றச்சாட்டை எதிர் தரப்பு நாடுகளின் மீதும் சுமத்த முடியும். உலக மகா தீவிர அமைப்புகளில் ஒன்றான ஐ.எஸ். அமைப்புக்கு பல அரேபிய நாடுகள் நிதியுதவி செய்கின்றன என்பது தெரிந்ததுதான். பின் பகைமைக்கு என்னதான் காரணம்? ஈரானின் நண்பனாக கத்தார் இருக்கிறது என்பதுதான் முக்கிய காரணம்.

‘முஸ்லிம் ப்ரதர்ஹுட்’ என்ற அரசியல் இயக்கம் தனது குடும்ப வாரிசு ஆட்சிக்கு எதிரானது என்று கருதுவதால் சவுதி அரேபியா இந்த அமைப்பைக் கிள்ளி எறியத் துடிக்கிறது. எகிப்தின் பிரதமர் முகம்மது மோர்ஸி என்பவரும் இந்த அமைப்பின் உறுப்பினர். அவரை, கத்தார் ஆதரிப்பது சவுதிக்குப் பிடிக்கவில்லை. நாளடைவில் தங்கள் நாட்டிலுள்ள முஸ்லிம் ப்ரதர்ஹுட் அமைப்பினரில் கணிசமானவர்களைக் கத்தார் வெளியேற்றிய பிறகுதான் சவுதி அமைதி அடைந்தது.

தலிபனோடும், அல் காய்தாவுடனும் கத்தார் கொண்டுள்ள நல்லுறவு பிற அரேபிய நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. கத்தார் நாட்டின் தேசிய தொலைக்காட்சி சானலுக்கு பெயர் அல் ஜசீரா. அது ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களை ஆதரிக்கிறது. ஏமன் அரசை சவுதி அரேபிய அரசு ஆதரிக்கிறது. சவுதி கூறும் குற்றச்சாட்டுகளைக் கத்தார் மறுக்கிறது. எனினும் சவுதியின் குற்றச்சாட்டுகளுக்குப் பல ஆதாரங்கள் புலப்படுகின்றன.

இந்தக் கால்வாய் திட்டத்தை இப்போது முன்னெடுக்கப் போவதில்லை என்று தற்போது அறிவித்திருக்கிறது சவுதி அரேபியா. எனினும் இது கத்தாரின் தலையில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தியாகத்தான் இருக்கப் போகிறது. ஒரு நாட்டை பொருளாதாரத் தடைகள், அரசியல் ரீதியான அணுகுமுறை போன்றவற்றின் மூலம்தான் இதுவரை தனிமைப்படுத்திப் பார்த்ததுண்டு. ஒரு கால்வாயின் மூலம் ஒரு நாட்டைப் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்துவது என்பது வித்தியாசமான ‘வேற லெவல்’.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 14.10.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

சிங்கள மயமாகும் தமிழரின் பூர்வீக நிலங்கள்

இலங்கையில் இனவிவகாரத்தின் தோற்றமும் அதன் வியாபகமும் சிங்கள மயமாதலாலே உருவெடுத்தது. ஆண்டாண்டு காலமாக தமிழர்கள் வாழ்ந்த தமிழர்களின் நிலங்களை சிங்களப் பேரினவாதம் கபடமாக தனதாக்கியமையே இலங்கையின் இனவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பமாக அமைகின்றது. இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களான தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்கள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களும் புனித ஸ்தலங்களும் சிங்களமயமாக்கப்பட்டு விட்டன. இவற்றினைப் பார்த்து சகிக்கமுடியாத தமிழ் விடுதலையாளர்கள் பிற்காலத்தில் போரிடமுனைந்தனர். குறிப்பாக தொழில் ரீதியாக நில அளவையாளரான தோழர் உமாமகேஸ்வரன், தமிழரின் பூர்வீக நிலங்களும் வடக்கின் எல்லைக் கிராமங்களும் சிங்களக் குடியேற்றங்களால் நிரப்பப்படுவதனைக் கண்டு கொதித்தெழுந்தார். பாராளுமன்றத்தில் 1960களில் இருந்து சிங்களங் குடியேற்றங்களுக்கு எதிராக தமிழ் அரசியல் தலைமைகள் குரல் எழுப்பினாரக்ள். அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே பயனற்ற விடயமாகவே அமைந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முக்கியமான அபிவிருத்தித் திட்டமான மகாவலித் திட்டம் மூலம் இலங்கையின் தமிழரின் குடிப்பரம்பல் மாற்றியமைக்கப்படுவதோடு தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் விவசாயம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதோடு புத்த விகாரைகளும் அமைக்கப்படுகின்றன. இதனால் தமிழர் தமது பாரம்பரிய நிலங்களை இழப்பது மட்டுமன்றி தமது அரசியல் ரீதியான ஒருமித்த பலத்தையும் இழந்து வருகின்றனர். அதனை சிங்களப் பேரினவாதம் தமது பாராளுமன்ற அரசியலுக்கு சாத்தியப்பாடுடையாதக பயன்படுத்துகின்றது.

வடக்கு, கிழக்கிற்கு வெளியில் உள்ள மாவட்டங்களில் சோழர்கால வரலாற்றோடு ஒன்றிவாழ்ந்த பூர்வீகத் தமிழர்கள் இன்று பொலநறுவையில் இல்லை என்றே கூறலாம். அங்கு இருக்கும் சிவலிங்கங்களும் சிங்களமயமாக்கப்பட்டதோடு தொல்பொருள் ஆய்வுகள் மூலமாக பூர்வீக சிங்களப் பிரதேசமாக்கும் முயற்சியிலேயே ஆளும் பேரினவாத அரசாங்கங்கள் முனைகின்றன. ஆறுபடை வீடுகளில் ஒன்றான கதிர்காம முருகன் ஆலயமும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆளுகைக்குள் அடங்கிப் போய்விட்டது. தமிழர் கடவுள் முருகனின் அடையாளங்களில் ஏன் வழிபாட்டு முறைமைகள் கூட சிங்களமயமாகி வந்துவிட்டது. அதுமட்டுமன்றி வடக்குப் பிரதேசத்தை அண்மித்துள்ள மதவாச்சி, அனுராதபுரம் பகுதிகளில் இருந்த இந்து ஆலயங்களும் தமிழர்களின் சொத்துக்களும் படிப்படியாக சூறையாடப்பட்டதோடு 1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்துடன் அவை முழுமையாக சிங்களமயமாக பரவியுள்ளது. ஏன் கண்டி, காலி, நுவரெலியா, கொழும்பின் பல பகுதிகளில் இந்துமதச் சின்னங்களும் தமிழரின் வியாபாரங்களும் பேரினவாதத்தால் முற்றாக அழிக்கப்பட்டது மறைக்க முடியாத வரலாறாகும். இனக்கலவரத்தால் இந்திய வம்சாவளி தமிழர் கூட தலைநகரிலிலுள்ள பலதரப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை முஸ்லிம்களிடமும் பேரினவாத சிங்களவரிடமும் கொடுத்துவிட்டு நாட்டை விட்டு ஒதுங்கிவிட்டனர். இதனால்தான் இன்று தலைநகரிலே பிரதான வர்த்தக நடவடிக்கைகள் கைமாறியுள்ளது.

கிழக்கின் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் இனப்பரம்பலில் தமிழர்கள் நிலை வீழ்ச்சியடைந்ததோடு கன்னியா வென்னீரூற்று, கந்தளாய், வெருகல் போன்ற தமிழரின் புனித பூமிகளும் சிங்களமயமாகியுள்ளது. அம்பாறையின் எல்லையில் ஏற்பட்ட சிங்களக் குடியேற்றங்களும் தமிழர்களை மட்டுமன்றி தமிழ் பேசும் முஸ்லிம் இனத்தவர்களையும் அரசியல்ரீதியாக பெருமளவு பாதித்துள்ளது.

இலங்கையில் உள்ள பஞ்சஈச்சரங்களையும் புனிதப் பிரதேசங்களாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மனம் ஒன்றை வடக்கு மாகாணசபை நிறைவேற்றியுள்ளது. மிகவும் காலம் தாழ்த்தி நிறைவேற்றப்பட்ட போதும் அந்தத் தீர்மானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பஞ்சஈச்சரங்கள் மட்டுமன்றி இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள எல்லா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள், புனிதபூமி பிரதேசமாக பாதுகாக்கப்பட வேண்டும். புத்தவிகாரைகளை வடக்கில் அதிகமாக அமைப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் முன்னிற்கின்றதே தவிர யுத்தத்தால் அழிவடைந்த இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய புனிதத் தலங்களை மீளக்கட்டுவதில் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றே கூறலாம். இலங்கைத் தமிழர்களைப் போலவே அவர்களின் கடவுள்களும் இன அழிப்பிற்கும் இடப்பெயர்வுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். ஈழத்து சைவ ஆலயங்கள் சுதந்திரத்திற்கு முந்தைய காலம் முதல் பல ஆக்கிரமிப்புக்களால் நலிவடைந்து வந்துள்ளது. 2009 யுத்தம் முடிந்த பின்னர் பௌத்த சிங்கள மயமாகும் தன்மை மேலும் வலுவடைந்ததால் தமிழரின் மதத்தலங்களும் பெரிதும் பாதிப்படைந்து பாரம்பரிய கட்டுமானங்களை இழந்து வருகின்றன.

முன்னேச்சரம் ஆலயம் மீது பௌத்த பிக்குகளின் கடுமையான தலையீடுகள் காணப்படுகின்றன. மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சூழலிலும் பௌத்த விகாரையும் புத்தர் சிலையும் அமைக்கப்பெற்றுள்ளன. அண்மைக்காலத்தில் முல்லைத்தீவில் குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறி மலையை ஆக்கிரமிக்க பௌத்த பேரினவாதிகள் கங்கணம் கட்டியுள்ளனர். தமிழர்களின் ஆலயங்களுக்குள் புத்தரின் சிலையை செருகுவது இயல்பாகிவிட்டது. இது பேரின அரச இயந்திரத்தின் திட்டமிட்ட செயற்திட்டமாகும்.

எனவே பல்லாயிரம் உயிர்களை பலிகொடுத்த தமிழரின் அடையாளங்களை ஒழிக்க முயலும் பேரினவாதம் தமிழர் பூர்வீக பூமியையும் புண்ணிய ஸ்தலங்களையும் சிங்களமயமாக்குவதை தடுக்க வேண்டியது காலத்தின் கடமையாகும்.

அரசியற்கைதிகளின் மறுபக்கம்

அரசியலுக்கென்று கோட்பாட்டு ரீதியாக மட்டுமே விழுமியங்கள் உள்ளன நடைமுறையில் அரிதாகி விட்டன. அதிகாரத்துக்கானப் போராட்டத்தில் நீதி, நியாயம், கருணை மற்றும் மனச்சாட்சி என்று - எல்லாமே இழக்கப்பட்டு விடுகின்றன. இதற்கு இலங்கை அரசியல் போக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அரசியலின் அகராதி வித்தியாசமானது. புதிய அரசியல் யாப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமை ஆகியவை தொடர்பிலும், அவற்றின் உள்ளடக்கம் மற்றும் உருவாக்கம் பற்றியும் அனைத்து மட்டங்களிலும் உரத்துப் பேசப்படுகிறது. மேற்படி விடயங்கள் தொடர்பில் ஏதோ நல்லது நடக்கப்போகிறது என்கிற நம்பிக்கை நல்லாட்சியின் ஆரம்பத்தில் இருந்தது. தற்போது அவநம்பிக்கைகள் மாத்திரமே மேற்கிளம்பியுள்ளன.

அந்தவகையில், யுத்தம் முடிவுற்ற பின்னரான காலப்பகுதியிலும் விடுதலைப் புலிகளென்னும் சந்தேகத்தின் பேரில் பெருமளவானோர் கைது செய்யப்பட்டதோடு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டார்கள். இவ்வாறாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டோரில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லாதவரும் பலர் உள்ளனர் என்பதும் தெரிந்ததே. மேலும் இப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் சார்பில் வேலை செய்த சில உறுப்பினர்களும் சிறைக்கைதிகள் துரோகிகள் எனும் பெயரோடு கைதுசெய்யப்பட்டிருந்தமையும் நாம் அறிந்ததே. விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்காத தமிழர்கள் இயக்கத்தோடு எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையிலுங்கூட கைது செய்யப்பட்டு செல்லலொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருவதில் எவ்வித நியாயமுண்டு; எனக் கேட்கத்தோன்றுகின்றது. அத்தோடு விடுதலைப்புலிகள் அமைப்பினருக்கு உதவி ஒத்தாசைகள் வழங்கிய பலருங் கூடக் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்துவருகின்றார்கள்.

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

மேலும் இயக்கத்திற்கு உணவு, உடை, உறையுள் கொடுத்தமை போன்ற காரணிகளினால் ஒரு சாரார்; கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குகின்றனர்.

எது எப்படியிருந்த போதுங் கூடத் தமிழர் என்னும் ஒரே காரணத்தினால் மட்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் (பல வருடங்கள் கடந்து சென்ற நிலையிலுங் கூட) நல்லாட்சி அரியணை ஏறியும் கூட எவ்வித நீதி விசாரணையுமின்றித் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கடந்தகாலம் தொடக்கம் நாம் கேட்டும் பார்த்தும் அறிந்ததே. இக்கைதிகள் சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக வாடிக் கொண்டிருப்பதால் அவர்களுக்குள் சிலர் உடல், ரீதியாக நோய்வாய்ப்பட்டிருப்பதோடு இன்னுஞ் சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் மற்றும் ஒரு சாரார் உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களாக விளங்குகிறார்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனியாகவே உள்ளது. மேலும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் அச்சிறைச்சாலையின் முன்பாக கடந்த வருடா வருடமாக கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமிழ் அரசியல்கைதிகளை உடன் விடுவிக்குமாறு கோரியும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தியுமே இப்போராட்டம் நடத்தப்படுகின்றது. இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, கடந்த 2012ஆம் ஆண்டு சிறைச்சாலையில் மிக மோசமாகத் தாக்கப்பட்டதன் காரணமாகத் தமிழ் அரசியல் கைதி 'டில்ருக்சன்' உயிரிழந்த தினத்தில் இக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டதென அரசியல்கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் அவர்கள் தெரிவித்திருந்தார். 'முன்னைய அரசைப்போன்றே இந்த அரசும் அரசியல்கைதிகள் விடயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலைப்பாட்டையே பின்பற்றுகின்றது. இலங்கையில் அரசியல்கைதிகள் என்று எவருமில்லை. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மட்டுமே சிறைச்சாலைகளில் உள்ளனர் என நல்லாட்சி அரசிலுள்ள அனைவருந் தெரிவித்து வருகின்றனர்.

அதுமாத்திரமின்றி இவர்கள் தொடர்பான கருத்துக்களை ஆராய தமிழ் அரசியற் கட்சிகளும் இவ்விடயத்தைக் காத்திரமான விதத்தில் கையாளவில்லை. தமிழ் சிவில் அமைப்புக்களும் இதே நிலையிலேயே உள்ளன. வடக்கு கிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்கள் அன்றாட நெருக்கடிகள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டிய நிலையிலுள்ளன. கண்ணுக்கு முன்னாலுள்ள நெருக்கடிகளைக் கையாளவேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்திருந்தமையில் போதியளவு நியாயங்கள் பொதிந்திருந்தமையை யாராலும் மறுக்கமுடியாது.

1983ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டுவரை இலங்கைச் சிறைச்சாலைகளில் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 100இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 2012 ஜூலை மாதம் வவுனியாச் சிறைச்சாலையிலிருந்து அனுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல்கைதிகளைக் கொழும்பிலிருந்து சென்ற இராணுவத்தினர் தாக்கினர். அதிலேயே சிறைக்கைதியான தமிழரான நிமலரூபன் கொல்லப்பட்டார். அவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டதை அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் காண்பித்தன. அவருடன் சேர்ந்து தாக்குதலுக்குள்ளான டில்ருக்ன் ஒருமாத காலம் கோமா நிலையிலிருந்த பின்னர் 'ராகம'மருத்துவமனையில் உயிரிழந்தார். இவ்வாறாகக் கருத்துக்களை வெளியிட்ட அரசியல்கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை

கைதிகள் தாமும் இயல்பான சமூக நகர்வோடு இயைந்து சென்று புது மனிதர்களாக நவஜீவனத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், காலம் தாழ்த்தாது அவர்கள் மீதான நீதி விசாரணை, நடு நிலை நின்று முன்னெடுக்கப்பட்டுக் காலதாமதமின்றி அவர்கள் சட்டத்தின் முன் நிரபராதிகள் எனப் பறைசாற்றப்பட்டு விடுதலை செய்யப்படுவதன் மூலம் மட்டுமே அவர்கள் மீதான குடும்பத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள பிரஜைகளாகத் தமது வாழ்வை இட்டுச் செல்வதற்கும் வழிகோல முடியும்

சக்திவேல் அவர்கள் கடந்த வருடம் முதல் சிறைக்கைதிகளின் விடுதலை கோரி நாட்டில் உள்ள சிறைச்சாலைகளின் முன்னால் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தார். அத்தோடு அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வேண்டியும் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமைக்கு யானைப்பசிக்கு சோளம்பொரி கிடைத்த கதையாய் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டிருந்தமையும் நாம் அறிந்தவையே.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் நிலவரம் கடந்த காலம் முதல் மிக மோசமான நிலையையடைந்து வருவதால், அக் கைதிகளின் உறவினர்கள் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை பற்றிக் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணி அமர்வுகளில் பங்குபற்றி விபரங்களைப் பதிவு செய்ய வேண்டுமெனத் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கான சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது இக்கோரிக்கைக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் செயற்பட்டதா என்றால் அதுவும் கேள்விக்குறியே.

எனவே தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை என்பது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு அவசியமான ஒன்றாகவும் அதுவே நாட்டில் நல்லிணக்கச் ;சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் எனவும் புத்திஜீவிகளும் அரசியல் அவதானிகளும் குறிப்பிடுகின்றனர். நல்லிணக்கப் பொறிமுறை உருவாக்கம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்தறியும் வலய மட்டச் செயலணியின் செயற்பாடுகள் கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன. இக்குழுவின் செயற்பாடானது போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அதிலிருந்து எவ்வாறு மீள முடியும்? என்று அவர்களிடமே கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கையிடுவதாகும். எனவே நாடெங்கிலுமுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இச்செயலணி அமர்வுகளில் பங்குபற்றி விபரங்களைப் பதிவு செய்து தமது நேசத்துக்குரியவர்களின் விடுதலையின் அவசியத்தைத் தெரிவித்திருந்தனர். எனவே குறித்த இச்செயலணியின் பூரண பயனை அரசியல்கைதிகளின் உறவினர்கள் உட்பட தமிழினம் மொத்தமாக பெற்றுக் கொள்ளும் வகையில் நல்லாட்சி அரசாங்கம் மிக்க கரிசனையோடு செயற்படவேண்டும் என்பதே தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் பிரதான விடயமாகும்.

ஆனால் இவ்வருடத்திலும் இக்குழுவில் அரசியல்கைதிகளின் உறவுகள் அக்கைதிகள் தொடர்பில் பதிவு செய்ததன் மூலம் பெறக்கூடிய பயன்களைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மேற்கூறப்பட்ட செயலணியானது அவ்வணிக்குக் கிடைக்கும் பதிவுகளுக்கு இயைபாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னரே நாட்டின் பல சிறைச்சாலைகளிலும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்ட நிலையில் நீண்டகாலமாக எந்தவிதமான நீதி விசாரணையுமின்றி வாடி வதங்கிக்கொண்டும் உளப்பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கும் கைதிகளின் எதிர்காலம் எவ்வாறாக அமையுமென்பதை மிகுந்த ஜீவகாருண்யத்தோடு அணுகுவதே முறையானது. எனவே நீண்டகாலமாகச் சிறைவைக்கப்பட்டுள்ள இக்கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான அறிகுறியெதுவுமே தென்படாத இன்றைய நிலையில் இக்கைதிகளின் எதிர்காலம் சிறைச்சாலைகளுடனேயே முடிந்துவிடக்கூடிய பூச்சிய நிலையுள்ளதெனவும் ஊகிக்கக் கூடியதாகவும் உள்ளது. இந்நிலையில் அண்மையில் வடக்கில் தன் மனைவியின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு மீண்டும் சிறைச்சாலைக்குச் செல்லத் தயாரானவேளை தன் மகளும் தந்தையுடன் செல்ல எத்தணித்;த சம்பவம் நாட்டில் எல்லோரையும் கவலையில் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதே. ஆனால் வாழ்வைத் தொலைத்த அக்குழந்தைகள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியும் குறித்த கைதியை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகள் கூட இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது மனவேதனையளிக்கின்ற விடயமாகவே உள்ளது.

இவ்வாறாகச் சிறைச்சாலைகளுக்குள்ளேயே தமது எதிர்காலத்தை முழுமையாகத் தொலைத்து விடக்கூடிய மிகுந்த பரிதாப நிலையில் கைதிகளின் நிலை அமைந்திருப்பதோடு அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டாலுங் கூட, அவர்களது சுயாதீனமான வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கும் விதமாக விடுதலையாகி அவர்கள் தமது பிரதேசங்களுக்குள் வந்து வதியும் போதுங் கூடப் பொலிஸாரினதும், இராணுவத்தினரினதும், புலனாய்வினரினதும் கெடுபிடிகளுக்கு ஆளாகி அவஸ்தைப்பட வேண்டிய நிலையையும் மாற்றியமைக்கும் விதத்தில் அவர்களது விடுதலை அமையவேண்டும். அவ்வாறின்றேல், இக்கைதிகள் சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப் பட்டாலென்ன அல்லது விடுவிக்கப்படாவிட்டாலென்ன பொதுவாக அவர்கள் தமது வாழ்க்கையைத் தொலைத்தவர்களான நடைப்பிணங்களாகவே சமூகத்தில் வாழ வேண்டியேற்படும்.

ஆதலால் இக்கைதிகள் தாமும் இயல்பான சமூக நகர்வோடு இயைந்து சென்று புது மனிதர்களாக நவ ஜீவனத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், காலம் தாழ்த்தாது அவர்கள் மீதான நீதி விசாரணை, நடு நிலை நின்று முன்னெடுக்கப்பட்டுக் காலதாமதமின்றி அவர்கள் சட்டத்தின் முன் நிரபராதிகள் எனப் பறைசாற்றப்பட்டு விடுதலை செய்யப்படுவதன் மூலம் மட்டுமே அவர்கள் மீதான காவற்றுறையினர், படையினர், புலனாய்வினர் ஆகிய பிரிவினரின் கெடுபிடிகள் அமையாத நிலையொன்று தோற்றுவிக்கப்படும். அத்துடன் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள பிரஜைகளாகத் தமது வாழ்வை இட்டுச் செல்வதற்கும் வழிகோரமுடியும்.

எனவே பயங்கரவாதிகள் என்னும் நாமத்துடன் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகள் தொடர்பில் செயலணிகளாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சிகளாக இருந்தாலும் சரி வெறுமனே உத்தியோகபூர்வமான முறையின்பாற்பட்டோ கட்சி அரசியல் நலனிற் பாற்பட்டோ அல்லது தனி நபர் அரசியல் நலனின் பாற்பட்டோ சிறைக்கைதிகள் பிரச்சினையை அணுகாமல் மனிதாபிமானத்தோடு, சிறைக்கைதிகளும் மனிதர்களே என்றுணர்ந்து அவர்களுடைய பிரகாசமான எதிர்காலத்தைக் குறியாகக் கொண்ட கருத்துக்களை முன்வைத்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை ஏற்படுத்துவதோடு அவ்வரசானது அக்கைதிகளின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வித்திடக்கூடியதான நிலையில் அவர்களை விடுதலை செய்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கும் தமிழத் தரப்புக்கள் முன்வரவேண்டும்.

எனவே முடிந்த முடிவாக எதிர்வரும் நாட்களிலாவது தமிழ் அரசியற் கைதிகளதும் அவர்களது உறவுகளதும் எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் நிலையில் தீர்வுகள் மனிதாபிமானத்தோடு அணுகப்பட்டு நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்யப்படுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்குமா நல்லாட்சி அரசாங்கம்?

வடமாகாண ஆளுநர் கூரேயின் ஐரோப்பிய விஜயமும் தமிழர்களின் எதிர்ப்பலைகளும்

கடந்த வாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரே ஆகியோர் கூட்டங்களையும் மக்கள் சந்திப்புக்களையும் நடத்திய அதேவேளை இவர்களின் வருகைக்கு தமிழ் அமைப்புக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வருகைக்கு காட்டப்பட்ட எதிர்ப்பை விட வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரே அவர்களுக்கு காட்டப்பட்ட எதிர்ப்பும் கண்டனங்களும் பலமாக இருந்தது.

றெஜினோல் கூரேயின் மக்கள் சந்திப்புக்கு லண்டனில் மட்டுமல்ல சுவிஸிலும் எதிர்ப்பு காட்டப்பட்டது. சுவிஸில் ஏற்கனவே கூட்டம் நடத்துவதற்கு திட்டமிட்ட இடத்தில் கூட்டத்தை நடத்த முடியாது வேறு ஒரு இரகசியமான இடத்தில் சந்திப்பை நடத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை (08.10.2018) அன்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மண்டபத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் உரையாற்ற வந்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிக்கொண்டிருந்த

வேளையில் வெளியே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் நான்கு தமிழர்களை பிரித்தானிய பொலிஸார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அமைப்பின் உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் என்பவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டதையிட்டு தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தமிழர்களுக்கான அனைத்துகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய உள் துறையமைச்சர் சஜீத் ஜாவிட்டுக்கு முறையீட்டு கடிதம் ஒன்றை அனுப்பினர். இந்த அழுத்தங்களை அடுத்து மறுநாள் யோகலிங்கமும் அவர்களுடன் கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் மீதான விசாரணைகள் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட யோகலிங்கத்தின் வீட்டை பிரித்தானியாவின் பிரித்தானியாவின் பயங்கரவாத எதிர்ப்பு காவற்துறை அதிகாரிகள் தீவிரமான சோதனையிட்டு சில பிரசுரங்களை அங்கிருந்து எடுத்துச்சென்றனர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில்

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

வெளிநாட்டு தலையீடு தேவையில்லை இலங்கை நீதித்துறையால் அது விசாரணை செய்யப்படும் என தெரிவித்தார்.

பின்னர் மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜெனிவா தீர்மானங்களை மையப்படுத்திய நிலைமாற்று கால நீதி மறுசீரமைப்பு, 12ஆயிரம் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி உள்ளன. பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முன்னேற்றங்கள் குறித்து 2019மார்ச்சில் நாம் ஜெனீவாவுக்கு அறிக்கையிடக்காத்திருக்கின்றோம் என தெரிவித்தார்.

இலங்கையில் ஜனநாயகம், நீதித்துறை மற்றும் காவற்துறை உட்பட பொது நிறுவனங்களின் சுதந்திரம், உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வருகைக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் உரையாற்றிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு வெளியே தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பது தொடர்பாக லண்டனில் உள்ள சிறிலங்கா உயர்ஸ்தானிகர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் உட்பட அதன் செயற்பாட்டாளர்கள் நான்கு பேர் பிரித்தானிய பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடை பிரித்தானியாவில் நீடிக்கின்ற நிலையில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற ரீதியிலேயே அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

லண்டனுக்க வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் அதன் முன்னேற்றங்கள் குறித்து மேற்குலக சமூகங்களுக்கு விளக்கும் வகையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியதுடன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் உட்பட அரச பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத்தில் இலங்கை தொடர்பாக பிரித்தானியா தலைமையிலான கடுமையான நிலைப்பாடு ஒன்றை எடுக்கும் என தமிழர் தரப்பில் நம்பிக்கை வளர்ந்து வரும் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக உரையும் பிரித்தானிய அரச மட்ட சந்திப்பும் முக்கியத்துவம் பெறுகிறது என்றே செல்ல வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வருகைக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் கண்டனங்களை விட வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரேக்கு எதிராக லண்டனிலும் சுவிட்சர்லாந்திலும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் எதிர்வினைகளும் பலமாகவே இருந்தது.

வடமாகாண ஆளுநரை அழைத்து சந்திப்புக்களை நடத்திய தமிழர்கள் மீது கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

வடமாகாண ஆளுநர் ஐரோப்பிய நாடுகளின் அழைப்பின் பேரில் ஐரோப்பாவிற்கு வரவில்லை. லண்டன், சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள அமைப்புக்களின் அழைப்பின் பேரிலேயே இங்கு வந்திருந்தார்.

லண்டனில் வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரே உடன் இலங்கையில் வாழாத இலங்கையர் என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் சந்திப்பை நடத்தியிருந்தனர். வட்போர்ட் என்னுமிடத்தில் உள்ள இம்பிரியல் சைனா என்ற விடுதியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

புலம்பெயர் தமிழர்கள் சிலரை தமது கைக்குள் போட்டுக் கொண்டு சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கான ஆதரவுத் தளத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாகவும் றெஜினோல்ட் கூரேயின் ஐரோப்பிய விஜயம் அமைந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன

கூட்டம் நடைபெற்ற விடுதிக்கு வெளியே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அமைப்பு உட்பட தமிழர் அமைப்புக்களை சேர்ந்தவர்களும் பொதுமக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் சிலர் புலி சின்னம் தாங்கிய கொடியையும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தையும் தாங்கி நின்றனர்.

வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை விட றெஜினோல் கூரேயின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவே ஆகும்.

எதிர்வரும் 23ஆம் திகதியுடன் விக்னேஸ்வரன் தலைமையிலான மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாணசபையின் பதவிக்காலம் நிறைவடைகிறது. ஆகக்குறைந்தது அடுத்த ஒரு வடத்திற்கு ஆளுநரின் நிர்வாகத்திலேயே வடமாகாணசபை இருக்கும். ஐந்து வருடத்தில் விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாணசபையினர் செய்யாத பல அபிவிருத்தி திட்டங்களை தனது நிர்வாகத்தில் இருக்கப்போகும் ஒரு வருடகாலத்தில் செய்து காட்டுவேன் என றெஜினோல் கூரே கூறிய போது அங்கு கூடியிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பி அதனை வரவேற்றனர்.

ஆளுநரின் இந்த உரை தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை கூட நடைமுறைப்படுத்த முடியாமல் முட்டுக்கட்டை போட்டு வரும் மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியான ஆளுநர் ஒரு வருடகாலத்தில் தாம் மிகப்பெரிய அபிவிருத்தியை மக்களுக்கு செய்திருக்கிறோம் என காட்டி வடமாகாணத்தில் ஆளும் கட்சிக்கான வாக்குவேட்டையில் ஈடுபடுவதற்கே முற்பட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

ஆளுநரின் நிர்வாகத்தில் அரசாங்க கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஆளுநருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளை சேர்ந்தவர்கள் கூடாகவே அபிவிருத்திகளை செய்து வாக்கு கொள்ளையில் ஈடுபடும் தந்திரோபாய முயற்சிதான் இது என்பது தமிழர் தரப்பின் வாதமாகும்.

ஆளுநரின் ஆட்சியில் இருக்கும் கிழக்கு மாகாணத்தில் அங்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர் ஹிஸ்புல்லா போன்றவர்களின் கைகளே ஓங்கியிருக்கிறது. மாகாணசபையின் கீழ் வரும் அமைச்சுக்கள் திணைக்களங்களின் உயர்பதவிகள் அமைச்சர் ஹிஸ்புல்லா போன்றவர்களின் சிபார்சின் பேரிலேயே நடைபெறுகிறது. அங்கு தகுதியான தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இதற்கு உதாரணமாக அண்மையில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் நியமனத்தை கூற முடியும் என தமிழர் தரப்பால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலைதான் வடமாகாணத்திற்கும் ஏற்பட போகிறது. புலம்பெயர் தமிழர்கள் சிலரை தமது கைக்குள் போட்டுக்கொண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சிகளுக்கான ஆதரவு தளத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாகவும் றெஜினோல் கூரேயின் ஐரோப்பிய விஜயம் அமைந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை மறுபக்கத்தில் அம்மக்களுக்கான அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்துவது கட்டாயமாக உள்ளது என தெரிவித்த ஆளுநர் றெஜினோல் கூரே எனது ஐரோப்பிய பயணம் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லாதது, வட மாகாணத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள், முதலீடுகளைச் செய்து அங்கு பொருளாதாரத்தினை வளப்படுத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என தெரிவித்தார்.

றெஜினோல் கூரே லண்டனில் புங்குடுதீவு நலன்புரி சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து பேசினார்.



ஆளுநருடன் அவரின் செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் மற்றும் தொடர்பாடல் துறை அதிகாரி ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஆளுநர் றெஜினோல்ட் கூரே, பிரான்ஸ் நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் சிலரை சந்தித்தார்.

தமிழர்கள் அதிகம் வாழும் பரிஸ் லாச்சப்பல் நகரில் இச்சந்திப்புக்கள் இடம்பெறவில்லை. இந்த பகுதியில் தமிழர்களின் எதிர்ப்புக்கள் அதிகம் இருக்கும் என்ற காரணத்தார் பிரான்ஸின் புறநகர் பகுதியான மொன்ரினி நகரில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில் பேசிய ஆளுநர் றெஜினோல் கூரே யுத்தம் முடிவடைந்த பின்னரான காலத்தில் வடக்கு கிழக்கில் பாரிய அளவில் உட்கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்களின் அன்றாட வாழ்வை வளப்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கு வருமானத்தை பெற்றுத்தரக்கூடிய வகையில் தொழிற்சாலைகளோ அல்லது தொழில் வழங்கும் வர்த்தக நடவடிக்கைகளோ ஆரம்பிக்கப்படவில்லை. இவையே இன்றைய அவசிய தேவை என்றும் புலம்பெயர் தமிழர்கள் சிறிய சிறிய வர்த்தக முயற்சிகளை மேற்கொள்ளவதன் மூலம் அங்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கலாம் என்றும் தெரிவித்தார்.

பாரிஸ் புறநகர் பகுதியான லாகோர்னோவ் நகரிலும் ஒரு சந்திப்பு புதன்கிழமை இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து சுவிஸ் பேர்ண் நகரில் சுவிஸ் பேர்ண் நகரில் புங்குடுதீவு சுவிஸ் ஒன்றியம் வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரேயுடனான சந்திப்புக்கு கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த சந்திப்பை புறக்கணிக்குமாறும் வடமாகாண ஆளுநரின் ஐரோப்பிய விஜயத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாகவும் அச்சந்திப்பு நடைபெறும் இடத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போவதாக சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழு

83 கலவரத்தில் பொல்லையும் மிளகாய் தூளையும் வைத்து காவல் காத்தோம்

வீட்டின் பின் கதவின் வழியாக எங்கள் வீட்டுக்குள் அந்தக் குடும்பத்தை வரவழைத்து ஒளித்து வைத்தோம். கடவுளே அந்த பொழுதுகள் பயங்கரமானவை. இப்பொழுது நினைத்தாலும் எனக்கு உடலெங்கும் ஒருவித அச்ச உணர்வு பரவுகின்றது.

மக்கள் ஒருவிதமான அச்சத்துடன் இருந்தனர். கடைகளிலும் பொது இடங்களிலும் கூடியிருந்தவர்கள் 'பொரளை கனத்தையில் பெருமளவானவர்களின் இராணுவத்தினரின் உடல்கள் இரவோடு இரவாக புதைக்கதைப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கொழும்பில் சிங்களவர்களைக் கொல்லப் புறப்பட்டு வருகின்றார்கள்' என்றும் கதைத்துக் கொண்டிருந்தனர். என்று 1983 ஜூலையில் இலங்கையில் நடந்த கலவரம் பற்றி விபரித்தார் கித்சிறி நிஸ்ஸங்க. வயது (வயது57.) ஹட்டன் பிரதேசத்தினைச் சேர்ந்த இவர் பிலியந்தலையை வசிப்பிடமாகக் கொண்டவர். தொழில் நிமித்தம் கொழும்பு ஜாவத்தயில் உள்ள ஒரு முஸ்லிம் வர்த்தகர் வீட்டில் தங்கியிருந்து அந்த வர்த்தகரின் வாகன ஓட்டுனராக பணியாற்றியவர். அவர் மேலும் கூறுகிறார்,

அன்றைய தினம் ஜூலை25ம் திகதி என்று நினைக்கின்றேன். எல்லா இடமும் ஒரே பதற்றமாக இருந்தது. பகல் 2.30 மணியளவில் நான் புறப்பட்டு பம்பலப்பிட்டி செல்வதற்காக வீதியில் இறங்கி நடக்க தொடங்கினேன். பஸ் போக்குவரத்தும் இல்லை. ஆங்காங்கே கலவரங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஏனக்கு அப்ப 22 வயது,என்ன தான் நடக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் இருந்தது. வீதியெங்கும் உடைக்கப்பட்ட தமிழர்களின் கடைகளில் இருந்த பொருட்களை எல்லாம் சிலர் வெளியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர். அதனை தத்தமக்காக எடுத்துக் கொண்டு சிலர் சென்று கொண்டிருந்தனர். பல கடைகள் எரிந்து கொண்டிருந்தன. டொரிங்டன் சந்தியில் இருந்த ஒரு வீடும் தீக்கிரையாகிக் கொண்டி ருந்ததாக ஞாபகம். எங்கும் புகை மூட்டம். தும்முல்லை வரை நடந்து சென்று கொண்டே இருந்தேன். தும்முல்ல சந்தியிலும் கடைகள் எரிந்து கொண்டே இருந்தன. சலுசலவில் எனது நண்பன் ஒருவர் வேலை செய்து கொண்டிருந்தார். அவர் கண்டியை சேர்ந்த அவர் தாக்கப்பட்டு ஆபத்தானா நிலையில் இருந்ததாக அறிந்தேன். காரணம் அவர் கறுப்பாக இருந்ததே. கறுப்பாக இருந்த காரணத்தினால் பல சிங்களவர்கள், தமிழர்களாகக் கருதப்பட்டு தாக்கப்பட்டனர். அதனால் சிங்களவர்கள் மத்தியிலும் பதற்றம் நிலவியது. நான் திரும்பவும் எனது இடத்திற்கு வந்துவிட்டேன். அப்போதுதான் எனக்கு அந்த பொறுப்பளிக்கப்பட்டது. என்று கூறும் கித்சிறி நிஸ்ஸங்க தனக்கு அளிக்கப்பட்ட உயிர்களைக் காப்பாற்றும் பொறுப்பை பின்வருமாறு விளக்கினார்.

பேலியகொடையில் பின்வத்த பகுதியில் பிரச்சினைக்குள்ளாகியிருப்பதாக நாம் அறிந்து கொண்டோம். அவர்கள் தமிழர்கள். அவர்களை அழைத்து வர ஒரு வாகனத்தில் துணிச்சலை வர வழைத்துக் கொண்டு போனேன். வழியில் நான் பார்த்த காட்சிகளை நினைத்தாலே இப்பொழுதும் மனம் பதறுகின்றது. அப்படி ஒரு மோசமான நிலைமையை விபரிக்க வார்த்தைகள் இல்லை. சாதாரண மனிதர்கள் எப்படி மிருகங்களாக மாறினார்கள்? என்ற கேள்வி இன்றைக்கும் எனக்குள் உள்ளது. ஒருவாறு பாதுகாப்பாக நான் அவர்களை அழைத்து வந்து எமது முதலாளி முஸ்லிம் வர்த்தகர் வீட்டில்

பிரியதர்ஷினி சிவராஜா

விட்டேன். அவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான உணவுகளை கடைகளில் வாங்கிக் கொண்டு வந்தேன். அன்று நான் அவர்களை அழைத்து வர முன்வராதிலிருந்தால் அந்த குடும்பம் இன்று உயிருடன் இருந்திருக்காது. அன்று அவர்களை என்னால் காப்பாற்ற முடியாமல் போயிருந்தால் அந்நிகழ்வு எனக்கு ஒரு வாழ்நாள் பூராகவும் பெரும் துயரமாக இருந்திருக்கும். இன்று அவர்கள் நன்றாக இருக்கின்றார்கள். 35 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் அன்றைய கோரமான சூழலையும் வன்முறைகளையும் என்றுமே மறக்க முடியாது.

என்று கூறும் கித்சிறி நிஸ்ஸங்க இன்றும் அவற்றைக்கூறும்போது பதட்டமடைகிறார். ஏந்த வரலாற்றையும் நாம் மாற்ற நினைக்கலாம். ஆனால் மக்கள் மனங்களில் பதிவாகியிருக்கும் வரலாற்று நிகழ்வுகள் யாராலும் மாற்றமுடியாதவை. தாங்கள் தாங்கள் பார்த்த காட்சிகளை இன்னும் மனங்களில் பதிவுசெய்து பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். பெரும் துயருக்குள் சிக்கித்தவித்த தமிழ் மக்களின் பாடுகளை சிங்கள இனத்தின் சாதாரண பொதுமக்கள் எப்படி நோக்கினர் என்பதை அறிவதற்காக இந்த நேர்காணல் செய்யப்பட்டது. இந்த விடயங்களை சொல்ல துணிந்த இந்த மக்கள் தமது முகங்களை பொதுவில் காட்டுவதற்கு உடன்படவில்லை.

1983இல் சிங்கள மக்கள் தான் தமிழர்களை அடித்து கொன்றனர் என்கின்றனர். ஆனாலும் எத்தனை சிங்கள மக்கள் தமிழர்களைக் காப்பாற்றியிருக்கின்றார்கள் தெரியுமா? என்று கேட்கிறார் தயாவதி மெனிக்கே (69). கொழும்பு கிரான்ட்பாஸில் நவகம்புர பகுதியில் வசித்து வருகின்றார்.

ஒரு தமிழ் குடும்பத்தினையாவது எங்களால் காப்பாற்ற முடிந்ததே என்பதில் எமக்கு பெருமைதான். அப்பொழுது கிரான்ட்பாஸ் பகுதியில் அயலவர்கள் பெரும்பாலும் தமிழர்களாகத் தான் இருந்தனர். நாங்கள் உறவினர்கள் போன்று தான் வாழ்ந்து கொண்டிருந்தோம். கலவரம் தொடங்கிய தினங்களில் ஜூலை 25 மற்றும் 26ம் திகதிகளில் நாடு முழுவதும் பதற்றமாக தான் இருந்தது. 'புலி வருது புலி வருது' என்று தான் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். எங்களுக்கும் அச்சமாக தான் இருந்தது. பார்த்துக்கொண்டிருக்கும் கடைகள் உடைக்கப்பட்டன. டயர்கள் போட்டு எரிக்கத்தொடங்கினர். உடைத்த கடைகளில் இருந்து யார் யாரோ பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் முன்பு ஒருபோதும் பார்த்திராதவர்கள் நிறையப் பேர் எமது பகுதியில் கத்தி வாள் பொல்லுகளுடன் சுற்றி திரிந்து கொண்டிருந்தனர். அண்டை வீடுகளில் இருந்த தமிழர்கள் கலவரத்துடன் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த நிலையில் அவர்களை ஆசுவாசப்படுத்த நாங்கள் அதிக நேரத்தினை எடுத்துக் கொண்டோம். ஜூலை 26ம் திகதி கலவரம் மிகத்தீவிரமடைந் திருந்தது. எங்கள் வீடுகளை சூழவிருந்த தமிழ் குடும்பங்கள் பல இரவோடிரவாக காணாமற் போயிருந்தார்கள். அவர்கள் உயிருக்கு அஞ்சி தப்பி சென்று விட்டார்களா இல்லை இரவோடிரவாகக் கடத்தப்பட்டார்களா கொல்லப்பட்டார்களா என்று இன்று வரை எங்களுக்கு தெரியவில்லை. ஆனால் எங்கள் அருகில் இருந்த வீட்டில் இருந்த தமிழ் குடும்பத்தினை இரு சிறு பெண் பிள்ளைகளையும் அவர்களின் தாய் தந்தையரையும் பாதுகாக்க வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்து கொண்டோம்.

'கோ தெமலு இன்னவத? ஹங்க கென இன்ன எப்பா தேருனாத?(தமிழர்கள் இருக்கிறார்களா? அவர்களை ஒளித்துவைக்க வேண்டாம்..விளங்குதா?) என வாள்களை தூக்கிக் கொண்டு வீதியில் கத்திக் கொண்டிருந்தனர். ஆனால் நாம், வீட்டின் பின் கதவின் வழியாக எங்கள் வீட்டுக்குள் அந்தக் குடும்பத்தை வரவழைத்து ஒளித்து வைத்தோம். கடவுளே அந்த பொழுதுகள் பயங்கரமானவை. இப்பொழுது நினைத்தாலும் எனக்கு உடலெங்கும் ஒருவித அச்ச உணர்வு பரவுகின்றது. எங்கள் வீடோ சிறிது. எங்கு தான் அவர்களை ஒளிப்பது? அவர்கள் அச்சத்தில் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தனர். நான் எனது இரண்டு மகன்களையும் வீட்டின் வாசலில் காவலுக்கு இருக்க செய்து விட்டு அவர்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தேன். வாள் கத்தி பொல்லுடன் ஒரு கூட்டம் வந்து அந்த அண்டை வீட்டில் இருந்த தமிழர்கள் எங்கே என்று ஆக்கிரோஷமாக தேடிக் கொண்டிருந்தது. அவர்களின் வீட்டு உபகரணங்கள், பொருட்கள் எல்லாம் வீதியில் தூக்கி எறியப்பட்டன. எனது மகன்களை வெருட்டி எங்கே அந்த தமிழர்கள்? எங்கே? என்று கேட்டு பயமுறுத்தினர். அவர்கள் எங்களுக்கு தெரியாது என்று சொல்லவும் ஒளித்து வைத்தால் உங்களையும் கொல்வோம் என்று எச்சரித்து விட்டு சென்றனர்.

அச்சத்தில் அன்று முழுவதும் அவர்கள் சாப்பிடவே இல்லை. நாங்களும் பயத்தில் உறைந்து போயிருந்தோம். அந்த காடையர்களிடம் அகப்பட்டிருந்தால் அவர்கள் கதை அன்றே முடிந்திருக்கும். டயர்களில் போட்டு எம் கண்முன்னே எரித்து கொன்றிருப்பார்கள். அதனை நான் எப்படி தாங்கியிருப்பேன்? ஏமக்கு இருந்த பயத்தால், அவர்களை கிரான்ட்பாஸ் பொலிசில் கொண்டு போய் ஒப்படைத்து விடுவோம் என்று மகன் கூறினான். ஆனால் எனக்கு அந்த சூழலில் பொலிஸ் மீதும் நம்பிக்கையிருக்கவில்லை. ஏனெனில் காடையர்களுடன் பொலிசாரும் சுற்றித் திரிந்ததை நான் என் கண்களால் பார்த்தேன். டயர்களை எரிக்கும் போது அவர்கள் வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்ததையும் கண்டேன். என்று இன்றும் பதற்றத்துடன் கூறும் தயாவதி மெனிக்கே (69) தாமும் பொல்லுகள் கத்தியுடன் தயாராக இருந்ததையும் கூறுகிறார்.

அந்த சூழலில் பொலிஸ் மீதும் நம்பிக்கையிருக்கவில்லை. ஏனெனில் காடையர்களுடன் பொலிசாரும் சுற்றித் திரிந்ததை நான் என் கண்களால் பார்த்தேன்.

இரவில் எவராவது வந்து கதவைத் தட்டினால் எதிர்த்து தாக்குவதற்காக எனது மகன்கள் பொல்லுகளையும்,கத்திகளையும் கதவின் ஓரத்தில் வைத்து விட்டு படுத்திருந்தனர். நான் மிளகாய்த் தூள் அடைத்த பேணி ஒன்றினை தயாராக எப்பொழுதும் அருகில் வைத்திருந்தேன். எவனாவது வந்தால் முகத்தில் தூவி விட்டு தப்பிக்க முடியும்

13 ஆம் பக்கம் பார்க்க....

நல்லாட்சியை சாருமா சாடுமா சர்வதேசம்?

இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டது: நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்காக உருவானது: தேசிய நல்லிணக்கம் உருவாகியுள்ளது என பல சந்தர்ப்பங்களில் முழங்கிவருகின்ற போதும் இலவு காத்த கிளியின் நிலையில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

நல்லாட்சி ஆரம்பமானது முதல் தமிழர்கள் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பல்வேறு இடங்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டங்களை நடத்திவருகின்றனர். இத்ததகைய போராட்டங்களும் மக்கள் அழுத்தம் இன்றி வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை.இந்த நிலையில் தமிழ் மக்களும் வீதியில் இறங்குவதன் மூலமே தமக்கான உரிமைகளை பெறமுடியும் என தீர்மானித்துள்ளனர்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைகள் தீர்மானத்தில் கூறிய விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது கால இழுத்தடிப்புக்களையே செய்து வருகின்றது.

நக்கீரர்

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை சந்தர்ப்பம் பார்த்து நழுவவிடுகின்றார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் ஆணையின் மூலம் இந்த அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், பாராளுமன்ற பிரதிநித்துவ வாய்ப்பையும் வைத்து இந்த அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து மக்களுடைய அபிலாசைகள் மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைக்க கடுமையாக உழைக்கவில்லை என்ற பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணமே உள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் காணப்பட்டதற்கு அதிகமாகவே திட்டமிட்ட நிலஅபகரிப்புக்களும், பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் நல்லாட்சியில் இடம்பெற்று வருகின்றன. காணி விடுவிப்பு என்னும் பெயரில் ஆங்காங்கே சிறு சிறு காணிகள் விடுவிக்கப்பட்ட போதும், 20 வருடங்களுக்கு மேலாக இன்றும் வடபகுதியில் முகாம் வாழ்க்கை தொடர்கிறது என்றே கூறலாம்.

இதுதவிர, நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரச்சனை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என பல பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாத நிலையிலேயே இன்றும் மக்கள் அவர்களுக்காக வீதிகளில் இறங்கி போராடிவருகின்றனர். இந்த நிலையில் வட கிழக்குத் தமிழ் மக்கள் செய்வதறியதாத நிலையில் மனவுளைச்சலுக்கு உள்ளாகிவருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசு தனது ஐ.நா அங்கத்துவம் பெற்று கொண்ட 1955ம் ஆண்டிலிருந்து, பலவிதப்பட்ட சர்வதேச தண்டனைகளிலிருந்து தொடர்ந்து தப்பி வருவது உங்களுக்கு ஆச்சரியம் தரமாட்டாது என்பது யாவரும் அறிந்த விடயமே.

இலங்கை அரசு தனது பௌத்தமயம், சிங்களமயம், சிங்கள குடியேற்றம், இராணுவமயம் ஆகியவற்றை தமிழர்களது தாயக பூமியான வடக்கு கிழக்கில் வெற்றிகரமாக முற்று முழுதாக நிறைவேற்றி முடிக்கும் வரை, சர்வதேசத்தின் வேண்டுகோள்கள் எவற்றையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை அவர்களது செயற்பாடுகள் மூலமாக நிரூபித்துவருகின்றார்கள்.

ஐ.நா மனித உரிமை சபையின் 30வது கூட்டத்தொடர், 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற வேளையில், மனித உரிமை சபை அங்கத்தவர்களினால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேரணையை, சிறிலங்கா மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. ஆனால் இதனது உண்மை தன்மையை, 2016ஆம் ஆண்டு நவம்பர் 27ம் திகதியே யாவரும் உணர கூடியதாகவிருந்தது! காரணம், அமெரிக்க ஜனதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானதும், இலங்கையில் நல்லாட்சி என கூறப்படும் அரசாங்கத்தின் ஜனதிபதியான சிறிசேன, ஐ.நா மனித உரிமை சபையினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திலிருந்து தப்புவதற்காக அமெரிக்க ஜனதிபதியின் உதவியை நாடியுள்ளார் என பலதரப்பட்ட விமர்சனங்கள் அரசியல் ஆய்வாளர்களாலும் புத்திஜீ

கடந்த மூன்று தசாப்தங்களிற்கு மேலாக இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினைகள் இன்று உலகின் கண்களைக் கவர்ந்துள்ள அதே சமயம் யாரும் எதிர்த்து தீர்வு காண விழையவில்லை. ஆனால் இலங்கையில் நடைபெறுபவையை விட உலகில் மிகக் குறைந்தளவு அழிவுகள், துன்பங்களை அனுபவித்த வேறு சில இனப்பிரச்சினைகள், இதே ஐ.நா.வினால் தீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

விகளாலும் முன்வைக்கப்பட்டுவந்தன. இதன் உண்மைத் தன்மையே இதனைத் தொடர்ந்துவந்த காலப்பகுதிகளிலும் தெளிவாகியது.

இது ஒருபுறமிருக்க, இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல், இன்று வரை ஈழத்தமிழர்களை மட்டுமல்லாது, தற்பொழுது சர்வதேசத்தையும் இலங்கை அரசாங்கம் ஏமாற்ற தொடங்கியுள்ளது என அரசியல் வட்டாரங்கள் கூறிவருகின்றனர். இவர்கள் கூறுவதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் அதனை அலசி ஆராய்ந்து இவ்வரசாங்கத்திற்கு எதிராக நின்று தமிழர்களின் உரிமைகளை வென்று தரக்கூடிய அதிகாரத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு பின்வாங்குவதே இன்று ஆங்காங்கு போராட்டங்கள் வெடிக்கக் காரணமாயுள்ளன.

இந்நிலையில் வடக்கு, கிழக்கின் நிலைமை இராணுவமயம், பௌத்தமயம், இனநல்லுறவை சீர்குலைக்கும் குடியேற்றம் போன்றவற்றினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றமையை சமகால நடப்புக்கள் புடம் போட்டுக்காட்டுகின்றன.

1950ம் ஆண்டு முதல், தமிழ் மக்கள் நாடு முழுவதிலும் பல தடவைகள் தாக்கப்பட்டனர். இதேவேளை, தெற்கில் வாழும் சிங்கள இளைஞர்கள் புரட்சி மூலம் அரசை கைப்பற்றுவதற்கு பல தடவைகள் முயற்சித்தனர். இவ்வேளைகளில், ஆயிரக்கணக்கனோர் காணாமல் போயும், படுகொலை செய்யப்பட்டும், கைது, சித்தரவதை, இடப்பெயர்வு, தமிழ் பெண்கள் மீதான வன்முறைகள் என பல கொடூர சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றன, இன்றும் இடம் பெறுகின்றன. இவைபற்றிய விபரங்கள் யாவும், ஐ.நாவின் மனித உரிமை பிரிவுகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படவேண்டும். இவ்வாறான பிரச்சினைகளுக்கும் மக்கள் மத்தியில் தீர்வு கிடைக்க வழி செய்தல் வேண்டும்.

இலங்கையின் வேறுபட்ட அரசாங்கங்கள் ஒன்று மாறி ஒன்றாக, தமிழ் மக்களிற்கு வெறும் வெற்று வார்தைகளை அதாவது போலி வாக்குறுதிகளை கொடுத்து, தமது திட்டங்களை நாசுக்காக நிறைவேற்றி வந்துள்ளனர். இவ்வேளையில் இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்த காரணத்தினால், சர்வதேசத்திற்கு தமது போலி முகத்தின் மூலம் காலங்களை கடத்தி, வடக்கு கிழக்கில், தமது திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுகின்றனர்.

இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான எந்த அரசியல் தீர்வையும், ஆட்சியிலிருந்த எந்த அரசும் ஒருபொழுதும் முன்வைத்தது கிடையாது. முன்வைக்க முயற்சிக்கவும் இல்லை என்பது தமிழர்கள் இலங்கையில் எவ்வகையில் நடத்தப்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.

இந்நிலையில் ஆரம்பகாலத்தில் இனப்பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன், 1957ம் ஆண்டும், 1965ம் ஆண்டும் இலங்கையின் வேறுபட்ட இரு பிரதமர்களினால், அவ்வேளையில் தமிழ்த் தலைமையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் யாவும், தெற்கில் உள்ள சிங்கள அரசியல் கட்சிகள், மக்கள், பௌத்த மதகுருமாரின் கடுமையான எதிர்ப்பு காரணமாக, இரு உடன்படிக்கைகளும் கிழித்து எறியப்பட்டன என்பது பல தடவை கூறப்பட்டதுடன் சரித்திரமும் இதுவேயாகும். அன்றிலிருந்து இன்றுவரை வடக்கு கிழக்கில் சிங்களமயமான குடியேற்றங்கள், இராணுவமயம் ஆகியவற்றினால் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை வெளிப்டையாகவே எல்லோரும் காணக்கூடியதாகவுள்ளது.

அதுமட்டுமின்றி இன்று வடக்கு கிழக்கு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவர்களினால் தாக்கப்படுகின்றனர். இவற்றுக்கு அண்மையில் நடந்தேறிய யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் சிங்கள மாணவர்களுக்கிடையேயான மோதல் மற்றும் இரு மாணவர்களின் துப்பாக்கிச் சூட்டு மரணங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டு முதல் இன்று வரை, தமிழ் மக்கள் அரச படைகளினதும், சிங்கள கூலிப்படைகளினதும் வன்முறைகளையே தொடர்ந்து சந்தித்து வருகின்றனர் என்பதே உண்மையாகும். மறுபக்கம், இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்புகளையும், ஐ.நா செயலாளர் நாயகம், ஐ.நா மனித உரிமை ஆணையாளர், ஐ.நா வின் முக்கிய புள்ளிகளினால் முன்மொழியப்பட்ட விதிமுறைகள், செயல்முறைகள், ஆலோசனைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்தாது, அலட்சியம் செய்து காலம் கடத்தி வருகின்றனர். இதன் மூலம் பாதிக்கபடுவதும் தமிழ் மக்களாகவே உள்ளனர்.

அதன் பொருட்டு மிக நீண்டகாலமாக, அதாவது கடந்த இரு தசாப்தங்களிற்கு மேலாக ஐ.நாவுடனும், வேறு சர்வதேச நிறுவனங்களுடன் மிக நெருக்கமாக வேலை திட்டங்களை முன்னெடுக்கும் தமிழர் மனித உரிமைகள் மையம் ஆகிய, மிக தாழ்மையுடன் மனித உரிமைகளை மதிக்கும் ஒவ்வொரு நாட்டின் தலைவர்களையும், ஐ.நா மனித உரிமை சபையின் அங்கத்துவ நாடுகளையும், இலங்கை மீதான ஐ.நா மனித உரிமை சபையின் கண்காணிப்பிலிருந்து நழுவ விடாது, பாதிக்கப்பட்ட மக்களிற்கு நீதியை பெற்று கொடுக்குமாறு வேண்டுகின்றோம் எனவும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதே.

இவ்வாறான விடயங்களை உற்றுக் கவனிக்குமிடத்து, மாறுபட்ட இலங்கை அரசாங்கங்கள், ஆசைவார்த்தைகளிற்கும், வெற்று வாக்குறுதிகளை வழங்குவதிலும் மிகவும் பிரபல்யமானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி என கூறும் தற்போதைய இலங்கை அரசாங்கம், சர்வதேசத்தை திருப்திபடுத்துவதற்காக, சில முக்கிய மனித உரிமை ஆர்வலர்களது படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட சிலரை, கைது செய்து பல கபட நாடகங்களை ஆடி வருகின்றனர் இது நெடுநாளல்லாது. வெளிச்சத்திற்கு வரும் என ஆதங்கப்பட்டு வரும் அரசியற் தரப்புக்களும் இல்லாமல் இல்லை.

அதுமட்டுமின்றி, இன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெறும் கண்துடைப்பு காரணங்களிற்காக கைது செய்யப்பட்ட பலர், சிறையில் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதுடன், சிலர் கண்துடைப்பு நீதி விசாரணை மூலம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மனித உரிமை மீறல், போர் குற்றம், மனிதாபிமானம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள், ஐ.நா மனித உரிமை பிரிவிடமிருந்து நீதி பெற்றுகொள்ள முடியாவிடில், அவர்கள் வேறு எங்கு நீதியை தேடுவது? இலங்கையில் வடக்கு கிழக்கில் இலங்கையினால் மேற்கொள்ளப்படுபவை யாவும், இன அழிப்பை அடிப்படையாக கொண்டவையே என்பது பல தடவை சர்வதேச சட்டவாளர்களினால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்தங்களிற்கு மேலாக இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினைகள் இன்று உலகின் கண்களை கவர்ந்துள்ள அதே சமயம் யாரும் எதிர்த்து தீர்வு காண விழையவில்லை. ஆனால் இலங்கையில் நடைபெறுபவையை விட உலகில் மிக குறைந்தளவு அழிவுகள் துன்பங்களை அனுபவித்த வேறு சில இனப்பிரச்சினைகள், இதே ஐ.நா வினால் தீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் தலைவர்கள், நாட்டின் தலைவர்கள் யாவும் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சோகக் கதைகளை கேட்பதற்கு மாத்திரமின்றி அவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்து, மிகச்சரியான தீர்வை வழங்குவதற்கு காலதாமதமின்றி முன்வரவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களது வேண்டுகோளாகும்.

இலங்ககை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சர்வதேச சமுதாயம் முன்வரவேண்டும். காலம் மிக விரைவாக கழிந்து கொண்டிருக்கிறது. கடந்த காலம் மீண்டும் வரப்போவதில்லை என்பதை உணர்ந்து கடந்த காலங்களில் ஐ. நாவினால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மிக விரைவில் நீதியைப் பெற்றுக் கொடுக்க தமிழ்த் தலைமைகள் உட்பட நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேசமும் முன்வர வேண்டும் என்பதே தமிழ் மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது.

கைதிகளின் விடுதலை; காலம் கடந்தும் ஞானம் பிறக்காத நல்லாட்சி!

இலங்கை நாட்டிலே நடைபெற்ற மூன்று தசாப்த யுத்தம் 2009இல் மௌனிக்கச் செய்யப்பட்டது. இவ் யுத்தத்தில் உயிரிழப்பு, அங்கங்கள் இழப்பு, சொத்துக்கள் இழப்பு, கல்வி போன்ற பல துறைசார் இழப்புக்கள் என பல இழப்புக்களை நாட்டில் வடக்கு, கிழக்கில் இருந்த அனேகமான தமிழ்மக்கள் எதிர்கொண்டனர். அவ்வாறான இழப்புக்களை சந்தித்து ஒரு தசாப்தம் நிறைவுபெறவிருகின்றதான நிலையில், இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களினால் இழப்பீடுகளோ? நீதியோ இன்னமும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியிலே காணப்படுகின்றது.

மூன்று தசாப்த யுத்தத்தில் தொலைத்தவற்றினை தேடிப்பெற்றுக்கொள்வதற்கு மேலும் பல காலங்கள் தேவையுள்ள நிலையிலும் கூட, இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையோ? இழப்பீட்டு தொகைகளையோ இதுவரையும் முழுமையாக வழங்கவில்லை. அதேவேளை இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் தொடர்பிலோ!, மீறப்பட்டதாக கூறப்படும் யுத்தக்குற்றங்கள் பற்றியோ விசாரணைகளை நடாத்தவில்லை. ஆனால் யுத்தம் மௌனிக்கச்செய்யப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை தமக்கான நீதியினை பெற்றுத்தருமாறும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபி

சிறையின் உள்ளே வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் ஒப்புதல் வாக்குமூலம் ஊடாகவே குற்றவாளியாக்கப்பட்டுள்ளனர். நீண்டகாலம் தடுத்து வைத்திருந்து, சித்திரவதை செய்து, தெரியாத ஒரு மொழியில் வாக்குமூலம் எழுதப்பட்டு, மொழி தெரியாத ஒருவர் மூலம் மொழி பெயர்க்கப்பட்டு, அதில் ஒப்பமிட வற்புறுத்தப்படுகின்றனர். நீண்டகாலம் இவர்கள் சிறையில் இருப்பதால், குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டால், தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலையாகி விடலாம் என்ற நோக்கில் அநேகமானோர் குற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்

டித்து வழங்குமாறும் பலதடவைகள் குறிப்பிட்டும், பேரணிகளை, ஆர்ப்பாட்டாங்களை நடாத்தியும் தீர்வுகிடைக்காத நிலையில், வெளிநாட்டு தூதுவர்களிடமும், ஐநாசபை பிரநிதிகளிடம் தாம்சார்ந்த நிலைப்பாட்டினை முன்வைத்தும், ஊடகங்கள் வாயிலாக அறிக்கைகளை வழங்கியும், நிகழ்வுகள் நடைபெறுகின்ற போது, இது தொடர்பில் பேசியும், பாராளுமன்றத்திலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேசியும் வருகின்றனர். ஆனால் அரசும் நேரத்திற்கு நேரம் பல்வேறு கதைகளை கூறிவருகின்றனர். அதேவேளை காணிவிடுவிப்பு போன்ற செயற்பாடுகளில் ஓரளவு முன்னேற்றத்தினை தற்போதைய அரசுசார் பக்கம் காணக்கூடியதாகவும் உள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்கள் ஒருபக்கமாகவிருக்க, இன்னோர்பக்கம் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் தமிழ் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன. இலங்கையில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 107 பேர் சிறையில் இருப்பதாக கூறப்படுகின்றது. அவ்வாறுள்ள அரசியல் கைதிகளில், இலங்கையில் அனுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் கைதிகள் செப்டம்பர் 14ஆம் தேதி முதல் உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். இதற்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு மெகசின் சிறையில் உள்ள தமிழ் கைதிகள் 43 பேரும் அக்டோபர் 3 ஆம் தேதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு வருடமும் இந்த அரசியல் கைதிகள், தமது விடுதலையை வலியுறுத்தியும், வழக்குகளை துரிதப்படுத்தக் கோரியும் போராட்டம் நடாத்துகின்ற

னர். இவர்களின் போராட்ட வடிவங்களில் மாற்றத்தினைக் கொண்டுவந்து ஆண்டுதோறும் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடாத்துகின்றனர் என்று அருட்தந்தை மா.சக்திவேல் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று, கடந்த காலங்களில் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது போன்று இவ்வாண்டும் இடம்பெற்று வருகின்றது. தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் தரப்பினரால் நீண்டகாலமாக முன்வைக்கப்படுகின்ற போதிலும், அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லையெனவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி, குற்றவாளிகளாக காணப்பட்டவர்களும், நீதிமன்ற விசாரணைகளில் இருப்பவர்களும், விசாரணைக்காக காத்திருப்பவர்களும்தான் சிறைகளில் உள்ளனர். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் நடாத்திய சந்திப்பில் இதனைத்தான் தெளிவாகக் கூறினேன். தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் மனக்குறைகளைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியதாக அமைச்சர் தலதா அத்துகோரள அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான அனைவரையும் அரசியல் கைதிகளாக ஏற்க வேண்டும். இலங்கையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமே மிகப் பயங்கரமானது என்பதை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது. அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதாக மைத்திரிபாலவின் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது.

எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றப்பட்டாலே சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் விடுதலையாகிவிடுவர். சிறையில் உள்ளவர்களை நீதிமன்றத்தின் ஊடாக இவர்களை விடுவிக்க முடியாது என்பது கடந்த கால நடவடிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சிறையின் உள்ளே வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் ஒப்புதல் வாக்குமூலம் ஊடாகவே குற்றவாளியாக்கப்பட்டுள்ளனர். நீண்டகாலம் தடுத்து வைத்திருந்து, சித்திரவதை செய்து, தெரியாத ஒரு மொழியில் வாக்குமூலம் எழுதப்பட்டு, மொழி தெரியாத ஒருவர் மூலம் மொழிபெயர்க்கப்பட்டு, அதில் ஒப்பமிட வற்புறுத்தப்படுகின்றனர். நீண்டகாலம் இவர்கள் சிறையில் இருப்பதால், குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டால், தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலையாகிவிடலாம் என்ற நோக்கில் அநேகமானோர் குற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற கருத்தினை மா.சக்திவேல் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அரசியல் கைதிகள் குறித்து கூறுகின்ற போது, அரசாங்கம் அரசியல் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். சட்ட ரீதியாக பார்க்கும்போது விட்டுக்கொடுப்புக்களால் பாதிக்கும் மேற்பட்டோர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் எஞ்சியுள்ளவர்களுக்கும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் என்ற கருத்தினை குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று அரசியல் கைதியொருவரின் தாய் கூறுகின்றபோது, மகனுக்கு இப்போது 30 வயது. எனக்கு மூன்று பெண் பிள்ளைகள். இப்பொழுதும் மகனை நினைத்து மனம் பாடாய்படுகிறது. எனது கணவரும் நான்கு வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். கடந்த வருடம் இதே ஐப்பசி மாதம், எனது மகன் உள்ளிட்ட சிலர் 41 நாட்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் விடுதலை கிடைக்கவில்லை. இம்முறையும் போராட்டம் நடாத்துகின்றனர்' எனக்குறிப்பிட்டிருந்தார். இதேவேளை யுத்தம் முடிவடைந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை சிறையில் அடைத்து வைக்காமல் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு இடங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டு அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள உறவுகள் மிக நீண்டகாலமாக காரணங்கள் கூறப்படாது வழக்குகள் தொடரப்படாது சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர் இவர்கள் பல தடவைகள் உண்ணாவிரதம் இருந்தபோதும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படாத நிலையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் கடந்த சில நாட்களாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாகவும் நல்லாட்சி அரசு உடனடியாக இவர்களது வழக்குகளை தொடுத்தோ அல்லது புணர்வாழ்வு அழித்தோ அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென கோரி முல்லைத்தீவில் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முனையூரான்

இந்நிலையில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரத போராட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாக பல்கலைக்கழக முன்றலில் இருந்து நடைபவனி ஆரம்பித்தது. தேசத்தின் வேர்கள் அமைப்பின் ஏற்பட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரத போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக ஆதரவு போராட்டமும் அடையாள உண்ணாவிரத போராட்டம்

12 ஆம் பக்கம் பார்க்க....

தீர்வில்லை; தொடரும் குப்பை பிரச்சினை

சத்தார் எம் ஜாவித்

கொழும்புக் குப்பைகளை புத்தளத்தில் கொட்டி அந்த மக்களை அரசுக்கெதிராக கிளர்ந்தெழ வைக்கும் செயற்பாடாகவே அமைகின்றது. அது மட்டுமல்லாது அவர்கள் இச்செயற்பாட்டிற்கு எதிராக சத்தியாக்கிரங்களையும், போராட்டங்களையுமே ஏற்படுத்தத் தூண்டுவதாகவும் இது அமையும். இக் குப்பைகளின் சுகாதாரச் சீர்கேடுகளால் அவர்கள் நோயாளிகளாக ஆகுவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகின்றன.

புத்தளம் மக்கள் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயற்பாட்டால் ஏற்கெனவே சுவாச நோய் உள்ளிட்ட பல நோய்களுக்கு உள்ளாகி இருப்பதாக ஊடகங்கள் வாயிலாகவும், ஏனைய ஆய்வுகளின்படியும் தெரிய வந்துந்துள்ளது. இவ்வாறான நிலையில் இந்த மக்களை மேலும் மேலும் நோயாளிகளாக்கும் ஒரு விடயமாகவே இந்தக் குப்பை விடயத்தை நோக்க வேண்டியுள்ளது.

இந்த வகையில் நோக்கும்போது இந்தக் குப்பை விடயத்தால் அந்த மக்கள் அரசின் மீதும், அரச அதிகாரிகள் மீதும் நம்பிக்கையற்றவர்களாக மாறி அரசுக்கெதிரான வெறுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இந்த நியாயமற்ற செயற்பாடானது கொழும்பு வாழ் மக்களுக்கு நல்ல தீர்வாக அமைந்தாலும் புத்தளத்து மக்களுக்கு அது ஆபத்தான விடயம் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இலங்கையில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வரும் ஒரு விடயம்தான் குப்பைப் பிரச்சினையாகும். கடந்த சில காலமாக குறிப்பாக தலை நகர்ப்பகுதிகளில் குப்பைகளைக் கொட்டுவதற்கு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதுடன் அவ்வாறு மக்கள் கொட்டும் குப்பைகளை அகற்றும் விடயத்திலும் அரசாங்கம் பாரிய சாவல்களை எதிர் நோக்கும் நிலைமைகளும் உருவாகியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தைப் பொருத்தவரை தலைநகர்ப் பகுதியில் சேர்க்கப்படும் சகல குப்பைகளும் மீதோட்டமுல்ல மற்றும் மாதம்பிட்டி குப்பை மேடுகளிலேயே இதுவரை காலமும் கொட்டப்பட்டு வந்தன. இவ்வாறு பல தஸாப்தங்களாக கொட்டப்பட்ட குப்பைகள் பாரிய மலை போன்று குவிந்து கொழும்பு மாவட்டத்தில் பாரிய இரண்டு மலைகள் இருப்பதைப்போல் இவை காட்சியளிக்கின்றதை நாம் காணலாம். தற்போது மேற்படி இரு இடங்களிலும் குப்பைகளை கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்விரு இடங்களிலும் கொட்டப்பட்ட குப்பைகளில் இருந்து மக்கள் சுவாசிக்க முடியாதளவு ஒருவகையான துர்நாற்றம் வீசுவதன் மூலம் அப்பகுதிகளில் மக்கள் நடமாடவும், வாழவும் முடியாத நிலைமைகள் காணப்படுகின்றன. சில வேலைகளில் குப்பைகளில் ஒருபகுதி தீப்பிடித்து எரியும் நிலைமைகளும், மழைக் காலம் வந்தால் பிரச்சினை பண்மடங்காகி விடுவதுடன் அப்பகுதியில் குப்பைமேடு சரிந்து விழும் நிலைமைகளும், நிலம் தாழிறங்கும் நிலைமைகளும், துர்நாற்றம் வீசும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகளால் அப்பகுதியை அண்டிய மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த நிலைமைகள் பல இதற்கு முன்னரும் பதிவாகியும் உள்ளன. குறிப்பாக கடந்த 2017 ஏப்ரல் மாதமளவில் மீதோட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழந்;ததில் பலர் குப்பைக்குள் புதையுண்டு பரிதாபகரமாக மரணமானதுடன் நூற்றுக் கணக்கணவர்கள் படுகாயங்களுக்கு உள்ளான நிகழ்வுகளும், பல வீடுகள் குப்பை மேட்டுக்குள் புதையுண்ட சம்பவங்களும் அணைவரையும் சோகத்தில் ஆழ்தியிருந்ததை மறந்துவிட முடியாது.

இவ்வாறு மனித உயிர்களுக்கே ஆபத்தாக மாறிவரும் கொழும்புக் குப்பைகளை அகற்றும் விடயத்தில் அரசாங்கம் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருப்பதுடன் இதற்காக நாளாந்தம் பல மில்லியன் ரூபாய்களை செலவிட வேண்டியிருப்பதாக கொழும்பு மாநகர மேயர் ரோஷி சேனநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு மாவட்டத்தைப் பொருத்தவரை நாளாந்தம் சேரும் பல தொன் கணக்கான குப்பைகளை எங்கு கொட்டுவது என்ற ஒரு பாரிய பிரச்சினை தோன்றியுள்ளது.

இவ்வாறு பல பிரச்சினைகளை தோற்று விக்கும் கொழும்பு மாவட்டக் குப்பைகளை தற்போது புத்தளத்தில் உள்ள அறுவாக்காடு எனும் இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் புத்தளம் மாவட்ட மக்களுக்கு பேரிடியான ஒன்றாக மட்டுமல்லாது அந்த மக்களை கிளிகொள்ள வைத்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

கழிவுப் பொருட்கள் என்ற வகையில் குப்பைகளை அகற்ற வேண்டியது ஒவ்வொருவரதும் கட்டாய கடமையாகும். இதுவிடயத்தில் யாரும் கவனயீனமாகவோ அல்லது பொடு போக்காகவோ இருந்து விடக்கூடாது. என்றாலும் அதற்கான முறைமைகளை சரியான வடிவில் வகுத்துக் கொள்ள வேண்டும். ஒரு இடத்தில் இருக்கின்ற குப்பைகளை இன்னொரு இடத்தில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் கொட்டி அவர்களை நோயாளிகளாக மட்டுமல்லாது பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவது என்பது எந்த விதத்திலும் நியாயமான விடயமல்ல.

கொழும்புக் குப்பைகளை அகற்றுவதற்கு அரசாங்கம் சுமார் 200 அமெரிக்க மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை ஒதுக்கி அதனை சீனா ஹாபர் எனும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கி குப்பைகளை அகற்ற புத்தளத்தில் அறுவாக்காடு எனும் இடமும் அடையாளம் காணப்பட்டுள்ளமை புத்தளம் வாழ் மூவின மக்களையும் போராட்டத்தில் இறங்கி தமது எதிர்ப்புக்களைத் தெரிவிக்கும் அளவிற்கு வழிசமைத்து விட்டது எனலாம். அந்த மக்களின் விருப்பங்கள் இல்லாமல் இவ்வாறு மேற்கொள்ளப்படும் விடயத்தில் அரசாங்கம் அதீத கவனஞ் செலுத்தி குறித்த விடயத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து வேறு இடத்தில் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கையைப் பொருத்தவரை மக்கள் நடமாற்றமற்ற பல வனப் பகுதிகள் இருக்கின்றன. அவ்வாறான இடங்களில் இத்திட்டங்களை மேற்கொண்டு அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ளலாம். இல்லா விட்டால் வெளிநாடுகளில் இருப்பதுபோன்று மீள் சுழற்றி மற்றும் இயந்திரங்கள் மூலம் அழித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்த நடைமுறைகளே தற்போதைய நிலையில் இலங்கைக்கும் சாத்தியமான முறைமைகளாகும்.

மாறாக ஒரு இடத்தில் இருப்பதை இன்னொரு இடத்தில் மக்கள் வாழும் பகுதிகளில் அல்லது அதனை அண்டிய பகுதிகளில் கொட்டுவது என்பது பிரச்சினைகளுக்கான மூலங்களாகவே அமையும் மாறாக தீர்வாக அமையாது. குப்பகைளால் மனிதன் மட்டுமல்லாது மிருகங்கள் உள்ளிட்ட ஏனைய உயிரினங்களும்கூட ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கடலை அண்டிய பகுதிகளில் இவற்றைக் கொட்டுவதால் கடல்வாழ் உயிரினங்களும், மனிதன் உண்ணும் உயிரினங்களும்கூட இறக்க வேண்டிய நிலைமைகளுக்கு உள்ளாவதுடன் சுற்றுச் சூழலும் அசுத்தமடையும் நிலைமைகளும் காப்படுகின்றன. இவ்வாறு குப்பைகளால் பல வழிகளிலும் ஆபத்துக்களே காத்திருக்கின்றன.

சுத்தம் சுகம் தரும் என்பார்கள் இந்த வகையில் சுத்தம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு மனிதன் அல்லது மனித சமுகம் சுகதேகியாக வாழ வேண்டுமானால் அவன் அல்லது அவர்கள் முதலில் சுத்தமாக இருக்க வேண்டும். இதன் மூலமே அவர்கள் நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும் வாழ முடியும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். ஒரு மனிதனுக்கு நோய்கள் ஏற்பட்டு விட்டால் அவர்களின் வாழ்வு குறடிவானதாகவே ஆகிவிடும். அத்துடன் அவர்கள் இயல்பாகவே செயழிழந்தவர்களாக ஆகிவிடும் துர்ப்பாக்கிய நிலைமைகள் எற்பட்டு

13 ஆம் பக்கம் பார்க்க....

ஒலுவில் மக்களின் போராட்டம்; துறைமுகத்தை அகற்றுவதா? தொடர்வதா?

தந்திமகன்

கடந்தவாரம் நாம் இப்பகுதியில் ஒலுவில் துறைமுகத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக அரசியல் வாதிகள் குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் கொண்டுள்ள நிலை தொடர்பாகவும், மக்களின் நிலைமை தொடர்பாகவும் அதற்கான பின்புலம், கடலுக்குள் நிலம் செல்வதற்கான காரணங்கள், துறைமுகத்தை அமைத்ததன் நோக்கம் போன்ற விடயங்களை எழுதியிருந்தோம். இப்போது அங்கு மீண்டும் ஒரு பிரச்சினை தோன்றியிருக்கிறது. ஆக்கிரமிக்கப்படுகின்ற கடலால் நாம் என்ன செய்ய வேண்டும் மாற்றுவழி ஒன்றை பெற்றுத்தருமாறும், நமது மண்ணை கடலிடமிருந்து மீட்குமாறும், கடற்தொழிலாளர்கள் தமது தொழிலை தொடர்ந்திட துறைமுகத்தில் குவிந்துள்ள மண்ணை அகற்றி வழிவிடுமாறும் கோரிக்கை விட்டது மட்டுமன்றி போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கின்றார்கள் அப்பிரதேச வாழ் மக்களும், மீனவர்களும்.

இவ்வாரம் முழுவதும் ஒலுவில் பிரதேசத்தில் மக்கள் போராட்டம் வெடித்திருந்தது. அது இன்னும் முடிந்ததாகத் தெரியவில்லை. அரசும் கண்டுகொண்டதாக தெரியவில்லை. அரசின் ஏஜென்டுகளான அந்த மக்களின் வாக்குகளைக் கொள்ளையிடுகின்றவர்களின் காதுகளிலும் பெரியளவில் விழவில்லை. அப்படியானால் ஏன் போராட்டம். போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? யாழ்மண்ணில் பல்வேறு இடங்களில் மாதக்கணக்கில் தமது மண்ணுக்காக போராடிய மக்களின் போராட்டங்கள் இன்னும் முற்றாக முடிந்தபாடில்லை. உண்ணாமல் விரதமிருந்தும் போராடினார்கள். ஆனால் அந்த மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் அடிக்கடிவந்து ஆறுதல் கூறினார்கள். ஆனால் ஒலுவில் மக்களின் துயரில் யாருமே வந்து ஆறுதல் கூறியதாக தெரியவில்லை. அமைச்சர்கள் வந்தார்கள் துறைமுக பங்களாவில் கூட்டம்போட்டு ஏசி அறைகளில் அமர்ந்து மேதாவித்தனம் செய்யவேண்டுமென கூறினார்கள். கடல் ஒலுவில் மண்ணை மாத்திரமன்றி அருகிலுள்ள நிந்தவூரின் மண்ணையும் சேர்ந்து கடல் கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது. அணைக்கட்டி அணைக்க வேண்டியவர்கள் அதிகாரம் இருந்தும் அதனை மறந்து அரசியல் செய்வதிலேயே கவனம் குவிந்துள்ள நிலையில் அந்த மக்கள் பாவம் என்னதான் செய்வார்கள்.

போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை(12.10.2018)யும் மதியத் தொழுகையின் பின்னர் வித்தியாசமான இரண்டு போராட்டங்கள் மிகப்பெரியளவில் நடாத்தப்பட்டன. யாரும் கண்டுகொண்டதாக தெரியவில்லை. ஒரு அணியினர் துறைமுகத்தினுள் குவிந்துள்ள மண்ணை அகற்ற வேண்டாம் என்றும், மற்றொரு அணியினர் மீன்பிடிக்க வழிகோருமாறும் போராட்டம் நடாத்தியிருந்தனர். உண்மை எதுவென்றால் ஒலுவில் துறைமுகம் அவசியமான ஒன்றா? என்கிற கேள்வியும் எழுகிறது. கோடிகளில் உருண்டு புரண்ட ஒலுவில் துறைமுகத்தை இப்போது வேண்டாம் என்றால் உதவிய நாடு, செய்த அரசு ஒப்பந்தங்களின் நிலைமை என்னாவது? ஆக மொத்தத்தில் இன்னும் ஓரிரு வருடங்களில் ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசம் முழுவதும் மண்ணால் மூடப்படுகின்ற அபாயம் தோன்றியிருக்கிறது.

இந்த மூடலுக்குரிய மண் நிந்தவூர் பிரதேசத்திலிருந்து கடல்கொண்டுவந்து மூடிவிடும். பின்னர் நிந்தவூர் மக்கள் பேராடுவார்கள். எங்கள் நிலைத்தை மீட்டுத்தருமாறு போராடுவார்கள். பின்னர் அங்குள்ள அரசியல்வாதிகள் கொதித்தெழுவார்கள். ஓரளவு கற்பாறைகள் இடப்படும். பின்னர் அது கடலுக்குள் மறைந்து காரதீவை நோக்கி நகர்ந்து அங்குள்ள மண்ணைக் கொண்டுவந்து நிந்தவூரை நிறைக்கும். ஆக துறைமுகத்தினால் கிழக்கின் பல கிராமங்கள் நிச்சயம் கடலுக்குள் இரையாகும் நிலைமைதான் தொடரும். இதற்கு முடிவு கட்ட வேண்டுமாக இருந்தால் துறைமுகத்தை இழுத்து மூடிவிடுவதுதான் நலமாய் அமையும் என்கிறார்கள் ஒருசாரார். மற்றொரு சாரார் மீன்பிடிக்கவேண்டும். மண்ணை அகற்றித் தாருங்கள். அந்த மண்ணை விற்று பணம் சம்பாதிக்கலாம். கோடிகோடியாய் பணம் புரளும். அரசு ஏன் யோசிக்கிறது. ஆனால் மண்ணை அள்ள அள்ள ஒலுவிலில் பிரதேசம் தொடர்ந்தும் கடலுக்குள் இரையாகி விடும் என்கிறார்கள் கடலின் ஆழ அகலம் தெரிந்த மீனவர்கள். பாவம் ஒலுவில்.

ஒலுவில் துறைமுகத்திலுள்ள மண்ணை அகற்றுவதால் ஒலுவில் பிரதேசத்திற்கு பாரிய சேதம் ஏற்படுவதுடன் ஒலுவில் கிராமத்தை கடல் காவுகொள்வதாக மக்கள் தெரிவித்து இப்போராட்டத்தை மேற்கொண்டனர். மண்ணை அகற்றுவதால் ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டுவரும் கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று அரசு எழுத்து மூலம் அறிவிக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுவருவோர் தெரிவிக்கின்றனர். இதே நேரம் மண்ணை அகற்ற வேண்டும் என அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு முன்னால் மீனவர்கள் போராட்டம் செய்தோர் நீதிமன்ற உத்தரவுக்கமைய அவ்இடத்தைவிட்டு வெளியேறியுள்ளார்கள்.

ஒலுவில் துறைமுக பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் கொட்டிலில் இருந்து 7 வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன் இணைந்து கொள்வதற்காக ஒலுவில் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலிலிருந்து பிரதான வீதியுடாக பாரிய பேரணி சென்றது.

துறைமுகத்தில் படிந்துள்ள மண்ணை அகழ்வதனால் ஏற்கனவே பெரும்பகுதி கரையை இழந்துள்ள ஒலுவில் கிராமம் மீண்டும் பாதிக்கப்படும் என்பதினாலும், கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்களின் தொழில் மற்றும் வாழ்விடம் என்பன பாதிக்கப்படும் என்ற வகையிலும், கடந்த காலங்களில் அரசியல் தலைவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டு மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் காணப்படுவதாலும், ஒலுவில் கிராமத்தில் அமைந்துள்ள இத்துறைமுகம் காணி, வீடு, தோட்டம் , தொழில் போன்ற பாரிய இழப்புக்களை இழந்த இம்மக்களுக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்கவில்லை என்பதாலுமே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அரசு உடன் முடிவு கட்டவேண்டும். இல்லையேல் முடிவு கட்டும்வரை போராட்டம் செய்யப்போவதாக அந்த ஊர் மக்கள் அனைவரும் கூறி வருகின்றனர். பாவம் ஒலுவில் மக்கள்

ஒலுவிலில் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர்தான், தங்களது பகுதியில் கடுமையான கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளதாக, ஒலுவில் மக்கள் குற்றஞ்சாட்டிவருகின்றனர். ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பால் பல நூறு மீட்டர் நிலப்பரப்பில் கடல் நீர் புகுந்துள்ளதாகவும், அப்பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள்

13 ஆம் பக்கம் பார்க்க....

ஊழலற்ற சபையை முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன்!

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம்

கேள்வி: கிண்ணியா நகர அபிவிருத்தி தொடர்பில் உங்களுக்கு தடையாக ஏதாவது பிரச்சினைகள் உள்ளனவா? அது பற்றி

பதில்: பெரிய தடைகள் எதுவும் கிடையாது. இருந்த போதிலும் அரசியலுக்கு ஆதரவாக இருக்கின்ற சிலர் சமூக வலைத்தளங்களில் சில முரண்பாடுகளை தோற்றுவித்து வருகின்றமை தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது.

ஏப்ரல் 27 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கிண்ணியா நகர சபை இது வரை காலமும் எவ்வித தடங்களோ பிரச்சினைகள் இன்றியே ஆரோக்கியமான சபையாக இயங்கி வருகிறது.

சக உறுப்பினர்கள் என்னுடன் சேர்ந்து சகல ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றார்கள்.

அரசியல் செய்வதற்காக வந்தவர்கள் நாங்களல்ல எந்த தடைகளும் இன்றி கிண்ணியாவை அபிவிருத்தி செய்ய வந்தவர்கள் என்ற நோக்கம் அனைத்து சக உறுப்பினர்களிடமும் கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

எடுத்துக் காட்டாக நகரமயமாக்கல் அபிவிருத்திகளில் ஒன்றான வீதியை அகலமாக்கல் தொடர்பில் எகுத்தார் நகரில் சிறிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் படி 12 குடும்பங்களுக்கு மேல் குடியிருப்பாளர்களாக வாழ்ந்தால் அப் பகுதியில் போக்குவரத்துக்காக எட்டு அடி வீதி அகலத்தில் இருக்க வேண்டும் அதை விட கூடுதலாக இருப்பின் 10 அடி அகலமாக்கப்படல் வேண்டும் என 84 (1) பிரிவு சட்டம் கூறுகிறது. இது போன்று தடங்களற்ற வீதி அகலமாக்கல் பணிகள் கிண்ணியாவின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறும்.

சட்டவரையறைகளுக்கு அப்பாற் சென்று செயற்பட மாட்டேன்மக்களுக்கு சாதகமான முறையில் செயற்படுகிறேன் அரசியல் தடைகளும் இது வரைக்கும் அபிவிருத்தி முன்னெடுப்பில் இல்லை எல்லோரும் என்னை தவிசாளராக ஏற்றுக் கொண்டே செல்கிறார்கள்.

கேள்வி: கிண்ணியா நகர சபை அமையப் பெற்று ஆறு மாதங்கள் கடந்த நிலையில் இருக்கிறது. இது வரைக்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அபிவிருத்திகள் எவை?

பதில்: கிண்ணியா நகர சபை அமைந்து நான்கு அமர்வுகள் முடிவடைந்த நிலையில் எதிர் வரும் நாட்களில் ஐந்தாவது அமர்வு நடைபெறவுள்ளது . நாங்கள் சபையை பொறுப்பேற்கும் போது பல நிதிப் பற்றாக்குறைகள் நிலவி வந்தது. பல கடன்களும் கொடுக்கல் வாங்கல் காரணமாக 45 இலட்சம் ரூபாவை கடனாக தீர்த்து அதிலிருந்து விடுபட்டிருக்கிறோம். இன்னும் நகர சபைக்கு வெளியில் இருந்து 3.5 மில்லியன் வருமானமாக வரவுள்ளது. இவ்வாறான அனைத்தும் இன்னும் மூன்று கிழமைகளுக்குள் சரியாகி விடும். கிண்ணியாவை பொறுத்தமட்டில் எல்லா பகுதிகளுக்கும் வீதி மின் விளக்குகள் ஃஉஈ மின் குமிழ்கள் பொறுத்தப்பட்டுள்ளதுடன் சுத்தம் செய்யும் வேலைத் திட்டங்கள் கிண்ணியா நகரம் முழுதும் நடைபெற்று வருகிறது போதிய ஊழியர்கள் பற்றாக் குறையாக இருந்தாலும் இருப்பவர்களைக் கொண்டு சுத்தம் செய்யும் பணிகள் இடம் பெறுகிறது.

கான் மூடிகளை சுத்தம் செய்தல் உட்பட மேலதிகமாக புதிதாக வெள்ளப் பெருக்குகளில் இருந்து பாதுகாக்க வடிகான்கள் டீ.பி ஜாயா வீதி, மாஞ்சோலை, அடப்பணா வயல் போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர உப்பாறு பாலம் அருகில் சுமார் ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா செலவில் பெமிலி பார்க் அமையப் பெறவுள்ளது இதற்கான நிதியினை நகர திட்டமிடல் அமைச்சு மூலமாக பெறப்பட்டு கேள்வி மனுவும் கோரப்பட்டுள்ளது. கிண்ணியா கடல் மேல் பாலத்தில் உள்ள சகல மின் குமிழ்களும் 250 W கொண்ட பல்ப்கள் பொறுத்தப்படும் இது உப்பாறு பாலம் வரை LED கொண்டதாக சகல மின் கம்பங்களிலும் ஒன்று விட்டு ஒன்றில் பொறுத்தி அழகு மிகு நகரமாக கிண்ணியா காட்சியளிக்கும். இதற்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளது இன்னும் மூன்று வாரத்திற்குள் எல்லா திட்டங்களும் அமுல் படுத்தப்படும்.

நகர சபை பகுதிக்குட்பட்ட மீன் சந்தை நிலுவையில் உள்ள வருமானம் 88 இலட்சம் வரவுள்ளது 56 பேர்கள் பணம் செலுத்த வேண்டியுள்ளது இவர்களை மத்தியஸ்த சபைக்கு விசாரனைகளுக்காக பணத்தில் 3/1 பகுதியை உடன் செலுத்த பணிக்கப்பட்டிருக்கிறார்கள் 2009 வரை இன்னும் இது செலுத்தப்படவில்லை இல்லாது போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பெரு நாள் கடைகளை வழமையை விடவும் ச

நேர்கண்டவர் ஹஸ்பர் ஏ ஹலீம்

பையின் பின்னர் அதிகமான வருமானமாக ஆறு மாத காலத்திற்குள்ளும் 25 இலட்சம் ரூபா வருமானமாக ஈட்டியிருக்கிறோம். இதற்கு முன்னர் சபை அமைவிற்கு முன் உள்ள காலங்களில் 09 இலட்சம் ரூபா வே வருமானமாக உள்ளது தற்போது அது பல மடங்காக அதிகரித்துள்ளது. 85 ஃஉஈ மின் குமிழ்கள் நகர சபை எல்லைக்குள் பொறுத்தப்பட்டுள்ளது எதிர் வரும் காலங்களில் கிண்ணியா தோனா கடற்கரை சிறுவர் பூங்கா, கட்டையாறு ஹில்மி பார்க் உட்பட பல புதிய திட்டங்களை அமுல்படுத்தவுள்ளோம்.

கேள்வி: கிண்ணியா நகர சபையின் தவிசாளர் பதவி உங்களுக்கு ஒரு வருடம் எனும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக ஒரு தகவல் வெளி வருகிறதே இது தொடர்பில் உங்களது கருத்து?

பதில்: நான் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கிண்ணியா நகர சபையில் மூன்று கட்சிகளாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளின் ஆதரவுடன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டேன். எனது கட்சியின் முடிவை எந்த நேரத்திலும் ஏற்க தயாராகவுள்ளேன் நான் தவிசாளராக வருவேன் என நான் கூட நினைக்கவில்லை.

கட்சியே கூறியது நீங்கள் தான் தவிசாளர் என்று இருந்த போதிலும் குச்சவெளி பிரதேச சபையில் தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினரும், உப தவிசாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினரும் தெரிவு இடம் பெற வேண்டும் அதேபோன்று கிண்ணியாவில் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து தவிசாளர் கிடைக்கப் பெற வேண்டும் என கூறப்பட்டிருந்தது.தவிசாளர் பதவி

இன்னும் ஒரு வருடமோ இரு வருடமோ நாளையாக இருக்கலாம் கட்சியின் தீர்மானத்தை ஏற்க தயாராகவுள்ளேன்.

கேள்வி: கிண்ணியா நகர சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்படுகின்ற பிரேரனைகள் எல்லாம் அமுல்படுத்தப்படுகின்றனவா?

பதில்: ஒவ்வொரு உறுப்பினர்களுடைய பிரேரனைகளும் எழுத்து மூலமான விடயங்களாக ஆவணப்படுத்தப்பட்டு உரிய வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன அவர்களுடைய பிரேரனைகளை ஒவ்வொரு சபை அமர்வின் போது ஒவ்வொருவருக்குமான வேலைத் திட்டங்கள் உரிய அடிப்படையில் நிதிகள் ஒதுக்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் தங்களது திட்டங்கள் தொடர்பான செலவு அறிக்கையை கோரி அதற்கான தொகையை அடையாளப்படுத்துமாறும் கோரியுள்ளோம். படிப்படியாக உறுப்பினர்களின் பிரேரனைகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

கேள்வி: சக கௌரவ உறுப்பினர்கள் தவிசாளராக உங்களுக்கு எந்த வகையில் ஒத்துழைப்புக்களை வழங்குகிறார்கள் ?

பதில்: கிண்ணியா நகர சபை சக உறுப்பினர்களை பொறுத்தமடாடில் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். எல்லோரும் நல்லவர்கள் மோசடியற்ற ஊழலற்ற சபையை கொண்டு நெல்வதற்கே விரும்புகிறேன்.

அதே போன்று சக உறுப்பினர்களும் அப்படியானவர்களே மோசடியில் ஈடுபடாத வண்ணம் தங்களது ஒத்துழைப்புக்களை நல்கி வருகிறார்கள்.

போராட்டம் நடாத்தி ஆர்ப்பாட்டம் நடாத்தி வெற்றி காண முடியாது போராட்டமற்ற சேவையை கிண்ணியா மண்ணுக்கு செய்ய விரும்புகிறேன். தீவிரவாத போக்குடன் செயற்படும் எண்ணமும் கிடையாது.

அதை சிலர் அரசியலுக்குள் கொண்டு வந்து குழப்பத்தை ஏற்படுத்துவது விருப்பமில்லை எந்தவொரு உயர் அதிகானிகளாக

13 ஆம் பக்கம் பார்க்க....



பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு என்னதான் தீர்வு?

குறியே...?. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பிரச்சனைகளாக பொருளாதார துறைகளில் சுதந்திரமாக இயங்க முடியாதவர்களாகவும், பயம், கட்டும்பாடு, கலாசாரம் என ஆணாதிக்கத்திற்கு கட்டுப்பட்டவர்களாகவும் வாழ்கின்றார்கள். இப் பெண்களில் நூற்றுக்கு 20 சதவீதமானவர்கள் தமது உரிமை தொடர்பாக அக்கறை கொள்ளாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கான காரணம் வறுமை மட்டுமின்றி விழிப்புணர்வுடனான கல்வி அறிவு,இல்லா உரிய காலத்தில் பெறாமையே காரணம். அத்துடன் அரசியல், பொருளாதாரம், சமூகம், ஆணாதிக்கம், பெண் உரிமை தொடர்பான தெளிவின்மையும் காரணமாகும்.

இவ்வாறாக பெண்கள் எதிர்நோக்கும்

திவியா

இன்றைய நவீன உலகில் பெண்களை வெறும் சதையாக மட்டும் ஆண்கள் பார்க்கிறார்கள். அவளின் உடை, வயது, மதம், உறவுமுறை, மொழி, நிறம் என்பவற்றில் பிரச்சனை இல்லை. அவர்கள் கண்களுக்கு பெண்கள் வெறும் காமப் பொருளாக மட்டுமே தெரிகிறார்கள்.

நவீன சமுதாயத்தில் பெண்களின் சாதனைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. நாட்டின் ஜனாதிபதியாக, உலக வரலாற்றின் சாதனைப் பெண்களாக, வீராங்கனைகளாக, கவிஞர்களாக, எழுதாளர்களாக என பல உயர்ந்த நிலைகளை இன்றைய பெண்கள் எட்டியிருக்கிறார்கள். சகல துறைகளிலும் அவர்கள் தடம் பதித்தாலும் ஆண்களுக்கு சமமாக ஏற்றுக் கொள்ளப்படாத நிலை இன்றும் தொடர்கிறது. காலம் காலமாக இருந்து வந்த பெண் அடிமைத்தனம் குறைந்திருக்கின்றதே தவிர, அவை முழுமையாக சமூகத்தில் இருந்து நீங்கவில்லை. பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக பல சமூக வாதிகளும், பெண்ணியல்வாதிகளும், அரசியல் தலைவர்களும் போராடியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலையில் முழுமையான மாற்றத்தை காணமுடியவில்லை. இதற்கு பெண்கள் தொடர்பான தவறான புரிதல்கள், மூட நம்பிக்கைகள், தவரான பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள். பண்பாடுகள் என்பன காரணமாக இருக்கின்றன. எமது நாடுமட்டும் மின்றி உலகின் பல நாடுகளிலும் பெண்கள் அவலம் நிறைந்த வாழ்க்கையினை வாழ்ந்து வருகிறார்கள். பல பெண்களின் உள்ளங்களில் ஆற்ற முடியாத காயங்கள் உள்ளன. குடும்பபெண்கள் மீதும், ஏனைய பெண்கள் மீதும் பிரயோகிக்கப்படும் அனேகமான வன்முறைகள் வெளியே தெரிவதில்லை. அதாவது பெண்கள் தம் தொடர்பான பல பிரச்சனைகளை வெளியில் சொல்வதற்கு அஞ்சும் நிலையே காணப்படுகின்றது. வெளியில் சொன்னால் பிரச்சனைகள் இன்னும் அதிகரித்து விடும் என்ற அச்சம், பிறருக்கு தெரிந்தால் அவமானம் ஏற்படும் என்ற பயம், சமுதாயத்தால் ஒதுக்கப்படுவோம் என்ற உணர்வு என்பவற்றின் காரணமாக பல பிரச்சனைகளை பெண்கள் தங்குளுக்குள்ளேயே பபூட்டி வைத்துள்ளார்கள்.

இன்றைய உலகில் பெண்களின் உரிமை அவர்களது பாதுகாப்பு என்பன தொடர்பாக பலராலும் பேசப்பட்டாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் அடக்கப்படுவதும், ஆபாசப் பொருளாக பார்க்கப்படுவதும், பொது இடங்களிலும், வேலைத்தளங்களிலும் துன்புறுத்தப்படுவதும், அவமானப்படுத்தப்படுவது என்பவன நடந்த வண்ணமே உள்ளன. ஒரு பெண் எவ்வளவு தைரிய மானவள் என்றாலும் ஏதாவது ஒரு காரணத்தினால் அவன் பின்தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கிறாள். பெண்கள் பெரும்பாலும் அலுவலகங்களிலும், வீடுகளிலும் ஆண்களால் மட்டும்மின்றி பெண்களாலும் துன்பப்படுகிறார்கள். இதனால் மனமுடைந்து தமது தைரியத்தை இழக்கும் பெண்கள் பலர் தற்கொலை செய்யும் தவறான முடிவுக்கும் சென்று விடுகிறார்கள். ஆனால் இந்த இடத்தில் பெண்களுக்கு மனத்துணிவு அவசியமாகும். நடுநிசியிம் பெண்கள் சுதந்திரமாக உலாவக் கூடிய நிலை எப்போது வருகின்றதோ அப்போது தான் நாட்டிலுல்லர் பெண்களுக்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும்.

சமுதாய வளர்ச்சியில் பெண்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது. பெண்களை புறந்தள்ளி எந்தவொரு சமூகத்திலும் தேசிய முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டதாக சரித்திரம் இல்லை. இதனை உலக வரலாறுகள் நிரூபித்துள்ளன. எனினும் தந்தை வழி சமூக அமைப்புக்கள் என்று கூறப்படும் கருத்தின் அடிப்படையில் ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில் பெண்களின் கருத்துக்களை சமூகம் எந்தளவிற்கு உள்வாங்கியுள்ளது என்பதும் சமூக மட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக் குறியாகவுள்ளது.

குறிப்பாக இலங்கையில் மொத்த சனத்தொகையில் 51 சதவீதமானவர்கள் பெண்களாவர். இவர்களில் 83 சதவீதமானவர்கள் எழுதறிவு பெற்றவர்கள். பெண்களின் மொத்த சனத்தொகையில் 49 சதவீதமானவர்கள் பல்கலைக்கழக கல்வி அல்லது உயர்கல்வி அந்தஸ்தினை உடையவர்கள். பெருந்தோட்டங்களில் தற்போது தொழில் செய்பவர்களில் 54 சதவீதமானவர்கள் பெண்கள். இவ்வாறான பெண்கள் கல்வி, மற்றும் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கு அதிகமாக இருந்து அவர்கள் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையிலேயே உள்ளனராம். அண்மைக்கால அபிவிருத்தி அடைவுகளில் இருந்தும் 21 ஆம் நூற்றாண்டின் பெண் உரிமை தொடர்பான பெரும்பாலான நியதிகளில் இருந்தும் பெண்கள் புறம்தள்ளப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

பெண்களை அடக்கி ஒடுக்குவதும், அவர்களை பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்குவதும், தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். பெண்களும் தம்மை போன்ற மனிதர்கள் தான். அவர்கள் ஒரு இயந்திரப் பொருள் அல்ல என ஒவ்வொரு ஆண்களும் சிந்திக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்கும் உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். அத்துடன் பெண்களை மதிக்க தெரிந்திருக்க வேண்டும். பெண்களுக்கும் உயிர் உண்டு. உணர்வுண்டு என்பதை ஆண்கள் உணரவேண்டும். சில பெண்கள் போராட்டத்தை தினமும் எதிர்கொண்டவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டுமெனில் மனிதர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். அத்துடன் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய வகையில் பெண்களும் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இது காலத்தின் தேவையும் கூட.

பெண்கள் மீதான கொலை, கொள்ளை, குடும்ப வன்முறைகள், பாலியல் துஸ்பிரயோகங்கள், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் என்பன தொடர்ந்த வணள்ணமே உள்ளன. எமது நாட்டில் பெண்களுக்கான பாதுகாப்பு என்பது கேள்விக் பிரச்சனைகள் தொடர்பில் பெண்கள் தொடர்பில் பணியாற்றுபகின்ற மகளிர் அமைப்புக்கள் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். பெண் விடுதலை என்று சொல்லிக் கொண்டு பல பெண்கள் சார்ந்த அமைப்புகள் மௌனமாக இருப்பதையும் வேறு நிகழ்ச்சி திட்டங்களை முன்னெடுத்து செல்வதை இலக்காக கொண்டு இருப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றதே ஒழிய பெண்களின் முழுமையான சுதந்திரத்திற்காக அவ் அமைப்புக்கள் எவ்வளவு தூரம் பங்காற்றுகின்றன என்பது கேள்விக் குறியே. பெண்கள் தொடர்பான குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். அத்துடன் பெண்களின் ஆளுமையை விருத்தி செய்து பெண்களும் சாதிக்க முடியும் என்ற மனத்தைரியத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும். இதற்காக மாவட்ட மற்றும் கிராம மட்டத்தில் தொழிற்படும் பெண்கள் அமைப்புக்கள் வினைத்திறனுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பாக கிராம மட்டங்களில் பிரதேச செயலகத்தின் கீழாக கிராம மட்ட மகளிர் அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றின் ஊடாக கிராம மட்டத்தில் பெண்களுக்கான விழுப்புணர்வுகளை வழங்கி பெண்களை முன்னோக்கி நகர்த்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். குறிப்பாக வவுனியா பிரதேச செயலக பிரிவில் 42 கிராமமட்ட மகளீர் அமைப்புகள் செயற்படுகின்றன. அவற்றை இன்னும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதுடன் ஏனைய கிராமங்களிலும் அவ்வாறான அமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த முடியும்.

பெண்களின் அறிவு, துணிவு, எழுச்சி என்பவற்றின் மூலமே வலுவான சமூதாயத்தை கட்டியெழுப்ப முடியும். அதற்கு பெண்கள் மனங்களில் ஏற்படும் விழிப்புணர்வு போன்று எமது சமூகத்திலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அதுவே பெண்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழக் கூடிய சூழலை உருவாக்கும்.

இலங்கையில் தலை விரித்தாடும் ஊடக அடக்குமுறை

பு.சசிகரன்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நான்காவது தூணாக இருப்பது ஊடகம் என கூறப்பட்டாலும் எமது நாட்டில் நான்காவது தூண் என ஊடகத்தினை கூறினாலும் வெறும் பேச்சளவில் மட்டுமே இருக்கின்றது என்றால் அது மிகையாகாது .சிங்கள பேரினவாத அரசியல் வாதிகள் முதல் அரசியல் கட்சி வரைக்கும் ஊடகத்தையும் ஊடகாவியலாளர்களையும் அச்சுறுத்தியும் அடிமைப் படுத்தியும்,தாக்குதல் நடத்தும் நிலையே இன்றும் காணப்படுகின்றது.

ஒரு சம்பவம் என்றால், சம்பவ இடத்திற்குச் சென்று உண்மைகளை ஆய்ந்து அதை ஆதாரப் பூர்வமாக செய்திகளை வெளியிடுவதே ஊடகத் தர்மமாகும். உலகில் வாழும் மக்கள் அனைவரும் அன்றாட நிகழ்வுகள் முதல் அண்டம் வரையிலான தகவல்களை செய்தித்தாள், வானொலி, தொலைக் காட்சி மற்று இணையத்தளங்கள் வாயிலாகவே அறிந்துக்கொள்கின்றோம். எனவே மக்களுக்கு உண்மைகளை ஆதாரப் பூர்வமாக அறியத் தரவேண்டிய தார்மீகப் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அதன் பொறுப்பை சரிவரச் செய்வதே ஊடகத் தர்மமாகும்.

இலங்கை தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம் இவ்வாறு இருக்க, அவர்களது எதிர் நோக்கும் உண்மையானப் பிரச்சினைகளை, வாழ்வியல் நிலைப்பாட்டு உண்மைகளை வெளிக்கொணரும் ஊடகங்களின் செய்தி சேகரிப்புக்கு ஊடக முடக்கம் தொடர்கின்ற இவ்வேளையில், இலங்கை அரசுக்கு சார்பான, உண்மைகளை மறைக்கும் மறுதலிக்கும் ஊடகங்களுக்கோ முழு சுதந்திரம் கிடைத்துள்ளது. அரசக் கட்டுப் பாட்டு பகுதிகளில் முகாம்களில் வசிக்கும் தமிழ் மக்கள் அரச ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரின் ஆயுத முனையில், அப்பப்போது சில செய்திகளை தமிழ் மக்கள் வாயாலேயே சொல்ல வைத்து, அவற்றைக் காட்சிப்படுத்தி உண்மைக்கு மாறான பொய் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறான பொய் பரப்புரைகளிற்கு முன்னுரிமை கொடுக்கும் ஊடகங்களிற்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

தேசியம் நல்லிணக்கம் என்று வீர வசனங்கள் பேசுவதும் அதுவே வெறும் வெற்று பேச்சு என்ற செய்தியை உண்மையாக ஆதாரப்பூர்வமாக ஒரு ஊடகவியலாளர் உலகுக்கு எடுத்துரைக்கும் போதே அவன் குரல் வளையை நசுக்கும் நிலைப்பாடுகள் தான் பல தசாப்தங்களாக இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாக வடகிழக்கு தாயக பூமியில் இருந்து துடிப்பாக ஊடகத்துறையை நேசித்த பல ஜாம்பவான்களை நாம் இன்று இழந்துள்ளோம் அவர்களுக்கனான நீதியான விசாரணைகளோ அல்லது குற்றவாளிகளோ இன்றுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை

இதுவரை எமது தாயாக பூமியில் இருந்து சர்வதேசம் வரைக்கும் சென்று எமது தமிழர்களின் துயரங்கையும் இலங்கை கடும் போக்கு அரசாங்கத்தினதும் அரசியல் வாதிகளின் உண்மை முகங்களை கிழித்தெறிந்தவர்கள் இன்று எம்முடன் இல்லை என்பது எமது ஊடக அடக்கு முறைக்கு ஒரு கரணம் என்றுகூட சொல்லலலாம்.

இலங்கை தேசத்தில் மாறி மாறி ஆட்சி செய்த அரச தலைவர்கள் அனைவருமே ஊடகத்தை மதிக்கின்றோம் என்று வெறுமனே வாயளவில்தான் பேசி வருகின்றனர் நடை முறையில் எதிர் மாறான விடயங்களே இடம்பெற்று வருகின்றது.

அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இடம்பெறும் எந்தவொரு அபிவிருத்தி வேளைத் திட்ட்ங்கள் மக்களுக்கு பாதிப்பை ஏற்பட்டுத்தும் என்று தெரியவரும் போது அந்த செய்தியை பாமர மக்களுக்கு உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கு முற்படும் ஊடகமும் ஊடகவியாளர்களும் தாக்கப்படுகின்றான் என்பது இந்த நல்லாட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது.

உலகளவில் ஊடகவியலாளர்களை சிறையில் அதிகளவில் அடைத்த நாடுகளில் துருக்கி, சீனா மற்றும் எகிப்து முதல் மூன்று இடங்களில் இருக்கின்றன. சர்வதேச அளவில் 1990 ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை 2500 செய்தியாளர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்கிறது ஒரு தரவு.

இருந்த போதிலும் இலங்கையின் ஊடக சுதந்திரம் என்பது ஒரு கேள்வி குறியாகவே காணப்படுவதை தற்போதைய தாக்குதல் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றது. அதிலும் சற்று வித்தியாசமாக தமிழர்களை தமிழர் தாக்குவது என்பது ஒரு கசப்பான சம்பவம் என கூறலாம்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்களின் துப்பாக்கி நிழலில்தான் பல ஆண்டுகளாக தமிழ் ஊடகவியலாளர்கள் பணிபுரிந்துள்ளனர். போர்க் குற்றம் தொடர்பாக வெளிவரும் செய்திகள் அரசாங்கத்தை கோபப்படுத்தும் என்பதால் அதுபோன்ற செய்திகளை நேரடியாக வெளியிட தமிழ் பத்திரிக்கை ஆசிரியர்கள் தயங்கி வருவதாக கூறப்படுகி ன்ற சுழலும் இன்றும் கூட தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியமை ஒரு கசப்பான சம்பவமாகவே சுட்டி நிற்கின்றது

எது எவ்வாறாயினும் இலங்கை திருநாட்டில் ஜனநாயகத்தின் நான்காவது தூணாண ஊடகம் அடக்கி ஆளும் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும். காணாமல் போனவர்கள், கொலை செய்யப் பட்டவர்கள் தக்க பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் இதுவே ஒரு ஜனநாயக நாட்டின் நல்லிணக்கம் என்பதே நிதர்சனம்.

கைதிகளின்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது. அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி வவுனியா அமைப்புக்களுடன் சிங்கள இளைஞர்களும் இணைந்து அனுராதபுரத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அரசியல் விடுதலைகுறித்து தற்போதைய சூழலில் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் கைதிகள் என்று யாருமே இல்லையென அமைச்சர் கூறுகின்ற நிலையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென, தமிழ்மக்கள் பல்வேறு போராட்டங்களையும் நடாத்தி வருகின்றனர். இச்சூழலில் அரசும் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்ற அதேவேளை, அரசினால் தீட்டப்பட்ட செயற்பாடுகளையும் அரசு நடைமுறையாக்குவதற்கு முயலுவதன் ஊடாக தமக்கான இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியுமென அரசு எண்ணுவதாக பல்வேறு கருத்துக்களும் வெளியாகின்ற நிலையில், வருடாந்தம் உண்ணாவிரதங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடாத்துவதுமட்டுமே நடந்தேறி வருகின்றன. இவையின்றி இவ்வருடத்துடன் அரசியல் கைதிகள் தொடர்பிலான தீர்வு நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதே மக்களின் விருப்பாகும்.

குழந்தைப் பராயத்தை அனுபவிக்க வழியில்லாத பம்பலப்பிட்டி கரையோர குடிசைவாசிகள்

நான் (தனது ஊரைக் குறிப்பிட்டாள்) இருந்து வேலை தேடி வந்தன். சரியான வேலை கிடைக்கல.அப்பிடியும் இப்பிடியுமா சாப்பாடில்லாம தங்க இடமில்லாம கடைசியா இங்க வந்துசேந்தன். என்னை ஏண்ட நண்பிதா இங்க கூட்டியாந்தாஎன்று கூறும் அந்தப் பெண் கறுத்து மெலிந்து நோய்வாய்ப்பட்டதுபோல் காட்சியளித்தாள். அவளிடம் அடையாள அட்டையோ, வயதைக்காட்டும் பிறப்புச்சான்றிதளோ எதுவும் இல்லை. 65 வயது மதிக்கத்தக்க அவளுக்கு வயது 45 என்ற கூறினாள்.

இப்ப என்ன வேலை செய்யிறீங்க?

எம்மை வெறித்துப் பார்த்த அவள் 'உடம்பை விக்கிறன்' என்றாள் சிங்களத்தில். சரளமாக தமிழும் சிங்களமும் பேசக்கூடியவளாக இருந்தாள்.

கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் எந்த அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அந்த ஏழைகளின் குடிசைக் குடியிருப்பு (பல்பத்நிவாச) உள்ளது. அங்கு வாழ்ந்துவரும் சுமார் 25 குடும்பங்கள் (அவர்கள் கூறியது) சுமார் 30 வருடங்களாக இங்கு வாழ்வதாகக் கூறுகிறார்கள். நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வெவ்வேறு காரணங்களால் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இப்பகுதியில் சாதி, மதம், இனம், மொழி கடந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் எதையோ தொலைத்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்!?

கடல் பக்கமே அவர்களது வீட்டின் முன்பக்கம் எனது சொந்த இடம் இரத்தினபுரி காதலித்து கலியாணம் முடிச்சன். ஊட்டில இந்த கலியாணத்த எதிர்த்தாங்க. அவங்கட ஊட்டிலயும் சேக்கல நாங்க புழைப்ப தேடி கொழும்புக்கு வந்தா இருக்க இடம் கிடைக்கல ஏண்ட யாலுவ (நண்பன்) ஒருத்தன் இங்க கொண்டாந்து உட்டான். நான் கூலி வேல செஞ்சிற்று ஒரு சின்ன கடை போட்டிருக்கன். எனக்கு ஒரு மகன். அவன ஏண்ட பள்ளிவாசல் ஒதவியோட படிக்கவைக்கிறன். என் பொண்டாட்டி கடையபாக்கிறா. என்கிறார் அங்கு வசித்து வரும் நௌபர் (வயது 65)

இங்கு ஆண்களை விட பெண்களே அதிகமாகவுள்ளனர். சிறுபிள்ளைகள் 9 பேரும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் ஐவரும் உள்ளனர். இவர்களின் நாளாந்த சாராசரி வருமானம் 750 ரூபாவாக உள்ளபோதும் நாளாந்த செலவினம் தாம் உழைக்கும் வருமானத்தைப்போன்று 3 மடங்கு எனத் தெரிவிக்கின்றனர்.

எல்லா பெரு நகரங்களிலும் சேரிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்தமாதிரியான ஆபத்தான சேரிப்பகுதி தோன்றுவதற்கு இடமளிக்கக்கூடாது.

கொழும்பில் பம்பலப்பிட்டி மிகமுக்கிய நகர்ப் பகுதி. கடலின் ஓரத்தில், கடல் அலை வீட்டுக்குள் அடிக்கும் நிலையில் உள்ள இந்த வீடுகள் சில மின் குமிழால் ஒளிர்கிறது. வாகனங்களின் பற்றறிகளை வைத்து அதிலிருந்து மின்சாரம் பெற்று பயன்படுத்துகிறார்கள்.

இவர்களில் பலரும் தாம் வசிக்கும் இடங்களில் சமையல் செய்து உண்பதைவிட கடைகளிலேயே தான் அன்றாட உணவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். தமக்கு 3 வேளை உணவுக்கே படாதபாடுபடும் இவர்கள் செல்லப்பிராணிகளாக நாய்கள், பூனைகளை வளர்த்து அவற்றுக்கும் உணவளிப்பதில் பின்னிற்க்கவில்லை. மிகப்பெறுமதிவாய்ந்த நாய்கூட(ஈணிஞுணூரட்ச்ண) இங்குள்ளது. அதை அவர்கள் வளர்க்கிறார்கள் என்பதையும் நம்ப முடியவில்லை.

எனக்கு 3பிள்ளைகள் இருக்கிறார்கள் அவங்க எங்க சொந்தக்காரர் வீட்டில படிக்க விட்டிருக்கன். ஒரு பிள்ளையும் நானும் இங்க இருக்கிறம். புருசன் வேற இடத்தில வேல செய்யிறார். அப்பப்ப வருவார். என்று கூறும் சுஜித் பிரியங்கரவுக்கு வயது20. இரண்டு மொழிகளையும் பேசிக்கொண்டு மூன்ற இனங்களும் கலந்து வாழும் இந்த இடம் ஒருபக்கம் கடல் இரைச்சலையும் மறுபக்கம் புகைவண்டியின் இரைச்சலையும் சகித்துக்கொண்டு உயிர்த்திருக்கிறது.

இங்குள்ள இன்னும் சிலர், நகரில் உள்ள தொடர்மாடி குடியிருப்புகளில் சுத்தம் செய்தல், வீடுகளில் துப்புரவு பணிகளில் ஈடுபடுதல், பழைய இரும்பு மற்றும் கார்ட்பொட் மட்டைகளை சேகரித்து விற்றுப்பிழைத்தல், இன்னும் சிலர் பிச்சை எடுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்கின்றனர். 'பொதுவாக எல்லாவித தொழில்களிலும் ஈடுபடுவோம்.' என்று கூறும் இவர்களில் பெரும்பாலானோர் தமக்கு அடையாள அட்டையில்லாததால் பல தொழில்களுக்கு செல்லாமுடியாமல் இருப்பதாக கூறுகின்றனர். ஆனால் வாக்களிக்கிறார்கள். எப்படி?

இங்குள்ள பலருக்கு பிறப்புச் சான்றிதழ் கூட இல்லை. பிறந்த திகதி தெரியாதோரும் அவர்களின் தாய், தந்தையின் பெயர் தெரியாதேரும் கூட இங்கு வாழ்கின்றனர். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வந்து தற்காலிக அடையாள அட்டைகளை தயாரித்து தருகின்றனர். பின்னர் தேர்தல் நிறைவடைந்தவுடன் அதை எடுத்துச்சென்றுவிடுவார்கள். என்று கூறுகிறார் நதீகா சந்தமாலி.

தேர்தல் காலம் என்றால் எமக்கு தெரியும் பலரும் வருவார்கள் வாக்குறுதிகளை தருவார்கள் அவ்வாறே அதுவும் பறந்து போய்விடும்ஆனால் இம்முறையும் அவ்வாறான வாக்குறுதிகளை வழங்கிச் சென்றுள்ளார்கள். ஆனாலும் கடந்தவாரம் இவ்விடத்தை அகற்றப்போவதாக சிலர் தெரிவித்தனர். அப்படி நடந்தால் எமக்கு வேறு இடம் தருவர்கள் என்ற நம்பிக்கையில் இருக்கிறம். என்கிறார் காமினி (வயது 65)

இந்த நாட்டில் கடற்கரையில் இருந்து சுமார் 200மீற்ரருக்கு அப்பால் தான் கட்டடங்கள் அமைக்கவேண்டும் என்பது சட்டம். இந்தக் குடியிருப்புகளோ கடல் தண்ணியில் இருந்து இரண்டு அடி தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடற்கரை கற்பாறைகளால் பாதுகாக்கப்பட்டுள்ளதால், அதன்மேல் இவர்கள் குடியிருப்பை அமைத்துள்ளனர். ஆரம்பத்திலே இந்தமாதிரி குடியிருப்புகள் அமைப்பதை கொழும்பு நககரசபை தடுத்திருக்க வேண்டும். ஆனால் வாக்கு வேட்டைக்காக இந்த மாதிரி குடியிருப்புகளை தக்கவைத்துள்ளனரோ என்று மக்கள் ஐயுறுகின்றனர்.

குடும்பத்தால், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாக கடலின் விளிம்பில் தமது வாழ்வை அமைத்துக்கொண்டிருக்கும் இவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள்தானா? 'இருக்கு ஆனா இல்லை' என்பதைப்போல், வாக்கு வங்கிக்கு இவர்கள் நாட்டின் பிரஜைகள்தான், சாதாரணமாக இவர்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக தமது அடையாளங்களை நிறுவமுடியாதவர்களாகவுள்ளனர். குடிதண்ணீர், மின்சாரம், மலசலகூடம் என எந்த அடிப்படை வசதியுமற்ற இந்த இடத்தில் வாழும் இவர்களின் குழந்தைகள் தமது குழுந்தைப்பராயத்தை அனுபவிக்க எந்த வழியும் இங்கில்லை.

எனக்கு எழுதுறதான் விருப்பம். ஆனா பாட்டி பள்ளிக்கூடத்துக்க அனுப்பல என்கிறான் அந்த சிறுவன். கொப்பியுடன் அங்கும் இங்கும் ஓடித்திரிந்த அந்தச் சிறுவன் தன் நண்பர்களுடன் எழுத தயாராகிறான். பாட்டியிடம் இதுபற்றிக்கேட்ட போது, அவனது தாயார் எங்கோ போய்விட்டதாகவும் அவனை பாடசாலைக்கு அனுப்ப யாரும் இல்லை என்பதாலும் அனுப்பவில்லை என்றாள்.

இங்கு வாழ்பவர்கள் தமது காலம் முடிய குழந்தைகளிடம் எதைக் கையளிக்கப்போகிறார்கள்?

இங்கு எதுவும் இல்லை. சுதந்திரமாக ஒதுங்க ஒரு இடம்மட்டுமே இருக்கு என்று கூறும் இவர்களின் அந்த இடம் சமைப்பதற்கோ, சாப்பிடுவதற்கோ, தூங்குவதற்கோ, குழந்தைகள் வளர்வதற்கோ அருகதையற்றது.

இவர்களுக்கு என்னதான் வேறு இடங்களில் குடியமர வழி ஏற்படுத்திக்கொடுத்தாலும் சிறிது காலத்தின்பின் அதை விற்றுவிட்டு அல்லது கைவிட்டுவிட்டு மீண்டும் இந்த இடங்களில் குடியமர தொடங்கிவிடுகின்றனர். அவர்களின் சில்லறைத் தொழில்களுக்கு நகர் பொருத்தமானதாக இருக்கிறது. அவர்கள் தங்குவதற்கு இடம் தேவை இப்படி தங்க ஆரம்பித்துவிடுகின்றனர். பின்னர் குடும்பமும் வந்துவிடுகிறது. என்கிறார் பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரி ஒருவர்.

எல்லா பெரு நகரங்களிலும் சேரிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்தமாதிரியான ஆபத்தான சேரிப்பகுதி தோன்றுவதற்கு இடமளிக்கக்கூடாது. இது அந்த மக்களுக்கு மட்டுமல்லாமல், எதிர்கால சந்ததி, சமூகம் எல்லாவற்றுக்கும் ஆபத்தானதே.

மரியதாஸ் நியூட்டன் - தர்சன்

ஒலுவில்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

அழிந்துள்ளன என்றும், ஒலுவில் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஐ.எல். ஹைதர் அலி கூறுகின்றார். ஒலுவில் பிரதேசத்தில் கடல் அரிப்பை தடுப்பதற்காக கடலுக்குள்ளும், கரைப்பகுதியிலும் பெரிய பாறாங்கற்கள் கொட்டப்பட்டுள்ள போதிலும், கடல் அரிப்பின் தீவிரம் குறையவில்லை. ஒலுவில் மட்டுமன்றி அதற்கு பக்கத்திலுள்ள நிந்தவூர் உள்ளிட்ட வேறு சில பிரதேசங்களும், இவ்வாறான தீவிர கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தில் படகுகளை விட்டுள்ள மீனவர்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஒலுவில் துறைமுகத்தை அரசாங்கம் மூடிவிட வேண்டுமென பிரதியமைச்சர் பைசால் காசிம் கோரிக்கை விடுத்திருக்கிறார். இந்தத் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர், ஒலுவில் மற்றும் நிந்தவூர் உள்ளிட்ட பல பிரதேசங்கள், கடலரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் பைசால் காசிம் சுட்டிக்காட்டியுள்ளார். ஆக மொத்தத்தில் இலகுவான ஒருவிடயம் மீண்டும் டென்மார்க் அரசைக் கொண்டுவந்து மீண்டும் செலவு செய்து துறைமுகத்தை மூடுவதுதான் சிறந்ததா? என்பதை அரசியல்வாதிகளும், கடல்சார்ந்த நிபுணர்களும் சிந்திக்க வேண்டும். இப்போது உடன் என்ன செய்யலாம் என்பதற்குப் பதிலாக மக்களின் ஆக்ரோஷத்திற்கு தீணி போடுகின்ற சொற்களை ஒதுக்கிவிட்டு மேற்கொள்ள வேண்டியவற்றை எடுக்க வேண்டியது இப்பிராந்திய மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் இருப்பவர்களும், இவர்களுடைய தலைவர்களும் சிந்திக்க வேண்டும். ஆக இந்த துறைமுகத்தை உருவாக்கியவரே இன்றைய முஸ்லிம் காங்கிரஸின் அன்றைய உருவாக்குநர் என்பதை நினைவு கொள்ளவேண்டியும் இருக்கிறது. எப்படியோ ஒலுவில் கிராமத்தையும் அண்டியுள்ள பிரதேசங்களையும் காப்பாற்ற வேண்டியது ஆளுகின்ற அரசோடு ஒட்டியுள்ள அரசியல்வாதிகளின் பொறுப்பு.

தீர்வில்லை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

விடுகின்றது. இந்த வகையில் ஒவ்வொருவரும் நோயற்றவர்களாக சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதும் மானிட இயல்பாகும்.

இவ்வாறான நடைமுறைகள் இருக்கின்ற நிலையில் தற்கால யுகத்தில் மனிதன் தனக்குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் தமது செயற்றிட்டங்களை வகுத்துக் கொள்கின்றனர். இது ஒவ்வொரு மனிதனதும் ஆயுளுக்கு சிவப்பு எச்சரிக்கையை காட்டுகின்றது. இந்த வகையில் தற்போதைய நிலையில் குப்பைகள் மனிதனுக்கு எதிரியாக மாறிவிட்டது என்றே கூறலாம்.

இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் இன்னும் சரியான நவீன முறைகளை உள்வாங்க வில்லை. நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகரித்துச் செல்கின்றன. இதேவேளை கழிவுப் பொருட்களும் பண்மடங்காக சேர்ந்து கொண்டே செல்கின்றன. என்றாலும் குப்பைகளை அகற்றும் விடயத்தில் தாமதங்களோ அல்லது குறைகளோ ஏற்பட முடியாது. தலைநகர்ப் பகுதிகளில் ஒரு நாள் குப்பை அகற்றப்படா விட்டால் அது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்து விடுகின்றன.

நாட்டின் பல இடங்களில் குப்பை அகற்றும் விடயத்தில் அரசிற்கு மேலாக தனியார் கம்பனிகளும் மேற்படிச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளும் கழிவகற்றும் நடவடிக்கைகள் பணரீதியான வகையில் நடைபெறுவதால் அரசு சரியான வகையில் பணத்தை வழங்காவிட்டால் குறித்த நிறுவனங்கள் தமது சுத்திகரிப்புச் செயற்பாடுகளை நிறுத்தி விடுகின்றன. இவ்வாறு நிறுத்தப்படும் போது குப்பைகள் வீதிகளில் வீசப்படுமளவிற்கு வந்து விடுகின்றன. இதனால் பாரிய சுகாதாரச் சீர்கேடுகள் உருவெடுக்கும் நிலைமைகளே காணப்படுகின்றன. எனவே கொழும்புக் குப்பைகளை அகற்றும் விடயத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். மாறாக புத்தள மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுமானால் அதன் மூலம் வெற்றியை அடைந்து கொள்ள முடியாது. இந்த வகையில் பாரிய எதிர்ப்பைத் தெரிவிக்கும் இந்த மக்களின் உணர்வுகளையும், அவர்களின் கருத்துக்களையும் அரசாங்கமும், சம்பந்தப்பட்டவர்களும் உரிய முறையில் உள்வாங்கி மாற்று வழிகளை மேற்கொள்வதே பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் எனலாம்.

83 கலவரத்தில்...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்லவா? இவ்வாறு மூன்று தினங்கள் முப்பது தினங்களாக கழிந்தன. கலவரங்கள் ஓய்ந்த பின்பு அவர்கள் ஒருவித அதிர்ச்சியுடன் இருந்தனர். அதிர்ச்சியில் இருந்து அவர்களால் மீள முடியவில்லை. சில நாட்களின் பின் இந்த இடத்தைவிட்டு செல்ல அவர்கள் முடிவுசெய்தனர். எம்மிடம் இருந்து விடைபெறும் போது என்னைக் கட்டியணைத்து குமுறிக் குமுறி அழுததை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அவர்கள் சென்று விட்டனர். அதன் பின் அவர்களைப் பற்றி எந்த விபரங்களையும் அறிய முடியவில்லை. என்ன செய்வது? அவர்கள் நம்பி வாழக் கூடிய ஒரு சூழலை அன்று நாங்கள் உருவாக்கவில்லை. இப்ப நினைத்தாலும் வேதனை தான். ஏன்று விபரித்தவர் தான் கூற மறந்த விடயம் ஒன்றுள்ளதாகவும் அதையும் கேட்கும்படி சொல்லத் தொடங்கினார்.

அந்த பிள்ளைகளின் அம்மா எப்பொழுதும் சிவத்த பெரிய வட்டப் பொட்டு வைத்திருப்பார். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். கலவரங்கள் நிகழ்ந்த நேரம் தமிழ் என்று தெரியாமல் இருக்க துணியொன்றை எடுத்து அந்த பொட்டை நான் என் கைகளால் நன்கு அழித்து விட்டேன். அது முதல் அவர்கள் அங்கிருந்து எங்களைப் பிரியும் வரை அந்த பெண்ணின் நெற்றியில் சிவத்த பெரிய வட்டப் பொட்டை காணவே முடியவில்லை. அதனை இப்பொழுது நினைத்தாலும் எனக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வு ஏற்படுகின்றது. கணவனை இழந்தால் தான் பொட்டை அழிப்பார்களாம். அதுதான். பொட்டை தான் அழித்தற்கே வருத்தப்படும் தயாவதி மெனிக்கே (69) எவ்வாறான கனிவு கொண்டவராக இருந்திருப்பார்!

கொட்டாஞ்சேனையில் மாநகர சபை உறுப்பினர் ஒருவரிடம் உதவியாளராக வேலை செய்து கொண்டிருந்த குணரத்ன புஞ்சிஹேவா (74) வின் அனுபவம் இப்படி இருந்தது.

எங்கும் மக்களின் ஓலமும் அழுகையும் கேட்டது. வீதிகளில் டயர்கள் ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்தன. நானும் சிலரும் மாநகர சபையின் உறுப்பினர் வீட்டில் இருந்து குழுமி நின்று கொண்டிருந்தோம். ஒவ்வொருவரும் பெரிய தொலைக்காட்சிப் பெட்டிகளை தூக்கிக் கொண்டும், கைகளில் பல்வேறு விதமான மின்சார உபகரணங்களை தூக்கிக் கொண்டும் அந்த பாதையை கடந்து சென்று கொண்டிருந்தனர். அவ்வாறு சென்ற ஒருவரை நிறுத்திக் கேட்ட பொழுது ஆமர் வீதியில் உள்ள தமிழருக்கு சொந்தமான பிரபல மின் சாதன கடையினை அடித்து நொறுக்கி விட்டனர் என்றும், அங்குள்ள பொருட்களை எடுத்து செல்வதாகவும் தெரிவித்தனர். நாங்கள் கைகளைக் கட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்தோம். அப்போதுதான் ஒருவர் அந்த தகவலைச் சொன்னார், 'வீதியில் சென்று கொண்டிருந்த தமிழ்ப் பெண்ணைப் பிடித்து அவளின் ஆடைகளைக் களைந்து அவள் தலையைப் பிடித்து நெற்றியில் பொட்டு இருந்ததால் தலையை கல்லில் அடித்து கொண்டிருந்ததை பார்த்து ஓடிவந்துவிட்டதாக அவர் கூறினார். அப்போதுதான் நாம் பதட்டமானோம். மாநாகர சபை உறுப்பினருடன் கலந்துரையாடினோம். அவரும் தொலைபேசியில் அறிந்தவர்களுடன் கதைத்து விட்டு நிலைமை சரியில்லை என்றார்.

நேரம் செல்ல செல்ல அப்பகுதியை சேர்ந்த ஒரு கும்பல் கத்தி வாள் பொல்லுகள் சகிதம் சிங்கள மக்களைப் பாதுகாக்க புறப்பட்டது. 'கொட்டி எனவா கொட்டி எனவா என்று சத்தமிட்டுக்கொண்டு சென்றது. எங்கள் வீட்டிற்கு அருகாமையில் வந்த அவர்கள் மாநகர சபை உறுப்பினரைப் பார்த்து நாங்கள் இருக்கின்றோம் சிங்களவர்களைப் பாதுகாக்க நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றும் கூறி சென்றனர். அப்போதுதான் எமது மேல்மாடியில் வசிக்கும் தமிழர்களைக் காப்பாற்ற என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தோம். நாங்கள் ஒரு திட்டத்தினை தீட்டினோம். அப்போது இங்கிருந்து போன அந்த கும்பல் 'கொட்டியா இன்னவத' என்று கேட்டு வீடு வீடாக தமிழர்களை தேடி வருவதாக அறிந்தோம். இதனால் அவர்களை அன்று இரவு எப்படியாவது பாதுகாக்க முடிவுசெய்தோம். அந்த தொடர்மாடி பிரதான வாயிலுக்குள் அந்த கும்பல் பிரவேசிக்காதவாறு நாங்களும் அவர்களுடன் இணைந்தவர்கள் போல் பொல், கத்திகளுடன் அங்கு அமர்ந்து சீட்டுக் கட்டு விளையாடிக் கொண்டும் படுத்துக் கொண்டும் உறங்காமல் இரவுப் பொழுதைப் போக்கினோம்.

ஒருவாறு விடிந்தது. ஜுலை 27 திகதியா என்று ஞாபகம் இல்லை. ஊரடங்கு சட்டத்தினால் கலவரங்கள் அடங்கியிருந்தன. கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு ஆண்கள் பாடசாலையில் அகதி முகாம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டுள்ளதாக மாநகர சபை உறுப்பினருக்கு தகவல் வந்தது. இந்தக் குடும்பத்தின் பாதுகாப்பு கருதி அவர்களை அங்கு கொண்டு விட்டு வர ஆயத்தமானோம். கறுப்பு கண்ணாடியினால் மூடப்பட்ட ஒரு டிபென்டர் வண்டியில் ஓட்டுநரும் நானும் ஒரு பொலிஸ் அதிகாரியும் அவர்களுடன் புறப்பட்டோம் முகாமில் விட்டு விட்டு வீடு திரும்பினோம். மனம் ஆறுதலாக இருந்தது. என்று கூறும் குணரத்ன புஞ்சிஹேவா(74) இப்பொழுதும் அதனால் தான் குற்ற உணர்வின்றி வாழ்வதாக கூறுகிறார். இவ்வாறு 1983இல் தம் கண்முன்னே சாதாரண தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட் வன்முறைகளைக் கண்டு அதிலிருந்து விலகி உதவிக்கரம் நீட்டிய சாராண சிங்கள மக்கள் தமது நினைவுகள் 35 வருடங்கள் கழித்து எம்முடன் பகிர்ந்துகொண்டனர்.

நன்றி: கட்டுமரம்

ஊழலற்ற...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

இருந்தாலும் பிணக்குகளற்ற முறையில் விடயங்களை வெற்றி கொள்வதே சிறந்தது. ஊழலற்ற சபையை வழிநடாத்த விருப்பமில்லை சக உறுப்பினர்களும் அப்படியே ஆரோக்கியமான சபையை கொண்டு செல்லவே விரும்புகிறார்கள்.

கேள்வி: புதிய திட்டங்கள் தொடர்பில் ஏதாவது உண்டா?

பதில்: கிண்ணியாவில் உள்ள வடிகான்களுக்கான 350 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்க திட்ட வரைபினை சமர்ப்பித்துள்ளோம். இது தவிர கிண்ணியா புஹாரி சந்திக்கான மணிக்கூட்டு கோபுரம் அமைப்பதற்கான பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹரூப் அவர்களுடைய கட்சி சார்பில் நான்கு மில்லியன் ரூபா செலவில் செய்யவுள்ளார்கள். மேம்பாலங்கள் நான்கு கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி, மீன் சந்தை, முஸ்லீம் பெண்கள் மகளிர் கல்லூரி உள்ளிட்ட நான்கு மேம்பாலங்கள் அமையப் பெறவுள்ளன . கட்சி வேறுபாடின்றி அனைவருக்கும் அபிவிருத்தி தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவேன். தடையாக இருக்க ஒரு போதும் துனை போக மாட்டேன். உரிமை கோரல்கள் என்பதும் எனக்கு கணக்கே இல்லை.

மனம் மாறியுள்ளாரா சசிகலா?

அ.தி.மு.க-வின் பொதுச் செயலாளர் பதவிக்குத் தேர்தல் நடத்த உத்தரவிடு மாறு தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார் சசிகலா. '18 மாதங் களுக்குப் பிறகு சசிகலா நிலைப்பாட்டில் மாற்றம் வந்திருக்கிறது. எதை அவர் நிரா கரித்தாரோ, அதையே மீண்டும் கையில் எடுக்க வேண்டிய சூழல் அவருக்கு வந்திருக்கிறது' என்கின்றனர் அரசியல் வட்டாரத்தில்.

பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சி றையிலிருந்து தேர்தல் ஆணையத்துக்கு, வழக்கறிஞர் மூலமாகக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார் சசிகலா. அந்தக் கடி தத்தில், 'அ.தி.மு.க-வின் கட்சி விதிகளில் செய்த மாற்றங்களைத் தேர்தல் ஆணை யம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அ.தி.மு.க பொதுச் செயலாளர் பதவிக்கு அக்கட் சியின் அடிப்படை உறுப்பினர் மூலம் உடனடியாகத் தேர்தல் நடத்த ஆணையம் உத்தரவிட வேண்டும்' எனக் குறிப் பிட்டிருந்தார். அவரது இந்தக் கடிதம் அ.தி.மு.க நிர்வாகிகள் மத்தியில் விவா தப் பொருளாகியுள்ளது. இப்படியொரு கடிதம் வெளியாவதற்கு மூல காரணமாக இருந்தவர் அ.தி.மு.க-வின் முன்னாள் எம்.பி கே.சி.பழனிசாமி. அ.தி.மு.க-வின் கட்சி விதிகளில் செய்த திருத்தங்களை ரத்து செய்யக்கோரி டெல்லி உயர் நீதிமன் றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், வழக்கு தொடர்பாக மனுதாரர் உட்பட அனைவரும் தங்களது கருத்துகளைத் தலைமை தேர்தல் ஆணையத்தில் எழுத் துபூர்வ பிரமாண பத்திரத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். அனைத்துப் பிரமாண பத்திரங்களையும் பரிசீலனை செய்து அடுத்த 4 வாரத்தில் வழக்கின் இறுதி உத்தரவை தலைமைத் தேர்தல் ஆணை யம் பிறப்பிக்க வேண்டும் எனக் கடந்த மாதம் 13-ம் தேதி உத்தரவிட்டிருந்தது. அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் எடப்பாடி பழனிசாமி, பன்னீர்செல்வம் சார்பாக, தேர்தல் ஆணையத்தில் பதில் மனுவைத் தாக்கல் செய்தார் சி.வி.சண் முகம். இந்நிலையில், பொதுச் செய லாளர் பதவிக்குத் தேர்தல் என்பதை வலியுறுத்தி, சசிகலா அனுப்பியிருக்கும் கடிதம் விவாதமாகியிருக்கிறது.

கே.சி.பழனிசாமியிடம் பேசினோம். இன்று சசிகலா எடுத்துள்ள நிலைப்பாடு எனக்குக் கிடைத்த முதல் வெற்றி. சசி கலா எடுத்துள்ள பன்னீர்செல்வம்நிலைப் பாட்டை வரவேற்கிறேன். அடிப்படை உறுப்பினர்களால் பொதுச் செயலாளர் தேர்வு செய்யப்பட வேண்டும்; சசிகலா தேர்வு செய்யப்பட்ட முறை தவறு எனத் தேர்தல் ஆணையத்தில் முதல்முதலாக மனு கொடுத்திருந்தேன். அ.தி.மு.க-வில் அதிக அதிகாரம் மிக்க பதவி என்பது பொதுச் செயலாளர் பதவிதான். இந்த அதிகாரத்தைக் கொடுத்த எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் தீர்க்கதரிசிகள். அவர்கள் இருவருக்கும் தங்களைச் சுற்றியிருக்கிற நிர்வாகிகளைவிட, அடிப்படை உறுப் பினர்கள் மீதுதான் அதிக நம்பிக்கை இருந்தது.

காரணம், கட்சியின் நிர்வாகிகள் தங்கள் சுயநலனுக்காக மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்துவிடுவார்கள் என்பதுதான். தொண்டர்கள்தான் இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றுவார்கள் என நம்பினார்கள். அதனால்தான் பொதுச் செயலாளரைத் தேர்வு செய்யும் உரிமை யைத் தொண்டர்கள் கைகளில் கொடுத் தார்கள். அப்படிப்பட்ட உரிமை, முதலில் சசிகலாவால் மறுக்கப்பட்டது. அதை எதிர்த்து நான் போராடினேன். இப்போது ஓ.பி.எஸ்ஸும் ஈ.பி.எஸ்ஸும் அந்த உரிமையைப் பறித்துவிட்டார்கள். இந்த விவகாரத்தில் சசிகலாவாவது மறுப்பு தெரிவித்தார். இவர்கள் ஒட்டுமொத்த மாக அந்த உரிமையையே பறித்துவிட் டனர். இதை எதிர்த்து நான் தொடர்ந்த வழக்கில், தேர்தல் ஆணையம் நான்கு வாரத்துக்குள் உத்தரவு போட வேண் டும்; முதல் நான்கு வாரத்தில் ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ் பதில் அளிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தனர் என்றவர்,

தொண்டர்களின் உரிமைகள் நிலை நாட்டப் பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. சசிகலா மனு கொடுத்ததில் உண்மையில் மகிழ்ச்சி. 18 மாதம் கழித்து அவர் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறார். இதே நிலைப்பாட்டை எடப்பாடியும் பன் னீர்செல்வமும் எடுக்க வேண்டும். அதற் கான தூண்டுதலை அம்மாவின் ஆன்மா அவர்களுக்கு வழங்க வேண்டும். பதவி இருக்கும் வரையில்தான் அவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு இருக்கும். அடிப்ப டைத் தொண்டர்கள்தான் வலிமையான வர்கள். எம்.ஜி.ஆர் கொடுத்த வலிமை என்ன என்பதைத் தொண்டர்கள் புரிந்து கொண்டாலே போதும். தவறு செய்வது இயற்கை. அதைத் திருத்திக்கொள்வது மனித மாண்பு. அந்த வகையில் சசிகலா கடிதத்தை வரவேற்கிறேன். பொதுச் செய லாளர் பதவிக்குத் தேர்தல் நடந்தால் நிச்ச யமாக நான் போட்டியிடுவேன். இவர்கள் மறுபடியும் சசிகலா காலில் விழுந்து ஏற் றுக்கொள்வார்கள். அதை நான் எதிர்த்து நிற்பேன். தேர்தலில் இறுதிப் போட்டி எனக்கும் சசிகலாவுக்கும் இடையில்தான் நடக்கும்.

தேர்தல் ஆணையம் கொடுத்த காலக் கெடு வரும் நவம்பர் 9-ம் தேதிக்குள் முடிகிறது. அதற்குள் தேர்தல் ஆணையம் பதில் சொல்ல வேண்டும். 'இவர்கள் என்ன பதில் கொடுத்திருக்கிறார்களோ அதன் நகலை எனக்கும் தர வேண்டும்' எனத் தேர்தல் ஆணையத்தில் கேட் டிருக்கிறேன். அதன் அடிப்படையில் என்னுடைய மறுப்பைத் தெரிவிப்பேன். எடப்பாடி பழனிசாமி என்ன நினைக்கி றார் என்றார், தனக்கு மோடி துணையாக இருக்கிறார்; மத்திய அரசு துணையாக இருக்கிறது என நம்புகிறார். ஒன்றரைக் கோடித் தொண்டர்கள் நினைத்தால் இங்கே எதுவும் நிரந்தரமில்லை என்பதை இவர்கள் விரைவில் உணர்வார்கள் என் றார் பொறுமையாக.

தொடரும் அழகிரியின் போராட்டம்!

தமிழக இடைத்தேர்தல் தள்ளிப் போய்விட்டதால் மிகுந்த அப்செட் டில் இருக்கிறார் அழகிரி.'கருணா நிதிக்குத் தொடர்ந்து புகழ் அஞ்சலி கூட்டங்களைத் தொடர்ந்து நடத்த இருக்கிறார் அழகிரி. அவரைக் கட்சி க்குள் சேர்க்க வலியுறுத்தி கையெ ழுத்து இயக்கம் நடந்தது. இதுதொ டர்பாக அறிவாலயத்துக்கு நேரில் வர இருக்கிறோம்' என்கின்றனர் அவரது ஆதரவாளர்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் பெய்யக் கூடிய பருவமழையைக் காரணம் காட்டி, தமிழகத்தில் நடக்க இருந்த இடைத்தேர்தலை ஒத்தி வைத்துவிட்டது தேர்தல் ஆணை யம். இந்த அறிவிப்புக்கு முன்னதாக, திருவாரூரில் உள்ள கருணாநிதியின் தாயார் அஞ்சுகத்தம்மாளின் நினை விடத்துக்குச் சென்று அதிரடி காட்டி னார் அழகிரி. 'கருணாநிதிக்கென்று தனிப்பட்ட செல்வாக்கு இருப்ப தால், நீங்கள் நிச்சயம் வெற்றி பெறு வீர்கள்' என அழகிரி தரப்புக்கு அர சியல் ஆய்வாளர் ஒருவர் எடுத்துக் கூறியிருந்தார். இதையடுத்து, தி.மு.க தலைவர் ஸ்டாலினுக்கு சில விஷயங் களை உணர்த்துவதற்காக திருவாரூ ருக்குச் சென்றார் அழகிரி. இதனைத் தொடர்ந்து இசை வேளாளர் சமூகப் பிரதிநிதிகளை அழைத்து, கருணாநி திக்குப் புகழ் அஞ்சலி கூட்டம் ஒன் றையும் நடத்தினார். இந்நிலையில், வரும் 13-ம் தேதி திண்டுக்கல்லில் கருணாநிதிக்குப் புகழ் அஞ்சலி கூட் டம் ஒன்றை நடத்த இருக்கிறார் அழ கிரி.

அழகிரி ஆதரவாளர் ஒருவரிடம் பேசினோம். 'திண்டுக்கல் நாயுடு மகா லில் கருணாநிதிக்குப் புகழ் அஞ்சலி கூட்டம் நடக்க இருக்கிறது. இடைத் தேர்தல் தள்ளிப் போனதில் கொஞ் சம் அப்செட்டில்தான் இருக்கிறார். தி.மு.க போட்ட வழக்கும் ஆளும் கட்சியின் கடிதமும்தான் தேர்தலை நிறுத்துவதற்குக் காரணமாக அமைந் துவிட்டது. 'இடைத்தேர்தலை நடத்த மாட்டார்கள்' என முன்கூட்டியே எங் களிடம் கூறினார் அழகிரி. இதுதொ டர்பாக அவர் பேசும்போது, 'இப் போது தேர்தலை நடத்த மாட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் தான் நடத்துவார்கள்' என உறுதியாகக் கூறினார். அவருக்கு யார் தகவல் செ ன்னார்கள் என்று தெரியவில்லை. தி.மு.க தலைமையிடம் இருந்து இது வரை எந்தப் பதிலும் வராததால், கருணாநிதிக்குத் தொடர்ந்து புகழ் அஞ்சலிக் கூட்டங்களை நடத்த இருக் கிறார்.

இதற்கிடையில், 'கட்சிக்குள் அழகிரியைச் சேர்க்க வேண்டும்' எனக் கூறி கையெழுத்து இயக்கம் நடத்தினோம். தி.மு.கவில் அடிப் படை உறுப்பினராக இருக்கக் கூடிய வர்களிடம் மட்டுமே கையெழுத்து பெறப்பட்டது. ஒரு லட்சம் கையெ ழுத்துகளை வாங்க வேண்டும் எனத் திட்டமிட்டோம். இதுவரையில் பத்தாயிரம் பேர் கையெழுத்து போட் டிருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக அவர்களின் உறுப்பினர் அடையாள அட்டையையும் இணைத்திருக்கி றோம். எங்களில் பலரைக் கட்சியில் இருந்து நீக்கிவிட்டார்கள். எனவே, கட்சியில் இருந்து நீக்கப்படாத உறுப் பினர்களைத் திரட்டிக் கொண்டு போய் அறிவாலயம் செல்ல இருக் கிறோம். வரும் 20-ம் தேதிக்குள் கையெழுத்து இயக்கம் தொடர்பான ஆவணங்களைக் கொடுக்க இருக்கி றோம். அவர்கள் வாங்குகிறார்களோ இல்லையோ, 'தொண்டர்களிடம் நம்முடைய செயல்பாடுகளைக் காட் டுவது முக்கியம்' என நினைக்கிறார் அழகிரி. கட்சிக்குள் சேர்க்கும் வரை யில் அழகிரியின் போராட்டம் தொட ரும்' என்றார் விரிவாக.

அழகிரியின் நடவடிக்கைகள் குறித்துப் பேசும் தி.மு.க முன்னணி நிர்வாகி ஒருவர், 'அரசியலில் எந்த நிகழ்வும் நடக்காமல் இருப்பதால், அழகிரி கொதிப்பில் இருப்பது இயல் பானதுதான். மெரினா பேரணியின் போது, தி.மு.கவின் முக்கிய மாவட்ட நிர்வாகிகளை நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசினார். அந்த நேரத்தில் அவரது பேச்சுக்கு யாரும் முக்கியத் துவம் தரவில்லை. ஏழு ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாவிட்டாலும், கட்சி நிர்வாகிகள் பலரும், அழகிரிக்கு ஆத ரவு கொடுப்பதில் எச்சரிக்கையாக இருந்தனர். எதாவது சம்பவம் நடந் தால்தான் அழகிரியால் ஆக்டிவ்வாக இருக்க முடியும். திருவாரூரில் இசை வேளாளர் சங்க நிர்வாகிகள் நடத் திய கூட்டத்திலும் மதுரையைச் சே ர்ந்த சிலர்தான் கலந்து கொண்டனர். இரண்டே இரண்டு ஃபிளக்ஸ் பேனர் கள்தான் வைக்கப்பட்டிருந்தன. திரு வாரூர் தொகுதியில் இருந்தே பொது மக்கள் யாரும் பெரிதாக கலந்து கொள்ளவில்லை. மெரினாவிலும் அவர் எதிர்பார்த்த கூட்டம் கூடவில் லை. கட்சிக்குள் எப்படியாவது சேர வேண்டும் எனத் தீவிரம் காட்டி வரு கிறார். அவரது முயற்சியைப் பற்றி தி.மு.க தலைமை பொருட்படுத்த வில்லை' என்றார்.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுவிக்கலாமா? விடுவிக்கக்கூடாதா?

தேசப் பாதுகாப்பு, தேச இறை யாண்மை தொடர்புள்ளவற்றில் விட்டுக் கொடுக்க முடியாது. சிறைக் கைதிகளை மன்னிக்க அரசியல் சட்டத்தில் செய்யப் பட்டுள்ள பிரிவு - தேசப் பாதுகாப்பு, மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றைப் பாதுகாக்க அல்லாமல் வேறு எதற்காக வும் அல்ல. இந்த வழக்கில் தண்டனை பெற்றுள்ளவர்கள் செய்த சதி, நிகழ்த்திய குற்றம் ஆகியவற்றைப் பார்க்கும்போது, இவர்களால் ஆபத்து நேரிடக்கூடும் என் பதால் மன்னிப்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. தண்ட னையை மேலும் குறைக்க மறுத்ததன் காரணம் அனைவருக்கும் தெரியும்.

மன்னிப்புக்கான வாய்ப்புகள்

மன்னிப்பு என்பது கைதிகளின் சட்ட பூர்வ உரிமையல்ல. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், கைதிகளின் குடும்பப் பின்னணியைப் பொருத்து, விருப்ப அதிகாரப்படி மன்னிப்பு வழங்கலாம். கைதியை எந்த அளவுக்கு அவருடைய குடும்பம் சார்ந்திருக்கிறது அல்லது மிக வும் நெருக்கடியான சந்தர்ப்பம் அல்லது மிகக் கடுமையான நோய் ஆகிய கார ணங்களால் கைதிகள் விடுதலை செய்யப் பட சட்டம் இடம்தருகிறது.

இவர்கள் அரசியல் கைதிகள். முன் னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைத் திட் டமிட்டுப் படுகொலை செய்த சதியில் ஈடுபட்டவர்களை, விருப்ப அதிகாரத் தைப் பயன்படுத்தி மன்னித்து விடுதலை செய்ய நியாயமே இல்லை.

இந்த வழக்கில் முதலில் அளிக்கப்பட்டது மரண தண் டனை. சட்டப் புத்தகங்களில் இருந்தாலும்கூட, இந்தியாவில் மிக அபூர்வமாகத்தான் மரண தண்டனை வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்பட்டுவிட்டால் அது கண்டிப்புடன் பின்பற்றப் ப டுகிறது. மரண தண்டனைக்குப் பின்னால் உள்ள கருத்து தெளி வாக இருக்கிறது. இந்த வழக் கில், முதலில் மரண தண்டனை பெற்றவர்களுக்கு அது ஆயுள் தண்டனை யாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதுவே கருணை காட்டிய செயல்தான்.

எனவே, என்னுடைய கருத்துப்படி, விருப்ப அதிகாரத்தை ஒரு முறையல்ல, இருமுறை பயன்படுத்தியிருக்கிறார்கள். முதல்முறை, மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார்கள். இரண்டாவது முறை, ஆயுள் தண்டனை யையும் குறைக்க வேண்டும் என்றபோது எல்லாவற்றையும் பரிசீலித்துவிட்டு கோரிக்கையை நிராகரித்துவிட்டார்கள். மீண்டும் மீண்டும் இந்த வழக்கில் தண் டனையைக் குறைக்கக் கோருவது, நமது நீதிமன்ற நடைமுறைக்குச் செய்யும் மரியாதையாக இருக்காது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை

பாதுகாப்பு என்பது உள்நாட்டுப் பிரச்சினையல்ல, உலகப் பிரச்சினை. சதி செய்து, ஒருங்கிணைந்து செயல்பட்டு, ஒரு பிரமுகருக்கு அளிக்கப்படும் பாது காப்பு வளையத்தை உடைத்துச் சென்று படுகொலை நிகழ்த்துவது மிகவும் கடு மையான செயல். பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு இரண்டு நோக்கங் கள் உண்டு. முதலாவது, எதிர்காலத்தில் யாரும் இப்படிச் செய்யாமல் தடுப்பது, இரண்டாவது, பயங்கரவாதச் செயல்க ளைத் தடுப்பது.

உலகின் ஓர் அங்கம் என்ற வகை யில் பயங்கரவாதிகளைக் கைதுசெய்து, வழக்கு நடத்தித் தண்டிப்பது நம்முடைய உரிமை மட்டுமல்ல, கடமையும்கூட. பிற சட்டங்களைவிட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் கடுமையாக இருப்பதற்குக் காரணம், நாட்டைச் சீர்கு லைக்கும் செயல்களைத் தடுக்க வேண் டும் என்பதற்காகத்தான். மன்னிக்கும் அதிகாரத்தை, தேச நலனைக் கருத்தில் கொண்டு மட்டுமே பயன்படுத்த முடி யும். எனவே, இந்த விஷயத்தில் இனி பரிசீலனைக்கு இடமே இல்லை.

- பிங்கி ஆனந்த், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல்

விடுவிக்க வேண்டும்

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட எழுவரையும் விடு தலை செய்து உத்தரவிடுவதை மேலும் தாமதப்படுத்துவது 'சட்டத்தின் முன் னால் சமமாக நடத்தப்படுவதோ அல்லது சட்டப் பாதுகாப்போ எந்தவொரு நபருக் கும் மறுக்கப்படக் கூடாது' என்று வலி யுறுத்தும் அரசியல் சட்டத்தின் 14-வது கூற்றை மீறுவதாகும்.

திருப்பங்கள் நிறைந்த வழக்கு

இந்தச் சிறைவாசிகளின் வழக்கு ஏகப்பட்ட திருப்பங்களைக் கொண் டது. அவர்களது கருணை மனுக்கள் 2000 தொடங்கி 2011 வரைக்கும் 11 ஆண்டுகள் எந்த முடிவுகளும் எடுக்கப்ப டாமலேயே உயர் அதிகார மையங்களில் கிடப்பில் போடப்பட்டிருந்தன. 2011 ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாடு சட்ட மன் றமே அவர்களது மரண தண்டனையை ரத்துசெய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

இந்திய ஒன்றியம் எதிர் வி.ஸ்ரீஹரன் (2005) வழக்கில், உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை ரத்துசெய்து எஞ்சிய காலத்துக்குக் கடும் காவல் தண்டனை விதித்தது. இது, குற்றவியல் நடைமு றைச் சட்டப் பிரிவு 435-ன் கீழ் மேலும் தண்டனையைக் குறைப்பதற்கான ஒரு தெளிவற்ற நம்பிக்கையை அளித்தது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தண்டனைக் காலத்தை மேலும் குறைப் பதில் மாநில அரசுக்கு இருக்கும் அதி காரத்தையும் அதே வழக்கில் அரசியல் சாசன அமர்வு உறுதிசெய்தது. இருந் தாலும், கூறு 161-ன் அரசியல் சட்ட அதிகாரத்தின் வரம்பை இரண்டு தீர்ப் புகளுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வில்லை. மாநிலத்தின் நிர்வாக அதி காரத்தைத் தன் கையில் வைத்திருக்கும் ஆளுநர், எழுவரையும் விடுவிக்கும்படி ஏற்கெனவே எடுக்கப்பட்ட அமைச்ச ரவையின் முடிவுக்கு இசைந்த வகை யிலேயே முடிவெடுக்க வேண்டும். அதிகாரப் பிரிவினையின்படி, அரசியல் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் மாநிலப் பட்டியலில் முதலாவதாக 'பொது அமைதி' இடம்பெற்றுள்ளது. எனவே, இந்த விஷயமானது மாநில அரசின் பிரத்யேகமான அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

வி.ஸ்ரீஹரன் எதிர் இந்திய ஒன் றியம்(2014) வழக்கின் தண்டனைக் குறைப்புக்குப் பிறகு தமிழ்நாடு சி றைச்சாலைகள் விதிகளின் கீழ் இந்த விஷயம் தானாகவே வந்துவிடுகிறது. சி றைச்சாலையின் ஆலோசனைக் குழு, ஆயுள் தண்டனையை இருபதாண்டு கால சிறைத் தண்டனையாகக் குறைத்து முன்கூட்டியே விடுதலை செய்யவோ அல்லது பரோல் கொடுக்கவோ செய்ய லாம் என்கிறது சிறைச்சாலை விதி 341. இது இந்தச் சிறைவாசிகளின் விஷ யத்திலும் பொருந்தும்.

சிறைவாசிகளின் சீர்திருத்தம்

நம்முடைய சிறைவாசிகள், அவர் கள் இழைத்த அனைத்துக் குற்றங்க ளுக்காகவும் சீர்திருத்தக் கொள்கையின் படியே நடத்தப்பட வேண்டும். 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த வர்களை நமது சமூகத்தில் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டிய வர்களாகவே நாம் கருத வேண்டும். அதில் ஏதேனும் தவறுகள் நேர்கிறது என்றால், அது தண்டனை அமைப்பின் பிரச்சினைகளை வெளிப்படுத்துகிறதே யொழிய, சிறைவாசிகளின் பிரச்சினை களை அல்ல. ஒவ்வொரு ஞானிக்கும் ஒரு இறந்த காலம் உண்டு. ஒவ்வொரு பாவிக்கும் ஒரு எதிர்காலம் உண்டு என்று ஆஸ்கார் ஒயில்டு கூறியதைத் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டிய வி.ஆர். கிருஷ்ணய்யர், சட்டத்தின் ஆட்சி என் பது ஞானிகள், பாவிகள் இருவருக்கு மானது என்று வலியுறுத்தினார். நமது ஆட்சியாளர்களோ இந்த வழக்கை முன்னகர்த்துவதைப் பற்றி தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் கள் மேலும் முன்னகரவில்லை என்றே தோன்றுகிறது.

- மனுராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர்

ஆளுநரை காப்பாற்றத் துடிக்கும் மத்திய -மாநில அரசுகள்

நிர்மலாதேவி விவகாரம்

ஜாமீன் கிடைக்காமல் சிறையில் அடைக்கப் பட்ட நிர்மலாதேவி, கல்லூரி மாணவிகளை பாலியல் நெருக்கடியில் தள்ளியது பற்றிய திடுக்கிடும் உண்மைகள் ஒவ்வொன்றாக தற்பொழுது வெளியாகத் தொடங்கியுள்ளது.

காவல்துறையில் நேர்மையாகப் பணியாற்றும் அதிகாரிகள், 'சுவாதி கொலையில் சிக்கிய ராம்குமாரை சிறையிலேயே கதை முடித்ததுபோல, நிர்மலா தேவிக் கும் குறிவைக்கப்பட்டது' என அதிர்ச்சித் தகவலை வெளியிடுகிறார்கள்.

நிர்மலாவை ஏன் கொலை செய்ய வேண்டும்? யார், அதன் பின்னணி என விரிவாகக் கேட்டோம்.

'ஏற்கனவே நிர்மலாவைப் போலவே மிக பிரபலமான செக்ஸ் வழக்கில் சிக்கிய டாக்டர் பிரகாஷை ஜாமீனில் வெளியே வரவிடாமல் சிறைக்குள்ளேயே அவரது வழக்கை நடத்தி தண்டனையும் பெற்றுத் தந்தார்கள். அதுபோலவே நிர்மலா தேவி வழக்கையும் கொண்டு செல்கி றார்கள். அது முடியாவிட்டால் சிறைக்குள்ளே அவரை கொலை செய்யவும் திட்டமிட்டிருந்தார்கள். இது நிர்மலா தேவிக்கே தெரியும் என்பதால்தான், 'என்னைக் கொல்ல சதி நடக்கிறது' என நீதிமன்றத்தில் கதறியிருக்கிறார் நிர்மலா தேவி' என விரிவாகவே சொன்னார்கள்.

'இந்த வழக்கை நிர்மலாதேவி, முருகன், கருப்பசாமி ஆகிய மூவருடன் முடிக்க, அரசு நினைக்கிறது. இதனை சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்' என சி.பி.எம். மாநிலக்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இதன் பின்னணி குறித்து அவர்களிடம் கேட்டோம். 'தமிழக கவர்னர் மீது நேரடியாக குற்றச்சாட்டு எழுப்பப்பட்ட இந்த வழக்கின் புலனாய்வு நிர்மலா தேவி, முருகன், கருப்பசாமி ஆகியோரைத் தாண்டிச் செல்லவில்லை. இதில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனிதவள மேம்பாட்டுத் துறை அதிகாரி கலைச்செல்வன் மிக முக்கிய பங்கு வகித்துள்ளார். மாணவிகளை தவறாக வழிநடத்திய தில் இவருக்கும் பங்கு இருக்கிறது. இவர்தான் நிர்மலாதேவியை கல்லூரி மட்டத்திலிருந்து பல்கலைக் கழக வட்டாரத்திற்கு கொண்டு வந்தவர். இவர் கடைசிவரை குற்றவாளியாக்கப்படவில்லை என முருகனின் மனைவி சுஜா, பத்திரிகை யாளர்களிடம் பகிரங்கமாகவே குற்றம்சாட்டுகிறார்.

அதுபோலவே மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் சின்னையா, துணை வேந்தர் செல்லத்துரை, கவர்னரின் செயலாளர் ராஜகோபால் ஆகியோரும் குற்றவாளிகள். இவர்கள் தப்பிக்க விடப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக கவர்னர் பன்வாரிலால் புரோகித்தைப்பற்றி காவல்துறையின் விசாரணை ஆவணங்களில் ஒரு வார்த்தை கூட இல்லை. எனவேதான் நாங்கள் சி.பி.ஐ. விசாரணை கோருகிறோம்' என தெளிவாக விளக்குகிறார்கள் தோழர்கள்.

ஏன் மூன்றுபேருடன் வழக்கு முடிந்தது என்பதற்கு சி.பி.சி.ஐ.டி. எஸ்.பி.யும், நேர்மைக்குப் புகழ் பெற்ற முன்னாள் அமைச்சர் கக்கனின் பேத்தியுமான ராஜேஸ்வரியிடம், நிர்மலாதேவி பதிவு செய்த வாக்குமூலமே சாட்சியமாகிறது.

'நான் நிர்மலா தேவி. எனக்கு வாழ்க்கையில் உயரவேண்டுமென லட்சியம் இருந்தது. கணவனைப் பிரிந்து வாழ்ந்த என்னை வளர்த்து பெரிய ஆளாக்குகிறேன் என கருப்பசாமியும் முருகனும் என்னைப் பயன்படுத்திக்கொண்டார்கள். கல்லூரி நிர்வாகமும் அதன் செயலாளர்களாக இருந்தவர்களும் கல்லூரியின் தேவைக்காக என்னை பல இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வேலை செய்யும் கலைச்செல்வனின் அறி முகத்திற்குப் பிறகுதான் நான் கல்லூரிப் பெண்களை தொடர்பு கொள்ள ஆரம்பித்தேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழக பதிவாள ரான சின்னையாவை, கலைச்செல் வன் எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் இருவருக்கும் நானும் மாணவிகளும் பயன்பட்டோம். துணைவேந்தர் செல்லத்துரை என்னையும் மாணவிகளையும் பயன்படுத்திக்கொண்டார். அதன் பிறகு 'எனக்கு துணை வேந்தர் பதவி வாங்கித் தருகி றேன், அதற்கான எல்லா தகுதி யும் உனக்கு இருக்கிறது' என கலைச்செல்வன் ஆசை காட்டினார். அந்த ஆசையை நிறை வேற்ற கல்வித்துறை அமைச்சர் களாக இருந்தவர்களிடம் என்னை அனுப்பி அறிமுகப் படுத்தினார்கள். பிறகு கல்லூரி மாணவிகளை அறிமுகப் படுத்தச் சொன்னார்கள். அழகாக உள்ள மாணவி களைத் தேடி அனுப்பி வைப்பேன். அவர்களின் பொருளாதாரச் சூழலை வைத்து மடக்குவேன். உயர் கல்வி அமைச்சராக இருந்த பழனியப்பனுக்கு என்னை மிகவும் பிடிக்கும். எடப்பாடி ஆட்சி அமைந்ததும், கவர்னராக பன்வாரிலால் புரோகித் வந்தார். அவர் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு வந்தபோது அவருக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கச் சொல்லி அவரது தனிப் பட்ட செயலாளரான ஐ.ஏ.எஸ். அதிகாரி ராஜகோபாலை சந்திக்கச் சொன்னார்கள். ராஜகோபாலுக்கு என்னையும் பிடித்து, என்னுடன் வந்த கல்லூரி மாணவிகளையும் பிடித்துவிட்டது. நான் அடிக்கடி சென்னைக்கு கல்லூரி மாணவிகளோடு பயணமானேன். கவர்னரின் ராஜ்பவன் மாளிகையில் கவர்னரின் செயலாளர் ராஜ கோபாலை சந்தித்துப் பேசிவிட்டு வருவேன்.

ராஜகோபாலை சந்திக்க நான் கவர்னர் மாளிகைக்குச் சென்றபோது பன்வாரிலால் புரோகித் என்னைப் பார்த்தார். 'யார் இந்தப் பெண், யார் இந்த மாணவிகள்' என கேட்டார் கவர்னர். கல்லூரி மாணவிகளிடம் மிகவும் கேஷுவலாகப் பேசிய கவர்னர், என்னிடம் மிகவும் அன்பாகப் பேசினார். என்னைப்பற்றி ராஜகோபாலிடம் விசாரித்தார். 'கவர்னர் நினைத்தால் என்னை துணைவேந்தராக நியமித்துவிட முடியும். அதற்கு நான் உதவி செய்கிறேன்' என சொன்னார் ராஜகோபால்.

கவர்னர் மதுரைக்குப் பக்கத்தில் நிகழ்ச்சிக்கு வந்தால், கவர்னர் மாளிகையிலிருந்து எனக்கு அழைப்பு வரும். நானும் புதிய மாணவிகளுடன் ராஜகோபாலை சந்திப்பேன். இப்படி முருகன், கருப்பசாமி, கலைச்செல்வன், சின்னையா, செல்லத்துரை, ராஜ காபால் வரை நான் நூற்றி முப்பது கல்லூரி மாணவிகளை அறிமுகம் செய்திருக்கிறேன். அதிலும் ராஜகோபாலுக்கு புதிய மாணவிகளின் அறிமுகம் தேவைப்படும். அதனால் புதிய கல்லூரி மாணவிகளை வாட்ஸ்ஆப் மூலமாக படம் பிடித்து அவர்களுக்கு புகைப்படங்களை அனுப்புவேன். அவர்கள் அறிமுகம் செய்ய விரும்பும் பெண்களை எப்பாடுபட்டாவது சமாதானப்படுத்தி, அறிமுகம் செய்துவைப்பேன்.

துணைவேந்தருக்கான தேர்வு கமிட்டி மூலமாக என்னை தேர்வு செய்ய, கவர்னரை சந்திக்க ராஜகோபால் ஏற்பாடு செய்தார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் கவர்னருடன் மிக நெருக்கமாகப் பேசினேன். அவருக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது. கல்லூரி மாணவிகள் உட்பட வேறு யாரையும் கவர்னர் பார்க்க விரும்பவில்லை. அதன்பிறகு கவர்னரை நான்கு முறை சந்தித்துப் பேசினேன். நான் கவர்னரை சந்திப்பது மதுரை மாவட்ட அமைச்சர்கள் உட்பட பலபேருக்குத் தெரியும். அவர்களில் யாரோ ஒருவர் கல்லூரி மாணவிகளைக் கேட்டு நான் போன் செய்வதை டேப் செய்து அம்பலப்படுத்திவிட்டார்கள்' என்கிறது நிர்மலாதேவியின் வாக்குமூலம்.

இந்த வாக்குமூலத்தை டேப் செய்த ராஜேஸ்வரி, அதை சி.பி.சி.ஐ.டி.க்கு புதிதாக வந்த தலைவரான அமரேஜ் பூஜாரிக்கு அனுப்பி வைத்தார். அவர் இந்த விவகாரத்தில் தொடர்பு டைய அனைவரையும் விசாரிக்க உத்தரவிட்டார். கவர்னர் மற்றும் அவரது செயலாளர் தவிர அனைவரையும் ராஜேஸ்வரி விசாரித்தார். நிர்மலா தேவியால் அறிமுகப்படுத்தப்பட்ட 130 பெண்களையும் விசாரித்தார் ராஜேஸ்வரி.

அதில் 63 பெண்கள், 'நாங்கள் யார், யாரிடம் அறிமுகம் ஆனோம்' என வெளிப்படையாகவே சொல்ல முன்வந்தார்கள்.

'அனைத்து விவரங்களையு கவர்னரின் செயலாளர் ராஜகோபால் மற்றும் டி.ஜி.பி., டி.கே.ராஜேந்திரன், உள்துறை செயலாளர் நிரஞ்சன் மார்ட்டிக்கு அனுப்பினார் அமரேஷ் பூஜாரி. அவர்கள் முதல்வருக்கு அனுப்பினார்கள். கவர்னர் மாளிகை யும், முதல்வர் அலுவலகமும் 'இந்த விவகாரம் முருகன், கருப்பசாமியைத் தாண்டிப் போனால் ஆபத்து. இந்த இருவருடன் நிர்மலாவை சேர்த்து முடித்துவிடுங்கள்'என கட்டளை யிட்டது. ஆனால் ராஜேஸ்வரியும் அமரேஷ் பூஜாரியும் இந்த விவகாரத்தில் தொடர்புடைய அனைவரிடமும் வலுவாக பேசியபின் 'இந்த விவகாரத்தில் மூன்றுபேர்தான் குற்றவாளிகள்' என குற்றப்பத்திரிகை தயார் செய்தார்கள்.

'நான் கவர்னருடன் பேசினேன்.... பழகினேன் என என்னை முதலில் கைது செய்த அருப்புக்கோட்டை போலீசில் தொடங்கி அனைவரிடமும் சொல்லிவிட்டேன்' என்கிறார் நிர்மலா. நிர்மலாவின் வாயை மூட அவருக்கு ஜாமீன் கொடுக்காமல் சிறைப்பறவையாக்கி, கவர்னரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது மத்திய-மாநில அரசுகள்' என்கிறார்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்.

'நக்கீரன்' ஆசிரியர் கோபாலின் கைதில் விளங்கும் பின்னணி

ஆளுநர் பற்றிய அவதூறு என்பது குற்றச்சாட்டு. ஆளுநர் யார்? ஒரு 'அரசியல் சட்ட அதிகாரம்'. அது மட்டுமின்றி, 'ஹிட்டவாடா மக்கள் ஏடு' என்ற நாகபுரியிலிருந்து வெளிவரும் மத்திய இந்தியாவின் ஒரு பிரபல நாளேட்டின் ஆசிரியராக, 2011 ல் பொறுப்பெடுத்தவர் பன்வாரிலால் புரோஹித். 1911ல் 'ஹிட்டவாடா' இதழ்,கோபாலகிருஷ்ண கோகலேவால் நாகபுரியில் தொடங்கப்பட்டது 2011 ல் புரோஹித் நிறுவனம் என்ற நிறுவனத்தால் கையிலெடுக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்தான் நமது இன்றைய தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித். இவர் அப்போது பாரதிய ஜனதா

கட்சியின் நாகபுரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 2011 ல் இந்த இதழின் நூறாவது ஆண்டு விழா நடந்தது. அந்த விழாவில் தலைமையேற்றவர் அன்றைய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டில்.

தொடங்கும்போது, இந்த இதழ் சுதந்திர போராட்ட வீரர் சுஜால் என்பவரால், ஒரு சுதந்திரமான இதழாகத்தான் உருவாக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில், நாகபுரியில் இருந்து வெளிவந்த முதல் ஆங்கில ஏடு இதுதான். அதற்குப்பிறகு இந்த இதழுக்கு போட்டியாக 'நாகபுரி டைம்ஸ்' என்ற ஏடு வந்தது. அதுவும் பாதியிலேயே 'திவாலாகி'நின்று போனது. 'ஹிட்டவாடா' இதழ், 'முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பகத்தார்' மூலம், மறைந்த வித்தியா சரண் ஷுக்லாவால் கொண்டுவரப்பட்டது. இப்போது, மத்திய இந்தியாவிலேயே, நாகபுரியிலிருந்தும், ராய்பூரிலிருந்தும் வெளிவருகிற பிரபல ஆங்கில ஏடாக இருக்கிறது. மத்திய இந்தியாவில் தினசரி இரண்டு லட்சம் பிரதிகளும், நாகபுரி நகரில் மட்டும் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பிரதிகளும் விற்பனையாகிறது. ஒரே நேரத்தில், நாகபுரி, ஜபல்பூர், ராய்ப்பூர், போபால் ஆகிய நகரங்களில் இருந்து இந்த ஏடு வெளிவருகிறது. 'ஹிட்ட வாடா' ஏட்டின், பிராந்திய மொழி ஏடுகளும் வெளிவருகின்றன. நாகபுரியை தலைநகராகக் கொண்ட பிராந்தியம் 'விதர்பா' என அழைக்கப்படுகிறது. அந்த விதர்பா பிராந்தியத்தில், நாகபுரிக்கு வெளியே விற்பனையாகும், 'விதர்பா லைன்ஸ்' ஏடும் வெளிவருகிறது. சட்டிஸ்கர் மாநிலத்தில், 'சட்டிஸ்கர் லைன்ஸ்' என்ற ஏடு வெளியாகிறது.

'மத்தியபிரதேச லைன்ஸ்' என்ற ஏடு, போபாலில், மற்றும் ஜபல்பூரின் சுற்றுப் பகுதிகளிலும் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட ஏடுகள் அனைத்தும் 'ஹிட்ட வாடா' குழுவிலிருந்து, வெளியிடப்படுகிறது. இவை தவிர, துணை ஏடுகளாக, திங்கள்கிழமைகளில், 'பணம்' என்ற ஏடும், செவ்வாய்கிழமைகளில் 'பியூச்சர்' என்ற ஏடும், புதன்கிழமைகளில், 'பெண்கள் உலகம்' என்ற ஏடும், சனிக்கிழமைகளில் 'டிவிங்கில் ஸ்டார்' என்ற ஏடும், ஞாயிற்றுக் கிழமைகளில்,'இன்சைட்' என்ற ஏடும், அது தவிர, 'தி நாலெட்ஜ் அறிவு' என்ற துணை ஏடு, குறிப்பாக பள்ளிகளில், குழந்தைகளுக்காக என்று கொண்டுவரப்படுகிறது.

மேற்கண்ட அனைத்து ஏடுகளையும் வெளியிடும் ஒரு 'தாய் நிறுவனம்' இது என்றால், இதன் 'ஆசிரியராக' இருந்தவருக்கு எவ்வளவு அறிவும், அனுபவமும், முதிர்ச்சியும், நிதானமும் இருக்கும் என நாம் எண்ணிப்பார்க்க முடிகிறது. அப்படி இந்த நிறுவனத்தின் ஆசிரியராக இருந்தவர்தான், நமது ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அவர்கள். அப்படி இருக்கும்போதும் எப்படி அவர் இந்த முதிர்ந்த வயதிலும், ஒரு கட்டுரை வெளிவந்து சில மாதங்கள் கழித்து, அந்தக் கட்டுரையில் 'தன்னைப்' பற்றி செய்தி வந்திருக்கிறது என்று சொல்லி, அதில் தான் வேறுபட்டாலும், அதற்காக, ஒரு பிரபல தமிழ் இதழ் ஆசிரியரை, அதுவும் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு இதழின் வெளியீட்டாளராகவும் இருப்பவரை, இன்னமும் கூறப்போனால், 'வாரம் மூன்று இதழாக' வெளிவருகின்ற ஏட்டின் ஆசிரியரை,'இந்திய தண்டனைச் சட்டம் 124 ன்' கீழ் கைது செய்யச் சொல்லி, தனது ஆளுநர் அலுவலகம் மூலம் புகார் கொடுக்க வைக்க முடிகிறது என்றால், இது 'நிதானமாக' செயல்படுபவர்களால்,'சாத்தியப்படாத' ஒன்றாகவே, நமக்கெல்லாம்,தெரிகிறது.

விவரம் தெரியாதவர்கள், அனுபவம் இல்லாதவர்கள், அதிகாரத்தில் இருக்கும்போது, எந்த 'கட்டளையையும்' இடுவது நாட்டில் நடக்கக் கூடிய ஒன்றுதான். ஆனால், அனைத்து அனுபவங்களும் கொண்டவர்கள், இதுபோன்று நடந்து கொள்வது சதாரணமாக எதிர்பார்க்க கூடியது அல்ல. அதேசமயம், மேற்கண்ட சட்டப் பிரிவு, 'அரசியல் சட்ட அதிகாரத்தில் உள்ளவர்களை, பலாத்காரமாக பணி செய்ய விடாமல் தடுப்பது' என்பது எங்கே வந்தது இந்த விஷயத்தில்? என்றே நாடு கேட்கிறது. அதனால், மக்கள் மத்தியில், பொதுத் தளத்தில், 'சர்ச்சைக்குள்ளான விஷயத்தில்' யார் மீது கேள்விக்கு கணைகள் எழும் என்பது சொல்லாமலேயே விளங்கக்கூடியது.

- டி.எஸ்.எஸ்.மணி
(மூத்த பத்திரிகையாளர்)

15 ஆம் பக்கம் பார்க்க....

வடமாகாண...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

பகிரங்க அறிவித்தலை விடுத்திருந்தது.

தாயக உறவுகளுக்கான அபிவிருத்தி என்ற போர்வையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழினவழிப்பு அரசின் வடமாகாண சூத்திரதாரி ரெஜினோல்ட் கூரே அவர்களுடனான சந்திப்பை புறக்கணிப்போம் என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டிருந்தனர்.

ஒட்டுமொத்த தமிழினவழிப்பை மூடிமறைக்கவும், தமிழர்களின் உரிமைகளை நசுக்கவும், சர்வதேச அரங்கில் தமிழர்களின் ஒற்றுமையை பலவீனப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் எழுச்சியின் வீச்சையும் புலம்பெயர் தேசங்களில் இல்லாதொழிக்கவுமே இவ்வாறான பல திட்டங்களை புலம்பெயர் தமிழ் மக்களிடத்தில் செய்யத் துடிக்கின்றது.

இந்த திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாகவே, சுவிஸ் பேர்ண் மாநிலத்தில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உள்ளிட்ட குழுவினருடனான கலந்துரையாடல் ஒன்று புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் பேரில் தன்முனைப்பு அதிகாரங்களுடன் இயங்கும் நிர்வாகத் தலைவரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இது மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும். இவ்வமைப்பின் நிர்வாகத்தில் உள்ள சிலர் சிங்கள இனவாத அரசின் அடிவருடிகள் என்பதை கருத்திற் கொள்வதோடு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் அதனை முன்னெடுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் பெரும் அரணாகவும் வலிமையாகவும் விளங்கிய புங்குடுதீவு மக்களின் ஆதரவின்றி செயற்படும் இவர்களுக்கு எம்மினத்தின் உணர்;வை மக்கள் காட்ட வேண்டும் என அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களைப் பிரித்து, தமிழர்களுக்குள் இடைவெளிகளை ஏற்படுத்தி குறிப்பிட்ட எம்மக்களை கூறுபோட்டு இனம்காட்டி, குழுமோதல்களை ஏற்படுத்தி எமது சர்வதேச பலத்தைக் குறைக்கும் நயவஞ்சக நோக்கங்களை புரிந்துகொள்வதோடு, சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிடப்பட்டுக் கொண்டிருக்கும் இப்படியான சந்திப்புகளை அனைத்து தமிழ் மக்களும் புறக்கணியுங்கள். அவர்கள் எங்கெல்லாம் கூடுகின்றனரோ அங்கெல்லாம் இனமானத்தமிழராய் அணிதிரண்டு இனப்படுகொலையாளர்களின் முகத்திரையை கிழியுங்கள். இது போன்ற செயற்பாடுகளை நம் எப்போதும் விழிப்பாய் இருந்து முற்றாகப் புறக்கணிப்பதனூடாக, முள்ளிவாய்க்காலில் எமது இனம் வீழ்த்தப்படவில்லை ஈழத்தமிழினம் இன்னும் உயிர்ப்புடனும், நிமிர்வுடனும், தாயகவிடுதலைக் கனவுடனும்தான் உள்ளது என்பதை இவர்களுக்கு உணர்த்துங்கள் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் விஜயரட்ணம் சிவநேசன் (ரகுபதி) அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்புக்கு இணங்க சுவிஸ் பேர்ண் நகரில் றெஜினோல் கூரேயின் சந்திப்பு நடைபெற இருந்த மண்டபத்தை சுற்றி சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு கூட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. வடமாகாண ஆளுநர் றெஜினோல் கூரேயுடனான சந்திப்பு பின்னர் வேறு ஒரு இடத்தில் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்கு தனது நிர்வாகத்தின் கீழ்தான் இருக்கும் என ஆளுநர் றெஜினோல் கூரே இந்த சந்திப்புக்களில் அழுத்தி கூறியிருக்கிறார். ஏற்கனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை தோல்வியடைந்த சபை என காட்டுவதற்கு மத்திய அரசின் நேரடி பிரதிநிதியான ஆளுநரின் ஆட்சி பெரும் பிராயத்தனங்களை மேற்கொள்ளும் என்பது உறுதி. அதன் ஒரு கட்டமே ஆளுநரின் ஐரோப்பிய விஜயமாகும்.

முன்னாள் கப்டன் அர்ஜுனா ரணதுங்கா மீது இந்திய விமானப் பணிப்பெண் பாலியல் புகார்

இலங்கை அணியின் முன்னாள் கேப்டனும், தற்போதைய அந்நாட்டின் பெட்ரோலியத்துறை அமைச்சருமான அர்ஜுனா ரணதுங்கா மீது இந்தியாவைச் சேர்ந்த விமானப் பணிப்பெண் ஒருவர் பாலியல் புகார் தெரிவித்துள்ளார்.

அந்தப் பணிப்பெண் தனது பேஸ்புக் பக்கத்தில் தன்னிடம் ரணதுங்கா எவ்வாறெல்லாம் தவறாக நடந்து கொண்டார் என்பதையும், எப்போது நிகழ்ந்தது என்பதையும் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெண்ணின் பெயரைப் பாதுகாப்பு கருதி மறைத்து இந்தியா டுடே இணையதளம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு இலங்கை அணி பயணம் மேற்கொண்டபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளதாக அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். மும்பை ஜூஹு பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் அனைவரும் தங்கி இருந்தனர். அப்போது, இலங்கை வீரர்களிடம் ஆட்டோகிராப் வாங்கத் தனது தோழிகளுடன் சென்றபோது, ரணதுங்கா தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றார். அப்போது அவர் என்னை மிரட்டியும், தாக்கியும் என்னை பலவந்தப்படுத்தினார். ஆனால், அங்கிருந்து நான் தப்பிவந்து ஹோட்டலில் உள்ள வரவேற்பறை பணியாளர்களிடம் இந்த விவரத்தைத் தெரிவித்தேன்.

ஆனால், அந்தப் பணியாளர்கள், உன்னுடைய தனிப்பட்ட விஷயத்தில் நாங்கள் தலையிட முடியாது எனத் தெரிவித்துவிட்டனர் என்று அந்தப் பெண் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணிக்கு உலகக்கோப்பையைப் பெற்றுக்கொடுத்த கேப்டனாக அர்ஜுனா ரணதுங்கா புகழப்பட்டு வருகிறார். 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ரணதுங்கா 5,105 ரன்களும், 260 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7,456 ரன்களும் சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச வரும்போதெல்லாம் ரத்த வாந்தி: ஆஸி.வீரர் ஜான் ஹேஸ்டிங்ஸ் அதிர்ச்சி; கிரிக்கெட் வாழ்வு கேள்விக்குறியான துயரம்

32 வயது ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சு ஆல்ரவுண்டர் ஜான் ஹேஸ்டிங்ஸ் கிரிக்கெட் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது. காரணம் அவருக்கு வந்துள்ள புரியாத புதிர் நுரையீரல் நோய் என்று ஆஸ்திரேலிய ஊடகமொன்றில் அவரே தெரிவித்துள்ளார்.

பிக்பாஷ் லீகில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியின் முன்னாள் கேப்டனாக இருந்துள்ளார். மே மாதம் சிட்னி சிக்சர்ஸுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

இவர் ஒரு டெஸ்ட் 29 ஒருநாள் சர்வதேச போட்டிகள், 9 டி20 சர்வதேச போட்டிகளில் ஆஸ்திரேலியாவுக்காக ஆடியுள்ளார். இவர் டி20 கிரிக்கெட்டில் கவனம் செலுத்துவதற்காக டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு அறிவித்தார்.

இந்நிலையில் அவர் கூறியதாவது: கடந்த 3 அல்லது 4 மாதங்களாகவே என் உடல் நிலையில் மாற்றம் தெரியத் தொடங்கியது.

மிகவும் கடினமான காலக்கட்டமாக இருந்தது. ஒவ்வொரு முறை பந்து வீசத் தயாராகும் போதும் இருமல் வந்து ரத்தமாக வாந்தி எடுத்தேன்.

இதனால் பவுலிங் செய்ய முடியவில்லை. எனவே இது என்ன என்று கண்டுபிடித்து தீர்வு காணாதவரை எனக்கு நிம்மதியில்லை. இது எனக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது. ஆனால் இப்போது இதனை நான் கவலையாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் கடந்த 4 அல்லது 5 மாதங்களாக மிகவும் கடினமாக உள்ளது.

வாழ்நாள் முழுதும் கிரிக்கெட் ஆட வேண்டும் என்பதே குறிக்கோள். உலகம் முழுதும் கிரிக்கெட் ஆடிக்கொண்டேயிருக்க வேண்டும். இதனால்தான் நான் ஒரு நாள் மற்றும் 4 நாள் கிரிக்கெட்டிலிருந்தே ஓய்வு பெற்றேன்.

அது கைநழுவி போகிறது என்றால் அதனை சீரணிக்க முடியவில்லை. இப்போதைக்கு ஏதும் அதிசயம் நடந்தால் தான் நான் மீண்டும் பந்து வீச முடியும்.

முன்பிருந்தே இந்தப் பிரச்சினை இருந்தது, ஆனால் எப்போதாவதுதான் தலைகாட்டும், ஆனால் சமீபமாக ஒவ்வொரு முறை பந்து வீசும் போதும் ரத்த இருமல் வருகிறது.

குறிப்பாக போட்டியின் தீவிர கணங்களில் கொஞ்சம் வேகம் கூட்ட நான் பந்து வீச்சு மார்க்குக்குச் செல்லும்போது இருமல் வருகிறது, உடனே ரத்தம் வருகிறது.

இது என்னை அச்சுறுத்துகிறது. நீண்ட நாள் சேதம் ஏற்படுத்தாது என்று நம்புகிறேன். இப்போது இது எனக்கு நல்லதாகப் படவில்லை.

வாழ்நாளுக்கு சச்சின்; கடைசிநாளுக்கு லாரா!

வாழ்நாள் முழுவதும் பேட் செய்யச் சொல்லி ரசிக்க வேண்டுமென்றால் சச்சினையும், கடைசி நாளில் சதம் அடிக்க வேண்டும் என்றால் அதற்கு லாராவையும் தேர்வு செய்வேன் என்று ஆஸ்திரேலிய லெஜண்ட் ஷேன் வார்ன் நெகிழ்ந்துள்ளார். ஆனால், தன்னுடைய காலக் கட்டத்தில் பிரையன் லாரா, சச்சின் டெண்டுல்கர் ஆகிய இருவரில் யார் சிறந்த பேட்ஸ்மேன் என்ற விவாதத்துக்குள் வரவில்லை என்று வார்ன் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஷேன் வார்ன் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது, தனது புதிய சுயசரிதையான நோஸ்பின் என்ற புத்தகம் குறித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

நம்முடைய கால கட்டத்தில், என்னுடைய வாழ்கையில் சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாரா ஆகிய இருவர்தான் சிறந்த பேட்ஸ்மேன்கள் என்று எளிதாகச் சொல்லிவிடுவேன். ஒரு டெஸ்ட் தொடரில் கடைசி நாளில் யாராவது சதம் அடிக்க வேண்டும் என்று நான் விரும்பினால், நான் லாராவைத் தான் களத்துக்கு அனுப்புவேன். ஆனால், வாழ்நாள் முழுவதும் பேட் செய்து ரசிக்க வேண்டும் என்று நான் விரும்பினால், அது சச்சினின் விளையாட்டை மட்டும்தான். சச்சின் பேட் செய்யும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். கடந்த 1998-ம் ஆண்டு ஷார்ஜாவில் நடந்த ஷார்ஜா கோப்பை முத்தரப்பு தொடரில் சச்சின் தனியாக ஆளாக இருந்து தனது பேட்டில் ஆவர்த்தனம் செய்ததை என்னால் மறக்க முடியாது. எனக்குச் சிறப்பு சிகிச்சையைப் பேட்டால் சச்சின் அளித்தார். அந்தக் காயம் எனக்கு வலியை ஏற்படுத்தியது. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் என்னைச் சூதாட்டத்தில் ஈடுபடக்கோரி பல்வேறு தரகர்கள் என்னை அணுகினார்கள். ஆனால், நேர்மையைத் தவிர வேறு எதையும் கைக்கொள்ளவில்லை.

அனைத்து அணிகளுடன் நான் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான விக்கெட்டுகளை எடுத்திருந்தபோதிலும் இந்தியாவுடன் என்னால் சிறப்பாகச் செயல்பட முடியவில்லை. இது வருத்தமாகவும் இல்லை. ஏனென்றால், இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன் என்னுடைய தோள்பட்டையிலும், விரல்களிலும் நான் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தேன். அதனால், என்னால் சிறப்பாக பந்துவீச முடியாமல் இருந்திருக்கலாம். அதுமட்டுமல்லாமல், அப்போது, இந்திய அணியில் மிகப்பெரிய ஜாம்பவான்களான சச்சின், டிராவிட், கங்குலி, லட்சுமண், சேவாக் இருந்தார்கள். அந்த நேரத்தில் இந்திய அணியை வழ்த்துவது என்பது கடினம். நான் என்னதான் சிறப்பாக பந்துவீசினாலும், என்னைக் காட்டிலும் அவர்கள் சிறப்பாக பேட் செய்தார்கள் என்றுதான் கூற வேண்டும்.

என்னுடைய சுயசரிதை புத்தகம் என்பது, என்னுடைய சுயவாழ்க்கை, கிரிக்கெட் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை, என்னுடைய உறவுகள், நட்புகள், குடும்பம், குழந்தைகள், கிரிக்கெட் வாழ்க்கை அனைத்தையும் பற்றி இருக்கும்.

மலையுச்சியிலிருந்து அதலபாதாளத்தில் வீழ்ந்தது போல் இருந்தது: யுவராஜ் சிங்

2011 தோனி தலைமையில் இந்தியா சாம்பியன் ஆன உலகக்கோப்பையில் தொடர் நாயகன் விருது பெற்ற யுவராஜ் சிங் அந்தத் தொடரில் 362 ரன்களையும் 15 விக்கெட்டுகளையும் சாதித்து ஆல்ரவுண்டர் திறமையை நிரூபித்தார்.

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் 50 ரன்கள் 5 விக்கெட் என்ற ிடபுள்ி சாதனையையும் நிகழ்த்தினார் யுவராஜ் சிங்.

இத்தருணங்களில் புகழின் உச்சியிலிருந்த யுவராஜ் சிங் வாழ்க்கையில் இடிபோல் இறங்கியது புற்றுநோய். அதனை தான் எதிர்கொண்ட விதம், அணிக்குள் மீண்டும் நுழைந்தே தீருவது என்ற வைராக்கியம் குறித்து கிரிக்கெட் நெக்ஸ்ட் இணையதளத்தில் அவர் கூறும் போது:

உலகக்கோப்பை 2011 உச்சத்துக்குப் பிறகே கேன்சர் என்ற நோய் என்னுடைய மகிழ்ச்சியை மொத்தமாக அழித்தது. என் வாழ்க்கையில் அது இருண்ட காலம்.

உலகக்கோப்பையை வென்றோம், அதில் நான் தொடர் நாயகன் மலையின் உச்சியில் இருக்கிறேன், கேன்சர் என்றவுடன் அப்படியே அதலபாதாளத்தில் விழுந்தேன். ஆனால் இதுதான் லைஃப், நாம் எதிர்பாராதது நிகழும். இதில் நமக்கு சுயவிருப்பத் தெரிவு என்பது கிடையாது.

இவ்வாறு கூறினார் யுவராஜ் சிங்.

ஆனால் கேன்சரிலிருந்து மன உறுதியுடன் மீண்ட யுவராஜ் 2012-ல் நியூஸிலாந்துக்கு எதிரான டி20 மூலம் இந்திய அணிக்குள் மீண்டும் நுழைந்தார். 2017-ல் தனது அதிகபட்ச ஒருநாள் ஸ்கோரான 150 ரன்களை எடுத்தார். கட்டாக்கில் இங்கிலாந்துக்கு எதிராக இதனை சாதித்தார் யுவராஜ்.

ஒரு ஊரையே காப்பாற்றுவார் தோனி!

தோனி 2014 ஆஸ்திரேலிய டூரின்போது ஓய்வை அறிவிக்கப்போகிறார் என்பது தோனி தவிர இன்னொருவருக்குத் தெரியும் என்றால் அவர் பாபாதான். 2011 உலகக்கோப்பையின்போது சென்னை சேப்பாக்கம் மைதானத்தின் மீடியா மேனேஜராக இருந்தவர், 2015 உலகக்கோப்பையின்போது இந்திய கிரிக்கெட் அணியின் மீடியா மேனேஜராக உயர்ந்திருந்தார். மீடியா மேனேஜராக மட்டுமல்ல, லாஜிஸ்டிக்ஸ் மேனேஜராகவும் இந்திய கிரிக்கெட் அணிக்காக உழைத்தவர் பாபா. 2012 முதல் 2015 வரை இந்திய அணிக்கு ஆல் இன் ஆல் இவர்தான். தோனி- கோலி கேப்டன்ஸி முதல் பல விஷயங்கள் அவரிடம் பேச இருக்கின்றன. ஆனால், அதற்கு முன் பாபாவின் பர்சனலைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இவர் சாதாரண பாபா அல்ல டாக்டர் பாபா. எம்.பி.பி.எஸ் படித்த டாக்டர். அம்பத்தூரில் டாக்டர் ரபீந்திரன் ஹெல்த் சென்டர் என்கிற பெயரில் மிகப்பெரிய மருத்துவமனையை நடத்திவருகிறார். இவரது ஹாபிதான் கிரிக்கெட். இவரது இரட்டையர் மகன்கள் இந்திரஜித், அபராஜித் இருவரும் தமிழ்நாடு ரஞ்சி அணிக்காக விளையாடிவருகிறார்கள்.

டாக்டர் டு மீடியா மேனேஜர்... இந்த டிராவல் பற்றி?

நான் ஒரு ஏரிக்கரை கிரிக்கெட்டர். பிறந்தது வளர்ந்தது எல்லாமே ரெட் ஹில்ஸ்தான். அங்க ஏரிக்கரை பக்கத்தில்தான் கிரிக்கெட் ஆடுவோம். கிரிக்கெட் பிடிக்கும் அவ்வளவுதான். அதைத் தாண்டி என் குடும்பத்துக்கும் கிரிக்கெட்டுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. ஸ்டான்லி மெடிக்கல் காலேஜ்ல நாலரை வருஷம் படிப்பு, முடிஞ்சதும் அங்கேயே ஒரு வருஷம் ஹவுஸ் சர்ஜனாவும் வேலை பார்த்தேன்.

கல்யாணம் ஆச்சு... ட்வின்ஸ் பிறந்தாங்க. என்னோட பசங்களை கிரிக்கெட்டர் ஆக்கணும்னு ஆசைப்பட்டேன். அப்ப அம்பத்தூர்ல மருத்துவமனையை இயக்க ஆரம்பிச்சிட்டேன். பக்கத்துல டன்லப் கிரவுண்ட்ல ஃபைவ் ஸ்டார் கிரிக்கெட் அசோசியேஷன் இருந்துச்சு. அவங்க அங்க கிரிக்கெட் கோச்சிங் நடத்துவாங்க. அதுல என் பசங்களைச் சேர்க்கப்போனேன். பசங்களுக்கு 3 வயசுதான் ஆகுது. 5 வயசுல இருந்துதான் கோச்சிங் சேர்த்துப் போம்னு சொல்லிட்டாங்க. ஆனால், நான் தினமும் கிரவுண்டுக்குக் கூட்டிட்டுப்போய் நெட்ஸ்ல பிராக்டீஸ் கொடுப்பேன். அதைப் பார்த்துட்டு நாலு வயசுலேயே பசங்களை சேர்த்துக்கிட்டாங்க. பசங்க 9 வயசுலேயே தமிழ்நாட்டுக்கு ஆட ஆரம்பிச்சிட்டாங்க.

என்னோட கிரிக்கெட் ஆர்வத்தைப் பார்த்துட்டு 1999-ம் வருஷம் என்னை திருவள்ளூர் கிரிக்கெட் அசோசியேஷன் துணைத் தலைவரா தேர்ந்தெடுத்தாங்க. மூணு வருஷம் துணைத் தலைவரா இருந்தேன். 2002-ல இருந்து இப்பவரைக்கும் திருவள்ளூர் கிரிக்கெட் அசோசியேஷன் செயலாளரா இருக்கேன். திருவள்ளூர் அசோசியேஷன் செயலாளர் என்பதால் என்னை 2003-2004 சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கும் கிரிக்கெட் மேட்சுகளுக்கான மெடிக்கல் டீம்ல சேர்த்தாங்க. மெடிக்கல் டீம்ல இருந்தேன். 2004-ம் வருஷம் திடீர்னு மீடியா மேனேஜரா இருந்தவர் ரிசைன் பண்ண, என்னைப் பார்த்துக்கச் சொன்னாங்க. அது வரைக்கும் மீடியாவுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மீடியா வேலைகள் நல்லா பண்ணதால் தொடர்ந்து என்னையே மீடியா மேனேஜர் ஆக்கிட்டாங்க. இதுதான் என் ஆரம்பம்.

இந்திய அணிக்கு மீடியா மேனேஜராகவும், லாஜிஸ்டிக்ஸ் மேனேஜராகவும் ஆனது எப்படி?

2008 ஐ.பி.எல் ஆரம்பிச்சப்ப பி.சி.சி.ஐ-ன் மீடியா கமிட்டியில் உறுப்பினரா சேர்க்கப்பட்டேன். 5 வருஷ கமிட்டி மெம்பர். ஒவ்வொரு கமிட்டி மெம்பரையும் ரொட்டேஷன்ல இந்திய அணிக்கு மீடியா மேனஜராப் போடுவாங்க. அப்படித்தான் 2012 ஐசிசி வேர்ல்டு டி20 கோப்பைக்கு முதல்முறையாக மீடியா மேனஜரா நியமிக்கப்பட்டேன். அப்போது டங்கன் ஃப்ளெட்சர்தான் இந்திய அணியின் பயிற்சியாளர். கேப்டன் தோனி. அந்தத் தொடருக்கு நான் என்னை முழுமையா டெடிகேட் பண்ணிட்டு வொர்க் பண்ணினேன். பயிற்சியாளர் டங்கன் ஃப்ளெட்சர், இதுக்கு முன்னாடி எல்லாம் கூட வர்ற மேனேஜர்ஸ் டூர் வந்தவங்க மாதிரி இருப்பாங்க. மீடியாகிட்ட சொல்லக்கூடாத தகவல்களை எல்லாம் சொல்லுவாங்க. ஆனா, நீங்க உண்மையான சப்போர்ட் ஸ்டாஃப்பா இருக்கீங்கன்னு சொன்னார். அவர்தான் பி.சி.சி.ஐ மேனேஜ்மென்ட்கிட்ட ஒரே மீடியா மேனேஜர் இருக்கட்டும். மாத்த வேண்டாம்னு சொன்னார். அதில் இருந்துதான் நான் தொடர்ந்து மூணு வருஷம் மீடியா மேனேஜரா இருந்தேன்.

லாஜிஸ்டிக்ஸ் மேனேஜர் என்றால் அவர்களுக்கு என்ன வேலை..?

லாஜிஸ்டிக்ஸ் மேனேஜர்தான் அணியில் முக்கியமானவர். ப்ளேயர்களின் விமான டிக்கெட்டுகளை ஒழுங்குபடுத்துறதுல இருந்து ப்ளேயர்ஸோட கம்ஃபர்ட்டைப் பார்த்துக்குறவரைக்கும் பல பொறுப்புகள்.

ப்ளேயர்ஸை கம்ஃபர்ட் ஸோன்ல வெச்சிக்கணும். ப்ளேயர்ஸுக்கு கம்மியான வேலைகொடுத்து பிராக்டீஸ்ல விடணும். சப்போர்ட் ஸ்டாஃப்னா ரியல் சப்போர்ட் ஸ்டாஃபா இருக்கணும். அவங்க விளையாடுறதுனாலாதான் நமக்கு வேலையிருக்குனு டங்கன் ஃப்ளெட்சர் சொல்லுவார். அப்படி ப்ளேயர்ஸை ஈஸியா வெச்சிக்கிட்டோம்னா நல்ல ரிசல்ட்ஸும் கிடைக்கும்.

ஒவ்வொரு டூருக்கும் ஒரு க்ரூப் ஆரம்பிப்போம். முன்னாடி பிளாக்பெர்ரி மெசஞ்சர்தான் இருக்கும். அப்புறம் வாட்ஸ் அப் க்ரூப். இப்போ மெயில் க்ரூப்பாக மாறியிருக்கு. இந்த குரூப்ல அந்த டூர்ல விளையாடுற ப்ளேயர்ஸ் ப்ளஸ் சப்போர்ட் ஸ்டாஃப் மட்டும்தான் இருப்பாங்க. டூர்ல இல்லாத ப்ளேயர்ஸ் எவ்வளவு பெரிய சீனியர்ஸா இருந்தாலும் இருக்கமாட்டாங்க. இதில் பேசப்படுற எந்த ஒரு விஷயமும் வெளியே போகக்கூடாதுன்றதுனால இப்ப பி.சி.சி.ஐ சர்வர்ல வெச்சு மெயில் க்ரூப் பண்ணியிருக்காங்க.

நான் போனதில் இங்கிலாந்து டூர்தான் மிகப்பெரிய டூர். மொத்தம் 107 நாள்கள். சில ப்ளேயர்ஸ் டி20, ஒருநாள் போட்டி, டெஸ்ட்னு மூணு ஃபார்மேட்லயும் விளையாடுவாங்க. அதனால் டூர் முழுக்கவும் ப்ளேயர்ஸை நல்ல மூட்ல வெச்சிக்கணும். டீம் ஸ்பிரிட் போயிடக் கூடாது. இங்கிலாந்தைப் பொறுத்தவரைக்கும் நல்ல விஷயம் என்னன்னா இங்கிலாந்துக்குப் போறதுக்கு மட்டும்தான் ஃப்ளைட் ட்ராவல். அதன்பிறகு எல்லாமே பஸ்தான். இங்கிலாந்துக்குள்ள எந்த ஸ்டேடியம் போகணும்னாலும் 3 மணிநேரப் பயணம்தான். ட்ராவல் அங்க ஈஸியா இருக்கும். ஆனா, விளையாடுற கண்டிஷன்ஸ் ரொம்ப டஃப்பா இருக்கும். அதனால டீம் மாரல் ரொம்ப முக்கியம். மேட்ச் இல்லாத நாள்கள்ல வெளிலே போய் வேற ஏதும் குழு விளையாட்டுகள் விளையாடுறது, எதுவும் செய்யாமல் சும்மா ரிலாக்ஸ் பண்ணுறதுனு டீமை நல்ல மூட்ல வெச்சிக்கிறதும் லாஜிஸ்டிக்ஸ் மேனேஜரோட வேலைதான்.

செய்தியாளர் சந்திப்பில் சிறப்பாக நடந்து கொள்ளும் வீரர் யார்?

தோனிதான். அவர் அளவுக்கு மீடியாவை யாரும் அவ்வளவு இயல்பா சமாளிக்க முடியாது. ஓய்வு பற்றி கேள்விகள் வந்தப்ப அவர் எப்படிச் சாமாளிச்சார்னு நீங்களே வீடியோல பார்த்திருப்பீங்க. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லக் கூடியவர் தோனி. எந்தக் கேள்வியையும் தவிர்க்க மாட்டார்.

தோனி ஓய்வை அறிவித்த நாள் பற்றி?

முதல்ல அந்த விஷயம் பற்றி என்னிடம் சொன்னார். கொஞ்சம் கொஞ்சமா டீம்குள்ள தகவல் பரவ ஆரம்பிச்சிடுச்சு. பிரஸ் மீட்ல அறிவிச்சிடவான்னு கேட்டார். கொஞ்சம் கலந்து பேசி பி.சி.சி.ஐ-கிட்ட சொல்லி, பி.சி.சி.ஐ மூலமா அறிவிப்பை வெளியிடலாம்னு முடிவு பண்ணினோம். ரொம்ப கஷ்டமான நாள் அன்று. டீமில் எல்லோருமே எமோஷனலாக இருந்தார்கள்.

தோனி, கோலின்னு இரண்டு கேப்டன்களோடும் வேலை செஞ்சிருக்கீங்க. உங்க பார்வையில் இருவரைப் பற்றியும் சொல்லுங்க?

கோலி தேவையில்லாமல் எதுவும் பேசமாட்டார். கிரவுண்ட்ல ஆக்ரோஷமா இருப்பார். ஆனால், வெளியே வந்துட்டா அவ்ளோ ஃப்ரெண்ட்லியா இருப்பார். யார் ஆட்டோகிராஃப் கேட்டாலும், எவ்ளோ அவசரமா இருந்தாலும் நின்னு போட்டுட்டுப் போவார். எனக்கு ஒரு கையொப்பம்... ஆனா, அவங்களுக்கு அது வாழ்நாள் பொக்கிஷம்னு சொல்லுவார்.

தோனி எனக்கு நல்ல நண்பர். டீம்ல இருந்த 3 வருஷமும் அவர் என்னோட ரூம்லதான் இருப்பார். தினமும் நானும் அவரும்தான் டின்னர் சாப்பிடுவோம். எப்பவும் ஐபேட்ல கேம்ஸ் ஆடிட்டே இருப்பார். எல்லா கேம்ஸுமே மிலிட்டரி கேம்ஸாதான் இருக்கும். யாரையாவது சேவ் பண்றமாதிரி, ஒரு ஊரையே காப்பாத்துற மாதிரியான விளையாட்டுகள்தான் விளையாடுவார். தோனி மாதிரியான ஒரு கிரிக்கெட்டரை, ஒரு மனிதரைப் பார்க்கமுடியாது!

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் இந்திய உயர் மட்டக்குழு அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல்

இந்தியன் வீட்டுத்திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைப்பது தொடர்பாக இந்தியாவில் இருந்து வருகைதந்த உயர் மட்ட குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் கலந்துரையாடினர்.

அரசாங்க அதிபர் உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்களுக்கு இவ்வாறான உதவித் திட்டம் அவசியம் எனவும் இங்கு விவசாயத்தினையும், மீன்பிடியினையும் நம்பி வாழ்கின்ற குடும்பங்கள் தான் அதிகமாக உள்ளனர் எனவும் இத்திட்டத்துடன் இணைந்து மாவட்டத்தில் இன்னும் (18000) பதினெட்டாயிரம் மலசல கூடங்கள் தேவைப்படுவதாகவும் கூறினார்.

இக் கூட்டத்தின் போது மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு தங்களினால் முன்னெடுக்கப்பட இருக்கின்ற (20 000) இருபதாயிரம் வீட்டுத் திட்டத்தினையும் இரண்டு ஆண்டுகளுக்குள் முடித்துத் தருவதாகவும இது தொடர்பான மக்களின் எண்ணங்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்கு ஆர்வம் காட்டிய இந்திய குழுவினர் களவிஜயத்தினையும் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவுடன் இணைந்து நடத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வகையான வீட்டுத்திட்டங்கள் அவசியமானது என்பதை மக்களுடன் கலந்துரையாடி 550 சதுர பரப்பளவுக்குள் வீட்டுத்திட்டத்தினை அமைக்கப்படவுள்ளதாகவும் 70 வீதமான வேலைப் பொறுப்புக்களை இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் செயற்படுத்தவுள்ளதாகவும், இதற்கான தடங்கல்களை ஏற்படுத்தும் காரணிகளை கூட வருகை தந்த இந்திய உயர் மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர். இது தொடர்பான தங்களின் அறிக்கையினை எதிர்வரும் வாரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

தி/மூ/மூதூர் அல்மினா மகா வித்தியாலயத்திலிருந்து தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய இருவர் சித்தி பெற்றுள்ளனர். ஜான்சி - 173, அன்சி- 164 ஆகிய இரண்டு மாணவிகள் சித்தி அடைந்துள்ளனர். இவர்களுடன் அதிபர், பிரதி அதிபர் மற்றும் தரம் 05 இல் கற்பித்த ஆசிரியர் ஆகியோர் இணைந்திருப்பதை காணலாம்.

படம்: சேனையூர் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய நல்லிணக்க அமைச்சினால் 28 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது

க.விஜயரெத்தினம்

நல்லிணக்கம் சார் பொருளாதார வலுப்படுத்தல் மற்றும்,சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கௌரவ தேசிய ஒருமைப்பாடு, நல்லிக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதி அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாளேந்திரன்,கே.கோடீஸ்வரன்,கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரா,மாவட்ட செயலாளர் மா.உதயகுமார்,அமைச்சின் செயலாளர்கள்,பிரதேச செயலாளர்கள்,கணக்காளர்கள்,திட்டப் பணிப்பாளர்கள்,கலந்து கொண்டார்கள்.

மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பொருளாதாரம் வலுப்படுத்தல் மற்றும் கிராமிய வேலைத்திட்டங்களின் முன்னாயர்த்தம் ஆராயப்பட்டது.இதன்போது இவ்வருடம் மார்கழி 25க்கு முன்னர் வேலைத் திட்டங்களை முடித்துக்கொள்ள வேண்டும் என இதன்போது தீர்மானிக்கப்பட்டது.28 திட்டங்களுக்கு 124.29 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது.பாடசாலை விளையாட்டு மைதானம் அமைத்தல்,வீதி புனரமைப்பு,சிறுவர் பூங்கா அமைத்தல்,மயானங்களுக்கு சுற்றுமதில் அமைத்தல்,உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டது.

ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயத்திற்கு ஆசிரிய விடுதி அமைத்துத்தருமாறு கோரிக்கை

பெரியகல்லாறு நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்தில் போரதீவ பற்று கோட்டத்தில் அம்பாறை மட்டக்களப்புமாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் ஒன்றாக நவகிரியில் அமையப்பெற்றகிராமம் ஆனைகட்டியவெளி. இங்கு 1972ல் அமைக்கப்பட்ட பாடசாலைதான்ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயம்.

சுமார் 300 கடுமபங்களைக் கொண்ட இந்த விவசாயக் கிராமத்தில் இப்பாடசாலையில்200க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அயல் கிராமங்களான நெடியவட்டை. சின்னவத்தை மற்றும் மாலயகட்டு கிராம மாணவர்களும் இங்குதான்கல்வி கற்று வருகின்றனர்.

பொது போக்குவரத்து கஷ்டமும் ஒழுங்கற்ற பாதைகளும் கொண்ட பின்தங்கியகிராமமான இக் கிராமத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே பாடசாலைக்கு வருகின்றனர்.

இங்கு கற்பிக்க வரும் ஆசிரியர்கள் களுவாஞ்சிக்குடி, கல்முனை அம்பாரை ஆகியபிரதேசங்களில் இருந்து சொந்த பிரயாண எற்பாடுகளைச் செய்தே பாடசாலைக்குவருகின்றனர். அவர்களில் கணிசமான ஆசிரியைகளும் உள்ளடங்குவர். மழைகாலத்தில் எந்த பாதையால் வந்தாலும் ஓடும் வெள்ளத்தை தாண்டியே தினமும்வருகைதர வேண்டியிருக்கின்றது. இக் கிராமத்தின் எல்லா வீதிகளும் மழைகாலத்தில்வெள்ளத்தில் முழ்குவது வழக்கம்.

அதனால் மாணவர்களின் கல்விநிலையில் பாதிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் இருக்கின்றது. எனவே இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்கியிருந்து கற்பிக்கக் கூடியவிடுதி அமைத்துத்தருமாறு பெற்றோட மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபை என்பன சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் சுற்றுமதிலையும் பூர்த்தி செய்ததருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் மலேசியா பயணம்

சேனையூர் நிருபர்

கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் மலேசியா நாட்டின் அபிவிருத்தி அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 6ஆம் திகதியன்று மலேசியா பணயணமானார்.

இரா .நெடுஞ்செழியனின் பயணத்துக்காக ஒழுங்குகளை இலங்கை அபிவிருத்தி நிறுவகம் மேற்கொண்டுள்ளது.

இப் பயணம் இலங்கை திட்டமில் சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர்களுக்காக திறமை விருத்தியை நோக்காகக் கொண்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் 1994 இல் இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட இரா.நெடுஞ்செழியன் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, சமுர்த்தி அமைச்சு ஆகியவற்றில் கடமையாற்றி 2006 இல் இலங்கை திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டார்.

திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்ததில் 13 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த இவர் திட்டமிடல் சேவை விசேட தரத்திற்கான நேர்முகப் பரீட்சையை 2012 இல் பூர்த்திசெய்து விசேட தரத்தை எதிர் பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப்பட்டம் பெற்று 3 வருடங்கள் உதவி விரிவுரையாளராக (பொருளியல்) யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியதுடன் தனது பட்டபின் படிப்பு டிப்ளோமாவை (அபிவிருத்தி திட்டமிடல்) கொழும்பு பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்டதுடன் தனது முதுமாணிப் பட்டபடிப்பையும் (பொருளியல்) பூர்த்திசெய்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக பீட முகாமைத்துவ சபையில் அங்கத்தவராகவும், கலை கலாச்சார பீட கணக்காய்வு குழுவின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

மேலும் கொரியா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன் ற நாடுகட்கு சென்று பிரதேச திட்டமிடல் தொடர்பான விசேட பயிற்சிகளை பெற்றுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிய இரா. நெடுஞ்செழியன் கிழக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளராக கௌரவ முதலமைச்சர் செயலகத்திற்கு இவ்வருட ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு தந்தி

கிழக்கில் விவசாய விரிவாக்கல் தொழிநுட்ப உதவியாளர்கள்65 பேர் நியமனம்

சேனையூர் நிருபர்

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் விவசாய விரிவாக்கல் தொழிநுட்ப உதவியாளர்கள் 65 பேரிற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று(10.10.2018) திருகோணமலை உவர்மலை விவேகனந்தாக்கல்லூரியில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகமவினால் வழங்கிவைக்கப்பட்டது.

போட்டிப்பரீட்சை மூலம் நியமன தாரர்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் தகுதியானவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய இந்நியமனங்கள் வழங்கப்படுகின்றது. கிழக்கு மாகாண சபையில் வெற்றிடமாக உள்ள பதவிகள் வெகு விரைவில் கட்டம் கட்டமாக வழங்கப்படும் என்றும் கிடைக்கப்பெறுகின்ற அரச நியமனத்ததை பயன்படுத்தி மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முன்னின்று செயற்பட வேண்டும் என்று இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம்.எஸ்.அபேகுணவர்தன கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கே.சிவநாதன் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

பிள்ளையானின் விடுதலை வேண்டி ஆலயங்களில் விசேட பிரார்த்தனை

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சி.சந்திரகாந்தனை விடுதலைசெய்ய நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் என அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சி.சந்திரகாந்தன் கைதுசெய்யப்பட்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள்பூர்த்தியடையும் நிலையில் அவரின் விடுதலை வேண்டி வாவிக்கரை வீதியில் உள்ள முருகன் ஆலயத்தின் விசேட பூஜைகள் நடைபெற்றன.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வழிபாடுகளில் கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

2005ஆம் ஆண்டு நத்தார் ஆராதனையின் போது தேவாலயத்தில் வைத்து முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சி.சந்திரகாந்தன் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்திரகாந்தன் கிழக்கு மாகாணத்தினைஆட்சி செய்த காலப்பகுதியிலேயே மட்டக்களப்பு மாவட்டம் பாரிய அபிவிருத்தி கண்டுவந்துள்ளதாகவும் அந்த அபிவிருத்தியை தொடர்ந்து அவரால் மட்டுமே செய்யமுடியும் எனவும் வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

விசாரணை என்னும் பெயரில் தமது தலைவரை சிறையில் வைத்து இழுத்தடிப்பினை இந்த நல்லாட்சி அரசாங்கம் செய்துவருவதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் காந்தராஜா தெரிவித்தார்.

இன்னும் காலத்தினை இழுத்தடிக்காமல் அவரை விடுதலைசெய்ய நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மக்கள் சந்திரகாந்தனின் விடுதலையினை எதிர்பார்த்து நிற்பதாகவும் அவரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்கவேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணி தலைவியும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான திருமதி செல்வி மனோகர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலை நாளை திறந்து வைக்கப்படும்

மட்டு. துஷாரா

மட்டக்களப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் அமரர் தந்தை

சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களின் திருவுருவச் சிலை அமைப்பு நடவடிக்கைகள் மட்டக்களப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பேருந்து நிலைய சந்தி வாவிக்கரை வீதி 01ல் இத் திருவுருவச் சிலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் திருவுருவச் சிலையானது எதிர் வரும் 2018.10.15ம் திகதி திங்கட்கிழமை மாலை 02.30 மணியளவில் திறப்பதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தந்தை செல்வா சிலை நிர்மானிப்புக் குழுவினால் தெரிவிக்கப்பபடுகின்றது.

தந்தை செல்வாவின் சிலை திறப்பு நிகழ்விற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைமைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சிக் கிளைகளின் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

சேனையூர் நிருபர்

வெளியாகியுள்ள 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திருகோணமலை மாவட்ட ரீதியாக முதலாம் இரண்டாம் இடத்தை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

த.விதுஸ், மு.சமாஸ் ஆகிய மாணவர்களே முறையே 193 புள்ளிகளை பெற்று முதலாம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளனர்.

வேப்பையடி கலைமகள் வித்தியாலய மாணவி முதலிடம்

க.விஜயரெத்தினம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சம்மாந்துறை கல்வி வலயத்தின் வேப்பையடி கலைமகள் வித்தியாலய மாணவி முத்துலிங்கம் ருஸ்மிக்கா 188 புள்ளிகளைப் பெற்று வலய மட்டத்தில் முதலிடம் பெற்று வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தெரிவித்தார்.

நாவிதன் வெளிக் கோட்டத்தில் இருக்கின்ற அதிகஷ்ட பாடசாலையான வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் இருந்து இம்மாணவி சம்மாந்துறை வலயத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்றுள்ளார் அத்தோடு இப்பாடசாலையில் அனீஸ் பாத்திமா சக்ரா 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

மஹிந்த - மைத்திரி சந்திப்பு தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு வழிசமைப்பின் வரவேற்கின்றோம்

பு.சசிகரன்

மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் அமிர்த சுரபி சஞ்சிகை வெளியீடும் பாடசாலை நாகமணி மணடபத்தில் அதிபர் ந.தர்மசீலன் தலைமையில் இடம்பெற்றுள்ள போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இப்பொழுது இலங்கை அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது இவர்கள் சந்தித்ததில் இந்த நாட்டுக்கு அல்லது தமிழ் மக்களுடைய பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு வழி சமைக்குமானால் அவர்களுடைய சந்திப்பை நாங்கள் வரவேற்கின்றோம் .

இலங்கை நாட்டில் தமிழர்களினுடைய பிரச்சனையை தீர்க்காத வரைக்கும் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியை நாங்கள் பார்க்க முடியாது.

குறித்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் மற்றும் வலய கல்வி பணிப்பாளர் க.பாஸ்கரன் 38 வது தேசிய மாணவ படையணி கட்டளை அதிகாரி ஜெய சூரிய மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்ட காணி பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற கட்டிட தொகுதியில் அமைச்சர் ஹக்கீம் தலைமையில் விசேட கூட்டம் காணிகளை விடுவிக்க இணக்கம்

மூதூர் நிருபர்

திருகோணமலை புல்மோட்டை,குச்சவெளி,தோப்பூர் நீனாக்கேணி காணி பிரச்சினைகள் தொடர்பாக பாராளுமன்ற கட்டிட தொகுதியில் நீர் வழங்கல் நகர திட்டமிடல் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கௌரவ அல் ஹாஜ் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்திற்கு கௌரவ காணி அமைச்சர் கருணா திலக ஜயரத்ன,அமைச்சின் செயலாளர்,பணிப்பாளர் நாயகம்,அமைச்சின் உயரதிகாரிகள், கௌரவ பிரதி அமைச்சர் பைசல் காஸீம் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக்,எம்.ஐ.எம்.மன்சூர்,ஏ.எல்.ஏ,எம்.மன்சூர்,முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர்,குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.பி.முபாறக், பிரதேச சபை உறுப்பினர்களான மீஸான்,அமீன் பரீஸ்,முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆசிக் முகம்மத்,வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம்,திருகோணமலை மாவட்ட நிள அளவை திணைக்கள அதிகாரிகள்,திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் புஸ்ப குமார,குச்சவெளி பிரதேச செயலாளர் தனேஸ்வரன்,செருவில பிரதேச செயலாளர் ஜயரத்ன,புல்மோட்டை ஜம்மியத்துல் உலமா மௌலவி சமது,பள்ளிவாசல்களின் தலைவர்கள்,மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் புல்மோட்டை பிரதேசத்தில் இடம்பெற்று வரும் காணி பிரச்சினை தொடர்பாக

01. காணி அனுமதி பத்திரத்துக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் காணி அனுமதி பத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்தல்

02. காணி அனுமதி பத்திரம் வழங்கப்பட்ட காணிக்குள் வன பரிபாலன திணைக்களத்தால் இடப்பட்டுள்ள கற்களை அகற்றி மக்களுக்கு குடியிருக்க மற்றும் பயிர் செய்ய அனுமதித்தல்

03. மக்களின் காணிகளுக்குள் புதை பொருள் காணிகள் என்பதை ஆராய்ந்து மக்களிடம் கையளித்தல்

04. படையினரால் பிரதேச செயலாளரால் மேலதிகமாக வழங்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக உள்ளவற்றை விடுவித்தல்

04. பிரதேச உரிமையாளரின் காணிகளை சுத்தம் செய்ய அனுமதித்தல்

05. புல்மோட்டை,குச்சவெளி பிரதேசத்தில் ஒவ்வொரு பௌத்த கோவிலுக்கும் 500 ஏக்கர் வீதம் அளவிட வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

குச்சவெளி

06. குச்சவெளி மகா ஆலங்குளம் முஸ்லிம்களின் காணிகளை சுத்தப்படுத்த அனுமத்தித்தல்

தோப்பூர் செல்வ நகர் நீநாகேணி

07. குறித்த 49 ஏக்கர் காணிகளை விடுவித்து மக்களிடம் கையளித்தல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன

குறித்த பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்க அதிபர் பிரதேசத்திலுள்ள அனுமதிப்பத்திரம் உள்ள காணிகளை படையினரிடம் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ,காணி அனுமதி பத்திரமுள்ள காணிகளுக்குள் வன பரிபாலன திணைக்களத்திடம் இருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடுகள்,அடுத்த வாரம் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஜனாதிபதியின் காணி தொடர்பான விசேட அணியின் கலந்துரையாடலில் முழு அறிக்கைகளும் சமர்ப்பித்து விடுவிக்க மாவட்டம் முழுவதும் தகவல் பிரதேச செயலகங்கள் ஊடாக இடம்பெற்றுவருவதாகவும், தற்பொழுது விவசாய காணிகளுக்குள் விவசாயம் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் எனவும்,படையினரால் மேலதிகமாக பிடிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், காணி கச்சேரி நடாத்தி மிகுதி அனுமதி பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அரசாங்க அதிபருக்கு பணிப்புரை வழங்கினார்

புல்மோட்டையில் கடந்த சில நாட்களுக்கு முன் அனுமதி பத்திரமுள்ள காணிக்குள் பௌத்த பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவ பௌத்த பிக்கு எடுத்த முயற்சி தொடர்பாக பிரதேச மக்களுடன் முறுகல் ஏற்பட்டது. இது தொடர்பாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அன்வர் அரசாங்க அதிபரிடம் கேள்வி எழுப்ப அவற்றை தடை செய்வதற்கான ஏற்பாட்டை உடனடியாக தாம் மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்தார்

குச்சவெளி பிரதேச மகா ஆலங்குளம் தொடர்பாக அரசாங்க அதிபர் உரியன நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்

கால்நடைகளுக்கான மேச்சல் நிலம் தொடர்பாகவும் அரசாங்க அதிபரிடத்தில் முன்வைக்கப்பட்டது

தோப்பூர் நீநகேணி தொடாபிக்கை 49 ஏக்கர் காணியை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆளுநர் கூட்டத்தில் கலந்து ஆலோசித்து விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்

அடுத்த வாரம் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையை இடம்பெறவுள்ள ஜனாதிபதியின் விசேட அணியின் கூட்டத்தில் அமைச்சர் ஹக்கீம் உள்ளிட்ட கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தரவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்முனையில் வாகனத் தரிப்பிடம் அமைக்க நடவடிக்கை; முதலவர் உறுதி

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை நகரின் நீண்ட கால தேவையாக இருந்து வருகின்ற வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உறுதியளித்துள்ளார்.

கல்முனை வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு மாநகர முதலவர் செயலகத்தில் நடைபெற்ற போது, அவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றே முதல்வர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்முனை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கே.எம்.சித்தீக் தலைமையிலான பிரதிநிதிகள், முதல்வருடனான இச்சந்திப்பின்போது கல்முனையில் நிலவும் குறைபாடுகள், அவசியத் தேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் முதல்வரிடம் கையளித்துள்ளனர்.

இதன்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமின் முயற்சியினால் கனடாவின் 34677 ரூபா செலவில் கல்முனையில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டம் குறித்து வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக்கூறிய முதல்வர், கல்முனை மாநகர சபை மற்றும் பொதுச் சந்தை என்பவற்றுக்கு புதிய கட்டிடத் தொகுதிகள் அமைப்பதற்கு எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

தளபாடங்கள் அன்பளிப்பு

கிண்ணியா நிருபர்

கிண்ணியா காக்கா முனை மகளிர் முஸ்லீம் பாடசாலைக்கு கணணி ஆய்வு கூடத்துக்கான ஒரு தொகை தளபாடங்களை ஆசிரியர் ஏக்கூப் பைஸல் அவர்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க. சமூகம் மற்றும் கல்விக்கான வலையமைப்பின் (SEN) செயலாளர் என்.எம்.அஹ்லக் தளபாடங்களை பிரதி அதிபர் எம்.எம். ஆஸாத் அவர்களிடம் கையளித்தார் .

நீண்ட கால குறைபாடாக தளபாடங்கள் காணப்பட்டமை அது தற்போது நிவர்த்திக்கப்பட்டுள்ளதாக பாடசாலை ஆசிரியர் ஏக்கூப் பைசல் இதன் போது தெரிவித்தார்.

தமிழர் பிரதேசங்களை உள்வாங்கி உருவாக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றை தரம் உயர்த்துக

கல்முனை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் மௌலானா வலியுறுத்து

கல்முனை நிருபர்

தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களை உள்வாங்கி உருவாக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தை நிரந்தர நீதவான் நீதிமன்றமாக தரம் உயர்த்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று கல்முனை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் எப். எம். ஏ. அன்ஸார் மௌலானா தெரிவித்தார்.

இவரின் மருதமுனை இல்லத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதவான் நீதிமன்றம் 20 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வந்த நிலையில் யுத்த சூழல் காரணமாக 1984 ஆம் ஆண்டு முதல் செயல் இழந்தது. பிற்பாடு போர் முடிவுக்கு வந்த பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் மீண்டும் இயங்க வைக்கப்பட்டது.

இது புதிய நவீன கட்டிட தொகுதியை கொண்டு உள்ளது. இதற்கு அணித்தாகவே களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் உள்ளது. மண்டூர், வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, செட்டிப்பாளையம், பேத்தாதீவு, மாங்காடு, களுவாஞ்சிக்குடி, கல்லாறு, துறைநீலாவணை, எருவில்பற்று, பேரதீவு ஆகிய இடங்களை சேர்ந்த மக்கள் இலகுவாக அணுக கூடிய அமைவிடத்தில் உள்ளது.

ஆனால் இது வாரத்தில் இரு நாட்கள் திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இயங்குகின்றது. இதனால் வழக்கு நடவடிக்கைகளோடு தொடர்புபட்ட பொதுமக்கள் ஏனைய தினங்களில் மட்டக்களப்பு, ஏறாவூர் நீதிமன்றங்களுக்கு செல்ல வேண்டி உள்ளது. இது இம்மக்களுக்கு நேர விரயம், மேலதிக பண செலவு ஆகியவற்றை ஏற்படுத்துவதும் அல்லாமல் சட்டத்தரணிகளின் சேவைகளை பெறுதல், பிணை பெறுதல், நகர்வு மனு தாக்கல் செய்தல் போன்ற விடயங்களில் தேவையற்ற தாமதங்களையும், சிரமங்களையுமே ஏற்படுத்துகின்றது.

சுற்றுலா நீதவான் நீதிமன்றமாக இது இயங்கி வருவது நீதிவான்களுக்கும் அசௌகரியங்களையும், சுமைகளையுமே கொடுக்கின்றது. மேலும் வழக்குகள் அநாவசியமாக தேங்கி கிடப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பொலிஸார், சட்டத்தரணிகள் என்று வழக்கு நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினர்களும் சங்கடங்களுக்கு உள்ளாகித்தான் உள்ளனர்.

சன தொகை அதிகரிப்பையும் கருத்தில் கொண்டு இச்சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தை நிரந்தர நீதவான் நீதிமன்றமாக தரம் உயர்த்த வேண்டும் என்று சிவில் அமைப்புகளும், பொதுமக்களும் தொடர்ச்சியாக கோரி வருகின்றபோதிலும் இதற்கான நடவடிக்கைகளை நீதி அமைச்சு உரிய அக்கறையுடன் எடுப்பதாக தெரியவில்லை. எனவே இவ்விடயத்தில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர், வெல்லாவெளி பிரதேச செயலாளர், ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் ஆகியோர் அதீத அக்கறையை வெளிப்படுத்தி பாரிய அழுத்தத்தை நீதி அமைச்சு மீது பிரயோகிக்க வேண்டும்.

இதே நேரத்தில் நிரந்தர நீதவான் நீதிமன்றமாக இச்சுற்றுலா நீதவான் நீதிமன்றம் தரம் உயர்த்தப்படுவதை குறுகிய நோக்கங்களுக்காக மட்டக்களப்பு, ஏறாவூர் நீதிமன்றங்களில் கடமையாற்றுகின்ற சட்டத்தரணிகள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நான் விசுவாசிக்கின்றேன்.

கல்முனை சாஹிரா கல்லூரியில் நடப்பட்ட மரங்கள் இனந்தெரியாதோரால் அழித்தொழிப்பு

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையை அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ், அழகிய மரங்கள் நடும் திட்டம் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதிபர் எம்.எஸ்.முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் கலந்து கொண்டு முதலாவது மரத்தை நட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் முன்னாள் அதிபர்களான எம்.சீ.ஆதம்பாவா, ஏ.எம்.ஹுஸைன், ஏ.பீர்முஹம்மது, ஐ.எல்.ஏ. மஜீத், எம்.எம். இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நட்டிவைத்தனர்.

நீர்கொழும்பில் இருந்து சுமார் ஓர் இலட்சம் பெறுமதியான பொக்ஸ் டெய்ல் வகையைச் சேர்ந்த பாம்றீ மரக் கன்றுகள் எடுத்துவரப்பட்டு அவை கல்லூரியில் நட்டிவைக்கப்பட்டன.

இத்திட்டம் பற்றி பலரும் பாராட்சி பேசிய அதேவேளை, நட்டிவைக்கப்பட்ட மரங்கள் இனந்தெரியாதோரால் வெட்டி அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி கல்லூரி அதிபரிடம் வினவிய போது, இம்மரங்கள் நட்டு இரண்டு நாட்களின் பின்னர் அதாவது 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதோர் அவற்றை அழித்துச் சென்றுள்ளனர். இதனால் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பாடசாலைச் சமூகமே அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர். இதுபற்றி கல்முனை பொலிஸிலும் வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் எமக்குத் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்-கமறூனில் முதல் தடவையாக 4 பேர் புலமையில் சித்தி

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கல்முனை கல்வி வலயத்தில் சாய்ந்தமருது கோட்டத்தில் க/மு அல் - கமறூன் பாடசாலையில் இருந்து இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 19 மாணவர்களில் 4 பேர் (21.05%) புலமைப்பரிசிலுக்கு தகுதி பெற்றுள்ளதுடன், 17 பேர் (89.47%) சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக கல்லூரி அதிபர் எம்.ஐ. நிபாயிஸ் தெரிவித்தார்.

என்.எப். நப்லா (171), எம்.ஆர்.எப். மிஹ்னா சதா (169), என்.எப். செய்னப் (166), என்.எப். சஹ்னாஸ் (163) ஆகிய புள்ளிகளைப் பெற்று புலமையில் சித்தியடைந்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து புலம்பெயர்ந்த ஒருசிலர் மாத்திரமே மக்களுக்காக உதவி செய்கிறார்கள்

மட்டு துஷாரா

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்து மேற்கத்தேய நாடுகளுக்குச் சென்றவர்களில் ஒருசிலர் மாத்திரமே எமது மக்களுக்காக உதவிகளை செய்துகொண்டிருக்கிறார்கள் பலர் தாங்கள் இருக்கும் விலாசத்தையே மறைக்கிறார்கள என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - பண்டாரியாவெளி அறிவாலயம் அமைப்பின் அனுசரணையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அறிவாலயம் ஆலோசகர் சி.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நகிழ்வில் அறிவாலயம் நிறுவுனர் அலையப்போடி நல்லரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

புலம்பெயந்து வாழுகின்ற வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மட்டக்களப்பு மக்களுக்கு பலவகையான உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் மட்டக்களப்பைச் சேர்ந்த அலையப்போடி நல்லரெத்தினம், போன்ற ஒரு சிலர் மாத்திரமே உதவிபுரிகின்றனர்.

மட்டக்களப்பு மேற்கு வலயத்தைப் பொறுத்தவரை பல தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாமல் உள்ளதுடன் பாடசாலைகளுக்கு பொருள் கொள்வனவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாது எனவும் சுற்றுநிருபம் அனுப்பியுள்ளார்கள். இதனால் எங்களால் நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதில் சிக்கல் உள்ளது.பல்கலைக் கழகத்திற்கு சட்டத்துறை, விஞ்ஞானத்துறை மற்றும் கணிதத்துறைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் என்னைத் தொடர்பு கொண்டால் அவர்களின் பல்கலைக் கழக கல்விக்கு முடியும் வரை உதவுவதற்குத் தயாராக உள்ளேன்.

கலை மற்றும் வர்த்தகத்துறைக்கு தெரிவு செய்யப்பட்ட வறிய நிலையிலுள்ள மாணவர்களும் தொடர்பு கொண்டால் அவர்களின் கல்விக்கு உதவுவதற்கு நான் தயாராக உள்ளோம் என்றார்.

குளம் புனரமைப்பால் 400 ஏக்கர் விவசாய நிலங்கள் நன்மையடைகிறது

கிண்ணியா நிருபர்

100 நாட்களில் 200 வேலை திட்டத்தின் அடிப்படையில் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சீ. அன்வர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தோப்பூர் புளியங்குளம் சீர்திருத்தப் பணிக்கான உத்தியோகபூர்வமாக பணி திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் அவர்களினால் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதன்போது பிரதேச சபை உறுப்பினர் றிபாஸ் விவசாய சம்மேளனத்தின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இவ்வேலைத்திட்டத்திற்காக ரூபா இருபது இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளதுடன் சுமார் 400ஏக்கர் விவசாய வயல் நிலங்களை விவசாய செய்கை மூலம் நன்மை அடைவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அடிக்கடி செயலிழக்கும் தன்னியக்க இயந்திரம்

எம்.எம்.ஜபீர்

சம்மாந்துறை இலங்கை வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் (ஏ.ரீ.எம்) அடிக்கடி செயலிழப்பதாக வடிக்கையாளர்களும் அரச உத்தியோகத்தர்களும் சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

சம்மாந்துறை பிரதேசமானது 136 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும், 51 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவையும் கொண்டதாகவும், சுமார் 72 ஆயிரத்திற்கு மேற்பட்ட சனத்தொகையை கொண்டதாகவும் காணப்படும் இவ் பிரதேசத்தில் இலங்கை வங்கியின் ஒரேயொரு தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் (ஏ.ரீ.எம்) மாத்திமே காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் வங்கி நிர்வாகத்திடம் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரைக்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதிகமான மக்கள் சனத்தொகையை கொண்ட பிரதேசத்திலுள்ள வங்கி கிளையின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் நவீன மயப்படுத்தாமல் இருப்பதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பு - ஸ்ரீலங்கா மற்றும் மக்கள் வங்கி சம்மாந்துறை கிளை இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர்கள் தின விழா நிகழ்வு அமைப்பின் தலைவர், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் தானீஷ் றகுமத்துல்லாஹ் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை சாஹிரா கல்லூரியில் காலை ஆராதனை சதுக்கம் திறந்து வைப்பு

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் சுமார் 5 இலட்சம் பெறுமதியான காலை ஆராதனை சதுக்கம் ஒன்று கிழக்கின் மாணிக்கம் ஏ.எல்.காபூல் ஆஸாத்தின் உதவியோடு கட்டப்பட்டு, சர்வதேச சிறுவர் தினத்தன்று மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப் பட்டது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக ஏ.எல்.காபூல் ஆஸாத் கலந்து கொண்டதோடு, அவருக்கு கல்லூரி அதிபர் எம்.எஸ். முஹம்மட் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இதன் போது கல்வி மற்றும் விளையாட்டு துறைகளில் தங்களது சாதனையை வெளிக்காட்டிய கல்லூரி மாணவர்களுக்கு கலந்து கொண்ட அதிதிகள் மற்றும் ஆசிரியர்கள் சான்றிதழ்கள் மற்றும் வெற்றி கிண்ணங்கள் வழங்கி வைத்தனர்.

நிகழ்வில், பாடசாலையின் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழையமாணவர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பான்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

கிண்ணியா நிருபர்

கிண்ணியா மத்திய கல்லூரியில் பல வருட காலமாக குறைபாடாக காணப்பட்ட பேன்ட் (Band) வாத்திய உபகரண குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக திருகோணமலை மாவட்ட கல்வி அமைச்சு கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பேன்ட் (Band) வாத்திய உபகரணங்களை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு பாடசாலையின் அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியா வலயகல்வி பணிப்பாளர் திருமதி இஸட்.எம்.எம்.முனவ்வரா நளீம், கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், நகரசபை உறுப்பினர் ரிஸ்வி, பிரதேச சபை உறுப்பினர் தௌபீக், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சதாத் கரீம், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சபையைக் குழப்பும் உறுப்பினர்கள் ஒரு மாத காலம் இடைநிறுத்தப்படுவர்!

கல்முனை மாநகர முதல்வர் றகீப் எச்சரிக்கை

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வுகளை குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை சபையில் இருந்து வெளியேற்றுவதற்கும் ஒரு மாத காலம் இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

மாநகர சபை கட்டளைகள் சட்டத்தில் முதல்வருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையே நான் பயன்படுத்தி வருகின்றேன். எதிரணியினர் கூறுவது போன்று ஹிட்லர் போன்று செயற்படவுமில்லை, அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடவுமில்லை. எதிரணியினர் எதிர்பார்ப்பது போன்று பொம்மை முதல்வராக இருக்கவும் நான் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபை முதல்வர் செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட ஊடக மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு முதல்வர் றகீப் மேலும் தெரிவிக்கையில்;

கல்முனை மாநகர சபையில் நிதி மோசடிகள் இடம்பெறுவதாகவும் மாநகர முதல்வராகிய நான், ஹிட்லர் போன்று செயற்பட்டு, வரம்பு மீறி தன்னிச்சையாக அதிகாரங்களை பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டு எமது மாநகர சபையின் எதிரணி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, கையெழுத்திட்டு, சில தினங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் கையளித்திருப்பதுடன் என்னை பதவியில் இருந்து அகற்றுமாறும் கோரியுள்ளனர்.

அத்துடன் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். பாவம் அவர்கள், சட்டம் தெரியாமல், சும்மா வரிந்து கட்டிக் கொண்டு திரிகின்றனர்.

முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்றே எதிரணியினர் செயற்படுகின்றனர். உண்மையில் கல்முனை மாநகர சபையில் என்ன நடைபெறுகிறது என்பதில் எல்லோரும் தெளிவு பெற வேண்டும். எதிராணியினரின் குற்றச்சாட்டுகளில் ஒன்று மாதாந்த கணக்கறிக்கை வெளிப்படுவதில்லை என்பதாகும்.

கல்முனை மாநகர சபையின் வரலாற்றில் எந்தவொரு முதல்வரின் காலத்திலும் மாதாந்த கணக்கறிக்கை பொதுச் சபையிலோ நிதிக்குழுவிலோ சமர்ப்பித்த சரித்திரமே கிடையாது. முன்னைய ஐந்து முதல்வர்களின் காலத்தில் நானும் ஓர் உறுப்பினராக தொடர்ச்சியாக பணியாற்றியுள்ளேன். அவ்வேளையில் மாதாந்த கணக்கறிக்கை நிதிக்குழுவில் கூட சமர்ப்பிக்கப்படுவதில்லை. ஆனால் நான் மாதாந்த கணக்கறிக்கையை நிதிக்குழுவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

எமது பெக்கோ (JCB) வாகனத்திற்கான டயர் மஞ்சந்தொடுவாயில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஏன் கல்முனையில் வாங்கவில்லை என்று எதிரணி உறுப்பினர்கள் கேட்கிறார்கள். கொட்டேஷன் கோரப்பட்டு, குறைந்த விலை சொல்லப்படுகின்ற இடத்தில்தான் பொருள் கொள்வனவு செய்யப்படுவது வழமை. அதே நடைமுறையே பெக்கோ டயர் கொள்வனவிலும் கைக்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்வரின் உத்தியோகபூர்வ வாகனம் திருத்தப்பட்டதிலும் பிரச்சினை எழுப்பப்படுகிறது. இதற்கு நிதிக்குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லையாம். கடந்த ஆறு வருட காலமாக பாவிக்கப்பட்டு வருகின்ற இந்த வாகனம் இதுவரை பாரிய திருத்த வேலை செய்யப்பட்டு, பராமரிக்கப்படவில்லை. இதனால் வாகனத்தின் கண்டிஷன் சரியாக இல்லை என சாரதியினால் கூறப்பட்டதற்கமைவாக கொழும்பிலுள்ள நிஸாம் கம்பெனிக்கு அனுப்பி பரீட்சித்தபோது, இன்னும் 250 கிலோ மீட்டர் தூரம் பயணித்தால் வாகனத்தின் இன்ஜின் இறுகிவிடும் என்ற அறிக்கை கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து உரிய கொட்டேஷன் கோரப்பட்டு, ஒப்பந்தம் எல்லாம் செய்யப்பட்டு, இந்த வாகனம் திருத்தப்பட்டுள்ளது. இதற்கு நிதிக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் இந்த வாகனத்தை திருத்தம் செய்யாமல் அப்படியே கைவிட வேண்டுமென்றா எதிர்பார்க்கிறார்கள்?

அது போன்றே, பல வருடங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்டு, பழுதடைந்த நிலையில் இருந்த சி.சி.ரி.வி. பாதுகாப்பு கமரா System மீளமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதுவும் முறைப்படி கொட்டேஷன் கோரப்பட்டு, சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. இதற்கும் நிதிக்குழுவின் அனுமதி பெறப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிறைய சொத்துக்களும் வாகனங்களும் உள்ள கல்முனை மாநகர சபையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு முதல்வராகிய எனக்கும் நிர்வாகத்திற்கும் உள்ளது. அவசரமாக செய்யப்பட வேண்டிய இவ்வேலைக்கு நிதிக்குழுவினரின் அனுமதி கிடைக்கும் வரை காத்திருக்க முடியுமா?

கடந்த மாத நிதிக்குழு கூட்டத்திற்கு அதன் உறுப்பினர்கள் ஐவரும் வரவில்லை. அக்கூட்டத்தில் மாதாந்த கணக்கறிக்கையும் முதல்வர் வாகன திருத்தத்திற்கான செலவு விபரங்கள் மற்றும் சி.சி.ரி.வி. பாதுகாப்பு கமராக்கள் மீளமைப்பு செய்தமைக்கான செலவு விபரங்கள் எல்லாம் சமர்ப்பிக்கப்படவிருந்தன. ஆனால் இவர்கள் இக்கூட்டத்திற்கு சமூகமளிக்காமல் இருந்து விட்டு நிதிக்குழுவின் அனுமதி பெறப்படாமல் குறித்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

நிதிக்குழு கூட்டத்திற்கு இவர்கள் வரவில்லை என்பதற்காக அவசியமானதும் அவசரமானதுமான வேலைகளை செய்யாமல் இருக்க முடியுமா? மக்களுக்கான சேவைகளை முடக்க முடியுமா? அவ்வாறானால் மாநகர சபையில் முதல்வரின் வகிபாகம் என்ன? சட்டப்படி முதல்வருக்கு உரித்தான அதிகாரங்களை பயன்படுத்தி, மாநகர சபையின் அன்றாட செயற்பாடுகளை கொண்டு நடத்த வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

ஒரு மாநகர சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி முதல்வர்தான் என்பது சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன்படியே எனது கடமைகளையும் பொறுப்புகளையும் ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றி வருகின்றேன்.

நிதிக்குழுவிலோ பொதுச் சபை அமர்வுகளிலோ எதிரணி உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதற்காக நான் மாநகர சபையை இழுத்து மூடி விட்டு செல்ல வேண்டும் என்றா இவர்கள் எதிர்பார்க்கின்றனர். நிதிக்குழுவின் அதிகாரம் என்ன? பயன்பாடு என்ன என்பது நிதிக்குழு உறுப்பினர்களுக்கு தெரியாமல் இருக்கிறது.

அவர்கள் அங்கீகாரம் தந்தால்தான் எதனையும் செயற்படுத்த முடியும் என்று அவர்கள் நினைப்பது தவறாகும். அது அவர்களது அறியாமையாகும். அவர்கள் கணக்குகளை பரிசீலிக்க முடியும். ஆலோசனைகளை முன்வைக்க முடியும். நிதிக்குழு என்பது வெளிப்படைத்தன்மைக்கானதே தவிர அதுதான் அடிப்படையானது என்றில்லை.

எல்லா நிலையியல் குழுக்களும் இவ்வாறுதான். ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைக்கலாம். அவற்றை பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அதன் அங்கீகாரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதென்பது முதல்வரின் பொறுப்பாகும்.

எதிராணியினரின் மற்றொரு கோரிக்கை இந்த ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாகும். எமது மாநகர சபைக்கு அரசியல் சபை வருவதற்கு முன்னர் 2018-01-01 ஆம் திகதி இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் ஆணையாளர் தலைமையிலான முகாமைத்துவக் குழுவினரால் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும். எதிரணியினர் கோருவது போன்று இடைக்கால பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

நடைமுறையிலுள்ள பட்ஜெட்டை பயன்படுத்தியே ஐயாயிரம் ரூபா தொலைபேசி கொடுப்பனவை மக்களின் வரிப்பணத்தில் இருந்து சண்டை பிடித்து இந்த உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இதற்காக மாதாந்தம் இரண்டு இலட்சத்து ஐயாயிரம் ரூபா மாநகர சபையின் வருமானத்தில் இருந்து ஒதுக்க வேண்டியுள்ளது. பாரிய நிதி நெருக்கடிக்கு மத்தியில் இத்தனையும் ஒரு சுமையாக மாநகர சபை பொறுப்பேற்றுள்ளது. இருக்கின்ற பட்ஜெட்டை நிராகரிக்கின்ற இவர்கள் தமக்கான ஐயாயிரம் ரூபாவை பெறுவதற்கு அந்த பட்ஜெட்டை பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றால் இவர்களது மனநிலை எப்படிப்பட்டது என்பதை புரிந்து கொள்ளலாம்.

எமது மாநகர சபையில் எதிரணி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் தாம் சொல்கின்றபடியே முதல்வர் செயற்பட வேண்டும் எனவும் மாநகர சபையின் நிர்வாகத்தை தமது பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் எனவும் முதல்வர் பொம்மையாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்கு காரணம் மாநகர சபை கட்டளைகள் சட்டம் தொடர்பில் அவர்கள் அறியாதிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

ஆளுநரிடம் மகஜர் கொடுத்து விட்டார்கள் என்பதற்காக, ஆர்ப்பாட்டம் செய்து விட்டார்கள் என்பதற்காக என்னை முதல்வர் பதவியில் இருந்து விலக்கி விட முடியாது. எதிராணியினரின் முறைப்பாட்டில் ஆளுநர் திருப்தி கண்டால், ஓர் ஆணைக் குழுவை நியமித்து, என் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்து, அவை நிரூபிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

நான் எல்லா உறுப்பினர்களையும் அனுசரித்தே நடக்கிறேன். அவர்களால் முன்வைக்கப்படுகின்ற மக்கள் நலன்சார்ந்த கோரிக்கைகளை முடியுமானவரை, மாநகர சபையின் வசத்திற்கேற்ப நிறைவேற்றிக் கொடுக்கின்றேன். ஆனால் ஒவ்வொரு உறுப்பினரதும் அரசியலுக்கு நான் முண்டுகொடுக்க முடியாது. மக்களுக்கான சேவைகளையே எம்மால் நிறைவேற்ற முடியும்.

அண்மையில் சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து வந்த கோரிக்கைக்கமைவாக ஒரு பள்ளிவாசல் உள்ளிட்ட சில இடங்களில் தெரு விளக்கு போடுவதற்காக என்னால் அதற்குரிய ஊழியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் அவர்களை அப்பிரதேசத்தை சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் வழிமறித்து, திருப்பி அனுப்பியிருந்தனர். மின்குமிழ் போடுவதாக இருந்தால் அவர்களது அனுமதியுடன் தான் செய்ய வேண்டும் என்பது அவர்களது பிடிவாதமாக இருக்கிறது.

ஏற்கனவே 500 மின்குமிழ்கள் மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு, 24 வட்டாரங்களுக்கும் என 25 ஆக பிரித்து, ஒரு வட்டாரத்திற்கு தலா 21 மின்குமிழ்கள் வீதம் உறுப்பினர்களின் பட்டியலுக்கமைவாக அவர்களது பிரசன்னத்துடன்தான் பழுதடைந்த மின்குமிழ்களுக்கு பதிலாக போடப்பட்டன. மேலும் சில இடங்களில் பழுதடைந்தமைக்காகவும் புதிதாக சில இடங்களில் மின் விளக்கு போட வேண்டும் எனவும் எம்மிடம் நேரடியாக முறைப்பாடு செய்யப்பட்ட இடங்களுக்கு தனி நபர்களினால் வாங்கித்தரப்படுகின்ற மின்குமிழ்களை போட நடவடிக்கை எடுக்கின்றபோது தம்மை சம்மந்தப்படுத்தித்தான் போட வேண்டும் என்று அந்த உறுப்பினர்கள் தடுக்கிறார்கள் என்றால் இது என்ன அரசியல்?

மின்குமிழ், மின் கம்பத்திற்கேயன்றி உறுப்பினர்களுக்கல்ல. இருளான இடத்தை வெளிச்சமூட்டுமாறு எவராவது மின்குமிழ் வாங்கித்தந்தால், அதனை நிறைவேற்றிக் கொடுப்பது எமது பொறுப்பாகும். அதனை செயற்படுத்த உறுப்பினர்களிடம் கேட்க வேண்டும் என்ற தேவை எமக்கில்லை. உறுப்பினர்கள் பல்ப் அரசியல் செய்ய முயன்றால் அதற்கு நான் உடந்தையாக முடியாது.

எந்தவொரு விடயத்தையும் மத்திய அரசினதும் மாகாண சபையினதும் கணக்காய்வு அதிகாரிகள் (Audit Officers) வந்து பரிசோதனை மேற்கொள்வது வழமை. அதற்கேற்பவே எல்லாவற்றையும் செய்ய வேண்டியுள்ளது. நாம் நினைப்பது போன்று எதனையும் செய்ய முடியாது. மாநகர சபையில் ஏதும் நிதி மோசடிகள் இடம்பெற்றால் அதனை இந்த கணக்காய்வு அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்கள்.

கல்முனை மாநகர சபையை முடக்க வேண்டும் என்பதற்காக அரசியல் பின்புலத்துடன் எதிரணியினர் முன்னெடுக்கின்ற சதிகள் அனைத்தையும் முறியடித்து, மாநகர சபையை மிகவும் சிறப்பாக முன்னோக்கி கொண்டு செல்கிறோம் என்பதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது.

அதனால் என் மீதும் கட்சி மீதும் சேறுபூச வேண்டும் என்பதற்காக- மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். சில தனி நபர்களின் அரசியலுக்கு நான் துணை போகவில்லை என்பதற்காக, அவர்களது தனிப்பட்ட அபிலாஷைகளை நான் நிறைவேற்றி கொடுக்கவில்லை என்பதற்காக என் மீது அபாண்டங்களை சுமத்தியுள்ளனர். நான் இதற்ககெல்லாம் அஞ்சி, அடிபணிய மாட்டேன். மக்களுக்கான எனது பணியை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுப்பேன்.

எந்த நியாயமான காரணமுமின்றி தாமே பெரும்பான்மையினர் என்பதற்காக மாநகர சபை அமர்வுகளை குழப்பும் செயற்பாடுகளில் எதிரணி உறுப்பினர்கள் ஈடுபடுகின்றனர். சபையில் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். எதிர்காலங்களில் சபை அமர்வுகளின்போது குழப்பம் விளைவிக்க முற்படுகின்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை சபையில் இருந்து வெளியேற்றுவதற்கும் அவர்களை ஒரு மாத காலம் இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

கல்முனை ஸாஹிராவில் மாணவர் விடுதியை சுத்தம் செய்யும் நிகழ்வு

'சூழலை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் மாணவர் விடுதிச் சூழல் சுத்தம் செய்யும் செயற்பாடு பாடசாலையில் இடம் பெற்றது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.பைறூஸின் முழுப்பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த செயற்பாட்டில் கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் மாணவர் விடுதியின் சில பகுதிகள் சூழல் மாசயீம் விதம் பழுதடைந்திருந்த நிலையில் காணப்பட்டதுடன் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனை கருத்தில் கொண்டு இரண்டாம் கட்டமாக கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஏ.எம்.பைறூஸினால் கல்லூரியின் விடுதிச் சூழல் துப்பரவுப் பணிகள் கல்முனை மாநகரசபையின் ஒத்துழைப்புடன் ட்ரெக்டர் மூலம் உடன் சுத்தம் செய்யப்பட்டதுடன் இவ்விடுதி சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதற்கானநடவடிக்கைகளும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பைறூஸினால் மேற்கொள்ளப்பட்டது.

மாணவர் விடுதிற்கான கள விஜயத்தில் விடுதியின் சூழல்,சாப்பாடு சமையல் அறைகள், மாணவர்கள் சாப்பாட்டு அறைகள், தங்குமிடங்கள் என்பன குறித்து கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.பைறூஸினால் கண்காணிக்கப்பட்டதுடன் சூழலை அழகுபடுத்தல் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் ஒத்துழைப்புடன் மாணவர் விடுதிச் சூழல் குறித்து கவனம் செலுத்துவதாகவும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஏ.எம்.பைறூஸ் கல்லூரி நிர்வாகத்தினரிடம் தெரிவித்தார்.

கல்லூரியின் மாணவர் விடுதியின் சூழலை உடனடியாக சுத்தம் செய்வதற்கான பணிகளை மேற்கொண்டமைக்கு கல்லூரியின் சார்பில் அதிபர் எம்.எஸ்.முஹம்மட் மற்றும் விடுதிப் பொறுப்பாசிரியர் எம்.எஸ்.ஏ.ஸிராஜ் மற்றும் கல்லூரியின் நிர்வாகத்தினர் சார்பில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.ரக்கீப், ஆணையாளர் எம்.சி.அன்ஸார் மற்றும் மாநகரசபை உறுப்பினர் ஏ.எம்.பைறூஸ் ஆகியோருக்கு தமது நன்றிகளை தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் பாடசாலை காணிகளில் இருக்கும் இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்

திருக்கோவில் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளின் காணிகளில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டுவதோடு திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெரும் இல்மனைட் அகழ்விகையும் தடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடகிழக்கு அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முப்படைகள் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திபால சிறிசேனா அவர்களின் தலைமையில் பாராளுமன்ற கட்டத் தொகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தின் போது ஜனாதிபதியிடம் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து இருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட திருக்கோவில் 03 கிராமத்தில் அமைந்தள்ள விஸ்வ துளசி வித்தியாலயம், அக்கரைப்பற்று செஞ்ஜோன் வித்தியாலயம் மற்றும் ஆலையடிவேம்பு கனகர் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளின் காணிகளை இராணுவம் தங்களின் தேவைகளுக்காகையகப்படுத்தி இருப்பதாகவும் இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி அந்த காணியை மாணவர்களின் கற்றல் செயற் திட்டங்களுக்கு வழங்கி இடமளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை திருக்கோவில் பிரதேசத்தில் அவுஸ்ரேலிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படவுள்ள இல்மனைட அகழ்வுக்கான பணிகளை உடனடியாக நிறுத்தி அப்பிரதேசத்தில் தற்போது எற்பட்டுள்ள கடல் அரிப்பினை தடுப்பதற்கான நிரந்தர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு இடம்பெருமானால் சுமார் 15500க்கு மேற்பட்டோர் தமது வாழ்வாதார தொழிலை இழக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுவதுடன் சுற்றுசுழல் மற்றும் விவசாயிகள் பாதிக்கப்படுவதுடன் பௌதீக,மனித வள பாதிப்பக்கள் ஏற்படும் ஆபாயம் காணப்படுகின்றன. என சுற்றுச் சூழலுக்கு பொறுப்பாக இருக்கும் ஜனாதிபதி அவர்களே தாங்கள் கூடிய கவனம் செலுத்தி மேற்படிப் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை விரைந்து வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்து நீண்ட நேரம் கார சாரமான விவாதத்தில் தான் ஈடுபட்டு இருந்தாக பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதி மைத்திபால சிறிசேனா அவர்கள் கடலோர சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரிகளிடம் வினவியபோது அவர்கள் இது தொடர்பாக தமக்கு ஒன்றும் தெரியாது என தெரிவித்த போது ஜனாதிபதி அவர்களிடம் இதனை உடனடியாக தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவித்து இருந்ததுடன் எதிர்வரும் மாதம் 08ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரின் கோரிக்கைகளுக்கு நல்லதொரு தீர்வை வழங்க எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்கள் தெரிவித்து இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

சூரியா ஆலை வீதியிை புனரமைக்க கோரிக்கை

துறைநீலாவணை நிருபர்

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக சபைக்குட்பட்ட எருவில் கிழக்கு சூரியா ஆலை வீதி கவனிப்பாரற்ற நிலையில் புனரமைப்பற்று காணப்படுவதாக சமூகமட்டக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கிழக்கு பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதனால் இரவு மற்றும் பகல் வேளைகளில் பயணிக்கும்போது பாதசாரிகள் இடறி விழுந்து பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகியுள்ளதாக குறித்த பிரதேச வாழ் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெரு மழை காலத்தில் இவ்வீதி வெள்ளத்தில் மூழ்குவதனால் குறித்த பாதையை பயன்படுத்தும் குறுமண்வெளி, மகிழூர், எருவில், களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேச வாழ் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாக தெரியவருகிறது.

கல்முனை மட்டு பிரதான பாதையில் செயலகப் பிரிவினை அடுத்துள்ள எருவில் கிராமத்திற்கு செல்லும் இவ்வீதி 200 மீற்றரே புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் மீதமாகவுள்ள மூந்நூறு மீற்றர் பாதை புனரமைப்பற்று வெள்ளத்தில் மூழ்கும் நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த எருவில் கிராம மக்களின் பாதை மார்க்கத்தினை கவனத்திற்கொண்டு இவ்வீதியினை முழுமையாக கொங்கீறீட் பாதையாக புனரமைத்து தருமாறு சமூகமட்டக் குழுக்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மருதமுனையில் நுளம்பு ஒழிப்பு பரிசோதனை நடவடிக்கை

அஸ்லம் எஸ்.மௌலானா

சுகாதார அமைச்சின் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மருதமுனை பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் கிணறுகளில் விசேட பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நுளம்புகள் பெருகக்கூடிய கழிக்கப்பட்ட பிளாஸ்ட்ரிக் பாத்திரங்கள், போத்தல்கள், சிரட்டைகள், தயிர் மற்றும் யோகட் டப்பாக்கள் உள்ளிட்ட கொள்கலன்கள் கல்முனை மாநகர சபையின் அனுசரணையுடன் சேகரித்து அகற்றப்பட்டன.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் பங்கேற்புடன் இடம்பெற்ற இவ்விசேட நடவடிக்கையின்போது கல்முனை தெற்கு பிரிவுக்கான மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பரிசோதனைகளில் ஈடுபட்டதுடன் சூழல். சுற்றாடல் சுத்தம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கினர்.

அமைதிப் புயல் கலை மன்றத்தின் கலை விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் மன்றத்தின் தலைவரும் நாவிதன்வெளி கலாசார சபையின் பொதுச் செயலாளருமான ஏ.எல்.எம். இம்தியாஸ் தலைமையில் சாளம்பைக் கேணி-03 அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன் போது, சிறுவர் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் பிரதம அதிதி பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

படம்: கல்முனை நிருபர்

சமூக பிணக்குககள் குறைந்த போதிலும் சிறுவர் துஸ்பிரயோகம் அதிகரித்து வருவது கவலைக்குரியது

ஜெஸீர் எம் ஹனீபா

சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஸ்ரீ சுபத்திரா ராம முன்பள்ளி மாணவர்களின் சந்தை திறப்பு சங்கைக்குரிய ரண்முத்துகல சங்கரத்ன தலைமையில் நடைபெற்ற போது அதிதியாக கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.உங்கள் பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள். யாருடன் பழகுகிறார்கள் என்பதனை அவதானிக்க வேண்டும். ஏனெனில் பொலிஸ் நிலையங்களுக்கு பல்வேறு விதமான துஸ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் சில முறைப்பாடுகளே கிடைக்கின்றது. நூறு வீதமான முறைப்பாடுகள் எமக்கு கிடைப்பதில்லை. சில விடயங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. கிடைக்கப்பெறும் முறைப்பாட்டின் அடிப்படையில் பார்த்தால் நாற்பது வயதைத் தாண்டிய நபர்களே பெரும்பாலும் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுவதாக அறியமுடிகிறது.

அதிலும் விசேடமாக குடும்ப உறவினர்களே இத்துஸ்பிரயோகத்தில் ஈடுபடுவதை காண கூடியதாக உள்ளது. நாங்கள் எமது உறவினர்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதை நாம் நம்புகின்றோம். ஆனால் அப்படி அல்ல. எமது குழந்தைகளை நாம் தான் வளர்க்க வேண்டும். பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புகின்ற முச்சக்கர வண்டி ஓட்டுனர்களின் செயற்பாடுகளை அவதானியுங்கள். உங்கள் பிள்ளைகள் ஒரு சில சந்தர்ப்பங்களில் வாகன ஓட்டுனர்கள் தங்கள் மடிகளில் வைத்து அழைத்து செல்வதை நாம் கண்டிருக்கின்றோம். இந்த நிலைப்பாடு மாற வேண்டும்.இவ்வாறான செயற்பாடுகளால் தான் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே இந்த விடயங்கள் பாரதூரமானவை. சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் எதிர்கால தலைவர்கள். சிறுவயதில் துஸ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் ஆகியவற்றில் தனக்கான நீதியை பெற்ற போதிலும் பருவம் அடைந்து சமூகத்தில் இணைந்து வாழ்வதில் சவால்களை எதிர்கொள்கிறனர். அவர்களால் அச் சமூகத்தில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

அவர்கள் சமூகத்தின் பல்வேறு பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்படுகிறது. பிள்ளைகளுக்கு அளவான சுதந்திரம் வழங்க வேண்டும். மிதமிஞ்சிய சுதந்திரம் வழங்குவதன் ஊடாக உங்களின் பிள்ளைகளை பாதுகாக்க உங்களால் முடியாது. அதே வேளை பாதுகாப்பு பிள்ளைகள் விடயத்தில் முக்கியமாக இருக்க வேண்டும். பாடசாலை அதிபர் ஆசிரியர், பெற்றோர்களது செயற்பாடுகளை பார்த்து தான் பிள்ளைகள் வளர்கின்றார்கள். நீங்கள் சரியாக செயற்படாவிட்டால் பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும். இதன் பின் பிள்ளைகளை திருத்தி எடுப்பது என்பது கஸ்டமான விடயம். அதுமட்டுமல்ல, போதைவஸ்து பிரச்சினை தற்போது தலைதூக்கி உள்ளது.

இதனை தடுப்பதற்கு கலால் திணைக்களம் உள்ளது. அதன் செயற்பாடுகள் எவை என்பது எமது மக்களிற்கு தெரியாது உள்ளது. ஒரு சிலருக்கு அவ்வாறான திணைக்களம் உள்ளதா என்பதே தெரியாமல் இருக்கிறது. போதைப் பொருளை கட்டுப்படுத்துவது அத்திணைக்களத்தின் பிரதான பணியாகும். நாட்டின்சட்டத்தினையும் ஒழுங்கையும் செயற்படுத்துவது தான் பொலிஸாரின் கடமையாகும். பொலிஸாரும் போதைப்பொருளை கட்டுப்படுத்த உதவி செய்கின்றனர். எமது பிரதேசத்தில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் பொலிஸார் 163 பேர் தான் இருக்கின்றார்கள். இதில் ஒரு பங்கினர் விசேட பிரமுகர் பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டுள்ளனர். மற்றயவர்கள் விசேட கடமைகள், ஏனைய பாதுகாப்பு கடமைகளுக்காகவும் பொலிஸ் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் உள்ள கடமைகளுக்கும் நீதிமன்றம் போன்ற செயற்பாடுகளுக்கும் கடமைக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். இச்சொற்பமான பொலிஸாரை வைத்துக்கொண்டு 75 பிரிவுகளை கொண்டுள்ள கல்முனை பொலிஸ் பிராந்தியத்தில் செயற்படுவது என்பது கஷ்டமான விடயமாகும். வாகனப் பற்றாக்குறை, பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக ஒரு சில விடயங்களை 100 வீதம் கட்டுப்படுத்த முடியாது உள்ளது.

ஆனால் வழக்குகளை தொடர்ச்சியாக எடுத்து கொண்டு வருகின்றோம். கைதுகள் நடக்கின்றது. நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை கொண்டு சேர்க்கின்றோம். நீதிமன்றத்தின் ஊடாக அபராதம் விதிக்கப்படுகிறது. தண்டனை பெற்று கொடுக்கப்படுகிறது.பொலிஸார் ஒரு குற்றச்செயலில் ஈடுபடும் நபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி நீதிவானினால் தண்டனை பெற்றுக்கொடுத்தாலும் அதே நபர் மீண்டும் குறித்த குற்றத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் போது மக்கள் மத்தியில் பொலிஸார் மீது வீண் விமர்சனங்களை முன்வைப்பதை காண முடிகிறது. அதாவது ஏதாவது அந்த நபரிடம் பொலிஸார் வாங்கி விட்டார்கள். இலஞ்சம் பெற்றுவிட்டார்கள் என கதைப்பதாகும். நாங்கள் வாங்குவது இல்லை. அதற்கான அவசியம் இல்லை. எங்கள் வாழ்க்கையை நடாத்தி செல்வதற்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படுகிறது. எவரிடமும் பிச்சை எடுக்க வேண்டிய அவசியமும் எமக்கில்லை. ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறான நடவடிக்கையில் சந்தர்ப்ப சூழலில் ஈடுபடுவதை மறுக்க இயலாதுதான். அவ்வாறானவர்கள் சம்பந்தமான எமது இலங்கை பொலிஸ் ஏற்பாடுகளை மேற்கொண்டு இருக்கிறது. நிறைய பேருக்கு இடமாற்றம் வழங்கி இருக்கின்றோம். சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளோம். எனவே பெற்றோர்கள் பாடசாலைக்கு செல்லும் தமது பிள்ளைகள் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தை நாடி பாடசாலைக்கு வருகிறார்களா? படிக்கின்றார்களா ? என விசாரிக்க வேண்டும்.

எமக்கு இப்பிரதேச தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் தொலைபேசி ஊடாக தொடர்பினை மேற்கொண்டு க.பொ.த சாதாரணம் படிக்கின்ற நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றார்கள் இல்லை என சுட்டிக்காட்டினார்.அம் மாணவர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு நாளும் ஆசியரியர்களை அனுப்பி கொண்டிருக்க முடியாது. இதனை கட்டுப்படுத்த ஏதாவது செய்யுங்கள் என கோரிக்கை விடுத்தார். இதனை கட்டுப்படுத்துவது யார். அம்மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள். இது அவர்களின் கடப்பாடு. ஆனால் சமூக நிறுவனங்களை எல்லாம் தாண்டி பொலிஸ் நிலையத்திற்கு இவ்வாறு பிரச்சினை வருகின்றது.

எனவே இதில் கவனம் எடுப்பது அனைவரதும் கடமையாகும். இன்னும் போதைவஸ்து பிரச்சினை சிறுவர் துஸ்பிரயோகம் ஆகியவை கூடிச்செல்ல இடமளிக்க முடியாது. அதை கட்டுப்படுத்த சகலரும் விழிப்பாக இருக்க வேண்டும் என கூறினார்.

கமநல காப்புறுதி சபை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது

கிளிநொச்சி பழையய மாவட்ட செயலக வளாகத்தில் விவசாய அமைச்சின் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை அலுவலகம் இன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. குறிதத் வளாகத்தில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபை அமைந்திருந்த கட்டட தொகுதியில் குறித்த அலுவலகம் விவசாய அமைசசர் மகிந்த அமரவீர அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, பிரதி அமைச்சர்களான அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் உத்தியோகபூர்வ ஏட்டில் பதிவு செய்தார்.

தொடர்ந்து குறித்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,

குறித்த காப்புறுதி அலுவலகம் பிரதி அமைச்சர் அங்கயன் அவர்களின் வேண்டுகையின் பெயரில் இன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. விவசாய செய்கை தொடர்பில் எமது ஜனாதிபதி அவர்களின் எண்ணத்திற்கமைய மானிய உரத்துடன் விவசாய காப்புறுதியை வழங்கப்படவுள்ளது. அதற்கமைய இதுவரை தெரிவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளுடன் மிளகாய், வெங்காயம், சோயா உள்ளிட்ட மேலும் பல விவசாய உற்பத்திகளிற்கு இலவச காப்புறுதி வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். இது போன்று நாம் வடக்கில் பல விவசாய வலயங்களை உருவாக்குகின்றோம். கயூ, கச்சான், உழுந்து என பல்வேறு வலயங்களை உருவாக்கி விவசாயத்தை மேம்படுத்த உள்ளாம். அதற்காக குறித்த வேலைத்திட்டத்தை தற்புாது அறிமுகம் செய்வதாக அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

வவுனியாவில் பத்தாயிரம் பனை விதை விதைப்பு

வவுனியாவில் சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் பத்தாயிரம் பனை விதைப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இச் செயற்றிட்டத்தின் ஏழாவது கட்ட நடவடிக்கை நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்லூரியின் ஏற்பாட்டில் வவுனியா சாம்பல் தோட்டம் குளக்கரைக்கு அருகே முன்னெடுக்கப்பட்டது.

இது வரையில் கிட்டத்தட்ட 4030 பனை விதைகள் விதைக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் மேலதிகமாக 2000 பனை விதைகள் விதைக்கப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்ட நடவடிக்கையில் கிராமசேவகர் நா.ஸ்ரீதரன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் க.விஜயரூபன், வெளி சஞ்சிகையின் ஆசிரியர் அருளானந்தன், அஸ்திரம் மக்கள் நற்பணி மன்றத்தின் செயலாளர் ந.கிருஸ்ணமூர்த்தி, ஈரநிலம் அமைப்பின் தலைவர் ச.சுதன், தனியார் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் எஸ்.சுரேஸ், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு மிக ஆர்வத்துடன் பனை விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குளத்தில் நீரின்மையால் நன்னீர் மீன்பிடி பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்பு குளத்தில் நீர்மட்டம் முற்றாக வற்றி காணப்படுவதால் குளத்தினை நம்பி நன்நீர் மீன்பிடி தொழில் செய்யும் முன்நூறிற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தண்ணிமுறிப்பு குளத்தில் இரண்டு மீன்பிடி சங்கங்கள் காணப்படுகின்றன. 150 அங்கத்தவர்களை கொண்ட தண்ணிமுறிப்பு மீனவர் சங்கமும் 154 அங்கத்தவர்கள் கொண்ட முஸ்லீம் மீனவ சங்கம் என்று இரண்டு சங்கங்கள் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக குளத்தின் நீர்மட்டம் முற்றாக குறைந்துள்ளதால் குளத்தினை நம்பி வாழ்ந்த முன்நூறிற்கு மேற்பட்ட குடும்பங்களின் பொருளாதாரமும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவ சங்கங்கள் தெரிவித்துதாக தெரிவித்துள்ளார்கள்.

நாள்தோறும் நூறு கிலோவிற்கு மேற்பட்ட நன்னீர் மீன்கள் இந்த குளத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்வதாகும் தற்போது குளத்தில் நீர் இன்மையினால் தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார்கள்.

அனுமதி அற்ற கட்டிடங்களை அமைப்போர் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினுடைய எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அனுமதி அற்ற கட்டிடங்களை அமைக்கிறவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை சபை மேற்கொண்டு வருகிறது யுத்தத்திற்குப் பின்னர் கிளிநொச்சி நகரமும் அதனைச் சூழ உள்ள பகுதியும் விரைந்து வளர்ச்சி கண்டு வருகிறது இதன் வழியாக அதிகளவான கட்டிட நிர்மாணங்கள் இந்த பிரதேசத்தில் நடைபெற்று வருவது அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கட்டிடங்களை அனுமதிப்பது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையினுடைய பிரதேச எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினுடைய அனுமதியும் கரைச்சி பிரதேச சபையினுடைய அனுமதியும் பெறப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய பிரதேசங்களிலும் பிரதேச சபையினுடைய அனுமதி பெறப்பட வேண்டும் ஆனால் அரச திணைக்களங்களும் பொது மக்களும் வர்த்தக நோக்குடன் செயற்படுபவர்களும் இத்தகைய கட்டிடங்களை அனுமதி எதுவும் இன்றி அமைக்கிற நிலைமை அவதானிக்கப்படுகிறது.

ஆகவே இந்த விடயம் குறித்து கிராம அலுவலர்கள் ஊடாக கிராம ரீதியாகவும் பத்திரிக்கை செய்திகள் வாயிலாகவும் பொது மக்களுக்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த நிலைமை கட்டுக்கடங்காத வகையில் தொடர்ந்து செல்கிறது அவதானிக்கப்பட்ட காரணத்தினாலே விரைந்து இந்த சட்ட ரீதியான அனுமதி பெறாத கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கான நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இந்த சட்ட நடவடிக்கை எடுக்க முன்பதாக புதிய கட்டிடங்கள் கட்டுபவர்கள் உடனடியாக பிரதேச சபையிடம் தொடர்பு கொண்டு கட்டிட அனுமதிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறார்கள் மதில்கள், கிணறுகள், வீடுகள், வர்த்தக நோக்குடைய கட்டிடங்கள், அரசாங்க திணைக்களங்களால் நிர்மாணிக்கப்படுகின்ற அலுவலக கட்டிடங்கள் மற்றும் விடுதிகள் அனைத்தும் உடனடியாக அனுமதி பெறப்பட வேண்டிய நிலைக்கு இருக்கிற காரணத்தினாலேயே இந்த விடையத்தில் அதிக கரிசனையயை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் அரச திணைக்களங்களுக்கு இது தொடர்பான அறிவித்தல் எங்களால் வழங்கப்படட போதிலும் பல அரச திணைக்களங்கள் தொடர்ந்தும் அனுமதியற்ற கட்டிடங்களை கையாளுவதை காரணமாக சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டிய நிறுவனங்களே கடைப்பிடிக்காத தன்மை வெளிப்பட்டு வருகிறது எனவே தராதரம் எதுவுமின்றி உரிய சட்டத்தை கட்டட அனுமதி பெறுவது தொடர்பில் தவறுகின்றவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மன வருத்தத்துடன் அறிய தருகிறோம் எனவே மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்கி தங்களால் மேற்கொள்ளப்படுகின்ற சகல விதமான கட்டுமானங்களுக்கும் உரிய அனுமதிகளை சட்டதின்பாட்பட்டு பெற்றுக் கொள்ளும் படி அறிவுறுத்தப்படுகிறீர்கள்

புதிய வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்த இந்தியக் குழுவினர்

புதிய வீட்டுத்திட்டங்களை வழங்குவது தொடர்பில் ஆராய இந்திய குழுவொன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. குறித்த குழுவினர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்தனர். கிளிநாச்சி மாவட்டத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவை முன்னெடுக்கப்பட்ட வகைகள் தொடர்பிலும், ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பிலும், குறித்த குழுவினர் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

குறித்த குழுவினருடனான சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் அரசாங்க அதிபரிடம் வினவினர்.

இங்கு விஜயம் மேற்கொண்ட குழுவினர் கிளிநாச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவற்றின் முறைகள் தொடர்பில் கேட்டறிந்ததாக அவர் குறிப்பிட்டார். தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு 16ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் தேவையாக உள்ளமை தொடர்பில் அவர்களிடம் தான் குறிப்பிட்டதாகவும் குறிப்பிட்டார். முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டம் 18 மாதங்களில் நிறைவு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளதாக குறித்த குழுவினர் குறிப்பிட்டதாகவும், குறித்த வீட்டு திட்டங்கள் அமைப்பது தொடர்பில் ஆராய்வதற்கே தாம் வந்ததாகவும், ஆய்வு செய்ததன் பின்னர் மீண்டும் சந்திப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டதாக அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். இந்தியாவின் அனுசரணையோடு கிடைக்கும் வீட்டு திட்டத்துடன் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கணிசமான வீட்டு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் அவர் இதன்போது ஊடகங்களிற்கு தெரிவித்ததுடன், அவ் வீட்டு திட்டங்களை கிளிநாச்சி மாவட்ட செயலகமும், பிரதேச செயலகங்களுமே நேரடியாக கண்காணிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எமது மாவட்டத்தில் நீண்டகாலமாக குடிநீர் பிரச்சினை நிலவி வருகின்றது. அவற்றை தீர்ப்பதற்கு நாம் தொடர்ந்தும் பல்வேறு வழிகளை சிரமங்களிற்கு மத்தியில் குடிநீரினை வழங்கி வருகின்றோம். இந்த நிலையில் 700 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுவதற்காக பூநகரி குளம் என்ற திட்டம் வரையப்பட்டு உள்ளது. குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் குறித்த குழுவினர் ஆராய உள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். தொடர்ந்து குறித்த குழுவினர் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்ட மாதிரிகளை பார்வையிட்ட குழுவினர் பயனாளிகளிடமும் கேட்டறிந்துகொண்டனர். கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் அமைக்கப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டத்தினை பார்வையிட்ட குழுவினர் அங்குள்ள மக்களிடம் குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பிலும் கேட்டறிந்தனர். இதன்போது மக்கள் குறித்த வீடுகள் உரிய முறையில் அமைக்கப்படாமையால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக அவர்களிடம் கூறினர். தொடர்ந்து வீடுகள் இல்லாது தற்காலிக வாழ்விடங்களில் வாழும் மக்களின் நிலை தொடர்பிலும் நேரில் பார்வையிட்டு மக்களுடனும் கலந்துரையாடியமை குறிப்பிடதக்கதாகும்.

மேய்சல்தரவை இன்மையால் கால்நடைகள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகக்கான மேச்சல் தரவைகள் இன்மையால் தற்போதைய பயிர்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் கால்நடைகளைப்பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எண்பது வீதமான மக்களின் வாழ்வாதாரத்தொழிலாக விவசாயமும் கால்நடைவளர்ப்பும் காணப்படுகின்றது. இவ்வாறு கால்நடைவளர்ககும் பண்ணையாளர்களில் பெருமளவானோர் திறந்த வெளிமுறையிலான கால்நடை வளர்ப்பையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது கால போகப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் தமது கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி, ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரவுகளிலும் கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வயல் நிலங்களில் பராமரித்து வருகின்றனர்.

பயிர்செய்கை காலங்களில் வயல் நிலங்கள் பயிரிடப்படுகின்ற நிலையில் கால்நடைகளை அவற்றில் பராமரிக்க முடியாது, பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களின் நீரேந்துப்பிரதேசங்களிலும் தாழ்நில கண்டல் பகுதிகளிலும்கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். குளங்களிலும் மற்றும் கண்டல் பகுதிகளிலும் நீர்மட்டம் உயரும் போது அங்கிருந்து கால்நடைகளை வெளியேற்றி வேறு இடங்களில் அதாவது வீதியோரங்களிலும் குடியிருப்புக்களிலும் வைத்துப் பராமரிக்கன்ற நிலை காணப்படுகின்றது.

மேய்ச்சல் தரவைகளுக்கானகாணிகளை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு அதன் மூலம் மேச்சல் தரவைகளை அமைக்கவேண்டும் மாவட்டத்தில் மேச்சல் தவைக்கான காணிகளை அடையாளப்படுத்துகின்ற போதும அந்தக்காணிகள் வேறு திணைக்களங்களக்கச்சொந்தமான காணிகளாகக் காணப்படுகின்றது என்றும் இவ்வறு மேச்சல் தரவைகள்அமைப்பதில் தாமதங்கள் காணப்படுவதாகவும் இதனால் பண்ணையாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும், மாவட்டத்தின் முதன் நிலையை பெற்ற சிவபுரம் அ.த.க பாடசாலை மாணவியான செல்வி பா.ஹர்த்திக் ஹன்சிகாவை வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் அவரது வீட்டிற்கு சென்று பாராட்டுதல்களை தெரிவித்தார்.

படம்: வவுனியா நிருபர்

விவசாயத்தினை மேம்படுத்துவதன் ஊடாக முல்லைத்தீவை மேம்படுத்தலாம்

விவசாயத்தினை முன்னிற்கு கொண்டு வருவதன் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட மக்களை முன்னிற்கு கொண்டுவரமுடியும் என விவசாய பிரதியமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டதோடு நாம் பயிரிட்டு நாம் உண்போம் என்ற தொனிப்பொருளில் வடக்கின் துரித விவசாய மீள்எழுச்சி எனும் எண்ணக்கருவில் கமத்தொழில் அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பல்வேறு திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர்

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பிரதி அமைச்சராக நியமித்த உடனே ஜனாதிபதி அவர்கள் என்னிடம் சொன்னார் வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகளின் பிரச்சனையினை பார்ப்பதற்காகவே என்னை நியமதித்த என்று சொன்னார்.

முல்லைத்தீவு என்னுடைய மனைவியின் ஊர் அதனால் நானும் உங்களுடைய ஊர் என்று சொல்லிக்கொள்வதில் ஆசைப்படுகின்றேன்.

விவசாய பிரதி அமைச்சர் பொறுப்பினை எடுத்ததன் பின்னர் நான் மாவட்டம் மாவட்டமாக சென்று விவசாயிகளின் பிரச்சனை தொடர்பில் ஆராய்ந்து அமைச்சர்அவர்களிடம் அறிக்கையாக காட்டினேன் நாட்டில் கஷ்டப்படுகின்ற மக்கள் வாழ்கின்ற மாவட்ட மாக முல்லைத்தீவு மாவட்டம் முதல் இடத்தில் இருக்கின்றது என்பதை தெரியப்படுத்தினேன்.

அதிகமான நிதி இந்த மாவட்டத்திற்கு செலவு செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளேன் இந்த மாவட்டத்தில் இருக்கின்ற மக்கள் முன்னேற்ற வேண்டும் என்றால் அவர்களின் முக்கியமான தொழில் விவசாயம் அந்த விவசாயத்தினை முன்னிற்கு கொண்டுவருவதன் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட மக்களை முன்னிற்கு கொண்டுவர முடியும்

உலக அளவில் விவசாயிகளின் பொருளாதார திட்டத்தினை சந்தைப்படுத்தும் போது விலைகள் அதிகமாக மாறிவிட்டது ஆனால் இறக்கு மதி அதிகரித்து விட்டது

இப்போது எங்கள் ரூபாயின் பெறுமதி குறைந்துவிட்டது என்று பேசிக் கொண்டிருக்கின்றோம். நாட்டில் உள்ள சமுதாய மாற்றத்தினால் தேவையான பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

குறிப்பாக உணவு கூட இறக்கு மதியில் தான் தங்கியுள்ளது. வெங்காயம் நிலக்கடலை அனைத்தும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றது கடந்த ஆண்டு நான்காயிரம் மெற்றிக்தொன் நிலக்கடலை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதிக்களை குறைப்பதற்கான தேவை ஒன்று உள்ளது அதன் ஊடாக நாட்டின் ரூபாயின் மதிப்பு கூடும் விவசாயிக்கு இலாம் செல்லும் இப்போது இருக்கின்ற பிரச்சனை என்னவெனில் எங்கள் உற்பத்தி பொருட்களை விட வியாபாரிகள் இறக்கு மதி செய்வதில் இலாபம் அதிகமாக இருக்கின்றது.

இதனை மாற்றி அமைக்க மிகவும் தேவையாக உள்ளது எங்களின் விவசாயம் நவீனமயப்படுத்தல் என்பது உலக வங்கியின் உதவியுடன் விவசாய மத்திய அரசு மக்களுக்கு ஒவ்வொரு பயிரிலும் உற்பத்தி திறன்களை அதிகரித்து உல விவசாயிகளுடன் போட்டி போடும் அளவிற்கு தயார் படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்

விவசாயிகளின் உற்பத்தியினை இந்த நாடு முழுவதும் பயன்படுத்த வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பம் அமைச்சரின் நோக்கமே இதுதான் இறக்கமதியினை முழுமையாக குறைத்து நாம் பயிரிட்டு நாம் உண்போம் என்ற திட்டத்தின் கீழ் பொருளாதார நோக்கில் பிரதேசத்திற்கும் விவசாயிகளுக்கும் அதிகளவான இலாபத்தினை ஈட்டும் நோக்கில் இந்த திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக வடக்கு கிழக்கில் பாரிய அளவு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. அடுத்த ஆண்டிற்காக மூவாயிரம் மில்லியன் ரூபாவினை வடக்கு கிழக்கு விவசாயத்தினை முன்னேற்றுவதற்கு மேலதிகமாக தருவதாக சொல்லியுள்ளார்.

ஜனாதிபதி அவர்களும் விவசாயி ஒருவருடை மகன் விவசாயத்தின் மீள் எழுச்சியாக வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வியலை நான் பார்கின்றேன் என்றும் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்

வடக்கு தந்தி

ஒட்டுசுட்டானில் 35 இலட்சம் ரூபா செலவில் நெற் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில்; 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான் பிரதேசத்திற்கான நெற் களஞ்சியத்தை அமைப்பதில் ஆரம்பத்தில் பெரும் இழு பறி காணப்பட்டது.

முன்னதாக கடந்த 2015ம் ஆண்டில் முல்லைத்தீவில் நெற்களஞ்சியம் அமைப்பதற் காக சுமார் 35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், அதிகாரிகள் களஞ்சியம் அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தெரிவுசெய்வதில் காட்டிய அசமந்தம் காரணமாக அந்த நிதி மீண்டும் திறை சேரிக்கு திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதனால் தமது நீண்ட காலகோரிக்கை நிறைவேறும் எனத் எதிர்பார்த்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

இவ்வாடறான நிலையில் இவ்வாண்டின் ஆரம்பத்தில் அதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு, நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபையின் ஊடாக கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் களஞ்சியம் 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் மணல் அகழ்வு தொடர்பில் நீண்ட நேரம் விவாதம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியகலாநிதி சி சிவமோகன், திரு

மதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர் ம பிரதீபன், உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ், உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்

கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பில் பலமணிநேரம் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றது. இதில் குறிப்பாக உள்ளூர் விண்ணப்பங்களை பிரதேச செயலகம் சிபார்சு செய்து அனுப்பிய பின்னரும் ஏனைய திணைக்களங்கள் இழுத்தடித்து வருவதாகவும் ஏனைய வெளிமாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு உடனடியாக அனுமதிகள் வழங்குவதாகவும் இவற்றை நிறுத்தி உள்ளூர் மக்களுக்கு குறித்த அனுமதியை வழங்குமாறும் குறித்த மணல் அகழ்வு தொடர்பில் நடைபெறும் பல்வேறு சட்ட விரோத செயற்ப்பாடுகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டங்களுக்கு வழங்கப்படும் அனுமதிகள் நிறுத்துமாறு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் அதைமீறி இந்த அனுமதிகள் எவ்வாறு வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டது இருப்பினும் குறித்த விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாதது இருப்பது இன்னும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காலத்தின் தேவை கருதியே நாங்கள் அரசியல் பணியை முன்னெடுத்துள்ளோம்

ஆயுத ரீதியில் நாங்கள் போராடி ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது அரசியல் உரிமையை எமது மக்களுக்கு பெற்று ஒரு சுயாட்சியாவது பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற ஒரு நோக்கோடு நாங்கள் அரசியல் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எமது அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு எட்டு மாவட்டங்களிலும் எமது இணைப்பாளர்களை தெரிவு செய்துள்ளோம்.

நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடி எவ்வளவோ இன்னல்களை கடந்த வந்த முன்னாள் போராளிகள் நாங்கள் ஆயுத ரீதியாக நாங்கள் பல எதிர்ப்பிற்கு மத்தியிலே நாங்கள் போராடி விடுதலைக்காக போராடி வந்த போராளிகள் நாங்கள். ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது மக்களுக்கான செயற்பாட்டுத்திட்டம் சகல வேலைத் திட்டமும் அசியல் ரீதியாக எமது அரசியல் கட்சிகள் முன்னெடுத்துச் செல்வார்கள் என நம்பிக்கையுடனும் உறுதியுடனும் நாங்கள் இருந்த நாங்கள் அவ்வாறான நிலைப்பாட்டில் நிச்சயமாக எங்களுக்கு ஒரு நம்பிக்கையை இழந்தவண்ணம் தமிழ் அரசியல் வாதிகளின் செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்தவண்ணம் செயற்பட்டுக்கொண்டிருந்த காரணத்தினால் நாங்கள் ஒரு அரசியல் பணியை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற ஒரு காரணத்தினால் எங்களுடைய அரசியல் வேலைத்திட்டங்களை விரிவடக்கம் செய்துகொண்டு பயணித்துக்கொண்டிருக்கினறோம். இவ்வாறு நேற்று வவுனியா ஆதி மண்டபத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய புனர்வாழ் வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தையா இன்பராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது,

பல ஆயுதக்குழுக்கள் இன்றுவரையில் புனர்வாழ்வு என்ற செயற்பாட்டிற்குள் தள்ளப்படாமல் மறைமுகமாக இருந்தவர்கள் வெளிமுகமாக வந்து அரசியல் செய்கின்றார்கள். ஆயுதக்குழு என்று வெளிப்படையாக இந்துவிட்டு நாங்கள் யுத்தம் செய்து 2009ஆம் ஆண்டிற்குப்பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசிற்கு மட்டுமல்ல உலக நாட்டிற்குக்கூடத் தெரியும் 12ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இன்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் என்று இன்று நாங்கள் அரசியல் பணிகளிலும் பயமின்றி நிற்கின்றோம் ஒரு துணிவுடன். அரச சட்டங்களை மதிக்காமல் நாங்கள் எந்தவவொரு வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை.

எமது மக்களின் உரிமைக்காக போராட்ட காலத்தில் தமிழர்களுக்கு என்று எமது தேசியத் தலைவர் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதிகள் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு இருக்கின்றார்கள் என்று விட்டுச் சென்றுள்ளார். அவ்வாறான கூட்டமைப்பு இன்று சறுக்கிக்கொண்டு தங்களுடைய சுயநலப்போக்கிற்காக தாங்கள் செயற்பட்டுக்கொண்டு ஒற்றையாட்சிக்குள்ளிலிந்து செயற்பட்டுக்கொண்டு தமிழர்களுக்கு என்று உண்மையான ஒரு அரசியல் கட்டமைப்பு உண்மையான ஒரு நேர்மையான கொள்ளையுடன் கட்சி இல்லாமல் எமது மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றார்கள். நம்பிக்கை இழந்துபோயுள்ளார்கள். அவ்வாறான ஒரு சந்தர்ப்பதில் நாங்கள் விடுதலைப்புலிகளாகிய நாங்கள் கழுத்தில் சயனைற் ஏந்திப் போரடியவர்கள் இன்று புலிகள் என்று பலர் தேர்தல் காலத்தில் வருகின்றார்கள் உண்மையில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வருகின்றார்கள்.

இன்று புலம் பெயர் தேசத்தில் பலர் புலிவேடம் போட்டுக்கொண்டு நிர்வாகத்தை அமைத்துக்கொண்டு பணத்தை சேகரித்துக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் யுத்தம் செய்துகொண்டிருந்த சமயத்தில் கே.பி பத்மநாதன் கப்பல் கப்பலாக ஆயுதங்களை அனுப்பிக்கொண்டிருந்தவர் இன்று அவர் சுதந்திரமாகத்திரிகின்றார். இந்த நாட்டில் கே.பி பத்மநான் இன்று சுதந்திரமாக வலம் வந்துகொண்டிருக்கையில் உருத்திரகுமாருடன் இணைந்து அரசாங்கத்தினருடன் இணைந்து ஒரு அமைப்பினை வைத்து செயற்படுத்திக்கொண்டிருக்கின்றார். அவருக்கு புனர்வாழ்வு இல்லை அவர் சுதந்திரமாகத்திரிகின்றார். ஆயுதம் ஏந்திப் போரடிய போராளிகளைவிட ஆயுதம் வழங்கி தூண்டிவிட்டவர் கே. பி. பத்மநாதன். அவ்வாறு என்றால் ஏன் அரசியல் கைதிகள் 110பேரை வைத்திருக்கவேண்டும்.

இன்று கே.பிக்குப் பின்னால் பல சொகுசுவாகனம் செல்கின்றது. எமது அமைப்பிற்கு ஆயுதக்கொள்வனவு செய்தவருக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டும். அவ்வாறானவர் சுதந்திரமாக திரியும்போது அப்பாவி அரசியல் கைதிகள் போராட்டத்திற்கு பல்வேறு ஆதரவு வழங்கியவர்களை சிறைவைத்துக்கொண்டு பத்துவருடமாக வைத்திருக்கும்போது அவர்களின் குடும்பங்களுக்கும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. குடும்பத்திற்கு பாதுகாப்பில்லை கே.பியைப்போல வெளியே பல தளபதிமார்கள் இருக்கும்போது அவர்களுக்கு பதவிகளை வழங்கிவிட்டு அப்பாவிகளை அரசியல் கைதிகளாக வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் குறுகிய கால புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும் என்று புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகளின் கட்சி சார்பாக அரசாங்கத்திடம் கோரி நிற்கின்றோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவில் 60 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா ஒலுமடு பாடசாலை மகாவித்தியாலயமாக தரமுயர்வு

1976 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒலுமடு பாடசாலை அப்பகுதி மக்களினால் வட மாகாண கல்வி அமைச்சுக்கு மகாவித்தியாலயமாக தரமுயர்த்துமாறு தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்த கோரிக்கைக்கு அமைய மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.இதேவேளை அப்பாடசாலையில் உயர்தரவகுப்புகளும் இன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் பாடசாலைக்கு இரு கட்டிடங்களும் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

பாடசாலையின் அதிபர் கு. விமலேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரன் பிரதம அதிதியாகவும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ப. சத்திய லிங்கம், எம். தியாகராசா, ஆகியோரும் கலந்துகொண்டதுடன் வவுனியா வடக்கு பிரதேசசபையின் உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தினை சேர்ந்த ஆசிரியர் ம. பகீரதனின் நிகழ்ச்சித்தொகுப்பில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பாடசாலையில் இருந்து பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

மணல் கொண்டு செல்வதற்கு தடை

உடையார்கட்டு பிரதேசத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மணல்கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திக் குழு தற்காலிகத் தடை விதிப்பதாக அறிவித்துள்ளது

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் அவர்களால் உடையார்கட்டு குளக்கட்டினூடாக மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனை தடுக்குமாறும் கோரப்பட்டது அதனைவிட வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் குறித்தப குதியிலிருந்து நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மணல் வெளிமாவட்டங்களுக்கு செல்வதாகவும் இவற்றை நிறுத்துமாறும் கோரப்பட்டது. இதனை தொடர்ந்து கூட்டத்தில் உடையார்கட்டு பிரதேசத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திக் குழு தற்காலிகத் தடை. விதிப்பதாக அறிவித்துள்ளது

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துள் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பாக பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

மேலும் பிரதேசத்திற்குட்பட்ட உடையார்கட்டு, சுதந்திரபுரம், இருட்டுமடு பேராறு ஆகிய பகுதிகளில் மிக அதிகமாக மணல் அகழ்வு இடம் பெறுவதாகவும், இவை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது. அத்துடன் மணல் அகழ்ந்து வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதை தற்காலிகமாக நிறுத்துவதுடன், மணல் அகழ்வு அனுமதிகள் பிரதேசத்துள் அகழப்படும் மணல் அனுமதியை உள்ளூர் அமைப்புகளுக்கும், மக்களுக்கும் வழங்கவே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான் வைத்தியசாலையைத் தரமுயர்த்துமாறு அந்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தின்போது பிரதேச மக்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பில்மேலும்அறியவருகையில்.

ஆண்டுக்கு இரண்டு வைத்தியசாலையை தரமுயர்த்தல் செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் இரண்டு வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவு சுகாதாரப்பணிப்பாளர் தெரிவித்திருந்தாகவும்.

எனவே தமது பகுதியில் காணப்படும் வைத்தியசாலையையும் தரமுயர்தும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் குறிப்பிட்ட நாட்களில் வருகைதந்தே நோயாளர்களை பார்வையிடுவதாகவும், போதிய வசதிகள் இல்லாததால் இந்தப்பகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கே நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் தற்போது மகப்பேற்று தாதியர்கள், ஊசிபோடும் தாதியர்கள் இந்த வைத்தியசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதேச மக்களால் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் அங்கு தரித்து நின்று வைத்தியர்கள் தமது சேவைகளை செய்யக்கூடிய வசதிகளையும், வைத்தியசாலைக்கு ஏனைய வசதிகளையும் செய்து தரும்படியும் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் முத்துஜயன்கட்டு இடதுகரை மற்றும் வலதுகரை மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கும் எனவும் அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர். மேலும் குறித்த வைத்தியசாலை தரமுயர்த்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னறிவித்தலின்றி மின்சாரம் துண்டிப்பு

வவுனியாவில் கடந்த சில தினங்களாக முன் அறிவித்தல் ஏதும் இன்றி பல இடங்களில் மின் துண்டிப்பினை மேற்கொண்டுவருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையின் இச் செயற்பாடு காரணமாக பல வியாபார நிலையங்களில் வியாபாரம் மந்தகதியில் இடம்பெறுவதாக வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். உரிய அதிகாரிகள் மின்தடைகுறித்து முன்னறிவித்தல் விடுத்து மின்துண்டிப்பை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கனகபுரம் அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம் உடைக்கப்பட்டு சிலை திருடப்பட்டுள்ளது!

கனகபுரம் அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம் உடைக்கப்பட்டு சிலை திருடப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தேவாலய நிர்வாகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து மிக அருகில் உள்ள கிராமமான கனகபுரம் பகுதியில் காணப்படும் குறிதத் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா கடந்த 08.09.2018 அன்று இடம்பெற்றிருந்தது. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த ஆலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சிலை விசமிகளால் எடுத்த செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டிருக்கவில்லை எனவும், குறித்த சம்பவம் தொடர்பில் அதிர்ப்பி அடைந்த ஆலய நிர்வாகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆலயத்தில் சட்டவிரோத மற்றம் சமூகத்திற்கு ஒவ்வாத சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்கனவே பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது. குறித்த சம்பவங்கள் இடம்

பெறாது ஆலயத்தின் புனித தன்மையை பேணுமாறும் ஆலய நிர்வாகத்தினர் பல முறை பொதுமக்களிடம் கோரியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த ஆலயம் உடைக்கப்பட்டு குறித்த அன்னை வேளாங்கன்னி சிலை விவமிகளால் எடுத்து செல்லப்பட்டுள்ளமை தொடர்பில் விசனம் தெரிவிக்கின்றனர்.

வேறென்ன வேண்டும்?

காபி ஆறிவிட்டது; அம்மா கொண்டு வைத்த போது இருந்த சூடும், மணமும் இப்போது இல்லை. 'ஆறின கஞ்சி, பழங்கஞ்சி' என்பதைப் போல், என் எதிர்காலமும் இப்படித்தான் ஆகப் போகிறதா... சிறந்த கல்லூரியில், நல்ல படிப்பை, நன்றாகத் தானே படித்தேன்... 'டாப்' 10ல் இல்லன்னாலும், கவிதை, கிரிக்கெட் என்று தனித்திறமை இல்லாவிட்டாலும், அரியர்ஸ் இல்லாமல், எந்த புராஜெக்ட்டையும் சொதப்பாமல், ராகிங், இன் - டிசிப்ளின்னு, கருப்புப் புள்ளிகள் வாங்காமல், 70 சதவீத மதிப்பெண்ணுடன் வெளி வந்த போது, ஏதோ ஒரு கம்பெனி, என்னை ஏற்றுக் கொள்ளும் என்று தானே நம்பினேன்...

'மூணு வருஷம் முடியப் போகுது; அங்கொன்றும், இங்கொன்றுமாக நாலு கம்பெனிகளில் குப்பை கொட்டியும், பெரிய நிறுவனங்களுக்கு, 'அப்ளை' செய்தாலும், இன்னும் நிலையான வேலையில் அமரவில்லயே...' என்று மனம் வருந்தியபடி அமர்ந்திருந்தான், ராகவ்.

''ராகவ் அண்ணா...'' என்றபடி வந்த பக்கத்து வீட்டுப் பையன், ''ப்ளூ வேல்ன்னு, ஆன் - லைன் கேம் இருக்காமே... தெரியுமா?'' என்றான், ஆவலு

டன்!

''தெரியும்... ஏன் கேட்கிறே?''

''எனக்கும் அந்த விளையாட்ட விளையாடணும்; 'ஆப்'இருக்கா?''

''வேணாம்டா... அது, ரொம்ப டேஞ்சரான விளையாட்டு; நிறைய ஸ்கூல் பசங்க, 'சூசைட்' செய்து, இறந்து போயிருக்காங்க... அம்பது நாள் கேம்... தினம், 'டாஸ்க்' செய்யணும்; மெல்ல சீரியஸ் ஆகும்... உன்னை அறியாமலேயே அதுக்கு அடிமையாகி, எந்த டாஸ்க்கையும் செய்ய துணிஞ்சுடுவே... கடைசியா, உன்னை மாடியில இருந்து குதிக்கச் சொல்லும்..''என்றான்.

''அவ்ளோ மோசமான விளையாட்டா...'' என்று பயந்தான்.

''ஆமாம்... சரி, கணக்கு பாடத்துல ஏதோ புரியலன்னு சொன்னியே... எடுத்துட்டு வா சொல்லித் தர்றேன்...''

''வேண்டாம்ண்ணா, பரிமளாக்கா சொல்லிக் கொடுத்துட்டாங்க...'' என்றான்.

''பரிமளாவா... எப்போ வந்தா...'' என்றான், ஆச்சரியத்துடன்!

பக்கத்து தெரு பெண், பரிமளா. பதினைந்து ஆண்டு பழக்கம்; நல்ல தோழி.

''படிப்பு முடிஞ்சாச்சாம்... வந்து ரெண்டு நாளாகுது,'' என்றவன், ''வரேண்ணா... நான் கிரிக்கெட் விளையாடப் போகணும்,'' என்று கூறி, ஓடினான்.

'பரிமளாவின் தொழிற்படிப்பு முடிந்து விட்டதா... நேற்று தான் அவள் கல்லூரியில் சேர்ந்த மாதிரி இருக்கிறது..' என்று எண்ணியவன், அவளைப் பார்க்க கிளம்பினான்.

''வாப்பா ராகவ்... என்ன ரொம்ப இளைச்சுப் போயிட்ட... நீ சரியா சாப்பிடறதில்லன்னு உங்கம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்க...'' என்றாள், பரிமளாவின் அம்மா.

''அதெல்லாம் இல்லம்மா... நல்லாத்தான் சாப்பிடுறேன்; பரிமளா வந்தாச்சாமே... எங்க காணோம்,'' என்றான்.

''ஏதோ வேலைக்கு அப்ளை செய்யணுமாம்... அவ தோழி வீட்டுக்குப் போயிருக்கா...''

''சரிம்மா... வந்தா, எங்க வீட்டுக்கு வரச் சொல்லுங்க; கல்லூரி, ிலைப்ி பத்தி பேசணும்.''

''சரிப்பா வரச் சொல்றேன்,''என்றவள், ''பரிமளா அப்ளை செய்திருக்கிற கம்பெனிக்கு நீயும் அப்ளை செய்துப் பாரேன்... பெரிய கம்பெனியாம்... அமேசானோ, கூகுளோ ஏதோ சொன்னா, உலகம் பூரா அந்த கம்பெனி இருக்காம்...''

''அதெல்லாம் எப்பவோ செய்துட்டேம்மா... ஒரு, 'ஆபரும்' வரல.''

''மறுபடி முயற்சி செய்யலாம்ல..'''

''இல்லம்மா... புதுசு புதுசா படிச்சுட்டு வராங்க... அவங்களுக்கு இருக்கிற மரியாதை, மூணு வருஷ பழசுக்கு இல்ல...''

''ஏம்ப்பா இப்படி சொல்ற... நிச்சயம், உனக்கு வழி பிறக்கும்; காபி போடுறேன்... குடிச்சுட்டுப் போ...'' என்றாள்.

''வேண்டாம்மா... நான் கிளம்புறேன்; பரிமளா வந்தா சொல்லுங்க''என்று சொல்லி, தன் வீட்டிற்கு சென்று விட்டான்.

'பெரும் தோல்விகளுக்கு பின்னும், நம்பிக்கையுடன் எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்குப் பெயர் தான் வாழ்க்கை...'' என்று, தன் நண்பன் சொன்னது, ராகவிற்கு நினைவுக்கு வந்தது.

'அவன் கூறியது சாத்தியமா... தொடர் தோல்விகளுக்குப் பின், நம்பிக்கை எப்படி பிறக்கும்... தோல்விகள் தந்த துன்பங்களில் மனம் துவண்டு விடாதா... நொந்து போன மனதில் நம்பிக்கை செடி எவ்வாறு துளிர்க்கும்...' என்று எண்ணினான்.

''ஹாய் ராகவ்... எப்படி இருக்கே...'' சிரித்தபடி வந்தாள், பரிமளா.

''வா பரிமளா... அட... இதென்ன பளிச்சுன்னு மாறிட்டே...''என்று புன்னகையும், வியப்புமாய் சொன்னான், ராகவ்.

''நீ கூட வெயிட் குறைச்சு, 'பெர்பெக்ட்டா' இருக்கே...''என்றாள், பரிமளா.

''நாலு வருஷம் ஓடிப் போச்சுல்ல... உட்காரு,'' என்றவன், ''அம்மா, பரிமளாவுக்கு குடிக்க ஏதேனும் கொண்டு வா,'' என்றான்.

''அப்புறம், எப்படி இருக்கே...''

''இருக்கேன்... உண்மைய சொல்லணும்ன்னா சுவாசிச்சுட்டு இருக்கேன்...''

'' ஏன் இப்படி சொல்றே...''

''நான் விரும்பற வாழ்க்கை இல்ல இது...''

''புரியல...''

''படிச்சு முடிச்சு மூணு வருஷம் ஆச்சு; இன்னும் உப்புமா கம்பெனிகள்ல தான் குப்பை கொட்டுறேன்... வேலைகள் நிறைய கத்துக்கிட்டாச்சு... வயர்லெஸ் ஸ்பீக்கர் கூட நானே கிரியேட் செய்துருக்கேன். வயதானவர்கள் நடக்கும் போது தடுமாறி, விழுந்துடாமல் இருக்குறதுக்கு, ஸ்பெஷல் செருப்புகள் தயார் செய்ற தொழில்நுட்பம் கூட என்கிட்ட இருக்கு... சுரங்கங்கள்ல தண்ணீரை சேகரிச்சு, அதன் மூலமா சோலார் மின் உற்பத்திய எப்படி மேம்படுத்தலாம்ன்னு ஓர்க் செய்துட்டிருக்கேன்.''

''அப்படியா... '' என்று, வியந்தாள், பரிமளா.

''இதையெல்லாம் பெருமைக்காக சொல்லல பரிமளா... எனக்குள்ள இருக்கிற தேடல் உண்மையானதுன்னு உனக்கு புரிய வைக்கத் தான் சொல்றேன்... ஆனா, காலம் எனக்கு எதிராகவே இருக்கு...'' என்ற போது, அவன் குரல் கரகரத்தது.

''காலம், யாருக்கும் பாரபட்சம் காட்டாது; அதை, நீ சரியா புரிஞ்சுக்கலேன்னு தான் எனக்குத் தோணுது...'' என்றாள், பரிமளா.

''என்ன சொல்றே... நான் புரிஞ்சுக்கலயா?''

''ஆமாம்... நம் பெற்றோர் காலத்தில் நாட்கள் எப்படி இருந்தன... 'டிவி'யில, 'ஒளியும், ஒலியும்' பார்ப்பதற்காக, வெள்ளிக் கிழமை இரவுக்காக ஏங்கிட்டு இருந்தாங்க. இப்போ... நூறு, 'டிவி'சேனல்கள், எப்.எம்,கள்... என்ன பாட்டு வேணும்ன்னு கேட்டு போடுறாங்க.

''அவங்க காலத்துல பாத்திரம் எடுத்துட்டுப் போய், பால், எண்ணெய் வாங்கினாங்க. இன்னிக்கு எல்லாமே கவர்ல வந்திடுச்சு. ரிடையர்மென்ட் பணத்துல தான் நம்ம அப்பாக்கள் வீடு வாங்கினாங்க. இப்ப, வேலையில சேர்ந்ததுமே பாங்க் ஆட்களும், ரியல் எஸ்டேட் ஆட்களும் வீடு தேடி வந்துடுறாங்க...

''முன்பு, ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட்ன்னு மக்கள் கூடுற இடங்கள்ல விளம்பரங்கள ஒட்டுவாங்க. இப்போ, ஆர்கானிக் அரிசி, மரச்செக்கு எண்ணெய் வேணுமா.. மாடித் தோட்டம் போடணுமா... டாக்ஸி தேவையான்னு நம்ம மொபைல் போனுக்கு சர்வீஸ் மெசேஜ் வருது... தனிமனிதனைத் தேடி தகவல்கள் வர்ற காலக்கட்டம் இது...

''அதனால, நீயும் தனிமனிதனா உன்னை விளம்பரப்படுத்திக்கோ... வெப்சைட் ஒண்ணை வசீகரமா தயார் செய்து, கூகுள், பிளிப்கார்ட் மாதிரி நிறுவனங்களோட இடத்துல, உன்னை விளம்பரப்படுத்து. உன்னை மாதிரியே திறமை உள்ள நண்பர்களுடன் சேர்ந்து, 'வாட்ஸ் - அப்' குரூப் ஆரம்பிச்சு, தகவல்களை பரிமாறிக்கோ... மறுபடி மறுபடி உன்னை பாக்கும் போது, மனசுல நீ பதிஞ்சு போய், உன்னிப்பா கவனிப்பாங்க... மனிதர்களின் முக்கியமான வரம், நினைவு; அதை சரியான வகையில பயன்படுத்திக்கோ,'' என்றாள்.

வியப்புடன் அவளையே பார்த்தான்.

''இது என்ன என்று, கேட்ட காலம் அது... இதை வைத்து, நீ என்ன செய்ய முடியும் என்று கேட்கிற காலம் இது.. உலகத்தின் மிகப் பெரியவற்றை நாம் உருவாக்க வேணாம்; உலகின் மிகச் சிறந்தவற்றை உருவாக்கலாம். உன்னால் முடியும்,ாா என்று மென்மையாக சொன்ன தோழியை, நெகிழ்ச்சியுடன் பார்த்து சொன்னான்...

''உண்மை தான்; எனக்குத் தேவைபடுறத நான் பெறலைன்னா, என் செயல்பாடு போதுமானதா இல்லங்கிறத புரிய வெச்சுட்டே... நன்றி பரிமளா...

நிச்சயம் சரியா செய்றேன்,'' என்றான், நம்பிக்கையுடன்!

வி.உஷா

இங்கேயும் சில பூக்கள் மலரும்!

''வாசுகி... உனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லயே... அப்புறம், வந்த பின் குத்தம், குறை சொல்லி, அவங்க மனச நோகடிக்கக் கூடாது...''

''ரெண்டு பேரும் கலந்து பேசித்தானே இந்த முடிவ எடுத்துருக்கோம்... அப்புறம் எதுக்கு ஆட்சேபிக்கப் போறேன்... நாம சேந்தே போயி, அவங்கள அழைச்சிட்டு வரலாம்...'' என்றாள், என் மனைவி வாசுகி.

''இல்ல... எதுக்கு கேக்குறேன்னா, அழைச்சிட்டு வந்த பின், அவங்க மனசு நோகுற மாதிரி பேசி, ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்துடக்கூடாது பாரு... அதுக்குத் தான்...'' என்றேன்.

''நீங்க ஒரு முடிவு எடுத்துட்டீங்க; அப்புறம், என்கிட்ட பேசி, என்னை சம்மதிக்க வச்சீங்க; நானும் மறுத்துப் பேசாம, பரிபூர்ண சம்மதம் சொல்லிட்டேன். பிறகென்ன...''

''பாத்தியா... ஏதோ, எனக்கு மட்டும் தான் விருப்பம்; நீ என்னோட கட்டாயத்துக்காக ஒத்துக்குற மாதிரி பேசுறியே... நீயும் மன நிறைவோட சம்மதம்ன்னு சொல்; போயி கூட்டிட்டு வரலாம்; இல்லன்னா வேணாம்...'' என்றேன்.

''நான் ஒண்ணும் பழச மறக்கல... நம்மோட குழந்தைகளுக்கும், பெரியவங்களோட துணை வேணும்; அவங்க சொல்ற கதைய கேட்டபடி அவங்க மேலே காலைப்போட்டு தூங்கணும்...'' என்றாள், வாசுகி.

''அப்ப, பிள்ளைகளோட மகிழ்ச்சிக்காக தான் அவங்கள கூட்டி வர நினைக்குறே... பிள்ளைக ஏதாவது குறை சொல்லிட்டாங்கன்னா, மறுபடியும் அவங்கள அனுப்பிடுவே அப்படித்தானே...''

''ஏன் இப்படி எதுக்கெடுத்தாலும் ஏறுக்கு மாறா பேசுறீங்க... நான் தான் சரின்னு ஆயிரம் முறை சொல்லிட்டேன். அவங்க வரட்டும்; அவங்க மனசு கோணாத மாதிரி நானும், என் பிள்ளைகளும் நடந்துக்க தயாரா இருக்கோம். அதிலயும், நம்ம மகன், 'தாத்தா, பாட்டி எப்ப வருவாங்க'ன்னு, தொண தொணத்துக்கிட்டு இருக்கான்,''என்றாள்.

உண்மைதான்... அன்று, பள்ளியிலிருந்து வந்த மகனின் முகம் வாடியிருந்தது.

வாசுகி கேட்டதற்கு, 'ஒண்ணுமில்ல'ன்னு மழுப்பினான். திரும்பத் திரும்ப கேட்ட போது, 'அப்பா வந்ததும், சொல்றேன்ினு சொல்லி, வாசலுக்கு ஓடி விட்டான்.

மாலையில், அலுவலகம் முடிந்து, வீட்டிற்குள் நுழைந்ததும், வேகமாக என்னிடம் வந்தவன், 'அப்பா... எங்களோட தாத்தா, பாட்டி எங்க இருக்காங்க... இன்னிக்கு பள்ளிக்கூடத்துல, 'ஸ்டோரி டெல்லிங்ி வகுப்புல எல்லாரும், அவங்க பாட்டி, தாத்தா சொன்னதா, நிறைய கதை சொன்னாங்க. எனக்கு சொல்லத் தெரியல. உடனே, எல்லா பசங்களும் சிரிச்சாங்க... டீச்சர் என்கிட்ட, 'உனக்கு உங்க தாத்தா, பாட்டி ஒரு கதையும் சொல்லலயா'ன்னு கேட்டாங்க. எனக்கு அவமானமாப் போச்சு...' என்று கூறி அழுதான், மூன்றாம் வகுப்பு படிக்கும், என் மகன்.

கூடவே, எல்.கே.ஜி., படிக்கும் மகள், ிஅப்பா... தாத்தா, பாட்டி இருந்தா, என்னை தினம் ஸ்கூலுக்கு அழைச்சுட்டு போவாங்க; நான் கேட்டதெல்லாம் வாங்கித் தருவாங்க. நம்ம வீட்ல மட்டும் ஏன் தாத்தா, பாட்டி இல்ல..' என்று, தன் மழலை குரலில் கேட்க, அவள் மன ஏக்கத்தை உணர்ந்து, அப்பா, அம்மாவை அழைத்து வருவது என்று முடிவெடுத்தேன். பின், வாசுகியிடம் கலந்து பேசினேன்.

முதலில், 'முடியாது'என, பிடிவாதமாக கூறியவள், பின், மெல்ல ஒத்துக் கொண்டாள்.

நான் தான் அப்பா, அம்மாவை எப்படி சம்மதிக்க வைத்து, அழைத்து வருவது என்று யோசித்தேன்.

பல கட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஒருவழியாய் அவர்களைச் சம்மதிக்க வைத்தேன்.

இனி, ஒரு நல்ல நாளில், குடும்பத்துடன் சென்று, அவர்களை அழைத்து வர வேண்டியது தான் என எண்ணிய போது, மனம் மகிழ்ச்சியாய் இருந்தது. இப்போது, மீண்டும் வாசுகியிடம் பேசி உறுதி செய்து கொண்டேன்.

ஞாயிற்றுக்கிழமை காலை, குடும்பத்துடன், முதியோர் இல்லம் புறப்பட்டோம். வழியெல்லாம், மகிழ்ச்சியோடு ஏதேதோ பேசியபடி வந்தனர், பிள்ளைகள். முன்னதாகவே, எங்கள் வருகையை, முதியோர் இல்ல மேலாளருக்குத் தெரிவித்து இருந்ததால், வாசலில் வந்து வரவேற்று, அழைத்துச் சென்றார்.

'அப்பா... தாத்தா, பாட்டி இங்கயா இருக்காங்க...'கோரஸாக குரல் எழுப்பினர், பிள்ளைகள்.

''ஆமாடா செல்லங்களா... உங்க தாத்தா, பாட்டி இங்கே தான் இருக்காங்க; வாங்க அவங்களப் பாக்கலாம்...'' என்றேன்.

முதியோர் இல்ல மேலாளர் நேசன், அவருடைய அலுவலக அறையில் எங்களை உட்கார வைத்தார். அங்கே, சுந்தரமும், மீனாட்சியும் உட்கார்ந்திருந்தனர். ஏற்கனவே, எங்களுக்கு அறிமுகமானவர்கள் என்பதால், பரஸ்பரம் புன்னகைத்தோம்.

சுந்தரத்தைக் காட்டி, ''குழந்தைகளா... இவர் தான் உங்க தாத்தா,'' என்றார், நேசன்.

உடனே, மீனாட்சியின் அருகில் சென்று, ''அப்ப, இவங்க தான் எங்க பாட்டியா,'' என்றவாறு, அவளை அணைத்தாள், என் மகள்.

''ஏன் தாத்தா, நீயும், பாட்டியும் எங்க வீட்டுக்கு வராம, இங்கேயே இருக்கீங்க. எங்களுக்கு கத சொல்ல, விளையாட ஆளில்லாம எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா... நீங்க ரெண்டு பேரும் மோசம்; இங்கேயே இருந்துட்டு, எங்களப் பாக்கக் கூட வரல...'' என்றான், மகன்.

'இப்பத்தான் நாங்க வந்துடப் போறோமில்ல...' என்று கண்ணீர் மல்க கூறி, குழந்தைகளை அணைத்துக் கொண்டனர்.

''இங்கே பாருங்க குழந்தைகளா... உங்க தாத்தா, பாட்டியோட பிரண்ட்ஸ் நிறைய பேர் உள்ளே இருக்காங்க... உங்களப் பாக்க,



ஆசையா இருக்காங்க,'' என்று கூறி, முதியவர்கள் இருவரிடமும், ''நீங்க இவங்கள அழைச்சிட்டுப் போயி, உங்க நண்பர்களுக்கு எல்லாம் காட்டுங்க. வாசுகி... நீங்களும் போங்க. இங்கே சில, 'பார்மாலிட்டிஸ்' முடிச்சிட்டு நானும், உங்க கணவரும் வந்திடுறோம். 'லன்ச்' தயாராயிட்டுருக்கு; எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்,'' என்று, அவர்களை உள்ளே அனுப்பி வைத்தார், நேசன். பின், என் கைகளைப் பிடித்து, ''சங்கர்... உண்மையில் நீங்க ரொம்ப உயர்ந்துட்டீங்க... இதுக்கு, ரொம்ப பெரிய மனசு வேணும். அது, உங்க குடும்பத்தில எல்லார் கிட்டேயும் இருக்கு,'' என்றவாறே, சில படிவங்களை நீட்டினார்.

அதைப் படித்து, கேட்கப்பட்ட விவரங்களை நிரப்பியவாறு, ''ஐயா... இதுல பெருமிதப் பட எதுவும் இல்ல; நானும், என் மனைவியும் ஆதரவற்றோர் இல்லத்தில் தான் வளர்ந்தோம்; படிச்சோம்.

''பெத்தவங்க பாசம் கிடைக்காம ஏங்கிய வங்க, நாங்க. ஆதரவற்றோர் இல்ல நிர்வாகிகளே என்னை நல்லா படிக்க வச்சாங்க. படிப்பு முடிஞ்சதுமே வேலை கிடைச்சது; கை நிறைய சம்பளம். இல்லத்தில் வளர்ந்த வாசுகியை எனக்குக் கட்டி வச்சாங்க. நல்ல மனைவி; நிறைவான குடும்பம்; பாசமான குழந்தைகள்...

ஆனா, பெத்தவங்க பாசம் மட்டும் ஏக்கமாகவே இருந்துச்சு. அதான், இப்பவாவது, எங்களுக்கு பெத்தவங்க பாசமும், எங்க பிள்ளைங்களுக்கு தாத்தா, பாட்டி பிரியமும் கிடைக்கட்டுமேன்னு விரும்பினேன். அதுதான் இந்த முடிவு. அதுக்கு, நீங்களும் வழிகாட்டினீங்க...'' என்றேன்.

''இருந்தாலும், ஆதரவற்ற ரெண்டு முதியோரை அப்பா, அம்மான்னு சொல்றதுக்கும், பிள்ளைங்ககிட்டே தாத்தா - பாட்டின்னு காட்டுறதுக்கும் ஒரு மனசு வேணுமே...'' என்றார், நேசன்.

''இல்ல சார்... எங்களப் பிள்ளைகளா ஏத்துக்குறதுக்கும், எங்க பிள்ளைகளுக்கு தாத்தா, பாட்டியா இருக்குறதுக்கும் தான் பெருந்தன்மை வேணும். மீனாட்சியம்மாவும், சுந்தரம் அய்யாவும் கணவன், மனைவியா ஒரே வீட்டில இருக்க சம்மதிச்சாங்களே... அதுக்கு எவ்வளவு பெரிய மனசு வேணும்... இனி, எங்க வீடு பாசமும், நேசமும் உள்ள கோவிலா மாறிடும்,'' என்றேன்.

''உண்மை தான்; அதோ பாருங்க... உங்க பசங்க இங்க வந்ததோட நினைவா ரோஜாவும், செம்பருத்திச் செடியும் நட்டு வைக்குறாங்க. எல்லாம் உங்க அப்பா, அம்மா ஏற்பாடு தான். உங்க பிள்ளைங்கள பாருங்க... எவ்வளவு மகிழ்ச்சியா இருக்காங்க...''என்று நேசன் கூற, என்னையும் அறியாமல், கண்களில், ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

அனுஷ்காவின் அதிரடி முடிவு!

தன் உடல் எடை தொடர்பாக அனுஷ்கா அதிரடி முடிவு எடுத்துள்ளார். இஞ்சி இடுப்பழகி படத்திற்காக தனது உடல் எடையை ஏற்றினார் அனுஷ்கா. அந்த பட வேலைகள் முடிந்த கையோடு எடையை குறைக்க அவரும் என்னவெல்லாமோ செய்தும் ஒன்றும் பலனில்லை. யோகா, உணவுக் கட்டுப்பாடு, ஜிம் என்று அனைத்தையும் முயன்றுவிட்டார். எடை குறைவதாக இல்லை.

குண்டாக இருக்கும் அனுஷ்காவை ஆன்ட்டி, ஆன்ட்டி என்று கூப்பிட்டு ரசிகர்கள் கடுப்பேற்றுகிறார்கள். இளம் ஹீரோக்களோ அனுஷ்காவுடன் நடிக்க மறுக்கிறார்களாம். தனது உடல் எடையை பார்த்து ஆளாளுக்கு கேலி, கிண்டல் செய்வதை பார்த்தும் பார்க்காதது போன்று இருந்த அனுஷ்காவுக்கு தற்போது கோபம் வந்துவிட்டது.

இயற்கையான முறையில் உடல் எடையை குறைக்க விரும்புகிறார் அனுஷ்கா. கடந்த சில ஆண்டுகளாக அவரும் பல பிரபல மருத்துவ மையங்களுக்கு சென்று சிகிச்சை எடுத்துவிட்டார். இந்நிலையில் பாலிவுட்காரர்கள் எடையை குறைக்க எங்கு செல்கிறார்கள் என்பது தெரிய வந்து அங்கு கிளம்பிவிட்டாராம் அனுஷ்கா.

பாலிவுட்காரர்கள் ஆஸ்த்ரியாவுக்கு சென்று இயற்கை முறையில் சிகிச்சை பெற்று உடல் எடையை குறைக்கிறார்களாம். அதையே செய்ய அனுஷ்காவும் ஆஸ்த்ரியா சென்றுள்ளார். உடல் எடையை குறைத்து ஸ்லிம்மாக வந்து தன்னை கிண்டல் செய்தவர்களை எல்லாம் அதிர வைக்கப் போகிறாராம். புது அனுஷ்காவை பார்க்க அவரின் தீவிர ரசிகர்கள் ஆவலாக உள்ளனர்.

எடையை குறைத்துவிட்டு திரும்பி வந்த பிறகு கிடப்பில் உள்ள இரண்டு படங்கள் தொடர்பாக முடிவு எடுக்கப் போகிறாராம். இரண்டே வாரங்களில் தொப்பையை குறைத்து, பொலிவான தோலை பெற வைப்போம் என்று அந்த சிகிச்சை மையத்தில் உத்தரவாதம் அளித்துள்ளார்களாம். அதுவும் தீவிர உணவுக் கட்டுப்பாடு இல்லாமல். அதனால் தான் பிரபலங்கள் ஆஸ்த்ரியாவுக்கு செல்கிறார்களாம். பாலிவுட் நடிகர் ரன்பிர் கபூர், நடிகை பரினீத்தி சோப்ரா ஆகியோர் அங்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

டாப்ஸி நடிக்கும் 'கேம் ஓவர்' என்ற படம், தமிழ் மற்
தெலுங்கு மொழிகளில் தயாராகிறது.

'தமிழ்ப்படம்', 'காவியத் தலைவன்', 'இறுதிச்சுற்று', 'வி
வேதா', 'தமிழ்ப்படம் 2' உள்ளிட்ட பல படங்களைத் தயா
வர் ஒய் நாட் ஸ்டுடியோஸ் சஷிகாந்த். இவர் கடைசியாகத்
ரித்த 'விக்ரம் வேதா' மற்றும் 'தமிழ்ப்படம் 2' ஆகிய இர
படங்களுமே வசூல் ரீதியாக நல்ல வரவேற்பைப்
றுள்ளன. இந்நிலையில், டாப்ஸி நடிப்பில் 'கேம் ஓவர்'
படத்தைத் தயாரிக்கிறார் சஷிகாந்த். எஸ்.ஜே.சூர்யா, ஷி
நாயர் நடிப்பில் 'இறவாக்காலம்' என்ற படத்தை இயக்கியு
அஸ்வின் சரவணன், இந்தப் படத்தை இயக்கப் போகிறார். த
மற்றும் தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் இந்தப் படம்
ராகிறது. சஷிகாந்துடன் இணைந்து ரிலையன்ஸ் எண்டெர்டெ
மெண்ட் நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

சில வாரங்களுக்கு முன்பு
படத்தின் படப்பிடிப்புக்காக
லப் பிரதேச மாநிலம் குலுமண
சென்றபோது நடிகர் கார்த்தி உள்
படக்குழுவினர் கடும் மழைப் பெ
நிலச்சரிவில் சிக்கினர். படப்
தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.
நிலையில் தற்போது அங்கு
மோகன்லால், சாயிஷா சைகல்
ணியில் உருவாகிவரும் படத்தின்
பிடிப்பை நடத்தி வருகிறார் இய
கே.வி.ஆனந்த். லண்டனில் பட
பட்ட காட்சிகளைத் தொடர்ந்து,
தின் முக்கிய களமாக இடம்பெறு
டின் எல்லைப் பகுதிகள் தொட
காட்சிகளுக்காக டெல்லி, மணா
ளிட்ட இடங்களை கே.வி.ஆனந்த்
செய்திருந்தார்.

இந்த சமூகத்தில் கெட்ட உதாரணம் நான்!

இன்றைய சமூகத்தில் எப்படி ஸ்டைலிஷா வாழலாம் என்பதற்கு ஒரு கெட்ட உதாரணமான பெண்ணாக நடிச்சிருக்கேன் என்கிறார் சுஜா வாருணி.

தாமிரா இயக்கத்தில் சமுத்திரக்கனி நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ஆண் தேவதை'. சமுத்திரக்கனி, ரம்யா பாண்டியன், சுஜா வாருணி, ராதா ரவி, இளவரசு, காளி வெங்கட், ஹரீஷ் பெராடி, அபிஷேக், மாஸ்டர் கவின் பூபதி, பேபி மோனிகா மற்றும் பலர் நடித்துள்ள இந்தப்படத்தை தனது 'சிகரம் சினிமாஸ்' நிறுவனத்துடன் ஃபக்ருதீன் என்பவருடன் இணைந்து தயாரித்துள்ளார் தாமிரா.

விஜய் மில்டன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.

படம் குறித்து நடிகை சுஜா வாருணி பேசும்போது, 'தாமிரா சார் போனில் இந்தக் கதையைச் சொன்னவுடனேயே இதில் நடிக்கவேண்டும் என எனக்குத் தோன்றியது.

அவரோட 'ரெட்டசுழி' படமே எனக்கு ரொம்பப் பிடிக்கும்.. அதில் அஞ்சலி கேரக்டரை பார்த்தபோது, ஏன் நமக்கு இப்படியெல்லாம் ஒரு கேரக்டர் வரமாட்டேங்குது என நினைப்பேன். அந்த ஏக்கம் இதில் பூர்த்தியாகி உள்ளது.

'ஆண் தேவதை' படத்தில் திருமணமாகி ஐடி நிறுவனத்தில் வேலைக்குப் போகும் பெண்ணாக வருகிறேன். இன்றைய சமூகத்தில் எப்படி ஸ்டைலிஷா வாழலாம் என்பதற்கு ஒரு கெட்ட உதாரணமான பெண்ணாக நடிச்சிருக்கேன். என்னைத் திட்டாம படம் பாருங்க என முன்கூட்டியே கோரிக்கை விடுக்கிறார் சுஜா.

வடசென்னைக்கு 'ஏ'

தனுஷ் நடித்துள்ள 'வடசென்னை' படத்துக்கு 'ஏ' சான்றிதழ் கிடைத்துள்ளது.

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் 'வடசென்னை'. ஐஸ்வர்யா ராஜேஷ், ஆண்ட்ரியா, சமுத்திரக்கனி, அமீர், டேனியல் பாலாஜி, கிஷோர், கருணாஸ், ராதாரவி, சீனு மோகன் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தனுஷின் வுண்டர்பார் ஃபிலிம்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தை, லைகா புரொடக்ஷன்ஸ் வெளியிடுகிறது. வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்ய, சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். வடசென்னையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில், ஹீரோவின் 30 வருட வாழ்க்கை சொல்லப்படுகிறது.

மூன்று பாகங்களாக உருவாகும் இந்தப் படத்தின் முதல் பாகம், வருகிற 17-ம் தேதி உலகம் முழுக்க வெளியாக இருக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்த சென்சார் போர்டு அதிகாரிகள், சில காட்சிகளை நீக்கினால் 'யு/ஏ' சான்றிதழ் தருவதாகக் கூறியுள்ளனர்.

ஆனால், படத்தில் உண்மைத்தன்மை இருக்க வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட காட்சிகளை வெற்றிமாறன் மற்றும் தனுஷ் இருவரும் நீக்க மறுக்க, 'ஏ' சான்றிதழ் அளித்துள்ளது சென்சார் போர்டு. எனவே, 18 வயதுக்கு கீழுள்ளவர்கள் இந்தப் படத்தைப் பார்க்க முடியாது. மேலும்,தொலைக்காட்சியில் இந்தப்படத்தை ஒளிபரப்ப வேண்டுமானால், மறுபடியும் தணிக்கைக்கு அனுப்பி 'யு' சான்றிதழ் பெற வேண்டும்.

ஜீத்து ஜோசப் இயக்கத்தில் கார்த்தி

'த்ரிஷ்யம்' ஜீத்து ஜோசப் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார் கார்த்தி.

கார்த்தி நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'கடைக்குட்டி சிங்கம்'. தெலுங்கில் 'சின்ன பாபு' என்ற பெயரில் வெளியான இந்தப் படம், சூப்பர் டூப்பர் ஹிட். இதைத் தொடர்ந்து தற்போது அறிமுக இயக்குநர் ரஜத் ரவிசங்கர் இயக்கிவரும் 'தேவ்' படத்தில் நடித்து வருகிறார் கார்த்தி.

இந்தப் படத்தில், அவருக்கு ஜோடியாக ரகுல் ப்ரீத்சிங் நடிக்கிறார். 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தைத் தொடர்ந்து கார்த்தி - ரகுல் ப்ரீத்சிங் ஜோடி இரண்டாவது முறையாக இணைந்துள்ளது. மணாலியில் படப்பிடிப்பு நடைபெற்று வந்த நிலையில், அங்கு பலத்த மழை பெய்வதால் தற்போது புனேவில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

'தேவ்' படத்தைத் தொடர்ந்து, 'த்ரிஷ்யம்' படத்தின் இயக்குநரான ஜீத்து ஜோசப் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார் கார்த்தி. சுரேஷ் கோபி நடித்த 'டிடெக்டிவ்' படத்தின் மூலம் இயக்குநரான ஜீத்து ஜோசப், 'மெமரீஸ்', 'த்ரிஷ்யம்', 'பாபநாசம்' உள்பட பல படங்களை இயக்கியுள்ளார்.

கார்த்தியின் இந்தப் புதிய படத்தை, வயாகாம் மோஷன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. விரைவில் இந்தப் படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நான் பேரான

தான் ஒரு
என்று நடிகை அ
தெரிவித்துள்ளார்
கொடி படம்
அறிமுகமான அ
கன்னட படம்
அவர் தெலுங்கு
கவனம் செலுத்தி
இந்நிலையில்
றில் கூறியிருப்ப
மலையாளி
எனக்கு நன்றாக
கற்க கஷ்டப்பட
வந்ததில் இருந்
புகள் வருகிறது.
தெலுங்கு படங்
தேன். புனித்
கதையை கேட்ட
அதனால் அந்த ப
கொண்டேன். பு
பட அனைவரும்
னித்துக் கொள்கி
பிரகாஷ் ராஜ்
ஷூட்டிங் நடந்
பவத்தை
பிரகாஷ் ராஜ் சார்
கூற அதை
எனக்கும், அவரு
என்பது போன்
அந்த சம்பவம் ந
கள் 25 நாட்கள் ப
கலந்து கொண்டே
படத்தின் எ
இருக்கிறார்கள்
இல்லை. என்
என்பதை மட்டு
பட இயக்குனர்க
கதாபாத்திரங்கள
அவர்கள் அனை
வித்தியாசமான
கைப்பற்ற பேரா
படங்கள்
அனைவருக்கும்
அனைத்து ப
என்று எதிர்பார்க்
அடைந்த படங்க
கற்றுக் கொண்டு
கதையை தேர்வு
கவனம் செலுத்தி
தற்போது பெரு
தில் தான் உள்
பமா பரமேஸ்வர

கமரா முன் யாரும் ஏமாற்ற முடியாது



சர்ச்சைக்குரிய விஷயங்கள் குறித்து அடிக்கடி தனது பேட்டிகளில் குறிப்பிடும் கபாலி ஹீரோயின் ராதிகா ஆப்தே தற்போது தனது நடிப்பு அனுபவம் பற்றி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது: ஒரு காட்சியில் நடிக்கும்போது அதில் நடிக்கும் நடிகை தனது நடிப்பின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும், அப்படி செய்தால் அதை படம் பார்ப்பவர்களும் நம்புவார்கள். பார்க்கும் தோற்றத்தில் அதிர்ச்சியை தருவது மட்டுமே போதாது அந்தக் காட்சிக்கு என்ன உணர்வு தேவையோ அதை வெளிப்படுத்த வேண்டும்.

கேமரா முன்னிலையில் யாரும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அது எல்லாவற்றையுமே படமாக்கிவிடும். இத்தனை வருடங்களாக இதை நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொருமுறை நான் கற்றுக்கொண்டதை நடிப்பில் காட்டி சாதிக்க வேண்டும் என்று எண்ணுவேன் ஆனால் அதை முழுவதுமாக செய்ய முடிவில்லை. சில சமயம் அது கடினமாக இருப்பதில்லை. ஏனென்றால் நடிப்பு என்பது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டியது. சில சமயம் எதுவுமே தோன்றாமல் வெறுமையாக இருக்கும் அப்போது அந்த கதாபாத்திரம் நிறைய செய்ய கேட்கும். எனவேதான் படத்தை பற்றியும், அன்றைக்கு படமாக்கும் காட்சியின் சூழலையும் நான் கேட்டறிகிறேன். பிரபல நடிகர் ஒருவர் கூறும்போது, அன்றைக்கு நடிக்க வேண்டிய காட்சியில் எவ்வளவுதான் அனுபவம் பெற்றிருந்தாலும் அதைவிட முக்கியம் அந்த கதாபாத்திரத்தை பற்றி சொந்தமாக ஆராய்ச்சி செய்து புரிந்துகொண்டிருக்க வேண்டும் இவ்வாறு ராதிகா ஆப்தே கூறினார்.

கிறிஸ்துமஸ் விழாவுக்கு என்.ஜி.கே திரைப்படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர். நடிகர் சூர்யா செல்வராகவன் கூட்டணியில் உருவாகும் படம் என்.ஜி.கே. இந்த ஆண்டின் முக்கிய படங்களில் ஒன்றாக எதிர்பார்க்கப்பட்ட என்.ஜி.கே செல்வராகவனின் உடல்நலக்குறைவால் தாமதமானது. தீபாவளிக்கு ரிலீஸ் என அறிவித்து தாமதமான இப்படத்திற்கு தற்போதுதான் நல்ல நேரம் வந்துள்ளதாகத் தெரிகிறது. கேவி ஆனந்த் இயக்கத்தில் சூர்யா நடித்துவரும் சூர்யா 37 திரைப்பட படப்பிடிப்பு நாளையுடன் நிறைவடைகிறது. குலுமணாலியில் தற்போது படப்பிடிப்பு நடத்திவரும் படக்குழுவினர், இறுதிக்கட்ட படப்பிடிப்பை முடித்துக்கொண்டு போஸ்ட் புரடக்ஷன் வேலைகளை ஆரம்பிக்க உள்ளனர். சூர்யா 37 படப்பிடிப்பு நிறைவடைந்ததும், விரைவில் என்.ஜி.கே திரைப்பட படப்பிடிப்பு ஆரம்பமாகும் எனத் தெரிகிறது. படத்தின் அடுத்தகட்ட வேலைகளை விரைவாக முடித்துவிட்டு, டிசம்பரில் கிறிஸ்துமஸ் விழாக்காலத்தில் வெளியிட திட்டமிட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. என்.ஜி.கே திரைப்படத்தில், என்.ஜி.கே திரைப்படத்தில் சாய் பல்லவி, ரகுல்ப்ரீத் சிங், பாலசிங் மற்றும் பலர் நடிக்கின்றனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

நிறைவுற்றது 2.0வின் பின்னணி இசை

'காலா' படத்தின் மெகா ஹிட்டிற்கு பிறகு 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் லைக்கா பிரொடக்ஷன் தயாரிப்பில் ஷங்கர் இயக்கத்தில் '2.0' படத்தில் நடித்துள்ளார்.

3D தொழில்நுட்பத்தில் உருவாகி வரும் 2.0 படத்தில் சூப்பர் ஸ்டாருக்கு ஜோடியாக எமிஜாக்சன் நடித்துள்ளார். மிரட்டலான வில்லன் வேடத்தில் பாலிவுட் நடிகர் அக்ஷய்குமார் நடித்துள்ளார். 'இசை புயல்'ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து வரும் இந்த படத்திற்கு நிரவ்ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார், ஆண்டனி படத்தொகுப்பாளராக பணியாற்றுகிறார்.

இந்நிலையில், ஒரு மாத காலமாக பல வெளிநாட்டு இசைக்கலைஞர்களுடன் ஹாலிவுட் படத்திற்கு நிகராக இதன் இசையுமைப்பு பணிகள் நடைபெற்றது. 2.0 படத்தின் பின்னணி இசைக்கோர்ப்பு வேலைகள் நிறைவுற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தெலுங்கில் 2013-ஆம் ஆண்டு வெளியான அட்டாரிண்டிகி தாரேடி தமிழ் ரீமேக்கை சுந்தர் சி இயக்குகிறார். சிம்புவுக்கு ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்து வருகிறார். இன்னொரு கதாநாயகியாக கேத்ரீன் தெரசா நடிக்கிறார். இதற்கு ஹிப் ஹாப் தமிழா இசையமைக்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த கூட்டணியில் மஹத் இணைந்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சிம்புவுடன் முதல் முறையாக காமெடியில் கலக்க யோகிபாபு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். படத்தை அடுத்த ஆண்டு (2019) ஜனவரி மாதம் ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

டப்பிங் பணிகளை தொடக்கினார்

சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் படம் விஸ்வாசம். இந்தப்படம் பொங்கலுக்கு வெளியாக உள்ளது. இந்நிலையில் படத்தின் படப்பிடிப்பு பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்த நிலையில் தற்போது அஜித் விஸ்வாசம் படத்திற்காக டப்பிங் பணிகளை தொடங்கியுள்ளாராம். விஸ்வாசம் படத்தின் போஸ்ட் புரடொக்ஷன் பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதால் அஜித் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

நயன்தாராவின் 63-வது படத்துக்கு 'ஐரா' எனத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

'லட்சுமி', 'மா' குறும்படங்களின் மூலம் புகழ் பெற்றவர் கே.எம்.சர்ஜுன். இவர் இயக்குநராக அறிமுகமான படம் ிஎச்சரிக்கை: இது மனிதர்கள் நடமாடும் இடம்ி. கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியான இந்தப் படத்தில், வரலட்சுமி சரத்குமார், சத்யராஜ், கிஷோர், யோகிபாபு ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தைத் தொடர்ந்து, நயன்தாராவை வைத்து ஒரு படத்தை இயக்கி வருகிறார் கே.எம். சர்ஜுன். பிரதான வேடத்தில் நயன்தாரா நடிக்கும் இந்தப் படத்தில், கலையரசன் மற்றும் யோகி பாபு இருவரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

சென்னை மற்றும் பொள்ளாச்சியில் இதன் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. சென்னையில் மிகப்பெரிய பேய் பங்களா செட் அமைத்துப் படமாக்கியுள்ளனர். 'அறம்' படத்தைத் தயாரித்த கோட்டபாடி ஜே ராஜேஷ், கேஜேஆர் ஸ்டுடியோஸ் மூலம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

படத்துக்கு 'ஐரா' எனத் தலைப்பு வைத்துள்ளனர். இந்தப் படத்தில் இரட்டை வேடங்களில் நடித்துள்ளார் நயன். இரண்டு வேடங்களில் முதன் முறையாக அவர் நடிக்கும் படம் இது.

நீங்கள் நினைத்தது நடக்காது!

'நீங்கள் நினைத்தது நடக்காது' எனத் தன் திருமணம் குறித்த வதந்திக்குப் பதில் அளித்துள்ளார் வரலட்சுமி சரத்குமார்.

வரலட்சுமிக்குத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதாகவும், விரைவில் திருமணம் என்றும் கடந்த சில நாட்களாக வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதில் உண்மையில்லை எனத் தெரிவித்துள்ளார் வரலட்சுமி சரத்குமார்.

இதுகுறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள அவர், நான் திருமணம் செய்துகொள்ளப் போவதாக வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. எனக்கு நிச்சயமாகவில்லை, திருமணமும் இல்லை. அடிப்படை ஆதாரம் இல்லாத இதுபோன்ற வதந்திகளைப் பரப்பி, என்னைச் சிறுமைப்படுத்த நினைக்கும் வேலையில்லாதவர்களுக்கு நன்றி.

நான் இங்கு வேலை செய்ய, நடிக்க வந்திருக்கிறேன். என் கடின உழைப்பு என்றும் தோற்காது. நான் என் வேலையை விரும்புகிறேன். நீங்கள் நினைத்தது நடக்காது எனத் தெரிவித்துள்ளார்.

வரலட்சுமி நடிப்பில் இந்த மாதம் 'சண்டக்கோழி 2', அடுத்த மாதம் 'சர்கார்' என இரண்டு படங்கள் ரிலீஸாக இருக்கின்றன. இவை தவிர, 'கன்னி ராசி', 'வெல்வெட் நகரம்', 'அம்மாயி', 'நீயா 2' ஆகிய படங்களிலும் அவர் நடித்துள்ளார்.

நடிகர் விஜய் மிகவும் எளிமையானவர்

நடிகர் விஜய் - இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் சர்கார். இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். இவர்களுடன் நடிகை வரலட்சுமி சரத்குமார், பழ.கருப்பையா, ராதாரவி, யோகிபாபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

தீபாவளிக்கு வெளிவர இருக்கும் இந்தப் படத்தில் நடித்த அனுபவம் குறித்த வரலட்சுமி சரத்குமாரின் வீடியோவை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. 2 நிமிடத்திற்கும் குறைவாக ஒளிபரப்பாகும் அந்த வீடியோவில் நடிகை வரலட்சுமி பேசியிருப்பதாவது, ரொம்ப சந்தோஷமா இருக்கிறது.

இயக்குநர் முருகதாஸ் இந்த வாய்ப்பையும் நல்ல கதாபாத்திரத்தையும் எனக்கு கொடுத்திருக்கிறார். நடிகர் விஜய் மிகவும் எளிமையானவர். இயக்குநர் முருகதாஸ் மிகவும் இனிமையானவர். நடிப்பதற்காக திரைத்துறைக்கு வரும் ஒவ்வொருவருக்கும் ஒரு மிகப்பெரிய கனவு இருக்கும். சன் பிக்சர்ஸ் தயாரித்திருக்கும் விஜய் படத்தில், இயக்குநர் முருகதாஸ் இயக்கத்தில், ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் நடித்திருக்கிறேன் என்பதே எனது நீண்ட நாள் கனவு. சர்கார் படத்தை திரையில் பாருங்க. திருட்டு டிவிடி-யில் பார்க்காதீர்கள் என்று கூறியுள்ளார்.

ஆயுதபூஜையன்று சர்க்கார் டீசர்

சன்பிக்சர்ஸ் தயாரிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் சர்கார். படத்தின் இசை வெளியீட்டு விழா பிரமாண்டமாக சென்னையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிலையில் அக்டோபர் 19-ம் தேதி ஆயுத பூஜை அன்று மாலை 6 மணிக்கு சர்கார் டீசர் வெளியிடப்படும் என்று சன்பிக்சர்ஸ் தனது ட்விட்டர் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

சர்கார் படத்தில் விஜய் ஜோடியாக கீர்த்திசுரேஷ் நடித்துள்ளார். மேலும் வரலட்சுமி, ராதாரவி, யோகிபாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

படத்திலிருந்து வெளியேறிய நதியா

ஆரண்ய காண்டம் படம் இயக்கியவர் தியாகராஜன் குமாரராஜா. தற்போது சூப்பர் டீலக்ஸ் படம் இயக்கி வருகிறார். விஜய் சேதுபதி, சமந்தா, பஹத்பாசில், மிஷ்கின், ரம்யாகிருஷ்ணன், காயத்ரி, பகவதி பெருமாள் நடிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இசை. இப்படம்பற்றி தியாகராஜன் குமாரராஜா கூறியதாவது: ஆரண்ய காண்டம் படம் வெளியாகி 8 வருடங்கள் ஆகிறது. அப்படம் வெற்றி பெறவில்லையென்றாலும் இன்னமும் அது பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். சூப்பர் டீலக்ஸ் படத்தின் கதையை ஒரு வரியில் சொல்லிவிடமுடியாது.

பல கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை உள்ளடக்கிய கதை. இதில் சில்பா என்ற பெண் கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடிக்கிறார். வித்தியாசமான கதை இருக்கிறது நடிக்கிறீர்களா என்றபோது யோசித்துவிட்டு சொல்கிறேன் என்று கூறிய விஜய் சேதுபதி அடுத்த அரை மணிநேரத்தில் போன் செய்து யாரையும் ஒப்பந்தம் செய்துவிடாதீர்கள் நானே அதில் நடிக்கிறேன் என்றார். சில பிரச்னை காரணமாக படப்பிடிப்பை தள்ளி வைக்க வேண்டியிருந்தது.

இதுபற்றி விஜய்சேதுபதியிடம் கூறியபோது, 'ஏன் என்னை மாற்றிவிட்டு வேறு நடிகரை போடப்போகிறீர்களா?' என்று அதிர்ச்சியுடன் கேட்டார். அதேபோல் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தில் நதியா நடிக்க ஒப்புக்கொண்டார். ஒரு காட்சியை இரண்டு நாட்கள் நான் படமாக்கியபோது அவர் பொறுமை இழந்து வெளியேறிவிட்டார். பிறகு ரம்யா கிருஷ்ணன் நடிக்க வந்தார். அவரை வைத்தும் 80 முறைக்கு மேல் டேக் எடுத்தேன். அடுத்த காட்சி ஓ.கே ஆகாவிட்டால் அவரும் வெளியேறுவதாக இருந்தார். அது ஓ.கே ஆகிவிட்டது. சமந்தா ஹீரோயினாக நடித்திருக்கிறார். 18 வயது ஆகிவிட்டால் மட்டும்போதாது மனதளவில் முதிர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே இப்படத்தை பார்க்க முடியும். தணிக்கையில் இப்படத்துக்கு ஏ சான்றிதழ்தான் கிடைக்கும். அதற்கு காரணம் சில கதாபாத்திரங்கள் பேசும் வசனம் அதுபோன்று இருக்கும்.

மிரட்டும் வில்லன்

இந்திய சினிமாவில் பிரமாண்ட இயக்குநராக கருதப்படுபவரான இயக்குநர் சங்கர் தற்போது சூப்பர் ஸ்டார் ரஜினியை வைத்து 2.0 என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். இதில் அக்ஷய் குமார் வில்லனாக நடிக்கிறார். இந்நிலையில் இயக்குநர் சங்கர் தன் அடுத்த படமான இந்தியன் 2 விலும் நடிகர் அக்ஷய் குமாரையே வில்லனாக நடிக்க வைக்க ஒப்பந்தம் செய்துள்ளதாக தகவல் வெளியாகிறது. ஹிந்தி நடிகர் அக்ஷய் குமாருக்கு வட இந்தியாவில் ரசிகர்கள் அதிகம் . அதுமட்டுமல்லாமல் இந்திய அளவில் வியாபார நோக்கை கருத்தில் கொண்டு தான் கமல்ஹாசன் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அதற்கு இயக்குநர் சங்கர் மற்றும் தயாரிப்பு நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெலுங்கில் அறிமுகமாகும் ஐஸ்வர்யா ராஜேஸ்

ஐஸ்வர்யா ராஜேஷ் விஜய் தேவரகொண்டாவுடன் நடிக்க உள்ளார். நடிப்புக்கான களம் உள்ள கதைகளைத் தேடி நடித்து வருபவர் ஐஸ்வர்யா ராஜேஷ். சமீபத்தில் இவர் நடித்திருந்த செக்கச் சிவந்த வானம் திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அடுத்ததாக ரிலீஸாக உள்ள வட சென்னை திரைப்படத்திலும் இவர் ஏற்றுள்ள பத்மா கதாபாத்திரம் நிச்சயம் கொண்டாடப்படும் எனத் தெரிகிறது. இந்த நிலையில், முதல் முறையாக தெலுங்கு படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் ஐஸ்வர்யா. அர்ஜுன் ரெட்டி மூலம் புகழ்பெற்ற நடிகர் விஜய் தேவரகொண்டா நடிப்பில் நோட்டா திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அடுத்ததாக கிராந்தி மாதவ் இயக்கும் படத்தில் விஜய் தேவரகொண்டா நடிக்க உள்ளார். இப்படத்தில் ராஷி கண்ணா விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார். இவர்களுடன் ஐஸ்வர்யா ராஜேஷும் நடிக்கிறார். இப்படத்தைப் பற்றி கூறும் போது, தெலுங்கில் நிறைய வாய்ப்புகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் சரியான கதைக்காக காத்திருந்தேன். அது இப்போது நடந்துள்ளது. இப்படத்தின் ஸ்க்ரிப்டை கேட்டதும் அழகாக இருந்தது. வழக்கத்திற்கு மாறான ஒரு கதாபாத்திரத்தில் நான் நடிக்கிறேன். என்னுடையது மிக ஸ்ட்ராங்கான கதாபாத்திரம் எனத் தெரிவித்துள்ளார்.

காதோடு காதாக...

உச்ச நடிகருடன் ஜோடி சேர்ந்துள்ள மாமி நடிகை, தனது சம்பளத்தை அநியாயத்துக்கு உயர்த்திவிட்டதாக தயாரிப்பாளர்கள் புலம்புகிறார்கள். பல ஆண்டுகளாக சினிமாவில் கோலோச்சி நிற்பவர் இந்த சீனியர் நடிகை. ஏதோ அதிர்ஷ்டத்தால் மட்டும் உயர்ந்துவிடவில்லை. துணை நடிகையாக வாழ்க்கையை தொடங்கி, படிப்படியாக முன்னேரி ஹீரோயின் ஆனவர். இவர் ஜோடி போட்டு நடிக்காத நடிகர்களே இல்லை. தமிழ் மட்டுமல்ல, பிற மொழிகளிலும் முன்னணி நாயகியாக வலம் வந்தார். மார்க்கெட் உச்சத்தில் இருக்கும் போதே கல்யாணம் செய்து செட்டிலாக நினைத்தார். ஆனால் அந்த முயற்சிகள் எல்லாமே தோல்வியில் முடிந்தது.இதனால் கடுப்பான நடிகை மீண்டும் படங்களில் கவனம் செலுத்த தொடங்கினார். ஆனால் படங்கள் எல்லாம் தொடர் தோல்வியடைந்ததால் மார்க்கெட் டல்லானது. இதையடுத்து தனக் முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்க துவங்கினார். ஆனால் அதுவும் கைகொடுக்காததால், சம்பளத்தை குறைத்து, மீண்டும் பழைய பாதைக்கு திரும்பினார். இந்நிலையில் தான் அவருக்கு அதிர்ஷ்டம் கதவை தட்டியிருக்கிறது. உச்ச நட்சத்திரத்தின் படத்தில் கமிட் ஆகும் வாய்ப்பு அவருக்கு கிடைத்து. இதைகெட்டியாக பிடித்துக்கொண்ட அவர், தற்போது டூயட் பாடி நடித்து வருகிறார். இதற்கிடையே அவர் நடித்த மற்றொரு படம் செம ஹிட் ஆகியிருக்கிறது. இதனால் படுகுஷியில் இருக்கிறார் நடிகை. கையோடு கையாக தனது சம்பளத்தையும் பல மடங்கு உயர்த்திவிட்டார். இதனால் தயாரிப்பாளர்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள். நடிகை கேட்கும் சம்பளத்தை கொடுக்கலாமா இல்லை நழுவிக்கொள்ளலாமா என யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

★★★★★

பெரிய முதலாளி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட செல்லக்குட்டி நடிகை, தற்போது ஆளே மாறி விட்டாராம். தான் நடித்து முடித்துக் கொடுக்காமல் இருக்கும் பட இயக்குநர்களிடம் புதிது புதிதாக நிறைய கண்டிசன்கள் போடுகிறாராம். இதனால், அதிகம் பிரபலம் இல்லாத போது அவருக்கு வாய்ப்பு தந்த இயக்குநர்கள் நொந்து போய் உள்ளனர். தமிழில் தமிழ் எனத் தொடங்கும் படம் மூலம் அறிமுகமானவர் இந்த நடிகை. குழந்தைத்தனமான முகம், கவர்ந்திழுக்கும் சிரிப்பு என அழகாக இருந்தபோதும் நடிகைக்கு சொல்லிக் கொள்ளும் விதத்தில் அடுத்தடுத்து படங்கள் அமையவில்லை. இதனால் கிடைத்த சின்ன சின்ன படங்களில் எல்லாம் அவர் நடித்தார். அப்படி நடித்துக் கொண்டிருந்தபோது தான் எதிர்பாராதவிதமாக பெரிய முதலாளி நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பு தானாக கிடைத்ததா அல்லது நடிகையாகவே போராடி பெற்றாரா என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டார் நடிகை. இதனால் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமடைந்தார். தற்போது அவரது நிலையே மாறிவிட்டது. நிகழ்ச்சி தந்த புகழால், தன்னைத் தேடி வரும் இயக்குநர்களிடம் புதுப்புது கண்டிசன்கள் போடுகிறாராம். தான் முடித்துத் தர வேண்டிய படங்களையும் கண்டுகொள்ளவில்லையாம். வாரிசு நடிகரின் படத்தில் நடிக்க இருப்பதாக கூறி வரும் நடிகை, அதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். மற்ற படங்களில் நடிக்க அவர் ஆர்வம் காட்டுவதில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் இவரை நம்பி பணம் போட்ட தயாரிப்பாளர்கள் கவலையில் உள்ளனர். எப்படி இவரை நடிக்க வைத்து மீதிப்படத்தையும் எடுத்து வெளியிடுவது என யோசித்து வருகின்றனர். ஏற்கனவே நிகழ்ச்சியால் தனது பெயரை பெரிதும் கெடுத்துக் கொண்ட நடிகை, இப்படி நடந்து கொண்டால் சினிமாவில் அவரது எதிர்காலம் கேள்விக்குறி தான்.

★★★★★

உயர்ந்த நடிகை ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறதாம். தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வருபவர் உயர்ந்த நடிகை. ஒரு படத்திற்காக எடையை கூட்டிவிட்டு அதை குறைக்க முடியாமல் பாவம் அல்லாடி வருகிறார். அவர் நடிப்பில் தமிழில் வெளியான ஒரு படத்தை பார்த்த ரசிகர்கள் அவரை ஆன்ட்டி என்று கிண்டல் செய்தனர். இந்த தகவல் அவர் காதுகளை எட்ட தமிழ் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார். தெலுங்கிலும் ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை மட்டும் தேர்வு செய்து நடித்து வருகிறார். அவரின் அசத்தல் நடிப்புக்காக படங்களும் ஓடுகிறது. அவர் அத்தகைய படங்களை தேர்வு செய்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறதாம். அந்த காரணம் இளம் ஹீரோக்கள் என்று கூறப்படுகிறது. நடிகை உயரத்திற்கேற்ற வெயிட்டுடன் ஆஜானுபாகுவாய் இருக்கிறார். அவருடன் நடித்தால் அவரின் தம்பி போன்று தெரிவோம். அவர் ஆன்ட்டி போன்று இருக்கிறார் என்று இளம் ஹீரோக்கள் பயப்படுகிறார்களாம். அப்படி ஒன்றும் யாரும் கஷ்டப்பட்டு என்னுடன் நடிக்க வேண்டாம் என்று கூறிவிட்டு ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கிறாராம். நடிகைக்கு வயது ஏறிக் கொண்டே செல்வதால் அவருக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் விரும்புகிறார்கள். ஆனால் அவருக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்காமல் உள்ளது. இந்நிலையில் அவர்கள் கோவில், கோவிலாக சென்று வருகிறார்கள். இதற்கிடையே நடிப்புக்கு குட்டி பிரேக் விட்டிருந்த நடிகை புதுப்படங்களுக்கு கதை கேட்க ஆரம்பித்துவிட்டார் என்று கூறப்பட்டது. நடிகை இனி படங்களில் நடிக்க மாட்டார் என்றும், அவருக்கு விரைவில் திருமணம் என்றும் நேற்று சமூக வலைதளங்களில் ஒரு தகவல் தீயாக பரவியது. நடிகையின் திருமணம் பற்றி அவ்வப்போது இப்படி ஏதாவது தகவல் பரவுகிறது. அவர் நிஜமாகவே சினிமாவுக்கு முழுக்கு போடுகிறாரா என்பதை அவர் தான் உறுதிபடுத்த வேண்டும்.

மாரடைப்பு மரணத்தின் அறிகுறியா?

ஒருமுறை மாரடைப்பு ஏற்பட்டு, அதற்குச் சிகிச்சை பெற்று, உயிர் பெற்றுத் திரும்புகிறவர்களை, எல்லையில் நடக்கும் போரில் வெற்றி பெற்று மறுபடியும் படைக்குத் திரும்பும் வீரர்களுடன் ஒப்பிடலாம். மரணத்தின் வாசலுக்குச் சென்று திரும்பும் இவர்களுக்கு மரணம் பற்றிய பயம், சிறிது காலம் நீடிக்கலாம். மறுபடியும் மாரடைப்பு ஏற்படுமா எனும் கேள்வி மனத்தைக் குடையும். இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப முடியுமா எனும் சந்தேகம் அரிக்கும். குடும்பத்தின் முக்கியப் பொறுப்புகளைக் கவனிக்கும் சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு இந்தக் கவலைகள் அவரோடு முடியாது; குடும்பத்தினரையும் தொற்றிக்கொள்ளும்.

மாரடைப்புக்குப் பிறகான வாழ்க்கையை ஒருவர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதைப் பொறுத்து அவருடைய உடல் நிலையும் மனநிலையும் நலம் பெறும் என்பது பொதுவான விதி. என்றாலும், சின்னச் சின்ன வாழ்க்கைமுறை மாற்றங்களால் இவை எல்லாவற்றையும் எல்லோராலும் வெற்றிகொள்ள முடியும் என்றுதான் நவீன மருத்துவம் நம்பிக்கை தருகிறது.

அதற்கான வழிகள்:

இதய நிபுணர் பரிந்துரைக்கும் மாத்திரைகளைத் தவறாமல் எடுத்துக்கொள்வது அவசியம்.

குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மறு பரிசோதனைகளுக்குச் செல்வது முக்கியம்.

★ புகைபிடிப்பது கூடவே கூடாது.

★ மது அருந்துவதும் ஆகாது.

★ உயர் ரத்தஅழுத்தம் இருப்பவர்கள் அதைக் கட்டுப்படுத்த வேண்டும். முக்கியமாக, உணவில் உப்பைக் குறைக்க வேண்டும்.

ரத்தத்தில் கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள், கொழுப்புணவைக் குறைத்து, ரத்த கொலஸ்ட்ராலையும் கட்டுப்படுத்த வேண்டும்.

உணவு, உடற்பயிற்சிகள் மூலம் உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். சிகிச்சை பெற்றுக் கொண்ட ஒரு வாரத்தில் வீட்டிலேயே மேற்கொள்ளக்கூடிய உடற்பயிற்சிகளை ஆரம்பிக்கலாம். ஒரு மாதம் கழிந்தபின் வழக்கமான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். மிகவும் தீவிரமான உடற்பயிற்சிகளையும் ‘ஜிம்’ போன்ற தசைப்பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டாம்.

தினமும் 40 நிமிட நடைப்பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். குறைந்தது வாரம் 5 நாட்களுக்கு இப்பயிற்சி தேவை.

மாரடைப்பு ஏற்பட்டவர்கள் மருத்துவரிடம் கேட்கத் தயங்கும் கேள்வி இதுதான்: ‘மாரடைப்புக்குப் பிறகு தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாமா?’ சிகிச்சைக்குப் பிறகு ஒரு மாதம் கழித்து தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளலாம். ‘வயாக்ரா’ போன்ற மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம். அவை மிகவும் அவசியம் என்றால் இதய நிபுணரின் சம்மதம் தேவை.

குறைந்தது 6 வார ஓய்வுக்குப் பின் வழக்கமான பணிகளைச் செய்யலாம். அலுவல் பணிகளையும் செய்யலாம். கடுமையான உடலுழைப்பு தேவைப்படுபவர்கள் மட்டும் இதய நிபுணரின் ஆலோசனைப்படி பணிக்குத் திரும்புவது நல்லது. அரிதாக ஒரு சிலர் மட்டும் தங்கள் பணியை மாற்றிக்கொள்ள வேண்டி வரலாம்.

மாரடைப்புக்குப் பிறகு வெகு சிலருக்கு இதயம் பலவீனமாகிவிடும். இவர்களுக்கென்றே ‘கார்டியாக் ரீஹாபிலிடேஷன் சென்டர்கள்’ (Cardiac rehabilitation centers) உள்ளன. இவற்றில் இதயம் வலுப்பெறுவதற்கான சிறப்புப் பயிற்சிகள் பிரத்யேகமாக வழங்கப்படுகின்றன.

தேவையில்லாமல் பிறருடன் வாக்குவாதம் செய்வதைத் தவிருங்கள். கோபம், எரிச்சல், டென்ஷன் போன்றவை உண்டாகிற சூழ்நிலைகளைத் தவிருங்கள். அடிக்கடி இந்தச் சூழ்நிலைகளுக்கு ஆளாகிற பணிகளில் உள்ளவர்கள் அவசியம் தியானம் செய்யுங்கள்.

குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் மனம் விட்டுப் பேசினால், மனம் நலமும் பலமும் பெறும். தேவையில்லாத பயம் விலகும்.

இப்போது மாரடைப்புக்கான முன்சிகிச்சைச் செலவுகள் மட்டுமன்றி பின்சிகிச்சைச் செலவுகளும் பெரிதும் அதிகரித்துவிட்டன. சாமானிய இந்தியர் இதைச் சமாளிப்பது கடினம். ஆகவே, மருத்துவக் காப்பீடு எடுத்துக்கொள்ளுங்கள். சிகிச்சைக்கான பொருளாதாரச் சிக்கல் வராமல் தொடர் சிகிச்சைக்கு வழி அமைத்துக்கொள்ளலாம். இதன் மூலம் மாரடைப்பிலிருந்து முழுமையாகப் பாதுகாப்புப் பெறலாம்.

மாரடைப்புக்கு ஸ்டென்ட் பொருத்திக்கொண்டவர்கள் மட்டுமன்றி, பைபாஸ் ஆபரேஷன் மேற்கொண்டவர்களுக்கும் இந்த ஆலோசனைகள் பொருந்தும்.

இளநீரின் மகத்துவம்

தினமும் இளநீர் அருந்தி வந்தால் உடல் சூடு தணியும். சிறுநீரக கல்லடைப்பு ஏற்படாமல் தடுக்கிறது. மேலும் பல்வேறு நன்மைகளை உள்ளடக்கியுள்ளது.

வெப்ப நாடுகளில் வாழ்பவர்களின் உடல் நிலை அதன் தன்மைக் கேற்ப அமையும். ஆனால் தட்பவெப்ப நிலை மாறுபட்டால் உடலில் பித்த நீர் அதிகரித்து, உடல் அதிக உஷ்ணமாகும். இதனால் உடலில் பல வியாதிகள் ஏற்படும்.

இவை நீங்க தினமும் இளநீர் அருந்தி வந்தால் உடல் சூடு தணியும். கண்கள் குளிர்ச்சி பெறும். வயிற்று நோய்கள் அகலும். நீண்ட பட்டினி, அதிக உணவு, உடலுக்கு ஒவ்வாத உணவு இவற்றால் ஏற்படும் அஜீரணக் கோளாறு அனைத்தையும் தீர்க்கும் குணம் இளநீருக்கு உண்டு. இளநீர் ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். ரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற அசுத்த நீர்களை நீக்கும். ரத்தச் சோகையைப் போக்குகிறது.

ரத்தக் கொதிப்பைக் குறைக்கும் சக்தி இளநீருக்கு உண்டு. அதனால் ரத்த அழுத்த நோயாளிகளுக்கு இளநீர் சிறந்த மருந்தாகும். குழந்தைகளுக்கு கொடுத்தால் இதிலுள்ள சத்துகள் எலும்புகளுக்கும், உடல் உறுப்புகளுக்கும் வலு கொடுக்கும். உடல் வளர்ச்சி சீராக இருக்கும். குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைத் தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். அம்மை நோயின் தாக்கம் கண்டவர்கள் இளநீர் அருந்தினால் நோயின் வீரியம் குறையும். நாவறட்சி, தொண்டைவலி நீங்கும். சிறுநீர் பெருக்கியாகவும், சிறுநீரகம் சீராக இயங்கவும், இளநீர் உதவுகிறது. சிறுநீரக கல்லடைப்பு ஏற்படாமல் தடுக்கிறது. மூளைக்கு புத்துணர்வும், நரம்புகளுக்கு வலுவும் ஏற்படுத்து கிறது. நினைவாற்றல் தூண்டப்படுகிறது. மது பழக்கம் உள்ளவர்களின் கல்லீரல் அதிகம் பாதிப்படையும். அதனை சீர் படுத்தும் குணம் இளநீருக்கு உண்டு. ரத்த ஓட்டத்தை சீர்படுத்துவதால் இதயம் சீராக செயல்படும் இதய வால்வுகளை பலப்படுத்தும்.

தினமும் இளநீர் அருந்தி வந்தால் இதய நோய் எதுவும் அணுகாது. பெண்களுக்கு மாதவிலக்கு காலங்களில் உண்டாகும் அடிவயிறு வலிக்கு இளநீர் சிறந்த மருந்தாகும். டைபாய்டு, மஞ்சள் காமாலை நோயின் தாக்குதல் கொண்டவர்கள் இளநீர் அருந்தினால் உடல் விரைவாகத் தேறும். இளநீரில் சுண்ணாம்புச்சத்து நிறைந்திருப்பதால் எலும்புகளின் வளர்ச்சிக்கும், உறுதிக்கும் உதவுகிறது.

இந்திய மருத்துவ முறையில் இளநீர் பெரும்பங்கு வகிக்கிறது. இளநீர் ஒரு சிறந்த டானிக்காக வயதானவர்களுக்கும் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பயன்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு இது ஒரு அருமருந்து. இளநீர் தினமும் அருந்தினால் உடல் வலுப்பெறும். மலச்சிக்கல் தீரும்.

நீரிழிவை குறைக்கவல்ல கோவக்காய்!

நீரிழிவு நோயை தணிக்கவல்லதும், உடல் எடையை குறைக்க கூடியதுமான கோவக்காய் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. இதன் இலைகள், பழங்கள் அனைத்தும் மருந்தாகிறது. சிவந்த நிற பழங்களை கொண்டது. கோவை இலை சாறு நெஞ்சக சளியை வெளியேற்றும். இருமலை போக்கும். சர்க்கரை நோயை தணிக்கும். வயிற்றில் சேர்ந்த வாயுவை அகற்றும். வயிற்று புண்களை ஆற்றும். எலும்பு தேய்மானத்தால் ஏற்படும் மூட்டுவலியை போக்கும். தோல்நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது.

கோவக்காயை பயன்படுத்தி ரத்தத்தில் உள்ள நீரிழிவின் அளவு, கொழுப்பு சத்தை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கோவக்காய், நல்லெண்ணெய், உப்பு, மிளகு. செய்முறை: ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விடவும். இதில், நறுக்கி வைத்த கோவக்காயை போட்டு லேசாக வதக்கவும். இதனுடன் உப்பு, மிளகு சேர்க்கவும். இதை சர்க்கரை நோயாளிகள் காலை நேரத்தில் சாப்பிட்டுவர ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். உடலில் தேவையில்லாத கொழுப்பு சத்து கரையும். உடல் பருமன் குறையும். வயிற்றில் உள்ள வாயுவை வெளித்தள்ளும்.

கோவை பழத்தை பயன்படுத்தி சளி, காய்ச்சலை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கோவப் பழம், உப்பு, மஞ்சள் பொடி.

செய்முறை: பாத்திரத்தில் ஒரு டம்ளர் நீர்விட்டு, 2 கோவைப்பழம் சேர்க்கவும். சிறிது மிளகுப்பொடி, உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி எடுக்கவும். காய்ச்சல், சளி இருக்கும் போது காலை, மாலை வேளைகளில் 50 முதல் 100 மில்லி குடித்துவர காய்ச்சல், சளி குணமாகும். இது, உடல் வலியை போக்குகிறது. உள் உறுப்புகளை தூண்டுவதாக அமைகிறது.

பல்வேறு நன்மைகளை கொண்ட கோவப்பழம் ஒவ்வாமைக்கு அற்புதமான மருந்தாகிறது. காய்ச்சலை தணிக்க கூடியது. வியர்வையை தூண்டும். உடல் சூட்டை தணிக்கும். நோய் நீக்கியாக பயன்தருகிறது. கோவை இலை, பூக்களை பயன்படுத்தி தோல்நோய்களுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கோவ பூக்கள், இலைகள், பனங்கற்கண்டு.செய்முறை: பாத்திரத்தில் ஒரு டம்ளர் நீர்விட்டு கோவை பூக்கள், 5 கோவை இலைகள், சிறிது பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி குடித்துவர தோலில் ஏற்படும் சொரி, சிரங்கு சரியாகும். கோவைக்காய் உள்மருந்தாகி, உணவாகி பயன்படுகிறது. வெள்ளரி இனத்தை சேர்ந்த கோவைக்காயை அடிக்கடி உணவில் சேர்த்து பயன்பெறலாம். முகப்பருக்களை போக்கும் எளிய மருத்துவம் குறித்து பார்க்கலாம். நாட்டு மருந்து கடைகளில் கிடைக்க கூடிய திரிபலா சூரணத்தை வாங்கி ஒரு ஸ்பூன் அளவு எடுத்து, 200 மில்லி நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி முகத்தை கழுவிவர முகப்பரு மறையும். முகம் பொலிவு பெறும்.

முத்துப்பல்லுக்கு வழி என்ன?

குழந்தை பருவத்தில் 6 மாதம் முதல் பால் பற்கள் முளைக்கத் தொடங்குகிறது. இரண்டு வயதிற்குள் இருபது பால் பற்களும் முளைத்துவிடும். 6 வயது முதல் 12 வயதுகளில் அனைத்துப் பால் பற்களும் முழுவதுமாக விழுந்து ஆரோக்கியமான வலுவான பற்கள் உருவாகிவிடும். வாயில் எப்போதும் கிருமிகள் இருந்து கொண்டே இருக்கும். நாம் சாப்பிடும் உணவுத் துகள்கள் பற்களின் இடுக்குகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் அந்த உணவுகள் கெட்டுப் போய் பற்களின் இடுக்குகளிலேயே இருப்பதால் வாயில் துர்நாற்றம் ஏற்படும். பற்களில் கிருமிகளும் சேர்ந்துவிடும் இதனால் பற்களில் அமிலத் தன்மை சுரந்து பற்களின் மேற்பூச்சு காணாமல் போய்விடும். இதனால் பற்கள் கூசும் பற்கள் வலுவிலக்கும். பற்கள் சொத்தையாகி அதை எடுக்க வேண்டியது அவசியமாகிவிடும்.

பல் பராமரிப்பு பல் வலி அல்லது ஈறுகளில் ரத்தம் ஒழுகுதல் ஏற்பட்டால் காலடியில் (வினிகர்) வாய் கொப்பளித்தல் நல்ல பயன் கிடைக்கும். உப்பை வறுத்து ஒற்றடம் கொடுத்தால் பல்வலி மற்றும் காதுவலி நீங்கும். உப்பையும் ஆப்பசோடா மாவையும் சரி சமமாக கலந்து தேய்த்தால் பல்லில் உள்ள அழுக்குகள் அகன்று பற்பசை விளம்பரத்திற்கு பல்லைக் காட்டும் அளவுக்கு பற்கள் பளபளக்கும். உப்பை வெண்ணீரில் கலந்து வாய் கொப்பளித்தால் பற்களில் உள்ள ஈறுகளுக்கும் லெக்பீஸ் சாப்பிடும் அளவிற்கு வலிமை உண்டாகும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் சிறிது பெருங்காயத்தை சேர்த்தால் வெண்ணைபோல் திரண்டு வரும். அதைத் தொட்டு பல் வலிக்கும் போது தடவினால் வலி கொஞ்சம் கொஞ்சமாக குறையும். மிளகை அரைத்து கொதிக்கவைத்து அதை வலிக்கும் பல்லின் பகுதியின் மேல் தடவினால் பல்வலி பறந்து போதும். எலுமிச்சம் பழச்சாறு ஒரு பாகமும் பன்னீர் ஒரு பாகமும் கலந்து தினம் காலை, மாலை வாய் கொப்பளித்து வந்தால் வாயின் துர்நாற்றம் நீங்குவதுடன் பயோரியா என்ற நோய் வராமல் தடுக்கப்படும். பூண்டை வேகவைத்து வேக வைத்த நீரில் சம அளவு வெந்நீர் கலந்து வாய் கொப்பளித்து வந்தால் ஈறுகள் பலம்பெறும் பற்களும் வலிமையாகும்.

பூண்டின் மருத்துவ குணம்

நம் அன்றாட உணவில் தவறாமல் இடம் பெறுகிற ஒரு பொருள் பூண்டு ஆகும். பூண்டும் இஞ்சியும் சேரும்போது பெரும் மணத்தையும் சுவையையும்

உணவுக்குத் தருகிறது. மேலும் உணவாகிற பூண்டு இன்றைய நவநாகரிக உலகில் மானுடத்தைத் தாக்குகிற பல நோய்களுக்கு மருந்தாகிப் பயனளிக்கிறது.

பூண்டின் மருத்துவத் தன்மைகள்

★நோயைத் தணிப்பதில் பூண்டுஆண்டிபயாடிக் போன்றது.

★பலம் கொண்ட கிருமிநாசினி

★பூஞ்சைக் காளான் கொல்லி

★வயிற்றுப் புழுக்கொல்லி

★ரத்த நாள அழற்சியைத் தடுப்பது

★ரத்த அழுத்தத்தைக் குறைப்பது

★ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவையும், கொழுப்புச் சத்தையும் குறைக்கக் கூடியது

★மேல் சுவாச அறைக் கோளாறுகளைக் கண்டிக்க கூடியது

★முதுமை காரணமாக ஏற்படும் ரத்த நாள அழற்சி, அடைப்பு ஆகியவற்றைத் தடுக்கக் கூடியது.

★ஒரு ஸ்பூன் நல்லெண்ணெயில் இரண்டு திரி பூண்டை நசுக்கிச் சேர்த்து காதில் ஓரிரு சொட்டுகள் விட்டு வர விரைவில் காதுவலி, காதில் சீழ் வடிதல் ஆகியன குணமாகும்.

★பூண்டை உரித்து சில திரிகளோடு கொஞ்சம் உப்பு சேர்த்துக் குழைத்து, மேலுக்குப் பூசசுளுக்கும் அதனால் ஏற்படும் கடும் வலியும் குணமாகும்.

★பூண்டை அரைத்து சிறிய கட்டிகளின் மேல் பூசி வர கட்டிகள் விரைவில் கரையும் அல்லது உடைந்து அதன் நச்சுக்கள் வெளியேறும்.

★பூண்டுச் சாறு தயாரித்து அதில் தினமும் 20 முதல் 30 துளி வரை அந்தி, சந்தி என இரு வேளை சாப்பிட்டு வர இருமல், இரைப்பு என்கிற மேல்மூச்சு, ஆஸ்துமா என்கிற மூச்சு முட்டல் ஆகியன குணமாகும்.

பாதாம் அதிகளவு உண்டால்...?

பாதாம் நமது ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் நமக்கு உற்ற நண்பன். பாதாமில் அதிகளவு விற்றமின் ‘ஏ’ உள்ளது. இது, உடலின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.அதன் சுவையில் மயங்கி பாதாமை மிக அதிகளவு சாப்பிட்டால், அது எதிர்மறை விளைவுகளை தந்துவிடும். பாதமை அதிகளவு சாப்பிட்டால் 5 எதிர்மறை விளைவுகள் உண்டாகும். அதன் விவரம் இதோ...நீங்கள் அதிகளவு பாதாமை சாப்பிட்டால் உங்களுக்கு வயிற்றுப்போக்கு, வயிறு சரி இல்லாமல் போவது ஆகிய பிரச்னை உண்டாகும். இதற்கு காரணம், பாதாமில் உள்ள அதிகளவு நார்ச்சத்துதான். அதிகளவு நார்ச்சத்தை நமது உடல் எடுத்துக்கொள்ளாது. அதிகளவு நார்ச்சத்து உள்ள பொருட்களை சாப்பிட்டால், அதிகளவு நீரையும் குடிக்க வேண்டியது அவசியம். அதற்கு பாதாமை அதிகளவு சாப்பிடாமல் இருப்பதே சிறந்தது.

100 கிராம் அதாவது 1 கப் பாதாமில் 25 மில்லி கிராம் விற்றமின் ‘ஈ’ உள்ளது. தினசரி பாதாமின் தேவை 15 மில்லி போதுமானது. அது மட்டுமின்றி, ஒரே நாளில், முட்டை, முழு தானிய உணவு போன்றவற்றை சாப்பிட்டால் உங்களது உடலுக்கு தேவைக்கு மீறி விற்றமின் ‘ஈ’ கிடைத்துவிடுகிறது.

இது, உங்களுக்கு வயிற்றுப்போக்கு, மங்கலான பார்வை மற்றும் சோர்வை ஏற்படுத்தும்.பாதாமில் அதிகளவு கொழுப்பு மற்றும் கலோரி உள்ளது. 100 கிராம் பாதாம் 50 கிராம் கொழுப்பை தருகிறது.

அளவாக பாதாம் சாப்பிடுவது இருதயத்திற்கு மிகவும் நல்லது. அதிகமாக பாதாம் சாப்பிடுவது உடல் எடையை அதிகரிக்க செய்யும். உப்பு மற்றும் காரம் சேர்க்கப்பட்டு சாப்பிடும் பாதாம் நல்லது என்றாலும் கூட, அவற்றை நீங்கள் அதிகமாக எடுத்துக்கொண்டால், அது உடலில் நச்சுத்தன்மையை உருவாக்கும். ஏனெனில், இதில் ஹைட்ரோசயனிக் அமிலம் உள்ளது.

எனவே அதிகமாக சாப்பிட்டால் மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்தும். முக்கியமாக கர்ப்பமாக உள்ள பெண்கள் இதை அதிகம் சாப்பிடக்கூடாது. உணவுத்துறையின் ஆய்வின்படி ஒரு நாளைக்கு முக்கால் கப் பாதாம் அதாவது 40 கிராமிற்கு மேல் கண்டிப்பாக சாப்பிட கூடாது.

காகித விமானமும் மெய்நிகர் தன்மையும்

கொஞ்சம் புதுமையான ஐடியா கைவசம் இருந்தால், கிக்ஸ்டார்ட்டர் தளத்தில் அறிமுகம் செய்து ஆதரவை அள்ளலாம் என்பதை ஏற்கெனவே இணைய கில்லாடிகள் பலர் நிருபித்துள்ளனர். இப்போது ‘பவர் அப்’ எனும் வளரும் நிறுவனம் இதை மீண்டும் நிருபித்துள்ளது. அதிநவீன காகித விமானங்களை உருவாக்கும் பவர் அப் நிறுவனம், இந்த விமானத்தை அப்டேட் செய்வதற்கான கோரிக்கையை கிக்ஸ்டார்ட்டரில் வைத்து கலக்கிக்கொண்டிருக்கிறது.

பறக்கும் காகித விமானம்

காகித விமானத்தில் அப்படி என்ன புதுமை செய்யமுடியும் என அலட்சியமாக நினைக்க வேண்டாம். காகிதத்தை அழகாக மடித்து விமானமாக்கி கையால் காற்றில் வீசி எறிந்து விளையாடிய அனுபவம் பலருக்கு இருக்கலாம்.

பவர் அப் என்ன செய்திருக்கிறது என்றால், சாதாரண காகித விமானத்தை இஞ்சினால் இயக்கி தானாகப் பறக்கும் விமானமாக மாற்றியிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த விமானத்துக்காக உருவாக்கப்பட்டுள்ள செயலி மூலம் இதை ஸ்மார்ட்போன் வழியே கட்டுப்படுத்தவும் செய்யலாம். புளூடூத் வசதி வழியே இது செயல்படுகிறது. ரிமோட் கண்ட்ரோலால் இயங்கும் பொம்மை கார்போல இந்தக் காகித விமானத்தை ஒரு பத்து நிமிடம் பறக்க வைத்து விளையாடலாம்.

காகித விமானத்தை பறக்கவிட்டால் நேராகச்சென்று குப்புற கவிழ்ந்து விடும். இதை வைத்துக்கொண்டு நண்பர்களோடு யார் அதிக தூரம் எறிய முடிகிறது என போட்டிகூட வைக்கலாம். ஆனால், பவர் அப் நிறுவனம், காகித விமானத்தில் சின்னஞ்சிறிய இன்ஜினை பொருத்தி தானாகப் பறக்கும் ஆற்றலை அளித்திருக்கிறது.

நிதி திரட்டும் உத்தி

இது புதுமையான முயற்சி என்றாலும் கொஞ்சம் காஸ்ட்லியானது. காகிதத்தில் பொருத்தும் சிறிய இன்ஜின் மற்றும் அதை இயக்கக்கூடிய பேட்டரியைத் தயார் செய்ய வேண்டும். இந்த அமைப்புக்கான ஸ்மார்ட்போன் செயலியையும் உருவாக்க வேண்டும். இதற்கு எல்லாம் முதலீடு தேவை. கைக்காசை போடலாம் அல்லது கடன் வாங்கலாம் என்றாலும், தயாரிப்புக்கு போதிய ஆதரவு இருக்குமா என்பது தெரியாது. இதுபோன்ற சோதனை முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதற்காகவே கிக்ஸ்டார்ட்டர் இணையதளம் இருக்கிறது.

கிரவுட்சோர்சிங் என சொல்லப்படும் இணையவழி நிதி திரட்டலுக்கான மேடையாக கிக்ஸ்டார்ட்டர் செயல்படுகிறது. புதுமையான ஐடியாவை கைவசம் வைத்திருப்பவர்கள் அதைச் செயல்படுத்திப் பார்க்க நினைத்தால், கிக்ஸ்டார்ட்டர் தளத்தில் அதற்கான பக்கத்தை அமைத்து கோரிக்கை வைக்கலாம். ஐடியாவை விவரித்து அதை செயல்படுத்த எவ்வளவு நிதி தேவை என்பதை தெரிவிக்க வேண்டும். அந்த ஐடியாவால் கவரப்படும் இணையவாசிகள் நிதி அளித்து ஆதரவு தெரிவிக்கலாம். அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப ஐந்து டாலரோ, பத்து டாலரோகூட கொடுக்கலாம். இப்படி மொத்த தொகையும் கிடைத்துவிட்டால், களத்தில் இறங்கிவிட வேண்டியதுதான். ஆதரவு தெரிவித்தவர்களுக்கு மனப்பூர்வமான நன்றி தெரிவித்து விட்டு, தயாரிக்கும் பொருளைப் பரிசாக அனுப்பி வைக்கலாம்.

இந்த முறையில் கிக்ஸ்டார்ட்டரில் நிதி திரட்டி வெற்றி பெற்றுக் கலக்கிய நிறுவனங்களின் பட்டியல் பெரியது. இந்த பட்டியலில்தான் பவர் அப் நிறுவனமும் இணைந்திருக்கிறது. சாதாரண காகித விமானத்தை பறக்கும் விமானமாக மாற்றும் எண்ணத்துடன் கிக்ஸ்டார்ட்டரில் கோரிக்கை வைத்து, அதற்கான நிதியை திரட்டுவதிலும் பவர் அப் நிறுவனம் வெற்றிபெற்றது. இது நடந்து ஆறு ஆண்டுகள் இருக்கலாம். ஸ்மார்ட்போனால் காகித விமானத்தை பறக்கவிடலாம் எனும் ஐடியாவால் கவரப்பட்ட நூற்றுக்கணக்கானோர் இதற்கு நிதி அளித்து ஆதரவு தெரிவித்திருந்தனர்.

விமானத்தில் அப்டேட்

இப்போது இந்த நவீன காகித விமானத்தை மேலும் அப்டேட் செய்யும் எண்ணத்துடன் பவர் அப் மீண்டும் கிக்ஸ்டார்ட்டர் கதவைத் தட்டியுள்ளது. இந்த முறை காகித விமானத்தை மேலும் மேம்படுத்தி

யிருக்கிறது. விமானத்தில் சின்னஞ்சிறிய கேமிரா ஒன்றையும் பொருத்தியுள்ளது. அதனுடன் விர்ச்சுவல் ரியாலிட்டி என அழைக்கப்படும் மெய்நிகர் தன்மை கொண்ட கண்ணாடியுடன் இதை இணைத்துள்ளது. விமானம் பறக்கும்போது அதில் உள்ள கேமிரா படம் பிடிக்கும் காட்சிகளை விர்ச்சுவல் ரியாலிட்டி சாதனம் மூலம் பார்த்து மகிழலாம். அப்படியே விமானத்தை அப்படியும் இப்படியும் மாற்றிமாற்றி இயக்கலாம்.

ட்ரோன்கள் என சொல்லப்படும் ஆளில்லா விமானம்போல இந்த விமானத்தை தயாரிக்கத்தான் இந்த முறை பவர் நிறுவனம் நிதி கோரியுள்ளது. கேட்ட நிதி கிடைத்துவிடும் என்று நம்பிக்கை ஏற்படும் வரை பலர் நிதி அளிக்க முன்வந்துள்ளனர். இந்த விமானம் செயல்படும் விதம் பற்றி விளக்கும் அருமையான வீடியோ ஒன்று இதன் கிக்ஸ்டார்ட்டர் பக்கம் மற்றும் நிறுவன இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது: https://www.poweruptoys.com/

நிதி அளிக்க முன்வருபவர்களுக்கு இந்தக் காகித ட்ரோன் விமானம் பரிசாக அனுப்பிவைக்கப்படும் என்பதோடு, சந்தையிலும் இது விற்பனைக்கு வர உள்ளது. விநோதமும் புதுமையும் இணைந்த ஐடியாக்கள் எப்படி கிக்ஸ்டார்ட்டர் மூலம் செயல் வடிவம் பெறுகின்றன என்பதற்கு இது நல்ல உதாரணம். அது மட்டுமல்ல, ஒரு புதுமையான ஐடியாவை எப்படியெல்லாம் அப்டேட் செய்து அசத்தலாம் என்பதற்கும் நல்ல உதாரணம்.

தேடாததை தேட உதவும் தேடியந்திரம்!



தேடல் பட்டியலில் முதலில் இடம் பெறும் இணையதளங்கள் அனைத்தையும் விலக்கி விட்டு, தேட உதவும் விநோத தேடியந்திரம்.

மில்லியன் ஷார்ட் மிகவும் மாறுபட்ட தேடியந்திரம். அது முன்வைக்கும் தேடல் வாசகத்தில் இருந்தே இதைப் புரிந்துகொள்ளலாம். வழக்கமாக எல்லா தேடியந்திரங்களும் நீங்கள் நாடி வருவதை தேடித்தருவதாக தெரிவிக்கின்றன என்றால், மில்லியன் ஷார்ட் (Million Short), நீங்கள் கண்டுபிடிக்காதது எதை? என்று கேட்கிறது. இந்த கேள்வியைத்தான் அதன் தேடல் வாசகமாகவும் அமைந்துள்ளது.

மற்ற தேடியந்திரங்கள் போல முன்னணி முடிவுகளை முன்னிறுத்தாமல், தேடல் பட்டியலில் கடைக்கோடியில் உள்ள இணையதளங்களை அது பிரதானமாக பட்டியலிடுகிறது. அதாவது, தேடல் பட்டியலில் முதலில் தோன்றக்கூடிய முதல் பத்து லட்சம் முடிவுகளை நீக்கி விட்டு, அதன் பின்னே இருக்கும் இணையதளங்களை பட்டியலிடுகிறது.

இதன்மூலம் இணையத்தில் வழக்கமாக கண்ணில் பட வாய்ப்பில்லாத இணையதளங்களை கண்டறியலாம் என்றும் அது ஊக்கமளிக்கிறது. இணைய உலகில் கோடிக்கணக்கான இணையதளங்கள் இருக்கின்றன. கூகுள் உள்ளிட்ட தேடியந்திரங்கள் இவை எல்லாவற்றையும் பட்டியலிட்டு தந்தாலும் பெரும்பாலான இணையவாசிகளில் தேடல் என்பது முதல் சில பக்கங்களிலேயே முடிந்து போய் விடுகிறது.

கூகுளில் தேடும் ஒவ்வொரு முறையும் இத்தனை நொடிக்குள் (உண்மையில் ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில்) இத்தனை லட்சம் பக்கங்களை பட்டியலிடுவதாக குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தக் குறிப்பையே கூட பலரும் கவனித்திருக்க மாட்டார்கள். காரணம், தேடல் பட்டியலின் முதல் பக்கத்திலேயே பொருத்தமான இணையதளங்கள் பட்டியலிடப்படுவதால் பலரும் அதிலேயே திருப்தி அடைந்து வெளியேறி விடுகின்றனர். ஒரு சிலர் கூடுதல் முடிவுகளை நாடி மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பக்கங்களுக்கு சென்று பார்ப்பதுண்டு. எப்படி இருந்தாலும் அதிகபட்சம் முதல் பத்து பக்கங்களை தாண்டி செல்வது அரிதானதுதான்.

தேடலின் நோக்கமே தேவையான தகவல் அடங்கிய தளங்களை கண்டுபிடிப்பதுதான் என்னும்போது முதல் பக்கத்திலேயே நாடி வந்த தளம் இருந்தால் அதை தாண்டி செல்ல வேண்டிய அவசியம் என்ன?

எல்லாம் சரிதான், ஆனால் தேடல் பட்டியலில் நூறாவது பக்கத்திலோ அல்லது ஆயிரமானது பக்கத்திலோ அல்லது பத்தாயிரமாவது பக்கத்திலோ உள்ள தளங்கள் எப்படிப்பட்டவை என்று எப்போதாவது யோசித்திருக்கிறோமா? ஒரு சுவாரசியத்துக்கேனும் எப்போதாவது இணைய கடலில் ஆழச்சென்று பார்க்க வேண்டும் என்று நினைத்திருக்கிறோமா?

மில்லியன் ஷார்ட் தேடியந்திரம் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது. முன்னணி இணையதளங்களை கடந்து சென்று எங்கோ மூளையில் மறைந்து கிடக்கும் தளங்களை இந்த தேடியந்திரம் மூலம் காணலாம். அதாவது, தேடல் பட்டியலின் பத்தாயிரமாவது பக்கத்தில் உள்ள தளங்களை அல்லது பத்து லட்சமாவது பக்கத்தில் உள்ள தளங்களையோ இதன் மூலம் காணலாம். மில்லியன்ஷார்ட் தேடியந்திரம் இதனை எப்படி சாத்தியமாக்குகிறது என்றால், தேடலில் ஈடுபடும்போது தேடல் பட்டியலில் முதலில் உள்ள பக்கங்களை நீக்கிவிட வழி செய்கிறது. முகப்புப் பக்கத்தில் தேடல் கட்டம் அருகே இதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி முதல் நூறு பக்கங்களையோ, முதல் ஆயிரம் பக்கங்களையோ, முதல் லட்சம் பக்கங்களையோ அல்லது முதல் மில்லியன் பக்கங்களையோ நீக்கி விட்டு எஞ்சியுள்ள பக்கங்களை காணலாம்.

தேடலில் ஈடுபடும்போது ஒவ்வொரு பக்கமாக கிளிக் செய்து பார்த்தாலும் பத்து பதினைந்து பக்கங்களை கடந்த பிறகு ஒரு அலுப்பும் களைப்பும் வந்து விடும் அல்லவா? மில்லியன்ஷார்ட்டோ ஒரே கிளிக்கில் ஆயிரம் ஆயிரம் பக்கங்களாக கடந்து பட்டியலின் கடைக்கோடியில் உள்ள தளங்களை காண வழி செய்கிறது.

பின்னுக்கு தள்ளப்பட்ட இந்தத் தளங்கள் பயனில்லாதவையாக இருக்கலாம். அல்லது இவற்றில் சில முத்துக்களும் இருக்கலாம். இவற்றை கண்டறிய மில்லியன் ஷார்ட் வழி செய்கிறது. இப்படி முடிவுகளை கண்டறிவது வெறும் சுவாரஸ்யம் மட்டும் அல்ல, இணையவாசிகளின் கண்களை மூடும் தேடல் குமிழ், விளம்பர நோக்கிலான பக்கங்கள், எஸ்.இ.ஓ ஜாலங்கள் அவற்றை எல்லாம் விளக்கி விட்டு நல்ல இணையதளங்களை கண்டறிய உதவுகிறது.

நல்லதொரு மாற்று தேடியந்திரமாக உருவாகி இருக்கும் மில்லியன்ஷார்ட் 2012-ம் ஆண்டு அறிமுகமானது. கனடாவில் குடியேறிய இந்தியரான சஞ்சய் அரோரா, தனது எக்ஸ்போனன்ஷியல் லேப்ஸ் நிறுவனம் மூலம் இந்தத் தேடியந்திரத்தை அறிமுகம் செய்தார். ஆரம்பத்தில், சோதனை முயற்சியாகவே இதை அவர் துவக்கினார்.

இணையத்தில் உள்ள சில லட்சம் தளங்கள் திடிரென காணாமல் போய்விட்டால் என்ன ஆகும் என ஒரு நாள் அரோரா கற்பனை செய்திருக்கிறார். இந்தக் கற்பனையே மில்லியன் ஷார்ட் தேடியந்திரமாக உருவானது.

பெரும்பாலும் இணையத்தில் தேடும் போது, விக்கிபீடியா, அபவுட்.காம், பேஸ்புக் உள்ளிட்ட தளங்களின் முடிவுகளே முன்னுக்கு வருவதில் இருந்து மாறுபட்ட அனுபவம் தேடலில் தேவை என்பது அவரது கருத்தாக இருக்கிறது. மில்லியன்ஷார்ட், மைக்ரோசாப்டின் பிங் தேடியந்திரத்தை அடிப்படையாக கொண்டு தேடல் பட்டியலை அளிப்பதோடு தனது சொந்த தேடல் நுப்டங்களையும் பயன்படுத்தி அதை மேம்படுத்தி தருகிறது. இதில் தேடல் முடிவுகளை நீக்காமல் தேடும் வசதியும் இருக்கிறது. தேவையான அளவு முடிவுகளை நீக்கியும் தேடலாம். இது தவிர, விளம்பர பக்கங்கள், அரட்டை வசதி கொண்ட பக்கங்கள், மின்வணிக பக்கங்கள் ஆகியவற்றை நீக்கி விட்டு தேடும் வசதியும் இருக்கிறது. சோதனை நோக்கில் நிறுவப்பட்ட இந்தத் தேடியந்திரம், தேடலை மேம்படுத்திக்கொள்ள பல்வேறு வாய்ப்புகளை வழங்கும் தேடியந்திரமாக வளர்ந்திருக்கிறது. பிரவுசர்களில் நீட்டிப்பாக பயனபடுத்தும் வசதியும் இருக்கிறது.

மில்லியன் ஷார்ட் தேடியந்திர முகவரி: https://millionshort.com/

பொருள் புதிது

மடக்கும் போன்

சாம்சங் நிறுவனம் அடுத்த ஆண்டில் மடக்கும் ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்ய உள்ளது. கேலக்சி நோட் வரிசையில் இது வெளியாகும். ஓஎல்இடி தொழில்நுட்பத்தில் இதன் தொடுதிரை இருக்கும்.

ஒளிரும் கீ போர்ட்



எக்ஸ்-பவுஸ் என்கிற நிறுவனம் விரல்களில் ஏற்ற இறக்கத்துக்கு ஏற்ற வகையில், புதிய கீ போர்டை அறிமுகம் செய்துள்ளது. இந்த கீ போர்ட் எல்இடி விளக்கில் ஒளிரும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பறக்கும் கார்

சீனாவைச் சேர்ந்த டென்செண்ட் நிறுவனம் பறக்கும் கார் தயாரிப்பதற்காக ஜெர்மனைச் சேர்ந்த லில்லியன் ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் 600 கோடி முதலீடு செய்துள்ளது. முதற் கட்டமாக 2 பேர் பயணிக்கும் பறக்கும் காரை சோதித்துள்ள இந்த நிறுவனம் அடுத்த கட்டமாக 5 பேர் பயணிக்கும் பறக்கும் காரை உருவாக்கி வருகிறது. தரையிலிருந்து நேரடியாக உயரே எழும்பும் இந்த கார், 300 கிலோமீட்டார் வேகத்தில் பறக்கும். மின்சார பேட்டரி மூலம் இயங்குவதால் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு இருக்காது. டிவிட்டர், ஸ்கைப் நிறுவனங்களின் இணை நிறுவனர்களிடமிருந்து லில்லியன் நிதி திரட்டி உள்ளது.

நீளமான நகரும் பாதை

உலகின் மிக நீளமான நகரும் நடைபாதை ஹாங்காங்கின் மத்திய பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. ஹாங்காங் நகரத்தின் குயின் ரோடு, கண்டிட் ரோடி, மிட் லெவல் என பல முக்கிய வர்த்தக மையங்களை இந்த நகரும் பாதை இணைக்கும். 800 மீட்டர் நீளத்துக்கு இது அமைக்கபட்டுள்ளது. இந்த நகரும் நடைபாதை சில இடங்களில் மேலே ஏறும் படிக்கட்டுகளாகவும் இருக்கும். 78,000 பாதாசாரிகள் இதை தினசரி பயன்படுத்துகின்றனர். 1993-ல் திறக்கப்பட்ட இந்த நடைபாதை இப்போது முழுவதும் நகரும் பாதையாக உருவாகியுள்ளது.

வாட்ஸ்அப் சொந்த எமோஜி: பீட்டா பதிப்பில் சோதனை தீவிரம்

ஃபேஸ்புக்கின் வாட்ஸ்அப் செயலிக்கு என பிரத்தியேக எமோஜிக்கள் செயலியின் பீட்டா பதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் புதிய எமோஜிக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஃபேஸ்புக் நிறுவனத்தின் பிரபல குறுந்தகவல் செயலியான வாட்ஸ்அப் பீட்டா பதிப்பில் புதிய வகை எமோஜிக்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆண்ட்ராய்டு பதிப்பில் சோதனை செய்யப்படும் புதிய வகை எமோஜிக்கள் ஆப்பிள் எமோஜிக்களை போன்றே காட்சியளிக்கிறது.

ஆப்பிள் போன்றே ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டர் தளங்களில் தங்களுக்கென பிரத்தியேக எமோஜிக்கள் வழங்குகின்றன. வாட்ஸ்அப்பில் சோதனை செய்யப்படும் புதிய எமோஜிக்கள் ஆப்பிள் வடிவமைப்பை சார்ந்து இருப்பதால், ஒரே மாதிரியாக காட்சியளிக்கிறது. நடுவிரல் மற்றும் ஒலிம்பிக் வளையங்கள் எமோஜிக்களாக வழங்கப்பட்ட முதல் செயலியாக வாட்ஸ்அப் இருக்கிறது.

தற்சமயம் வெளியாகியுள்ள எமோஜிக்கள் பீட்டா பதிப்பில் வழங்கப்பட்டிருப்பதால் இவை அனைவருக்கமான செயலியில் அப்படியே வழங்கப்படுமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. சமீபத்திய தகவல் ஐஓஎஸ் எமோஜிக்களை வாட்ஸ்அப் முந்தியிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் ஜூலை மாத வாக்கில் வாட்ஸ்அப் செயலியில் தினமும் 100 கோடி பேர் குறுந்தகவல் பரிமாறி கொள்வதாக வாட்ஸ்அப் அறிவித்தது. அந்த வகையில் இந்த செயலியில் தினமும் 5500 கோடி குறுந்தகவல்கள், 450 கோடி புகைப்படங்கள் மற்றும் 100 கோடி வீடியோக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகிறது.

ஸ்மார்ட்போன் மூலம் கணினியை கட்டுப்படுத்த...

இணையத்தில் கம்ப்யூட்டர் அருகில் நாம் இல்லாத போது அதனை பாதுகாக்கும் பல்வேறு வழிமுறைகள் கிடைக்கின்றன. நம்மில் பலரும் ஸ்மார்ட்போன் கொண்டு கம்ப்யூட்டரை அன்லாக் செய்ய முடியுமா என பலமுறை கூகுளில் தேடியிருப்போம். அந்த வகையில் கம்ப்யூட்டரை ஸ்மார்ட்போன் கொண்டு அன்லாக் செய்ய எளிய வழிமுறை இருக்கிறது.

ஸ்மார்ட்போன் மூலம் கம்ப்யூட்டரை அன்லாக் செய்ய ரோஹோஸ் லாக்ஆன் கீ எனும் மென்பொருள் உங்களது கம்ப்யூட்டர் மற்றும் ஸ்மார்ட்போனில் இன்ஸ்டால் செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த மென்பொருள் மூன்றாம் தரப்பானது என்றாலும் பெரும்பாலானோர் பயன்படுத்துவதால் இது பாதுகாப்பானதாக இருக்கிறது.

1. முதலில் நீங்கள் இயக்க வேண்டிய சாதனத்தில் ரோஹோஸ் லாக்ஆன் மென்பொருளை டவுன்லோடு செய்ய வேண்டும். 2. அடுத்து மென்பொருளை விண்டோஸ்-இல் இயக்க வேண்டும். கீழே இருப்பது போன்று திரையில் தெரியும். 3. இங்கு ஆப்ஷன்ஸ் கிளிக் செய்து கீழே காணப்படும் ஸ்கிரீன்ஷாட் போன்று செட்டிங்ஸ் செட் செய்ய வேண்டும்.

2. 4. அடுத்து அனைத்து ஆப்ஷன்களையும் செட் செய்த பின் OK பட்டனை கிளிக் செய்ய வேண்டும். 5. இனி கீ ஒன்றை செட்டப் செய்து கியூ.ஆர் கோடு வழிமுறை மூலம் கீயினை உறுதி செய்ய வேண்டும். 6. அடுத்து மொபைல் செயலியை டவுன்லோடு செய்து கியூ.ஆர். கோடினை ஸ்கேன் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ததும் ஸ்மார்ட் போனில் செயலி உங்களது கம்ப்யூட்டரை டிடெக்ட் செய்யும். 7. தற்போது உங்களது கம்ப்யூட்டர் ஸ்மார்ட்போனுடன் ஆத்தென்டிகேட் செய்யப்பட்டு விட்டது. இதன்பின் ஒவ்வொரு முறை கம்ப்யூட்டரை அன்லாக் செய்யும் போதும் உங்களது ஸ்மார்ட்போன்



மூலம் இரண்டாவது முறை பாதுகாப்பினை உறுதி செய்த பின் கம்ப்யூட்டரை பயன்படுத்த முடியும்.

பாதங்களையும் கொஞ்சம் பராமரியுங்கள்

எத்தனை கிலோ எடையானாலும், அத்தனையும் தாங்கித் தளராத நடைபோட நமக்குப் பெரிதும் உதவும் பாகம், பாதம். பாதத்தைப் பராமரிக்க ிபளிச்ி டிப்ஸ் பார்க்கலாம்.

★ வாரம் ஒரு முறை பாத நகங்களை நன்றாக வெட்டி, சுத்தம் செய்யவேண்டும். நக ஓரங்களில் ஊக்கு, ஊசியால் சுத்தம் செய்வதைத் தவிர்க்கவும். ஸ்க்ரப்பர் அல்லது காட்டன் துணியின் முனையை வெதுவெதுப்பான நீரில் நனைத்துப் பாதங்கள் மற்றும் நகங்களைச் சுத்தப்படுத்த வேண்டும்.

★ செருப்பு அணியாமல்போனால், கல், முள் போன்றவை நம் கால்களைக் காயப்படுத்திவிடும். இதனால் விரல்களில் நகச்சுத்தி வரலாம். எலுமிச்சைப் பழத்தில் மஞ்சள் கலந்து பத்துப்போடுவதன் மூலம், நகச்சுத்தி நீங்கும். கால் விரல் நகத்தின் ஓரத்தில் கல், மண் படிந்துவிட்டால், நல்லெண்ணெய் தோய்த்தத் திரியை விளக்கில் காட்டி, மிதமான சூடில் கால் விரல் நகத்தின் ஓரங்களில் தடவவும். அழுக்கு தானாக வெளியே வந்துவிடும்.

★ காலை மற்றும் இரவில் வெதுவெதுப்பான நீரில் பாதங்களை ஐந்து நிமிடங்கள் நனைக்கவும். அது புத்துணர்வைத் தருவதுடன் பாதங்களில் ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

★ மென்மையான தோலில் தயாரிக்கப்பட்ட செருப்புகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லையென்றால், அது பாதத்தைப் பதம் பார்த்துவிடும்.

★ குழந்தைகளுக்கு தரமான காட்டன் சாக்ஸ்களையே பயன்படுத்தவும். சாக்ஸ் அணியும்போது உட்புறம் ஏதாவது கூரான துகள்கள் சிக்கியுள்ளதா என்று பரிசோதனை செய்த பிறகே பயன்படுத்த வேண்டும்.

★ நல்ல காற்றோட்டமான செருப்புகளை அணிய வேண்டும். பாதத்தில் புண், வெடிப்பு பிரச்னைகள் ஏற்படாமல் தவிர்க்கலாம். மருதாணி இலையை விழுதுபோல் நன்கு அரைத்து, வெடிப்பு உள்ள இடங்களில் தினமும் தடவிவந்தால் வெடிப்பு நீங்கும்.

★ இரவில் படுக்கப்போவதற்கு முன்பு சூடு தாங்கும் அளவு வெந்நீர், உப்பு, எலுமிச்சைச்சாறு, பேபி ஷாம்பு போட்டுப் பாதங்களை ஐந்து முதல் பத்து நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். பிறகு, பழைய டூத்பிரஷால் பாதத்தை நன்றாக சுத்தம் செய்து, ஈரம் போகத் துடைத்து நல்லெண்ணெயை லேசாக சூடு செய்து காலில் தடவலாம். பாத வலி குறைந்து, தூக்கம் தழுவும்.

மாதவிடாய் காலத்தில் உடற்பயிற்சி உடலுக்கு உகந்ததா?

குழந்தைப்பேற்றுக்காக காத்திருப்பவர்கள் மாதவிடாய் வந்தாலும் கர்ப்பப் பரிசோதனை செய்து கர்ப்பம் இல்லையென்று தெரிந்த பின்னர்தான் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

பெண்களுக்கு மாதவிடாய் வருவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் Pre Menstrual Syndrome (PMS) ஏற்படும். அந்நேரத்தில் மார்பகத்தில் வலி, உடல் வலி போன்றவற்றுடன் பதற்றம், எரிச்சல் என உணர்வு ரீதியாகவும் பெண்கள் பலவீனமாக உணர்வார்கள். அப்போது உடற்பயிற்சி செய்வது அவர்களுக்கு நல்ல மாறுதலை தரும். உடற்பயிற்சியின் போது பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து வெளியாகும் ஒரு வகை ரசாயனமான Endorphins வலிகளை குறைத்து மகிழ்ச்சி ஏற்படுத்தும் தன்மை உடையது. அதனால், PMS நாட்களில் அவசியம் உடற்பயிற்சிகளில் ஈடுபடுங்கள்.

மாதவிடாயின் போது குறைந்தது 3 முதல் 5 நாட்கள் வரை கடுமையான உடற்பயிற்சிகள் செய்யாமலிருப்பது நல்லது. ஹார்மோன்களின் சுரப்புகளில் ஏற்படும் மாறுபாடுகளின் காரணமாக உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். வயிறு மற்றும் உடல் வலி இருக்கும். மனமும் உடலும் சோர்ந்து காணப்படும். அந்த நேரத்தில் உடற்பயிற்சி செய்யும் போது ஒரு குறிப்பிட்ட நிலையில் செய்தால் சிலருக்கு ரத்தப்போக்கு அதிகமாகலாம்.

குறிப்பாக வயதானவர்களும், கர்ப்பப்பை பலவீனமாக இருப்பவர்களும் இந்த நாட்களில் உடற்பயிற்சி செய்தால், ரத்தப்போக்கு அதிகரிக்க வாய்ப்புண்டு. கர்ப்பப்பை பலவீனமாக இருப்பவர்களுக்கு ஆட்டோவில் பயணம் செய்தால் கூட ரத்தப்போக்கு அதிகரிக்கும். இப்படிப் பட்டவர்கள் இந்நாட்களில் உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதே நல்லது.

உடற்பயிற்சி செய்ய விரும்புபவர்கள் மெதுவான நடைப்பயிற்சி, எளிய வகை ஏரோபிக்ஸ் பயிற்சிகள் செய்யலாம். யோகாசனம் செய்பவர்கள் மாதவிடாய் நாட்களில் பத்மாசனம் போன்று தரையில் அமர்ந்து செய்யக்கூடிய எளிய ஆசனங்களைச் செய்யலாம். தலைகீழாக நிற்கும் யோகாசனங்கள் செய்யக் கூடாது. கர்ப்பப்பைக்குச் செல்ல வேண்டிய ரத்த ஓட்டம் மாறுபடும்.

மாதவிடாய் நாட்களில் உடலில் நீர்ச்சத்துக் குறைபாடு ஏற்படும். உடற்பயிற்சி செய்யும் போது, சிலருக்கு மயக்கம், தலைச்சுற்றல் ஏற்பட வாய்ப்புண்டு. அதனால், தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். சில பெண்கள் கருத்தரிக்க வேண்டி காத்திருப்பார்கள். அவர்களில் சிலருக்கு மாதவிடாய் கொஞ்சம் வந்திருக்கும். அதனால் கர்ப்பம் இல்லை என நினைத்து தவறுதலாக உடற்பயிற்சிகளில் ஈடுபடுவார்கள்.

அதில் ஒரு சிலர் கர்ப்பம் தரித்திருக்க வாய்ப்புண்டு. குழந்தைப்பேற்றுக்காக காத்திருப்பவர்கள் மாதவிடாய் வந்தாலும் கர்ப்பப் பரிசோதனை செய்து கர்ப்பம் இல்லையென்று தெரிந்த பின்னர்தான் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். ஓய்வு தேவைப்படும் மாதவிடாய் நாட்களில், உடலுக்கு சிரமம் தர வேண்டாம். அவரவர் மனம் மற்றும் உடல் நிலைக்கு ஏற்ற எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

பொலிவான சருமத்திற்கு...

இன்றைய நவீன வாழ்க்கை முறையினால் நம் சருமம் அதிகமாக பாதிக்கப்படுகிறது. எப்போதும் மாசு நிறைந்த இன்றைய சூழலில் சருமத்தை பராமரிப்பது என்பது சவாலான விஷயம் தான். சரும சுருக்கங்களை தவிர்க்கவும் ச ாஃப்ட்டான ஸ்கின் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆக்ஸிஜன் பேஷியல் செய்திடலாம். ஆக்ஸிஜன் பேஷியல் செய்வதால் உங்களுக்கு உடனடி ரிசல்ட் கிடைத்திடும். அப்படி என்னென்ன நன்மைகள் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்

மாய்ஸ்சரைசர் : ஆக்ஸிஜன் பேஷியல் சிறந்த மாய்சரைசராக செயல்படுகிறது. உங்கள் சருமத்தில் அதிகப்படியான வறட்சி ஏற்படும் பட்சத்தில் இதனை செய்தால் நல்ல பலன் கிடைக்கும். சருமத்தில் உள்ள பிஎச் லெவலை சீர்படுத்துவதால் சருமம் பாதுகாப்பானதாக இருக்கும்.

புத்துணர்ச்சி : புத்துணர்ச்சியுடன் உணர்வீர்கள். ஆக்ஸிஜன் பேஷியல் செய்வதால் சருமத்தில் இருக்கும் அழுக்குகள் எல்லாம் நீங்கிடும். அதோடு இறந்த செல்களை நீக்கிடுவதால் மாசுமருவற்று பொலிவுடன் காணப்படும். இது உங்கள் சருமத்தில் ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

பருக்கள் : சருமத்துளைகளில் அதிகப்படியான் அழுக்கு சேர்வது, எண்ணெய் சுரப்பது, சரியாக பராமரிக்காமல் இருப்பது போன்றவை பருக்களுக்கு ஒரு காரணம். ஆக்ஸிஜன் பேஷியல் பருக்களையும் வராமல் செய்திடும். இந்த பேஷியல் செய்வதால் அழுக்குகள் எல்லாம் நீங்குவதோடு எண்ணெய் சுரப்பும் குறைகிறது. இதனால் பருக்கள் வரும் என்ற அச்சம் தேவையில்லை.

சுருக்கங்கள் : ஆக்ஸிஜன் பேஷியல் உங்களை இளமையுடன் இருக்கச் செய்திடும். வயதாவதை உணர்த்தும் வகையில் முகத்தில் தோன்றும் சுருக்கங்களையும் வராமல் செய்திடும். சருமத்தில் கொலாஜன் உற்பத்தியை அதிகரிப்பதால் சருமம் டைட்டாக இருக்கச் செய்கிறது. இதனால் சுருக்கங்கள் வருவது குறையும்.

சருமப்பொலிவு : ஆக்ஸிஜன் பேஷியல் சருமத்தில் இருக்கும் அழுக்குகளை நீக்கி, ரத்தஓட்டத்தை அதிகரிப்பதால் சருமம் ஆரோக்கியத்துடன் காணப்படும். இதனால் எப்போதும் முகத்தில் தோன்றும் நிறமாற்றங்கள்,பரு,வறட்சி போன்றவை இல்லாமல் பொலிவுடன் காணப்படும்.

இயற்கை அழகு!

தற்போதைய காலத்தில் தங்களின் அழகை வெளிப்படுத்திக் காட்டுவதில் பெண்களுக்கு அதிக ஆர்வமும், போட்டியும் இருக்கிறது. இயற்கையை மீறி சில செயற்கைத் தனங்களைச் செய்வதன் மூலம் தம்முடைய அழகை வெளிப்படுத்த எத்தனை முயற்சிகளில் இறங்கி பரீசித்துப் பார்ப்பவர்கள் இன்று ஏராளம். இதில் ஆண் பெண் என்ற பேதம் இல்லை...இயற்கையான முறையில், இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே நம்முடைய உடலழகைப் பேண முடியும்.

நகத்தைப் பராமரிக்க

பாலில் பேரிச்சம் பழத்தை கலந்து பருகிவர நகங்கள் கூடுதல் பலமடைவதோடு, உடைவதும் குறையும். பாதாம் எண்ணையை நகத்தில் தடவி வர நகங்களுக்கு கூடுதல் பளபளப்பு கிடைக்கும்.

இதழ்களை பராமரிக்க

நம் வீட்டில் பொரியலுக்கு வாங்கும் பீட்ருட் சிறிதளவு இருந்தாலே போதும். உங்களுக்கு எந்த வித ஃடிணீண்ணுடிஞிடு-ம் தேவையில்லை. பீட்ரூட்டை வெட்டி உங்கள் இதழ்களில் இலாசக லிப்ஸ்டிக் பூசுவதைப் போல அழுத்தி தேய்த்து வந்தாலே போதும்.

முகத்தைப் பராமரிக்க

நன்கு பழுத்த பப்பாளிப் பழத்தை முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து உங்கள் முகத்தை கழுவிப் பாருங்கள்.

பயற்றம்பருப்பு மாவுடன், தர்பூசணி பழச்சாற்றைக் கலந்து, அக்கலவையை முகத்தில் பூசி வர உங்கள் முகம் பொலிவு பெறுவது உறுதி.

கழுத்தை பராமரிக்க

நிறையப் பெண்கள் செய்யும் தவறே இது தான்.. அழகாக முகத்தை பரிமரிக்க தெரிந்தவர்கள் கழுத்தை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டார்கள். இதனால் கழுத்து கருத்துப்போய் முகம் மட்டும் பொலிவாக காட்சி தரும்.

சிறிதளவு ரோஸ்வாட்டர், சிறுது வெங்காயச்சாறு, ஆலிவ் எண்ணெய் இரண்டு சொட்டு, இவற்றுடன் சிறிதளவு பயத்த மாவு கலந்து கழுத்தைச் சுற்றி பூசிவிடுங்கள். ஒரு பத்து நிமிடம் கழித்து கழுத்திலிருந்து தாடை நோக்கி இலேசாக மசாஜ் செய்துவிடுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்ய நாளடைவில் உங்கள் கழுத்தும் கருமை நிறம் நீங்கி பள பளக்கும்.

சருமத்தைப் பராமரிக்க

ஒரு ஸ்பூன் ஈஸ்ட்டுடன், முட்டைகோசின் இலையில் சாறு எடுத்து கலந்துகொள்ளுங்கள். அதில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து சருமம் எங்கும் பூசி வர சூரிய ஒளியால் கருமை அடைந்த தோலின் நிறம் இயற்கை நிறத்திற்கு மாறிவிடும். முன்பு இருந்ததைவிட சருமத்தில் நிறம் சிவப்பாக காட்யளிக்கும்.

கருவளையம் நீங்க

கருவளையம் என்றாலே கண்ணுக்கு கீழ் உள்ள கருவளையத்தைத்தான் குறிக்கும். கருவளையம் நீங்க இதுதான் சிறந்த வழி. வெள்ளரிக்காய் விடையை பொடி செய்து, அதில் தயிர் சேர்த்து பசைப்போல(கச்ண்ணுனு)ஆக்குங்கள்.

இந்த பேஸ்ட்டை கருவளையும் உள்ள பகுதியில் தொடர்ந்து பூசி வர முப்பது நாளில் கருவளையும் இருந்த இடம் காணாமல் போயிருக்கும்.

கருப்பு திட்டுகளை நீக்க

சிலருக்கு முகத்தில், மூக்கில், கண்ணங்கள் என அசிங்கமாக கருப்பு நிற திட்டுகள் காணப்படும். இதை கிராம புறத்தில் மங்கு என குறிப்பிடுவார்கள். இவற்றைப் போக்க, ஜாதிக்காய், சந்தனம், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீர் கலந்து நன்றாக அரைத்துக்கொள்ளுங்கள். அரைத்த பற்றை முகத்தில் இருக்கும் கருப்பு திட்டுகள் இருக்கும் இடத்தில் பசைப்போல தடவுங்கள். சில முறை இந்த முறையை நீங்கள் கையாண்டால் போதும் முகத்தில் உள்ள அசிங்கமான மங்கு(கருந்திட்டு)மறைந்து விடும்.

இயற்கையாக கர்ப்பம் தரிக்க...

கருப்பையில் புழுக்கள் இருந்தால்மிளகு, வெள்ளைப் புண்டு, வெள்ளைக்குன்றி மணி வேர், கண்டங்கத்திரி வேர், வெள்ளைச் சாரணை வோ் வகைக்கு 5 காசு எடை எடுத்து துளசிச்சாறு விட்டு அரைத்து ஒரு தம்ளர் தண்ணீரில் கலந்து வீட்டு விலக்கான மூன்றாம் நாள் காலை மட்டும் கொடுக்க கர்ப்பம் தரிக்கும். புங்கன் வேர் எலுமிச்சையளவு அரைத்து விலக்கான மூன்று நாள் சாப்பிட மலட்டுக்கிருமிகள் செத்து விடும்.விழுதி வேர் 2 பலம் இடித்து 1 படி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாக காய்ச்சி வடிகட்டி விலக்கான நாட்களில் கொடுக்க மலட்டுப்புச்சிகள் சாகும்.

உறவுக்கு பின் அடி வயிறு குத்தல், வலி இருந்தால் கருப்பையில் தசை வளர்ந்துள்ளது என்று பொருள். மிளகு, சீரகம் இரண்டையும் கடு கெண்ணெய் விட்டு அரைத்து விலக்கான நாட்களில் சாப்பிடவும்.

உறவுக்கு பின் உடல் நடுங்கி மயக்கம் வந்தால் கருப்பை ஜவ்வு தடித்திருக்கும். பெருங்காயத்துடன் நல்லெண்ணெய் சேர்த்தரைத்து விலக்கான நாட்களில் சாப்பிட கொடுக்க குழந்தை உண்டாகும்.

உறவுக்கு பின் குளிரும், சுரமும் இருந்தால் வாயு. இதற்கு கோழிப்பித்து, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள் சேர்த்தரைத்து புசி உறவு கொள்ள சரியாகும்வேறு சில மருத்துவ குறிப்புகளும் உள்ளன.

கல்யாண முருங்கைப் புவுடருடன் மிளகு சேர்த்தரைத்து புளியங்கொட்டை அளவு இருவேளை 5 நாட்கள் சாப்பிடவும். 5 நாள் இடைவெளி விட்டு மீண்டும் 5 நாள் சாப்பிட கருப்பை கோளாறுகள் நீங்கி கரு நிற்கும்.

அசோகுப்பட்டை, மாதுளை வேர்ப்பட்டை, மாதுளம் பழ ஓடு சமன் எடுத்து பொடி செய்து 3 சிட்டிகை காலை மாலை வெந்நீரில் 3-4 மாதம் கொடுத்து வர மலடு தீரும்.

இலந்தையிலை 1 பிடி, மிளகு 6, புண்டுபல் 4 அரைத்து விலக்கான 3 நாள் கொடுத்து வர கருப்பை குறைகள் நீங்கி குழந்தை உண்டாகும்.

மாதுளை வேர்ப்பட்டை, மரப்பட்டை, விதை சமன் சுரணம் செய்து 3 கிராம் காலை மாலை வெந்நீரில் கொடுக்க கர்ப்பம் தரிக்கும்.

சித்தாமணக்கெண்ணையில் மஞ்சனத்தி இலைசாறு கலந்து கொடுக்க கரு நிற்கும்.

அரை விராகன் எடை வால்மிளகு, 1 விராகன் எடை கற்கண்டு சேர்த்தரைத்து 7நாள் கொடுக்கலாம்.

பொன்னாவரை விதையை பசும்பாலில் போட்டு காய்ச்சி 8 நாள் குடிக்க கர்ப்பம் தரிக்கும்.

)மிளகு, புண்டு, ஆண்வசம்பு , வேப்பங்கொழுந்து நான்கையும் அரைத்து விலக்கான மூன்று நாளும் மூன்று மாதங்களுக்கு கொடுக்க குழந்தை பேறு கிட்டும்.

ஸ்பைஸி ஃப்ரைட் ரைஸ்

தேவையான பொருட்கள்

பாசுமதி அரிசி - ஒரு கப்,
வெங்காய தாள் - 2 கொத்து,
சோயா சாஸ் - ஒரு டீஸ்பூன்,
கேரட் - 1
பீன்ஸ் - 10
சில்லி சாஸ் - ஒரு டீஸ்பூன்.
அரைக்க:
காய்ந்த மிளகாய் - 6,
பூண்டு - 4 பல்,
எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன்,

செய்முறை

உப்பு - தேவையான அளவு. அரிசியை உப்பு சேர்த்து உதிராக வடித்துக் கொள்ளுங்கள்.

வெங்காய தாளில் உள்ள வெங்காயத்தை தனியே எடுத்து பொடியாக நறுக்குங்கள்.

பீன்ஸ், கேரட்டை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

வெங்காய தாளையும் பொடியாக நறுக்குங்கள்.

மிளகாயை கொதிக்கும் நீரில் 10 நிமிடம் ஊற வைத்து, உரித்த பூண்டுடன் சேர்த்து நைஸாக அரைத்தெடுங்கள்.

எண்ணெயைக் காயவைத்து அரைத்த விழுது சேர்த்து வதக்கி, பிறகு வெங்காயம் சேர்த்து மேலும் 5 நிமிடம் வதக்குங்கள். பின்னர் சாதம், சோயா சாஸ்கள், உப்பு, வெங்காய தாள் சேர்த்து நன்கு கிளறி பரிமாறுங்கள்.

சூப்பரான ஸ்பைஸி ஃப்ரைட் ரைஸ் ரெடி.

என் சமையலறையில்...

★ முள்ளங்கி இலையை எண்ணெய் விட்டு வதக்கி, மிளகாய்வற்றல், உளுத்தம்பருப்பு, பெருங்காயத்தை வறுத்து சேர்த்து துவையல் அரைத்துப் பாருங்கள். சுவை அசத்தலாக இருக்கும்.

★ பழுத்த மெல்லிய எலுமிச்சம் பழத்தோலை எறியாமல் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, உப்பில் போட்டுக் குலுக்கிக் கொண்டே வந்தால் ஒரு மாதத்தில் அது நன்றாக ஊறி நிற்கும். அதனுடன் மிளகாய்ப்பொடி, எண்ணெய், கடுகு, பெருங்காயம் போட்டுத் தாளித்தால் மிகச்சுவையான ஊறுகாய் கிடைக்கும்.

★ கட்லெட் செய்ய பிரெட் தூள் கைவசம் இல்லையானால், கார்ன்ப்ளேக்ஸ் அல்லது அவலைப் பொடித்துப் பயன்படுத்தலாம்.

★ தேங்காய் பர்பி செய்தால், இறக்குவதற்கு முன் குலோப்ஜாமூன் மிக்ஸ் பவுடரை சிறிது சேர்த்து கிளறி இறக்கினால் சுவையாக இருக்கும்.

ஆச்சரியம் தரும் படிக்கிணறுகள்

குஜராத் மாநிலத்தில் மழைப் பொழிவு குறைவாக இருப்பதால் அங்கே தண்ணீர்ப் பிரச்சினை எப்போதும் இருந்திருக்கிறது. தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க படிக்கிணறுகள் அமைக்கும் வழக்கம் கி.பி 4-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டுவரை இருந்திருக்கிறது.

அகமதாபாத்திலிருந்து 110 கி.மீ தூரத்தில் இருக்கிறது பதான் நகரம். பசுமையான புல்வெளிக்கு நடுவே 'ராணி கி வாவ்' எனப்படும் மிகப் பிரம்மாண்டமான படிக்கிணறு அமைந்துள்ளது. படிக்கிணறுகளின் ராணி என்றே இதை அழைக்கலாம். உலகப் பாரம்பரியச் சின்னங்களில் இதுவும் ஒன்றாக அறிவிக்கப்பட்டு, யுனெஸ்கோ மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது.

800க்கும் மேலான சிற்பங்கள் பக்கவாட்டுச் சுவர்களில் கலை நயத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களிலும் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. கிணற்றுக்குச் செல்லும் படிக்கட்டுகள் நேராக இல்லாமல் பக்கவாட்டில் ஏறவும், இறங்கவும் வசதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

சோலாங்கி வம்சத்தைச் சேர்ந்த முதலாம் பீம்தேவ் மன்னரின் நினைவாக அவருடைய மனைவி ராணி உதயமதியால் இந்தப் படிக்கிணறு ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுடைய மகன் முதலாம் கர்ணதேவ் மூலம் கட்டி முடிக்கப்பட்டது.

64 மீட்டர் நீளமும், 20 மீட்டர் அகலமும் 27 மீட்டர் ஆழமும் கொண்ட இந்த படிக்கிணறு, 7 அடுக்குகளாகக் கட்டப்பட்டுள்ளது. கடைசிப் படிக்கட்டுக்குக் கீழே 30 கி.மீ நீளமுள்ள சுரங்கப் பாதை சித்பூருக்குச் செல்கிறது. போர்க் காலங்களில் அரச குடும்பத்தினர் தப்பிச் செல்வதற்காகக் கட்டப்பட்டிருக்கிறது.

கி.பி 1063 முதல் 1068 வரை இந்தக் கிணற்றைக் கட்டியிருக்கிறார்கள். காலப் போக்கில் இந்தப் படிக்கட்டு கிணறு கற்களாலும் மணலாலும் மூடப்பட்டுவிட்டது. இதனால் நீண்ட காலம் மக்களுக்கு இந்தப் படிக்கிணறு பற்றித் தெரியாமலே போய்விட்டது. 1960-ம் ஆண்டு தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு விடப்பட்டது.

விஷ்ணுவின் தசாவதாரங்கள், புத்தர், முனிவர்கள், நாகக் கன்னிகைகள், கண்ணாடியைப் பார்த்து பொட்டு வைக்கும் பெண், யானைகள் போன்று

மழை நீரைச் சேமிக்கும் இடமாகவும் இந்தப் படிக்கிணறுகள் இருந்திருக்கின்றன. 700 கிணறுகள் வரை இருந்திருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இதுவரை 120 படிக்கிணறுகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஜராத் தலைநகர் காந்தி நகரிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள அடாலஜ் நகரில் உள்ள படிக்கிணறும் புகழ்பெற்றது. இது 5 அடுக்குகளாகக் கட்டப்பட்டுள்ளது. தரை மட்டத்திலிருந்து அகலமான படிகளில் இறங்கிய பிறகு தூண்களுடன் கூடிய மண்டபம் உள்ளது. தூண்களிலும், சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

5 மண்டபங்களுக்குக் கீழே நீச்சல் குளம் அளவுக்குக் கிணறு வெட்டப்பட்டுள்ளது. கிணறு செவ்வக வடிவில் இருந்தாலும் மேல்கூரை முக்கோண வடிவில் உள்ளது. மேலே முழுவதுமாக மூடப்படாமல், சூரிய வெளிச்சமும் காற்றும் வரும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் படிக்கிணறு குளிர்ச்சியாகவே இருக்கிறது.

தொழில்நுட்பம் இல்லாத காலகட்டத்தில் நம் முன்னோர்களின் மதிநுட்பத்தையும் கட்டிடக் கலையின் சிறப்பையும் இந்தப் படிக்கிணறுகள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன!

உழைத்து வாழ வேண்டும்!

சந்திரவனக் காட்டுப் பகுதி மழையின்றி வறண்டு போனது. காடு வளம் பெறும் என்று காத்திருந்த முயலுக்கும் பச்சோந்திக்கும் நம்பிக்கை போய்விட்டது.

இரண்டும் உணவின்றித் தவித்தன. இனியும் இங்கே வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்துகொண்டன.

எனவே வேறு செழிப்பான பகுதிக்குப் போய் வசிக்கலாம் என்று தீர்மானித்து, இரண்டும் புறப்பட்டன. வெகுதூரம் பயணித்த பிறகு வழியில் ஒரு குரங்கைச் சந்தித்தன.

முயலும் பச்சோந்தியும் குரங்கிடம் ''அண்ணா! நாங்கள் வசித்த பகுதி வறண்டு போய்விட்டது. செழிப்பான பகுதி ஏதேனும் அருகில் இருக்கிறதா?'' என்று கேட்டன.

''சற்றுத் தொலைவில் செழிப்பான காடு இருக்கிறது. நான் அங்கேதான் வசிக்கிறேன். எங்கள் சிங்க ராஜா நன்றாக ஆட்சி நடத்துகிறார். அங்கே போய் நீங்கள் வசிக்கலாம்'' என்றது குரங்கு.

முயலும் பச்சோந்தியும் குரங்கு சொன்ன காட்டுக்கு வந்து சேர்ந்தன. காடு செழிப்பாகவே இருந்தது. அப்போது சூரியன் மறைந்து இருட்டிவிட்டதால் அவை இரண்டும் ஒரு மரப்பொந்தில் தங்கின.

''நாம் இன்றிரவு இங்கே தங்கிக்கொள்ளலாம். நாளை முதல் இந்தக் காட்டிலேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நிரந்தரமாக வாழலாம்''என்றது முயல்.

மறுநாள் முயலும் பச்சோந்தியும் ஆளுக்கொரு திசையில் வேலை தேடிச் சென்றன. மாலை இரண்டும் மரப்பொந்துக்கு வந்தன.

''பச்சோந்தி, எனக்கு வேலை கிடைத்துவிட்டது. மண்ணைத் தோண்டி கிழங்கு, கடலை எடுக்கும் வேலை'' என்றது முயல்.

அப்படியா! எனக்கு அரசவையில் அதிகாரியாக வேலை கிடைத்திருக்கிறது என்று பொய் சொன்னது பச்சோந்தி.

மறுநாளிலிருந்து முயல் வேலைக்குச் சென்றுவந்தது. பச்சோந்தி எங்கோ கிளம்பிச் சென்றது. அது எங்கே செல்கிறது என்று யாருக்கும் தெரியாது. இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.

ஒருநாள் கடலைக் காட்டில் முயல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த குரங்கு, ''அன்று உன்னுடன் வந்த பச்சோந்தியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்க ராஜா தண்டனை கொடுக்கக் காத்திருக்கிறார்'' என்று சொன்னது.

அதைக் கேட்டு முயலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

என்ன, கட்டி வைத்திருக்கிறார்களா? அவன் என்ன தவறு செய்தான்? என்று சொல்லிக் கொண்டே, பச்சோந்தியைக் கட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஓடியது முயல்.

பச்சோந்தி தலை குனிந்தபடி நின்றிருந்தது.

முயல் நேராக சிங்க ராஜாவிடம் போய்,''அரசே! இவன் என் நண்பன். இவன் என்ன தவறு செய்தான்?'' என்று பணிவாகக் கேட்டது.

''ஓ... இவன் உன் நண்பன் தானா? இவன் கடந்த ஒரு மாதமாக நம் காட்டில் பலரும் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கும் உணவுகளைத் திருடி தின்று வந்திருக்கிறான். யாராலும் இவனைக் கண்டுபிடிக்க முடிய

வில்லை. காரணம் இவன் இடத்துக்குத் தகுந்தாற்போல தன் நிறத்தை மாற்றிவிடுகிறான். இன்று காய்ந்த இலைச் சருகுகளோடு சருகாக மறைந்து உணவைத் திருடி தின்றுகொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அடித்த காற்றில் சருகுகள் பறந்து போய்விட்டன. இவன் மாட்டிக்கொண்டான். இவனுக்குக் கசையடி கொடுக்கப் போகிறேன்'' என்றது சிங்கம்.

முயல் பச்சோந்தியைத் திரும்பிப் பார்த்தது.

நண்பா, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு மாதமாக வேலைக்குப் போகவில்லை. என் உடலின் நிறத்தை மாற்றும் திறமையை வைத்து நான் உணவைத் திருடித் தின்றேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அழுதது பச்சோந்தி.

பச்சோந்தியின் மீது இரக்கம் கொண்ட முயல் சிங்கத்திடம், ''அரசே! இவனை மன்னித்துவிடுங்கள். இனி இவன் திருட மாட்டான். ஏதேனும் இவனுக்கு வேலை கொடுங்கள் '' என்று கேட்டது.

'''நீ இங்கு வந்த ஒரு மாதத்திலேயே நல்ல உழைப்பாளி என்று தெரிந்துகொண்டேன். உனக்காகப் பச்சோந்தியை மன்னிக்கிறேன். இவன் நம் உளவுத்துறையில் பணிபுரியட்டும். எதிரிகளின் கண்ணில் படாமல் மறைந்திருந்து உளவு பார்த்துவரட்டும். ஒருவன் தனக்கு இருக்கும் திறமையை நல்வழியில் பயன்படுத்தினால் எப்போதும் பேரும் புகழும் கிடைக்கும். தீய வழியில் பயன்படுத்தினால் தீமைதான் நடக்கும்'' என்றது சிங்கம்.

பச்சோந்தியும் திருடுவதை விட்டுவிட்டு, உழைத்து வாழ ஆரம்பித்தது.

வர்ணம் தீட்டுவோம்



புதிர் விடுகதைகள்

கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?

அடிப் பாதை இருக்கும் கால் இருக்காது.அது என்ன?

இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?

மாடிகளற்ற வீட்டில் எல்லா பொருட்களும் நீல நிற பூச்சு பூசப்பட்டிருப்பின் அதன் படிகள் எந்த நிறத்தில் இருக்கும்?

உலகம் முழுதும் சுற்றும் ஆனால் ஒரே இடத்திலேயே இருக்கும்,அது என்ன??

கைகள் இருக்கும் ஆனால் கைதட்ட முடியாது,அது என்ன?

இறக்கையை விட மென்மையானது, ஆனால் உலகின் பலமிக்க மனிதராலும் சில நிமிடங்கள் பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன?

சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும், அதை வாசித்தால் அதன் அர்த்தம் முறிந்துவிடும். அது என்ன?

கண் உண்டு, ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?

வெள்ளை வீடு கருப்புக் கல்லாலும், கருப்பு வீடு வெள்ளை கல்லாலும் கட்டப்பட்டிருப்பின் பச்சை வீடு எதனால் கட்டப்பட்டிருக்கும்

விடைகள்

மழை
நத்தை
மெழுகுவர்த்தி
படிகள் இருக்காது
முத்திரை
கடிகாரம்
மூச்சு
அமைதி
ஊசி
கண்ணாடி

ஒரு சொல் பலபொருள்

மனிதர்களில் ஒரே பெயரில் பலரைப் பார்த்திருப்போம். அதேபோல ஒரே பெயரில் இரு வேறு பொருட்களோ, உயிரினங்களோகூட இருக்கின்றன. அதாவது ஒரே உச்சரிப்பில் வரும் வார்த்தைகள், இரு வேறு பொருளைத் தரலாம். ஆங்கிலத்தில் இதை ஹோமோபோன் என்று சொல்வார்கள். தமிழிலும் பல பொருள் தரும் சொற்கள் இருக்கின்றன. இதை பல பொருள் ஒரு மொழி என்று சொல்வார்கள். உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போமா?

ஆங்கிலத்தில் கிவி (டுடிதீடி) என்னும் சொல் ஒரு பழத்தையும் பறவையையும் குறிக்கும். வார்த்தையோடு அந்தப் பழத்தையும் பறவையையும் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

நியூசிலாந்தின் தேசியப் பறவை கிவி. இந்தப் பறவைக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இறக்கைகளே இல்லாத பறவை இது. வீடுகளில் வளர்க்கப்படுகிற கோழியின் அளவுதான் கிவியும் இருக்கும். ஆனால் மற்ற பறவைகளின் முட்டைகளோடு ஒப்பிடும்போது, கிவியின் உடல் அளவுக்கு அதன் முட்டை மிகப் பெரியது. கிவி, ஆந்தையைப் போல பகலில் தூங்கி, இரவில் விழித்திருக்கும். இவை காடுகளில் வாழும் பறவையினம் என்பதால், காடுகள் அழிப்பு இவற்றைப் பெருமளவில் பாதித்து இருக்கிறது.

இத்தாலி, நியூசிலாந்து, சிலி, கிரீஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பயிரிடப்படும் பழ வகை கிவி. கோழிமுட்டை அளவில் இருக்கும் இது, பார்ப்பதற்கு சப்போட்டா பழம் போலவே இருக்கும். மேல்புறம் இளம்பச்சையும் பழுப்பும் கலந்த நிறமும் உள்ளே அடர்த்தியான பச்சை நிறமோ, பொன்னிறமோ இருக்கும். நடுவே கடுகு போல சின்னச் சின்ன விதைகள் இருக்கும். இனிப்புச் சுவையுடனும் தனித்த மணத்துடனும் இருக்கும்.

தமிழில் வாரணம் என்னும் சொல் யானை, வாழை, சங்கு, கடல், தடை, கவசம், பன்றி, நிவாரணம் ஆகிய பொருட்களைத் தரும்.

வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான்

என்று நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் சொல்லியிருக்கிறார். அதாவது ஆயிரம் யானைகள் சூழ நடந்து வருகிறாராம் நாராயணன். தமிழ் இலக்கண நூலான பிங்கல நிகண்டு, 'வாரணஞ்சூழ் புவி' என்று குறிப்பிட்டிருக்கிறது. அதாவது கடலால் சூழப்பட்டிருக்கிறது இந்தப் பூமி என்று பொருள்.

அதே பிங்கல நிகண்டுவில் இன்னொரு இடத்தில் 'வாரணத்து வாயடைப்ப' என்று வந்திருக்கிறது. இந்த இடத்தில் வாரணம் என்பது சங்கு என்ற பொருளைத் தருகிறது.

புதிதாக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தும்போதோ, தெரிந்துகொள்ளும்போதோ அதற்கு வேறு அர்த்தமும் இருக்கிறதா என்று தெரிந்து பயன்படுத்துவோம்.

குளிரும் பாலைவனங்கள்

பாலைவனம் என்ற சொல்லில் வனம் இருந்தாலும் பாலைவனங்களில் புல்வெளி கிடையாது. காடுகள் கிடையாது. பாலைவனங்களில் விவசாயம் சாத்தியமில்லை. பாலைவனங்களில் நிறைய இருப்பது மணல் தான்.

பாலைவனம் என்றால் மனக்கண் முன் வந்து நிற்பது சகாரா பாலைவனம்தான். ஆப்பிரிக்கக் கண்டத்தின் வட பகுதியில் கிழக்கிலிருந்து மேற்குவரை அமைந்திருக்கிறது. சகாரா பாலைவனத்தில் 11 நாடுகள் அமைந்துள்ளன. லிபியா, எகிப்து ஆகிய நாடுகளின் பெரும் பகுதி பாலைவனமே.

சகாரா பாலைவனம் பல லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இந்தப் பாலைவனம் முழுவதிலும் ஒரே மணலாக இருக்கும் என்று நினைத்தால் அது தவறு. 30 சத விகிதப் பரப்பில் மட்டுமே மணல். மீதிப் பகுதியானது முட்புதர், பாறைகள் முதலியவற்றால் ஆனது. இத்துடன் ஒப்பிட்டால் அரேபியப் பாலவனத்தின் பெரும் பகுதி மணல்தான்.

பாலைவனம் என்பதற்கு அளவுகோல் உண்டு. ஓரிடத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 25 அங்குலத்துக்குக் குறைவாக இருந்தால் அது பாலைவனம் என்று வகைப்படுத்தியுள்ளனர். தவிர, பாலைவனம் என்றால் பயங்கரமாக வெயில் அடிக்கும் என்று கருதுவதும் தவறு. ஏனெனில் கடும் வெயில் வீசுகின்ற பாலைவனங்கள் இருப்பது போன்றே, கடும் குளிர் வீசுகிற குளிர்ப் பாலைவனங்களும் உண்டு. அந்த அளவில் உலகின் பாலைவனங்களை இரண்டாகப் பிரிக்கலாம்.

கோடைக்காலத்தில் கடுமையாக வெயில் அடிக்கிற பாலைவனங்கள் ஒரு வகை. கடும் குளிர் வீசுகின்ற பாலைவனங்கள் இரண்டாவது வகை. ,

சகாரா பாலைவனம், அரேபிய பாலைவனம், ஆப்பிரிக்காவில் உள்ள கலஹாரி பாலைவனம், அமெரிக்காவில் உள்ள மொகாவி பாலைவனம், தார் பாலைவனம் முதலியவை வெயில் வீசும் பாலைவனங்கள். சகாராவில் 1922 -ம் ஆண்டில் லிபியா நாட்டில் உள்ள அசிசியா என்னுமிடத்தில் கோடைக்காலத்தில் அதிகபட்சமாக 58 டிகிரி வெப்பம் பதிவானது.

எனினும் சகாரா போன்று கடும் வெயில் அடிக்கும் பாலைவனங்களில் இரவில் நல்ல குளிர் இருக்கும். முதல் காரணம் மணலுக்கு வெப்பத்தை ஈர்த்துக்கொள்ளும் திறன் கிடையாது. வானில் மேகங்கள் கிடையாது என்பதால் பகலில் பெற்ற வெப்பம் உயரே சென்றுவிடும். எனவே நடுக்கும் குளிர் இருக்கும். சகாரா பாலைவனத்தில் கோடை இரவில் குளிர் 4 டிகிரி செல்சியஸ் அளவுக்கு இருக்கலாம். ஒரு முறை பனிப்பொழிவு இருந்தது.

தென் அமெரிக்காவில் உள்ள அடகாமா பாலைவனம், ஆப்பிரிக்காவில் உள்ள நமீப் பாலைவனம், சீனாவில் உள்ள தக்கலாமக்கான் பாலைவனம், சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள கோபி பாலைவனம் முதலியவை கடும் குளிர் வீசுகிற பாலைவனங்கள். ஆனாலும் இவற்றில் கோபி, தக்கலாமக்கான் ஆகியவற்றில் கோடையில் வெயில் உண்டு.

பாலைவனங்களில் கடும் வெப்பத்தைத் தாங்கி நிற்கும் திறன் கொண்ட தாவரங்கள் உண்டு. இவற்றின் இலைகள் மிகச் சிறியவையாக இருக்கும். தண்டுப் பகுதிகள் கெட்டியாக இருக்கும். அமெரிக்காவில் அரிசோனா பாலைவனத்தில் வாழும் கள்ளி வகைத் தாவரம் மிக உயரத்துக்கு வளரக்கூடியது. சுமார் 150 ஆண்டுகள் வாழக்கூடிய இதன் பெயர் சகுவாரோ . பாலைவனத்தில் புல் பூண்டு வகைகள் அதிகம். இவற்றின் வேர்கள் பக்கவாட்டில் நீண்ட தூரம் வளரக்கூடியவை. பாலைவனங்கள் உயிரற்றவை அல்ல.

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் ஜென்ம புதன் சஞ்சரிப்பதால் தன ரவி , வீரியத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். தேகம் புது வீரியம் பெறும். தன பாவத்தில் ரவி சஞ்சரிப்பதால் தன லாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். ஜீவன பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் தொழில் விருத்தி, உயர்வு உண்டு. உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.

தன பாவத்தில் வெள்ளி இருக்கக் குரு நோக்குவதால் தனலாபமுண்டு. இவ்வாரம் வியாழ சுகயீனம் , அட்டமத்துச் சனி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேராது.

இவ்வாரம் இலாப பாவத்தில் புதன், குரு நோக்குவதால் தொழிலால் இலாபம், விருத்தி , ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். ஜென்ம ஸ்தானத்தைக் குரு நோக்குவதால் தேகம் புதுப்பொலிவு பெற்று, வீரியம் அடையும். உத்தியோகத்தர் பதவிச்சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் ஆரம்பிக்கலாம்.

மாதுரு பாவத்தில் குரு சஞ்சரிப்பதாலும் , புதன் நோக்குவதாலும் மாதா நலம், கல்வி விருத்தி, மனை நலம் , வாகன சுகம், குடும்ப சேமம் முதலியன உண்டாகும். ஜீவன பாவத்தில் புதன், ரவி சஞ்சரிக்கக் குரு நோக்குவதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். வெள்ளி சுகத்தால் கன்னியரின் காதல் விவகாரம் ஜெயமளிக்கும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர்.

இவ்வாரம் வியாழ சுகயீனம் 5இல் சனி தோஷம் கண்டக ரவி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டகும். ஜீவன, கர்ம பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் ஏற்படும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் கூட்டு வாணிபம், உயர்வு பெறும். வாடிக்கையாளர்களின் வருகை கூடும்.

தன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் புதன்(2ம்) தன பாவத்தை நோக்குவதால் தன லாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தி அடையும். தொழிலால் உயர்வுண்டு. வங்கி வசதிகள் கூடும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் ஆதரவும், சக உத்தியோகத்தர்களின் உதவி, அனுசரனை கிட்டும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாயம் பெறும். விவசாயிகளுக்கு அரச நிவாரணம் கிடைக்கும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.

இவ்வாரம் ஜென்ம குரு, கண்டக ராகு, கேது புதன் செவ்வாய் தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் கட்டுப்படுத்தல் வேண்;டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளால் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைப்பது கடினமாகும்.

இவ்வாரம் தனலாபம் , பொருள் வரவுண்டு. மனை விருத்தி உண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும். செய்தொழில் விருத்தி, இலாபம் , சேமிப்பு உண்டு. வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் நிறைவு பெறும். உத்தியோகத்தர் பணிகளில் ஏற்றம் காண்பர். கன்னியரின் காதல் விவகாரம் வெற்றியளித்து, திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும்.

இவ்வாரம் ஜென்மச்சனி (ஏழரை நடுக்கூறு) இலாப பாவத்தில் குரு, அஷ்டமத்தில் ராகு, கேது நடைபெறுவதால் சனி, ராகு , கேதுக்களுக்கு தோஷ நிவர்த்தி செய்ய வேண்டும். வெள்ளி இவ்வாரம் யோக சஞ்சாரஞ் செய்வதால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடித் திருமணப்பேச்சுக்கள் தொடரும். உத்தியோகத்தர் சக ஊழியர்களை அனுசரித்து நடந்தால் வேலைச்சுமை குறையும். வியாபாரிகள் , விவசாயிகள் தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் அடைவர்.

இவ்வாரம் ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிக்கப் புதன் நோக்குவதால் செய்தொழில் விருத்தி, உயர்வு, சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்படைந்து, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதலையும் தொடங்கலாம். கூட்டு வாணிபம் வெற்றி தரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு அமையும். ஆசிரியர், மாணவர், உறவு சீராக இருக்கும்.

இவ்வாரம் புத்தி , புத்திர பாவத்தில் வெள்ளி சஞ்சரிக்க குரு நோக்குவதால் புத்தி பலம் கூடும். புத்திரர் உதவி, அனுகூலம் கிட்டும். தர்ம, பண்ணிய காரியங்களில் ஆர்வம், ஈடுபாடு ஏற்படும். நோன்பு, விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் ஏற்படும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும். பழைய நிலுவைகள் வந்து சேரும்.

இவ்வாரம் ஆயுட் பாவத்தில் குரு இருக்க புதன் நோக்குவதால் ஆயுட்பலமுண்டு. ஜீவன தொழில் ஸ்தானத்தில் சனி இருக்க வெள்ளி நோக்குவதால் செய்தொழில் விருத்தி, உயர்வு , சேமிப்பு , வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் நிறைவு ணபுறும். உத்தியோகத்தர், அதிகாரிகளின் பாராட்டையும் , ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகள் , விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர்.

செவ்வாய் தோஷம் போக்கும் விநாயகர் விரதம்

திருமணத்துக்கு ஜாதகப்பொருத்தம் பார்ப்பவர்களை பெரும்பாலும் கலங்கடிப்பது செவ்வாய் தோஷமாகும். இந்த தோஷத்தால் நிறைய பேரின் திருமணம் தாமதம் ஆகி விடுவதுண்டு. செவ்வாய் தோஷத்தை விரட்டும் ஆற்றல் விநாயகர் வழிபாட்டுக்கு உண்டு. அதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது.

விநாயகரின் பரமபக்தரான பரத்து வாச முனிவர் தலயாத்திரை சென்றபோது நர்மதை நதியில் நீராடினார். அங்கே ஒரு கந்தர்வ மங்கையைக் கண்டார். அவள் மேல் அன்பு கொண்டு வாழ்ந்தார். இவ் விருவருக்கும் சிவந்த நிறத்தில் குழந்தை ஒன்று பிறந்தது. செந்நிறம் கொண்டிருந்ததால் 'அங்காரகன்' என்று குழந்தைக்கு பெயர் சூட்டப்பட்டது. அக்குழந்தையைப் பூமாதேவி எடுத்து வளர்த்ததால் 'பூமி குமாரன்' என்ற பெயரும் உண்டு.

அங்காரகர் சிறந்த விநாயகர் பக்தர். அவருடைய பக்தித்திறத்தை மெச்சிய விநாயகர் அங்காரகன் வேண்டிக் கொண்டபடி தேவர்களைப் போல் வாழவும், நவக்கிரகங்களில் ஒருவராகத் திகழும் பெரும்பேற்றினையும் பெற்றார். அதனுடன் அங்காரகனுக்குரிய செவ்வாய்க்கிழமைகளில் வரும் சதுர்த்தி திதியில் விநாயகரின் திருவடிகளைப் பணிவோரின் பிணிகளைத் தீர்க்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். இதன் காரணமாகச் செவ்வாய்க்கிழமை சதுர்த்தி விரதம் இருந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவோர் உடல் பிணிகள் யாவும் நீங்கப் பெறுவர்.

செவ்வாய் தோஷமுள்ளவர்கள் செவ்வாய்க்கிழமைகளில் சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தால் தோஷம் நீங்கி திருமண பாக்கியம் உண்டாகும். திருமணத்துக்கு ஜாதக பொருத்தங்களைப் பார்க்கத் தொடங்கும் போது முதலில் ஆயுள் பலத்தைக் கண்டறிய வேண்டும். பிறகு பெண், பிள்ளை இருவருடைய தசாபுத்தி அந்தர காலங்களைப் பார்க்க வேண்டும்.

இருவருக்கும் திருமண பாக்கியம் வந்திருக்கிறதா? களத்திர தோஷம் உண்டா? மாங்கல்ய தீர்க்கும் இருக்கிறதா? என்பன போன்ற முக்கியமான அம்சங்களைப் பார்க்க வேண்டும். பிறகு பொருத்தங்கள் பார்க்கும் போது பெண் அல்லது பிள்ளை ஜாதகத்தில் தோஷம் உள்ளதா? என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். குறிப்பாகச் செவ்வாய் தோஷத்தை அறிவது அவசியமாகும். பெண் அல்லது பிள்ளையின் ஜாதகத்தில் லக்கனத் திறகு 2, 4, 7, 8, 12 ஆகிய இல்லங்களில் செவ்வாய் தங்கினால் தோஷமாகக் கருதப்படுகிறது.

அடுத்து சந்திரன் தங்கிய ராசிக்கு 2, 4, 7, 8, 12 இல்லங்களில் செவ்வாய் நின்றாலும் தோஷமாகும்.

மூன்றாவதாக சுக்கிரன் நின்ற ராசிக்கு 2, 4, 7, 8, 12 ராசிகளில் செவ்வாய் தங்கினாலும் தோஷமடைகிறார்.

ஆனால் 2, 4, 7, 8, 12 ஆகிய ராசிகளில் செவ்வாய் தங்கினால் மாத்திரம் தோஷமடைந்து விட்டதாகக் கூற இயலாது.

ஜாதகத்தில் மேஷம், விருச்சிகம் போன்ற ஆட்சி வீடுகளில் செவ்வாய் தங்கினால் அதுதோஷமாகாது. அதேபோல மகர ராசியில் செவ்வாய் உச்சம் பெற்றாலும் தோஷம் இல்லை.

கடக ராசியில் செவ்வாய் தங்கி நீச்சமடைந்தாலும் தோஷம் என்ற பேச்சுக்கே



இடமில்லை. செவ்வாய் தோஷ அமைப்பில் இடம் பெற்றுள்ள போது அந்த கிரகத்தை குரு, சனி, ராகு, கேது பார்த்தாலும் அல்லது அந்த கிரகங்களும் சேர்ந்து தங்கினாலும் செவ்வாய் தோஷம் பரிகாரமடைந்து விடுகிறது.

அங்காரக தோஷம் உண்டாகும் வண்ணம் ஜாதகத்தில் அமைந்து அது கடகம் அல்லது சிம்ம ராசியானாலோ, லக்கனமானாலோ அதை செவ்வாய் தோஷ ஜாதகமாகக் கருத முடியாது. கடகம், சிம்மம் லக்கனமாக அல்லது சந்திரா லக்கனமாக உள்ள ஜாதகரைச் செவ்வாய் தோஷமுடையவராகக் கூறுவதற்கில்லை.

செவ்வாய் தோஷம் காரணமாகத் திருமணம் நடைபெறக் காலதாமதமானால் அதற்கு பரிகாரமாகவும் சாந்தி செய்வது போன்றும் சிலவற்றை செய்வதன் மூலம் திருமணம் கைகூடும். சுபம் நடைபெறும்.

செவ்வாய்க் கிழமைகளில் வரும் சதுர்த்தி திதி நாளில் விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து விரதம் இருப்பதால் நல்லவை நடைபெறும். 41 செவ்வாய்க்கிழமை விரதம் இருக்க வேண்டும். விரத நாள் அன்று அதிகாலை எழுந்து நீராடி, சிவந்த வஸ்திரம் உடுத்தி, செவ்வாய் கிரகத்திற்கு செண்பகப்பூ, சிவப்பு அலரி ஆகிய மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

விரதம் பூர்த்தி செய்யும் நாள் ஐந்து பேருக்கு விருந்து அளிக்க வேண்டும். அவர்களுக்கு சிவப்பு வஸ்திரம், செம்புச் சொம்பு, தம்ளர் மற்றும் தாம்பூலத்துடன் தட்சணையும் அளித்து அவர்களை வணங்கி ஆசி பெற வேண்டும்.

வாழ்வின் படிநிலையை சொல்லும் கொலு தத்துவம்

'ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணால் ஆன பொம்மையால் என்னை பூஜித்தால், அவர்களுக்கு சகல சுகங்களையும், சௌபாக்கியங்களையும் அளிப்பேன்' என்று தேவி புராணத்தில் அம்பிகை கூறியுள்ளார். அன்னையின் அந்த வார்த்தையை சுரதா என்ற மன்னன் கடைப்பிடித்து, தன் பகைவர்களை வீழ்த்தியதோடு, பலவிதமான இன்னல்களில் இருந்தும் விடுதலை அடைந்தான். எனவே கொலு பொம்மைகளை வைத்து வழிபாடு செய்வது என்பது நவராத்திரி விழாவில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது.

மனிதன் படிப்படியாக தன் ஆன்மிக சிந்தனைகளை வளர்த்து, இறுதியாக இறைவனுடன் கலக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதற்காகவே, கொலுவில் படிகள் அமைக்கப்பட்டு, அதில் பொம்மைகள் அடுக்கி வைக்கப்படுகின்றன. ஒன்பது படிகள் அமைப்பது மரபு. ஒவ்வொரு படியிலும் ஐதீகப்படி பொம்மைகளை வைக்க வேண்டும். பொம்மைகளை வைக்கும் மரபையும், அந்த பொம்மைகள் கூறும் தத்துவத்தையும் இங்கு காணலாம்.

நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதே ஆகும். கொலு என்பது பல படிகளை கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பது என்பது பொருளாகும். ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியில் பூஜிப்பவர்களுக்கு சகல நலங்களையும் தருவேன் என்று அம்பிகையே கூறியிருக்கின்றார். நவராத்திரியில் வீட்டில் வைக்கப்படும் கொலு மேடையானது, 9 படிகள் கொண்ட தாக அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு படிகளும் ஒவ்வொரு தத்துவத்தை மிக எளிதாக சொல்லிச் செல்கின்றன.

முதலாம் படி

கொலு மேடையில் கீழிருந்து முதல் படியில் ஓரறிவு கொண்ட உயிர்களான புல், செடி, கொடி போன்ற தாவரங்களின் பொம்மைகளை கொலுவாக வரிசைப்படுத்தி வைக்க வேண்டும்.

இரண்டாம் படி

அடுத்ததாக அமைந்த இரண்டாவது படியில் ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற உயிர்களின் பொம்மைகளை கொலுவில் வைக்க வேண்டும்.

மூன்றாம் படி

மூன்றறிவு படைத்த உயிரினங்களான கறையான், எறும்பு போன்றவற்றின் பொம்மைகளை கொண்டு மூன்றாவது படியை அமைக்க வேண்டும்.

நாலாம் படி

நான்கறிவு உயிர்களை விளக்கும் நண்டு, வண்டு போன்றவற்றின் பொம்மைகளை வைத்து நான்காவது படியை அலங்கரிக்க வேண்டும்.

ஐந்தாம் படி

ஐந்தறிவு கொண்ட உயிர்களான மிருகங்கள் மற்றும் பறவைகளின் பொம்மைகளை வைத்து ஐந்தாவது படியை அமைக்க வேண்டும்.

ஆறாம் படி

இந்த படி மனிதர்களுக்கு உரியது. எந்த உயிருக்கும் இல்லாத சிந்திக்கும், சிரிக்கும் சக்தியை இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ளார். அத்தகைய ஆறாவது அறிவு கொண்ட மனிதர்களின் பொம்மைகளை வைத்து ஆறாவது படியை நிர்மாணிக்க வேண்டும்.

ஏழாம் படி

மனித நிலையிலிருந்து உயர்நிலையை அடைந்த சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள் (ரமணர், வள்ளலார்) போன்றோரின் பொம்மைகள் கொண்டு ஏழாவது படியை அமைக்க வேண்டும்.

எட்டாம் படி

தேவர்கள், அட்டதிக்கு பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள் போன்ற தெய்வங்கள், தேவதைகள் போன்றோரின் பொம்மைகளைக் கொண்டு எட்டாவது படியை அலங்காரம் செய்ய வேண்டும்.

ஒன்பதாம் படி

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெரும் தேவர்கள், சரஸ்வதி, லட்சுமி, பார்வதி தேவி போன்ற முப்பெரும் தேவிகள் ஆகிய தெய்வங்களையும், அவர்களின் நடுவில் நடுநாயகமாக ஆதிபராசக்தியின் உருவ பொம்மையையும் வைத்து ஒன்பதாவது படியை நிறைவு செய்ய வேண்டும்.

மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடைய வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாகவே இதுபோன்ற வரிசையில் கொலு அமைக்கச் சொல்லப்பட்டுள்ளது.

துன்ப நேரங்களில் கடவுள் காப்பார்



ஒரு விவசாயி பாடுபடுகிறார் என்றால் அவர் கடினப்பட்டு உழைக்கிறார் என்பது பொருள். ஒரு வீரன் பாடுபடுகிறான் என்றால் அவன் கடின பயிற்சிகளை மேற்கொள்கிறான் என்பது புலனாகிறது. இதேபோன்று ஒவ்வொரு தொழிலிலும் பாடுகள் உண்டு. பாடுகள் என்றால் இங்கே துன்பங்கள் அடங்கிய வெற்றி பாதைகள் என்பதை புரிந்துகொள்கிறோம்.

ஏசு தன் பணியின் சூழலில் பல பாடுகளைபட்டார். பல அவமானங்களை மேற்கொண்டார். ஏசுவின் பாடுகள் அவருடைய பணிகளின் நிறைவாகவும், மீட்பின் வழிகளாகவும் அமைந்தன. கடவுளின் திட்டத்தை நிறைவேற்றவே அவர் பாடுகள் பட்டார். தந்தை எனக்கு அளித்த துன்பக்கிண்ணத்தில் இருந்து நான் குடிக்காமல் இருப்பேனா? (யோவான் 18:11) என்றார்.

நாம் எவ்வாறு நம்முடைய துன்ப நேரங்களில் செயல்படுகிறோம்? துன்பங்களை கண்டு துவண்டு போகிறோமா? தோல்விகளைக் கண்டு ஓடி ஒளிந்து விடுகிறோமா? வறுமையையும், வியாதிகளையும் கண்டு வாடிவிடுகிறோமா? இந்த துன்ப நேரத்தில் கடவுள் நம்மோடு இருக்கிறார். நம்மை கைவிடமாட்டார். ஏசுவின் பாடுகளும் மரணமும் பரமத்தந்தையின் விருப்பமாகவும் திட்டமாகவும் மீட்பின் வரலாற்றில் இடம் பெறுகின்றன.

நம்முடைய துன்பங்களும் தோல்விகளும் கடவுளின் விருப்பம் என்று உணர்ந்து அவைகளை ஏற்றுக்கொண்டு வாழும் போது நாமும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்கிறோம். துன்பங்களின் நேரங்களில் கடவுளை விட்டு வெகுதூரம் சென்று விடாமல் அவரின் கரங்களைப் பற்றிக்கொண்டு பின்பற்றுபவர்களாக வாழ்வோம்.

விழிப்புலனற்றோருக்கு கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமே வெள்ளைப்பிரம்பு

அரீஷ்ஹரன்

உலகிலே உயிர் பெற்ற அனைத்து ஜீவராசிகளின் தேவைகளும் துலக்கம் பெற்று ஈடேறி வருவதை நாம் கண்கூடாக காண்கின்றோம். அதேவேளை கண்பார்வையற்ற விழிப்புலனற்ற மானிடப்பால் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பினை உலகுக்கு துலாம்பரமாக வெளிச்சமிட்டு காட்டுவதே இவ்வெள்ளைப் பிரம்பு தினமாகும்.

உலக வெள்ளைப் பிரம்பு தினம் 1961 முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 15 ஆம் திகதி விழிப்புலனற்றோருக்கான வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதன் பின்னணியினை நாம் ஆராய்வோமாயின் அது எம்மை இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக்கு இட்டுச் செல்கின்றது.

பெரும் அழிவுகளையும் மனித அவலங்களையும் உலகுக்கு விட்டுச் சென்ற இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவுகளோ சொல்லும் தரமன்று. இந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட அணுகுண்டு ஜப்பானில் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் வீசப்பட்ட பரிதாபக் கதை ஒரு கண்ணீர் காவியமாகும்.

இன்றும் கூட இப்பகுதிகளில் பிறக்கின்ற குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறப்பதையும் நாம் செய்திகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் முக்கியமான ஒன்றாக யுத்தத்தை அடுத்து உருவாகிய கண்பார்வை அற்றோறின் கதையோ பெரும் பரிதாபமாகும். இவ்வாறு பெருமளவினோர் ஜப்பானில் பார்வை இழக்கவே அதற்கான சிகிச்சையினை பெற்றுக்கொள்வதற்காக அவ்வேளை ஜப்பானில் பிரபல்யமாக இருந்த சிலீயை மக்கள் நாடினர். இவ்வாறு பார்வை இழந்து வைத்தியரை நாடியவர்களின் கதையே பரிதாபகரமாகிவிட்டது.

தம்மை நாடி வந்தோரில் கூடியளவிலானோரின் பார்வையை வைத்தியரால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. இத்தகையதொரு பரிதாபகரமான நிலைமையை எதிர்நோக்கிய சிலீ மனிதர்கள் என்ற வகையில் அவர்களையும் சமூகத்தில் நடமாட வைப்பதற்கு வழிதேடினார். அதன் பிரதிபலனாக உருவானதே வெள்ளைப் பிரம்பாகும்.

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் நகர்வதற்கு பயன்படுத்திய முறையில் வெள்ளைப் பிரம்பு மகத்துவம் பெறுகின்றது.

இதனை பயன்படுத்துவோர் விழிப்புலனற்றோர் ஆவர். இவ்விழிப்புலனற்றோர், ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகரும்போது அல்லது நடமாடும்போது அவர்களுக்கு பக்கத்துணையாக தாம் நகரும் இலக்கை நோக்கிய பயணத்திற்கும் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, விழிப்புணர்வு உள்ளோர் வெள்ளைப் பிரம்பினை பயன்படுத்தி வருவோர் விழிப்புலனற்ற ஒருவர் என்ற வகையில் உறுதுணையாக அமைவது இவ்வெள்ளைப் பிரம்பே ஆகும். சன நெரிசலும், போக்குவரத்து சாதனங்களின் அதிகரிப்பும், பாதைகளைக் கடக்கும் போது ஏற்படும் நெறுக்கடிகளும் சாதாரண மக்களையே திக்கு முக்காடச் செய்யும்போது வெள்ளைப் பிரம்பினை பயன்படுத்தியவாறு, தம்மை இனங்காட்டியவாறு மேற்குறிப்பிட்டத் தடைகளை தாண்டிச் செல்வதும் இவ்வெள்ளைப் பிரம்பின் உதவியினாலேயே ஆகும்.

மனித நேயம் அருகிவருகின்ற இன்றைய நவீன யுகத்திலேயே தங்களது தேவைகளுக்கே நேரமின்றி பஞ்சாய்ப் பறக்கும் மானிடவர்க்கம் மற்றவன் எக்கேடுகெட்டாலும் தமது காரியம் நிறைவேறி விட வேண்டும் என்ற அவாவினாலேயே ஓடி உழைக்கின்றது.

எனவே அவர்களை குறை கூறுவதை விட தங்களுக்கென ஒரு துணையாக இவ்வெள்ளைப் பிரம்பை உருவாக்கி அதனை எங்களது கையிலேயே துணையாகத் தந்து எவரது உதவியுமின்றி தாமாகவே நகருவதற்கு இவ்வெள்ளைப் பிரம்பு ஒரு மனிதாகவே உதவுவது விழிப்புலனற்றோருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். இதற்கான உலக அங்கீகாரம் 1969 இல் கிடைத்தது.

விழிப்புலனற்ற இவர்கள் அங்கவீனர்கள் என்ற வரிசையில் நிரற்படுத்தப்படுகின்ற போதும் ஏனைய அங்கவீனர்களை விடவும் கல்வித்துறை உட்பட இதர பல செயற்பாடுகளிலும் துலக்கம் பெற்று வருகின்ற இவ்விழிப்புலனற்றோர் பல்கலைக்கழகம் வரை முன்னேறியுள்ளதோடு கணனி, தொலைத்தொடர்புக் கல்வி போன்ற இன்னோரன்ன பல துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

சாதாரண மாணவர்களுக்கும் ஏனைய மனிதர்களுக்கும் தாம் எந்த வகையிலும் சோடை போக வில்லை என்பதையே இக்கல்வித் துறையிலான விழிப்புணர்ச்சியும், கல்வியைத் தேடவும் அதற்காகக் நகரவும் இவ்வெள்ளைப் பிரம்பு எமக்கு உறுதுணையாக இருப்பதும் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இயற்கையாகவோ அன்றேல்; விபத்துக்கள், கவனயீனங்கள, ; அறியாமைகள் காரணமாகவோ ஏற்படக் கூடிய அங்கவீன நிலைகளோ மனிதன் என்ற வகையில் எம்மால் குறைவான நிலையில் மதிப்பிடுவது தவறாகும். அங்கவீனர்களும் மனிதப் பிறவிகளே. அவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே மனிதாபிமான நிலை. சமூகத்தில் அவர்களாலும் உயர்ந்த நிலைக்கு வர முடியும். சமூகத்தில் அவர்கள் குறை பிறவிகள் அல்லர் போன்ற எண்ணக்கருக்களை விளைவிப்பதற்காக வேண்டி குறித்த அங்கவீனம் தொடர்பாக தேசிய, சர்வதேச ரீதியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக வேண்டி பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் அவதானிக்கிறோம்.

நமது உள்ளத்து உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை கண்களே. கண்களில் உண்டாகிற பிரச்சினைகள் ஆரோக்கியத்துக்கு மட்டுமின்றி, அழகுக்கும் உகந்ததல்ல. இந்த உலகத்தைக் கண்டு ரசிப்பதற்கு நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிசய உறுப்பு கண்ணாகும். மனிதனின் கண் என்பது ஒளியை உணர்வதற்கு உதவும் ஓர் உறுப்பாகும். வெவ்வேறு விதமான ஒளியை உணரும் உறுப்புகள் பல விலங்குகளிடையே காணப்படுகின்றன. மிக எளிய கண்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஒளி அல்லது இருளை மட்டும் கண்டு உணரவல்லவை. இன்னும் மேம்பட்ட (complex) கண்கள், காட்சிகளைப் பார்க்கும் திறன் அளிக்கக்குடியவை. பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, மீன்கள் உட்பட்ட பல மேல்நிலை உயிரினங்கள் இரு கண்களைக் கொண்டுள்ளன.

இவ்விரு கண்களும் ஒரே தளத்தில் அமைந்து ஒரே முப்பரிமாணப் படிமத்தை (binocular vision) காண உதவுகின்றன. மனிதர்களின் பார்வையும் இவ்வாறானதே இரு கண்களும் வெவ்வேறு தளங்களில் அமைந்து இரு வேறு படிமங்களை (monocular vision) காண உதவுகின்றன. இந்தக் கண்ணகளில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களே பார்வையீனத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பார்வையீனம் இயற்கையாக அமையலாம். அன்றேல் விபத்துக்கள், நோய்கள் காரணமாக அமையலாம். நமது கண் ஒரு நிழற்படக் கருவியைப் போன்று இயங்குகிறது. ஒளியின் உதவியுடன் ஒரு நிழற்படக்கருவி பொருட்களைப் படம் பிடிப்பதைப் போல, நமது கண்ணும் ஒளியின் உதவியுடன் பொருட்களின் உருவத்தை கணப்பொழுதில் படம்பிடித்து, மனதில் பதிவு செய்து, பின்பு அதை மூளையில் விருத்தி செய்கிறது. கண்ணின் அனைத்து பாகங்களும் ஒருங்கிணைந்து, ஒரு குழுவைப் போன்று இயங்கி நமக்குப் பார்வை அளிக்கிறது.

இதில் விழிப்படலம் என்ற பாகம் முக்கிய பங்கு வகிக்கிறது. கருமையான 'கண் மணி'க்குள் நுழையும் ஒளிக்கதிர்களை, விழிப்படலம் திசைதிருப்புகிறது. திசை திரும்பிய ஒளிக்கதிர் 'கண்மணி'க்குப் பின்னால் உள்ள வில்லையைச் சென்றடைகிறது. இந்த வில்லை தனது உருவத்தை மாற்றிக் கொண்டு, தொலைவில் மற்றும் அருகில் உள்ள பொருட்களின் மீது ஒளிக்கதிர்களை ஒருமுனைப்படுத்துகிறது. இதனாலேயே ஒரு பொருள் எமக்குப் புலப்படுகிறது.

இப்படி அற்புதமான கண்கள் கொண்டானாம் செய்யும் செயலிலும் அற்புதமாக இருக்க வேண்டும் இன்றைய இத் தினத்தில் இவர்களுக்காக பிரார்த்திப்பதுடன் நம் வாழ்நாளில் ஒரு வருக்காவது ஒரு வெள்ளை பிரம்பினை தானம் செய்வோமாக.

வகுப்பறைச் செயற்பாடும் தேசிய இலக்கும்

கற்றல் என்பது படிப் படியாக நடத்தையில் பொருத்தப்பாட்டை அடைவது அல்லது நிரந்தரமான ஒரு நடத்தை மாற்றமாகும். இது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் ஏற்படுகின்ற நடத்தை மாற்றமாகும்.

ஆசிரியர் வகுப்பறைச் செயற்பாட்டில் தமது தேவைகளை அடைவதற்கான முயற்சியில் மாணவரிடையே ஏற்படுத்த வேண்டிய நடத்தைக் கோலங்களை இனங்காணுதல் மூலமே கல்வியின் குறிக்கோளை குறிப்பிட முடியும். ஆசிரியர் வகுப்பறைச் செயற்பாட்டில் கற்பித்தல் பற்றிச் சிந்திக்கும் போது அறிவை வழங்கும் நோக்குடனேயே அவர் அப்பாடத்தைக் கற்பிக்கின்றார்.

இதன் மூலம் சில திறன்களை மாணவர்களிடம் வளர்க்க வேண்டுமெனவும் சில மனப்பான்மையை விருத்தி செய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றனர். எனவே தான் மாணவர்களின் அடைவை அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் பாடக் குறிக்கோள்களை ஆசிரியர் உருவாக்க வேண்டும். இதனால் ஆசிரியர் தனது 40 நிமிடப் பாடவேளையில் தனது குறிக்கோளை அடையும் நோக்கில் விசேட குறிக்கோளை உருவாக்குகின்றார்.

ஒரு பாடசாலையின் இலக்கு அடையப்பட வேண்டுமாயின் வகுப்பறையில் விசேட குறிக்கோள் அடையப்பட வேண்டும். இதன் மூலமே கலைத்திட்டம் பூரணப்படுத்தப்படும். கலைத்திட்டம் என்பது கல்வியின் ஓடு பாதை ஆகும். பாடசாலையின் இலக்கை நோக்கி நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளும் ஒன்றிணைந்து நடைபெறுவதன் மூலம் கலைத்திட்டம் பூரணப்படுத்தப்படும். கலைத்திட்டத்தின் ஒரு கூறாகிய பாடத்திட்டத்தின் ஒரு விடயத்தினை ஆசிரியர் தனது 40 நிமிடப் பாடவேளையில் தன்னுடைய விசேட குறிக்கோளை அடையும் முகமாக ஒழுங்குபடுத்துவதன் மூலம் பிள்ளைகளில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த முடிகின்றது.

இந்த நடத்தை மாற்றத்தினூடாக சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்கள் பாடசாலையின் இலக்கினூடாக அடையப்படும். இம்மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து சமுதாயத்தில் நுழையும் போது சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் பண்புகளைக் கொண்ட, விழுமியங்களை உடைய, பொருத்தப்பாடு உடைய மனிதனாகச் சமுதாயத்தில் திகழுவான்.

தேசிய ரீதியில் சில எதிர்பார்ப்புக்கள் அடையப்பட வேண்டுமாயின் அந்த எதிர்பார்ப்பின் அடிப்படைக்கூறு வகுப்பறை மட்டத்தில் நிறைவேற்றப்படுவதன் மூலம் நிறைவு செய்யப்படும். எனவே பல விசேட குறிக்கோள்கள் ஒன்றிணைவதன் மூலமே குறிக்கோள் அடையப்படுகின்றது. இதே போல் பல குறிக்கோள்கள் அடையப்படுவதன் மூலமே நோக்கங்கள் அடையப்படுகின்றன.

மேலும் பல நோக்கங்கள் அடையப்படுவதன் மூலமே இலக்குகள் அடையப்படுகின்றன. எனவே தேசிய ரீதியில் கல்வியின் இலக்கு அடையப்பட வேண்டுமாயின் வகுப்பறையில் ஆசிரியரினால் விசேட குறிக்கோள்கள் அடையப்பட வேண்டும்.

தெளிவற்ற, விளக்கமற்ற விசேட குறிக்கோள்கள் சிறந்த கற்பித்தலை ஏற்படுத்தாது. வகுப்பறைக் கற்பித்தல் திறம்பட வேண்டுமாயின் பாடவிடயத்தில் அடையப்பட வேண்டிய விசேட குறிக்கோள் தெளிவாகவும் முறையாகவும் வரையறை செய்யப்படல் வேண்டும். இதன் மூலமே தேசிய இலக்கு அடையப்படும். அந்தவகையில் மாணவர்களை தொழிநுட்பத் திறன் கொண்டவர்களாக உருவாக்க வேண்டும் என்ற தேசிய இலக்கினை அடைய வேண்டுமாயின் அதன் அடிப்படை வகுப்பறையினால் நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது தொழிநுட்ப பாடம் தொடர்பான விசேட குறிக்கோள்கள் ஆசிரியரால் உருவாக்கப்பட வேண்டும். பின்னர் ஆசிரியர் தனது கற்பித்தலை மேற்கொண்டு 40 நிமிடப் பாடவேளையின் இறுதியிலே தான் கற்பித்த பாடவிடயங்கள் மாணவர்களுக்கு எவ்வளவு தூரம் விளங்கியுள்ளது என அறிவதற்கு மதிப்பீட்டை மேற்கொள்வார். இந்த மதிப்பீடு குழுப் பயிற்சி, செயன்முறைப் பயிற்சியாகவோ அமையலாம். மாணவர்கள் சரியாக செயற்பட்டார்களாயின் ஆசிரியரின் விசேட குறிக்கோள் அடையப்படும். இவ்வாறு வகுப்பறையில் விசேட குறிக்கோள் அடையப்படுவதன் மூலம் பாடசாலையின் குறிக்கோள் அடையப்படுகின்றது. இந்த குறிக்கோள்கள் அடையப்படுவதன் மூலம் பாடசாலையின் நோக்கம் அடையப்படுகின்றது. இந்த நோக்கம் அடையப்படுவதன் மூலம் பாடசாலையின் இலக்கு அடையப்படும். இவ்வாறு பாடசாலை இலக்கு அடையப்படுவதன் மூலம் தேசிய இலக்கு அடையப்படுகின்றது.

1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையில் 'வாழ்க்கைத் திறன்'என்ற ஒரு பாடத்தை கற்பிப்பதன் தேசிய இலக்கு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. கைத்தொழில் உலகிற்கு மாணவனை ஆயத்தப்படுத்துவதுடன் அதனுடன் தொடர்புடைய ஒரு மனப்பான்மையும் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த தேசிய இலக்கை அடையும் நோக்கத்திலே வகுப்பறையில் வாழ்க்கைத்திறனுக்குரிய பாடவிடயம் அறிமுகப்படுத்தப்பட்டு பல்வேறு விசேட குறிக்கோள்கள் ஆசிரியரினால் அடையப்பட்டன.

வகுப்பறையில் கற்றலும் கற்பித்தலும் நிகழுகின்றன. எனவே மாணவன் யாதேனும் ஒன்றைக் கற்றான் எனின் அவனது நடத்தை முன்னர் இருந்ததை விட வேறுபடல் வேண்டும். எனவே ஆசிரியர் தமது மாணவரிடத்தே நீண்ட கால நடத்தை மாற்றத்தை எதிர்பார்த்தே கற்பித்தல் வேண்டும்.

நடத்தையில் ஏற்படும் மாற்றம் உடல் சார்ந்ததாகவோ, உளம் சார்ந்ததாகவோ, உடல், உளம் இரண்டையும் சார்ந்ததாகவோ அமையலாம். ஏற்கனவே அறியப்படாத ஒரு புது விடயத்தினைக் கற்றல், அறிந்து வைத்துள்ள ஒரு விடயத்தினை மேலும் விருத்தி செய்து கொள்ளல், தவறாக அறிந்து வைத்திருந்த ஒன்றைச் சரியாக விளங்கிக் கொள்ளல் போன்ற வகைகளில் நடத்தையை மாற்றலாம்.

எனவே விசேட குறிக்கோளை அமைக்கும் போது ஆசிரியர் சில விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டி உள்ளது.

இந்தவகையில் ஆசிரியர் வகுப்பறைச் செயற்பாட்டின் இறுதியான குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு விடயத்திற்குப் பொருத்தமான குறிப்பான குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இக் குறிக்கோள் மாணவனில் அடையக்கூடிய அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படல் வேண்டும். மேலும் விசேட குறிக்கோளானது மாணவனை மையமாகக் கொண்டு எழுதப்படுதல் வேண்டும். அதாவது வகுப்பறைச் செயற்பாட்டின் இறுதியில் மாணவர்களின் நடத்தைகளில் அவதானிக்கப்படக் கூடிய மாற்றங்கள் சார்பாக குறிப்பிடப்படல் வேண்டும். இதனால் அளவீடுகளின் நம்பகமும் தகுதியும் மிகக் குறைவாக இருக்கும். எதிர்பார்க்கப்படும் மாணவர் நடத்தை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கூற்றுக்களினால் குறிப்பான குறிக்கோள் அமைக்கப்படல் வேண்டும். இதனால் தனித்தனியான மாணவரின் நடத்தை மாற்றங்களை அறிய முடியும்.

அதுமட்டுமன்றி அனைவருக்கும் இலகுவாகப் புரியக்கூடிய விதத்திலும் எவ்விடத்திலும் எவருக்கும் ஒரே கருத்தை ஏற்படுத்தக் கூடியவாறும் தெளிவான விளக்கத்தை அளிக்கக் கூடியவாறு பொருத்தமான சொற்களினால் குறிப்பான குறிக்கோள் அமைக்கப்படல் வேண்டும். எந்தெந்த விடயங்களை மாணவர்கள் அறிய வேண்டுமென்பதையும் எந்தெந்த அறிவுமட்டத்தில் இவற்றினை அடைய வேண்டுமென்பதையும் பொதுத்தன்மை உயர்வாக இராமல் எதிர்பார்க்கப்படும் மாணவர் நடத்தைகள் தெளிவாகப் புலப்படும். விசேட குறிக்கோளானது கற்பித்தலுக்கு கிடைக்கும் நேர அவகாசம், பாடப்பரப்பின் தன்மை, மாணவனின் இயல்புகள் ஆகியவற்றுடன் பொருந்தக் கூடிய விதத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆசிரியர் விசேட குறிக்கோளை அமைத்தால் மட்டும் போதாது. அது அடையப்படுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் பாடக்குறிப்பினை ஒவ்வொரு வகுப்பிற்கேற்பவும் எழுதுவதே கிடையாது. ஏற்கனவே எழுதப்பட்ட பாடக்குறிப்பில் சில மாற்றங்களைச் செய்து பயன்படுத்திக் கொள்ளும் வழக்கமும் காணப்படுகின்றது. இவ்வாறு செய்வதனால் ஆசிரியர் தான் எதிர்பார்த்த குறிக்கோளை அடைய முடியாது. இதனால் ஆசிரியர் தனது 40 நிமிடப் பாடவேளைக்கான பாடக்குறிப்பினைத் தயாரிக்க வேண்டும். இந்தவகையில் தனது கற்பித்தலின் மூலம் மாணவர்களிடையே நடத்தை மாற்றத்தினை அவதானிக்க முடியும்.

கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற பிள்ளைகள் அனைவருமே கற்பதற்கு ஆர்வம் உள்ளவர்கள் என்று கூற முடியாது. குடும்பப் பிரச்சினை, பெற்றோர்களின் திணிப்பு, சூழ்நிலை போன்றவற்றின் காரணமாக வருபவர்களும் உள்ளனர். இங்கு அனைவரையுமே கற்றலில் ஊக்கம், ஆர்வம் உடையவர்களாக்குவது ஆசிரியரின் பொறுப்பாகும். இதற்கெனப் பிள்ளைகள் கொண்டுள்ள ஊக்கம், ஆர்வம் ஆகிய மட்டங்களை விளங்கிக் கொண்டு அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலான செயற்பாடுகளை உள்ளடக்கியதாக ஆசிரியர் விசேட குறிக்கோளைத் தயாரிக்க வேண்டும்.

தேசிய இலக்கினை அடைய வேண்டுமாயின் வகுப்பறைச் செயற்பாடுகள் வினைத்திறனாக அமைய வேண்டும். அந்தவகையில் ஆசிரியர் கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

மாணவர்களுக்கு பாடவிடயத்தை ஒழுங்காகக் கற்பிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய உபகரணங்களின் ஒழுங்கு, கற்பித்தல் முறைகள் என்பவற்றை விசேட குறிக்கோளின் மூலம் அமைத்துக் கொண்டு கற்பிக்க வேண்டும். உதாரணமாக தொழிநுட்பத் திறன்களைக் கொண்ட மாணவ சமுதாயத்தை உருவாக்குதல் என்ற தேசிய இலக்கை அடைய வேண்டுமாயின் தொழிநுட்பப் பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் பொருத்தமான கற்றல் சாதனங்களையும் கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்திக் கற்பிக்கும் போது மாணவர்களிடையே சிறந்த கற்றல் அனுபவங்கள் ஏற்படுகின்றன. இதனால் கற்றலில் மாணவர்கள் சிறந்து விளங்குவார்கள். இதன் மூலம் ஆசிரியரின் விசேட குறிக்கோள் அடையப்படும். இதன் பின்னர் மாணவர்கள் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுப்பார்களாயின் குறிக்கோள் அடையப்படுகின்றது. பின்னர் கா.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுப்பார்களாயின் பாடசாலையின் நோக்கம் அடையப்படுகின்றது. பின்னர் மாணவர்கள் தாம் பெற்ற அறிவை பயன்படுத்தி தொழில்களில் ஈடுபடும் பொழுது பாடசாலையின் இலக்கு அடையப்படுகின்றது. இதன் மூலம் தேசிய இலக்கு அடையப்படுகின்றது.

ஆசிரியர் வெறுமனே பாடவிடயத்தை மாத்திரம் கற்பிக்காது தனது கற்றல் அனுபவங்களையும் சேர்த்து கற்பிக்க வேண்டும். பாடவிடயங்களை மாத்திரம் கற்பிப்பதனால் விசேட குறிக்கோள் மாத்திரமே அடையப்படும். தேசிய இலக்கு அடையப்பட மாட்டாது. ஆனால் ஆசிரியர் கற்றல் அனுபவங்களையும் சேர்த்துக் கற்பிக்கின்ற போது விசேட குறிக்கோள் அடையப்படுவதுடன் தேசிய இலக்கும் அடையப்படுகின்றது.

ஆசிரியர் வகுப்பறையில் கற்பித்து முடித்த பின்னர் தனது விசேட குறிக்கோள் அடையப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போதே தேசிய இலக்கினை அடைய முடியும். அந்தவகையில் விசேட குறிக்கோளை அடையும் வகையில் ஆசிரியர் பாட முடிவின் போது வினாக்களைக் கேட்பதன்; மூலமாகவோ குழுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமாகவோ, பயிற்சிகளை வழங்குவதன் மூலமாகவோ மாணவர்களின் நடத்தை மாற்றத்தை அவதானிக்க வேண்டும். இவ்வாறு மதிப்பீடு செய்வதன் மூலம் விசேட குறிக்கோள் அடையப்படுவதுடன் தேசிய இலக்கினை அடைய முடியும்.

இவ்வாறு மதிப்பீடு மேற்கொள்வதுடன் பாட இறுதியில் பின்னூட்டலை மாணவர்களுக்கு வழங்க வேண்டியதும் அவசியமாகின்றது. மேலும் வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும் போது மாணவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கும் ஆசிரியர் நேரம் ஒதுக்க வேண்டும். வகுப்பறையில் மாணவர்களை சுயகற்றலுக்கு ஊக்கமளிக்க வேண்டும். ஆசிரியரின் கற்பித்தலில் மாத்திரம் தங்கியிராமல் சுயமான கற்றலுக்கு ஆசிரியர் வழிகாட்டலை வழங்க வேண்டும். கற்றலோடு தொடர்புடைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றை அறிமுகம் செய்வதோடு அவற்றை வாசிப்பதற்கும் ஆர்வம் ஊட்ட வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு வகுப்பறைச் செயற்பாட்டை ஒழுங்கமைத்தலானது தேசிய இலக்கினை அடைவதற்கு வழிகோலுகின்றது.

எனவே தேசிய இலக்கு அடையப்பட வேண்டுமாயின் அதன் அடிப்படையாக வகுப்பறைச் செயற்பாடு திறம்பட அமைய வேண்டியது அவசியமாகும்.

ரஜீதா நடராஜா
விடுகை வருடம்
கல்வியியல் சிறப்புக் கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்

விஸ்வகர்ம ஜயந்தயை முன்னிட்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கலைஞர்களுக்கான பாராட்டு விழா அரசடி மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனம் நடாத்திய இந்நிகழ்வு அதன் தலைவரும் மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினருமான சிவம் பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கீத ஆசிரியை சாந்தினி தர்மநாதனுக்கு 'காந்தார ஞானமயி', நடனக் கலைஞர் மோகனப்பிரியன் தவராஜாவிற்கு 'நர்த்தன சிகாமணி', மிருதங்க வித்துவான் இரா நித்தியானந்தனுக்கு 'சர்மவாத்திய ஜோதி' மற்றும் கவிஞர் பாண்டியூர் பொன் நவநீதனுக்கு 'பொன் பாவேந்தன்' எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

படம்:மட்டு துஷாரா

மட்டக்களப்பு உளநல நிலையமும் வண்ணாத்துப்பூச்சி சமாதான பூங்காவும் இணைந்து மாபெரும் கண்காட்சியையும் உளநல விழிப்பூட்டல் நிகழ்வினையும் ஆரம்பித்துள்ளது. மாறுகின்ற உலகில் இளம்பராயமும் அதன் ஆரோக்கியமும் என்னும் தலைப்பில் இம்முறை இந்த சர்வதேச உளநல தினம் அனுஸ்டிக்கப்படுகின்ற நிலையில் இளம் பராயத்தினர் மத்தியில் உளநலத்தினை ஏற்படுத்தும் வகையில் இந்த கண்காட்சி நடாத்தப்படுகின்றது.

தேசிய மர நடுகை மாதத்தினையொட்டிய மாவட்ட நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. தேசிய மர நடுகை இம்மாதம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இததை தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலும் மரநடுகை மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் கிளிநொச்சியில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா விபுலானந்த கல்லூரியில் கல்வி கற்கும் இரண்டாயிரத்து 200 பாடசாலை மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜா அவர்களின் 2018 ஆம் ஆண்டுக்கான குறித்தொகுக்கப்பட்ட நிதியிலிருந்தும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதியிலும் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்தரிகரிப்பு இயந்திர தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

படம்: வவுனியா நிருபர்

மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் சர்வதேச ஆசிரியர் தின விழா அதிபர் எம்.ஐ.எம் அஸ்மி தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வடகிழக்கு மாகணக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஐ.எம்.இஸ்ஸடீன் ஆசிரியர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் போன்றவற்றை வழங்கி கௌரவிப்பதையும் அருகில் காரைதீவு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர்.திரவிய ராஜா, கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர் கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் மற்றும் பிரபல தொழிலதிபரும் எம்.எச்.எம்.இப்றாகிம், வியூகம் TV இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஜனூஸ் சம்சுதீன் ஆகியோர்கள் வீற்றிருப்பதையும் படங்களில் காணலாம்.

படம்: மீனோடைக்கட்டு நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.